135/ 263

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜூலை 17, 1985—தொகுதி 218 - எண் 1

Wednesday, 17th July 1985—Volume 218 - No. 1

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2-75]

## பொருளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழக அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i—vi |
| சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் | vii |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அசர வரிசைப் படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் | ix—xii |
| 1. வினாக்கள் விடைகள் | 1 39 |
| 2. அறிவிப்புகள்— | |
| பேரவையிலிருந்து செய்தி | 39 |
| 3. தகவல் கோரல்— | |
| பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து | 40—42 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (1) நவசக்தி-தினகரன் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து | 42—44 |
| (2) தெலுங்கு கங்கை திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டிய அவசியம் குறித்து | 44—47 |
| 5. அரசின் சட்ட முன்வடிவுகள்— | |
| (1) 1985-ஆம் ஆண்டு, தமிழ்நாடு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1985) | 48 |
| (2) 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1985) | 49 |

பக்கங்கள்

(3) 1985-ஆம் ஆண்டு, தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1985) — 50—60

(4) 1985-ஆம் ஆண்டு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1985) — 60—64

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் — 64—65



143962.

Y21,32'N85

N85-212-143


# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU SUNDAR LAL KHURANA.

Members of the Council of Ministers.

THE HON. Dr. M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology, Prohibition excluding grant of Liquor Permits, Excise and Passports.

2. THE HON. Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in-charge of Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-Servicemen.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in-charge of Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. THE HON. THIRU K. A. KRISHNASWAMY, Minister for Labour, in-charge of Labour, Animal Husbaondry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HON. THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor Permits.

6. THE HON. THIRU K. RAJARAM, Minister for Industries, in-charge of Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister for Local Administration, in-charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. THE HON. THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in-charge of Education, Official Language, Tamil Development and Culture

9. THE HON. Dr. K. KALIMUTHU, Minister for Agriculture, in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering, Agro Service Co-operative Societies, Water Supply and Drainage Boards.

10. THE HON. THIRU C. PONNAIYAN, Minister for Law, in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits,

11. THE HON. Dr. H. V. HANDE, Minister for Health, in-charge of Health and Environmental Pollution Control.

12. THE HON. THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Acts, Ports and Highways.

13. THE HON. THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Food, in-charge of Food, Price Control and Census.

14. THE HON. THIRU V. V. SWAMINATHAN, Minister for Handlooms and Textiles, in-charge of Handlooms and Textiles.

15. THE HON THIRU R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in-charge of Nutritious Meals.

16. THE HON. THIRU T. VEERASAMY, Minister for Commercial Taxes, in-charge of Commercial Taxes.

17. THE HON. THIRU N. NALLUSAMY, Minister for Housing, in-charge of Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control.

18. THE HON. THIRU ANOOR P. G. JAGADEESAN, Minister for Rural Industries, in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries.

19. THE HON. THIRU T. RAMASAMY, Minister for Rehabilitation and Employment, in-charge of Rehabilitation, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. THE HON. THIRU A. ARUNACHALAM, Minister for Adi Dravidar Welfare, in-charge of Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. THE HON. THIRU M. R. GOVENDHAN, Minister for Backward Classes, in-charge of Backward Classes and Fisheries.

22. THE HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in-charge of Social Welfare including Women and Children and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

23. THE HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi, in-charge of Khadi, Bhoodan and Gramdhan.

24. THE HON. THIRU Y. S. M. YUSUF, Minister for Public Works, in-charge of Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. THE HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN, Minister for Co-operation, in-charge of Co-operation.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சுந்தர் லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்திய பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல், ஆயத்துறை, மதுவிலக்கு, மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மற்றும் கடவுச்சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, வருவாய், சட்ட மன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு, செய்திக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கே. கிருஷ்ணசாமி (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர் நலம், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. இராம வீரப்பன் (செய்தி-அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வளங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பெருந் தொழில்கள், சுரங்கமும் கனிவளமும், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சி, நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப் பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கல்வி, ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்-பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம்.

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடுதடுப்புத்துறை.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.



13. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் (கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி (வணிகவரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி (வீட்டுவசதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியங்கள், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜகதீசன் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. டி. இராமசாமி (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மறுவாழ்வு, வேலைவாய்ப்பும், பயிற்சியும், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் நலன்.

20. மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், இரவலர் இல்லம், அனாதை இல்லம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொதுப்பணித் துறை, சிறுபாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசனம் மற்றும் வக்ஃபு.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. சி. இராமலிங்கம்.
2. திருமதி வி. ஜெயலட்சுமி.
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்.சி., பி.எல்.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

சார்புச் செயலாளர்கள்

திரு. ரெ. கு. இராமச்சந்திரன், பி.ஏ., பி.எல்.

திரு. இரா. சந்திரசேகரன், பி.ஏ.

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன், எம்.ஏ.

மேலவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கே. சந்திரசேகரன்

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் | தொகுதி. |
|---|---|
| 1. அங்கமுத்து, திரு. பா. | நியமனம் |
| 2. அருணாசலம் திரு. க. | நியமனம் |
| 3. ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4. இராகவானந்தம், திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5. இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6. இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7. இராஜேந்திரன், திரு. மானாமதுரை, ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8. கன்னப்பன், திரு. காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9. கணேசன், திரு. ஆர். என்கிற மிசா ஆர். கணேசன் | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி |
| 10. கருணாநிதி, டாக்டர் மு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11. கலைமணி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 12. கோலப்பா, திரு. சி. ஆர். | நியமனம் |
| 13. சங்கரலிங்கம், திரு. மு. செ. | திருநெல்வேலி — கன்னியாகுமரி ஆசிரியர்கள் |
| 14. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் |
| 15. சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 16. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு மேலவைத் தலைவர்) | நியமனம் |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் | தொகுதி. |
|---|---|
| 17. சிவராமன், திரு. அ. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 18. சித்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 19. சுப்பிரமணியம், திரு. எம். பி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 20. சுப்பு, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 21. சுவாமிநாதன், திரு. ஜி. (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்) | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் |
| 22. தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் |
| 23. தாரா செரியன், திருமதி | நியமனம் |
| 24. தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25. பழனிவேல்ராஜன், திரு. பி. டி. ஆர். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் |
| 26. பாலாஜி, திரு. நெல்லை | நியமனம் |
| 27. மதுசூதனன், திரு. இ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28. மயில்சாமி, திரு. அ. | சேலம் – தர்மபுரி – கோயம்புத்தூர் — நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி |
| 29. மாசிலாமணி, திரு. மு. | நியமனம் |
| 30. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 31. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி — புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி |
| 32. முத்துலிங்கம், கவிஞர் | நியமனம் |
| 33. முனுசாமி, திரு. பி. | நியமனம் |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் | தொகுதி. |
|---|---|
| 34. யூசுப், திரு. யா. சை மு. (பொதுப்பணித் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 35. லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி |
| 36. லீலாவதி, செல்வி ஆ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள். |
| 37. வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 38. வீரப்பன், திரு. இராம. (செய்தி அறநிலையத்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39. ஜெயச்சந்திரன், திரு. எல். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் |
| 40. ஜெயலட்சுமி, திருமதி வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 41. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 42. ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் |
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 45. வெற்றிடம் | சேலம்–தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 46. வெற்றிடம் | சேலம்–தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் | தொகுதி. |
|---|---|
| 49. வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 50. வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 51. வெற்றிடம் | கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 53. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 59. வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 60. வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 61. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 62. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 63. வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1985 ஜூலை 17

ஆடி 2, குரோதன—திருவள்ளுவராண்டு 2016.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முதலில் வினாக்கள் 92 மற்றும் 93 எடுத்துக்கொள்ளப்படும்.

### நச்சுத்தன்மை வாய்ந்த வாயுக்களைக் கட்டுப்படுத்துதல்.

*92 வினா—மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் (திரு. க. மீனாட்சி சுந்தரம் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சுற்றுப்புறத் தூய்மை கெடாதவகையில், நச்சுத்தன்மை வாய்ந்த வாயுக்களைக் கட்டுப்படுத்துவதாக ஒப்புக்கொள்ளும் ஆலைகளுக்குத்தான், இனிமேல் உரிமம் வழங்கப்படும் என்ற நிபந்தனையை விதிக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: சுற்றுப்புறத் தூய்மை கெடாத வகையில், நச்சுத்தன்மை வாய்ந்த வாயுக்களைக் கட்டுப்படுத்துவதாக ஒப்புக்கொள்ளும் ஆலைகளுக்குத்தான் இனிமேல் உரிமம் வழங்கப்படும் என்று இதே அவையில் பேசுகின்றபோது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாக எனக்கு நினைவு. ஆனால் இப்போது அப்படி இல்லையென்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட எண்ணம் தற்போது இல்லையென்றால் கூட, மக்களின் நல்வாழ்வு கருதி இனிமேலாவது இந்த ஏற்பாட்டைச் செய்ய அரசு முன்வருமா?

[1985 ஜூலை 17

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** புதிதாக ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்றால், நம்முடைய 'என்விரோன்மென்ட் அன்ட் பொலூஷன் கன்ட்ரோல் போர்ட்' என்கின்ற அமைப்பிடம் மனுப் போட்டு அங்கீகாரம் பெற வேண்டும். அப்படி அவர்கள் அங்கீகாரம் அளிக்கின்ற நேரத்தில், சில நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறோம் என்று தொழிற்சாலையை ஆரம்பிப்பவர்கள் சொன்னதற்குப் பிறகு, அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. இவ்வளவு நாட்களுக்குள் அதனைச் செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதில் தாமதம் ஏற்பட்டால், செக்ஷன் 26-ன்கீழ் அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கிறோம். அந்த வகையில் இப்போது சுற்றுப்புறத் தூய்மை கெடாத வகையில் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தொழிற்சாலைகளுக்கு சில நிபந்தனைகளின் பேரில் அங்கீகாரம் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னென்ன நிபந்தனைகள்? அவ்வகளை ஏற்று புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் அவற்றைச் செயல்படுத்துகின்றனவா? செயல்படுத்தாத தொழிற்சாலைகள் இருக்கின்றனவா? அப்படி என்றால், அவற்றின்மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** இதில் இரண்டு சட்டங்கள் இருக்கின்றன. 'ஏர் பொலூஷன் பிரிவன்ஷன் அன்ட் கன்ட்ரோல் ஆக்ட், 81' என்று ஒன்று இருக்கிறது. அதன்படி கழிவு நீர் அகற்றப்பட்ட பிறகு, அதில் கன்டென்ட் 30-க்கு மேல் இருக்கக்கூடாது என்று சொல்கிறோம். முதலில் 100 என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் நாம் பயன்படுத்துகின்ற தண்ணீரின் தரத்தின் அளவுக்கு தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது. அடுத்து, தமிழ் நாடு பூராவும் 1—10—1983 அன்று ஏர் பொலூஷன் கன்ட்ரோல் ஏரியா என்று இடங்களை நிர்ணயித்திருக்கிறோம். அங்கேயெல்லாம் சிமெண்ட், கெமிக்கல், கோல், கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் போன்ற 20 இன்டஸ்ட்ரீஸ்களைப் பொறுத்தவரையில், பெர்மிஷன் வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சில இடங்களில் இவ்வாறு அனுமதி வாங்கப்படவில்லை. அதற்காக நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். ஏற்கெனவே 1974-ஆம் ஆண்டிலேயே இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் என்ன காரணத்தாலோ நடைமுறைப்படுத்தப்படவில்லை. பிறகு 1981-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் ரொம்ப அக்கறை எடுத்து மத்திய அரசோடு தொடர்பு கொண்டு மத்திய அரசிலே உள்ள சட்டத்தை நடைமுறைப்



1985 ஜூலை 17]

படுத்துவதாகச் சொல்லி, அதை அப்படியே நம்முடைய இரு அவைகளிலும் கொண்டு வந்து நிறைவேற்றி நல்லமுறையில் நடைமுறைப்படுத்திக்

(முற்பகல் 10-05)

கொண்டிருக்கிறோம். ஆக படிப்படியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பது மட்டுமல்லாமல், சட்டத்தை மீறுகிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்காக, ஏன் உங்கள் லைசென்ஸை ரத்து செய்யக்கூடாது என்றும் கேட்டிருக்கிறோம். இப்போதுகூட யாரும் சட்டத்தை மறுக்கவில்லை. இன்னும் கொஞ்சம் அவகாசம் கேட்கிறார்கள். அப்படி மீறினால் நடவடிக்கை எடுக்க சௌகரியமாக இருக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்படுகிற ஆலைகளுக்குத்தான் இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா, அல்லது ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு, இப்போது விதிகளை அவர்கள் மீறுகிறார்களா? அப்படியிருந்தால், அவர்களுக்கும் இந்தச் சட்டம் விரிவுபடுத்தப்படுமா? அப்படி ஏதேனும் சிக்கல் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** இதில் மூன்று வகையான நிலைமை இருக்கிறது. முதலாவதாக, ரூ. 50 லட்சத்துக்கு மேற்பட்ட மூலதனம் கொண்ட ஆலைகளாக இருந்தாலும் சரி, அரசாங்க நிறுவனங்களாக இருந்தாலும் சரி, அதற்காக முதலமைச்சர் தலைமையில் உயர்மட்டக் குழு இருக்கிறது. அதனிடம் அனுமதி பெற்றாக வேண்டும். அண்மையில் இந்தக் குழு கூடி, தீர்மானம் போட்டிருக்கிறது. இந்தக் குழுவிற்கு வரும் விஷயம் 50 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தொழிற்சாலைகளான, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், புகளூர் காகித ஆலை போன்ற ஆலைகளில் தண்ணீர் வெளியேற கால்வாய் பெரிய அளவில் வெட்டப்பட வேண்டுமென்பது, மலைப் பிரதேசங்களில் வெட்டும் வாய்க்கால்கள் போன்றவை எல்லாம் வருகின்றன. அதற்கு அந்தக் குழுதான் முடிவெடுக்கும். இது ஒரு வகை. இரண்டாவதாக போர்டு என்று இருக்கிறது. 50 லட்ச ரூபாய்க்குக் குறைவான தொழிற்சாலைகளுக்கும், புதிதாக ஆரம்பிக்கப்படுகிற தொழிற்சாலைகளுக்கும் என்று இருக்கிறது. இதற்கு அவர்கள் மனுப் போட்டு பெர்மிஷன் வாங்க வேண்டும். மூன்றாவதாக, ஏற்கெனவே இந்தச் சட்டம் வருவதற்கு முன்பு இயங்குகிற ஆலைகளைப் பொறுத்தது. அவர்களும் பெர்மிஷன் வாங்க வேண்டுமென்று சொல்கிறோம். அவர்களுக்கு டைம் கொடுக்கிறோம். மே மாதம் 31-ந் தேதி என்றிருந்ததை ஜூலை 31 ஆம் தேதி வரை நீட்டித்திருக்கிறது.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, கடலூரில் சிப்காட் நிறுவனம் பெரிய ரசாயனத் தொழிற்சாலையை நிறுவுகிறது. இப்போது நச்சுத்தன்மை வாய்ந்த வாயுவை அது வெளியிடாவிட்டாலும், வருங் காலத்தில் பெரிய தொழில்கள் அங்கே ஆரம்பிக்கப்படும்போது, இந்த நிலைமை மாறி, வாயுக்கள் வெளியேறும். பம்பாயில் இப்போது அங்குள்ள ஒரு உரத் தொழிற்சாலையிலிருந்து கிளம்பும் நச்சுத் தன்மை கொண்ட வாயுவால் ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று செய்திகள் வருகின்றன. கடலூரிலும் இந்த நிலைமை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இனிமேல் ஆரம்பிக்கப்படும் இத்தகைய தொழிற்சாலைகளை ஊருக்கு, நகருக்கு வெளியில் ஆரம்பிக்க வேண்டும் என்று கூறும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** ஏற்கெனவே சொன்னமாதிரி, இப்போது புதிதாக ஆரம்பிக்க இருக்கின்ற தொழிற்சாலைகள் இந்த இரண்டு, சட்டங்களுக்கும் உட்பட்டுத்தான் ஆரம்பிக்க வேண்டுமென்று 'ஐடென்டிபை' செய்திருக்கிறோம். 20 ஆலைகளைப் பொறுத்தவரையில், அவர்கள் "சுற்றுப் புறத் தூய்மை மற்றும் தண்ணீர் அசுத்தப்படுத்தாமை" போன்ற சட்டத்தில் வருகிறார்கள். இனிமேல் அனுமதி பெறாமல் எந்த ஆலையும் ஆரம்பிக்க முடியாது.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, சுற்றுப்புறத் தூய்மை கெடுவதன் அடிப்படையில், பல்வேறு தனியார் நிறுவனங்கள் உரக்கலவை நிலையங்கள் என்ற பெயரால் உரக்கலவை செய்கிறார்கள். அப்படிச் செய்வதால் 'ஏர் பொல்லூஷன்' ஏற்பட்டு ஏராளமான பயிர்கள் வாடுகின்றன. இதற்கான அனுமதி நகராட்சியிடம் பெற்றால் போதும் என்று இப்போது சட்டம் இருப்பதாகத் தெரிகிறது. அந்த நிலைமையை மாற்றி, 'ஏர் பொல்லூஷன் கன்ட்ரோல்' குழுவிடம் ஆலோசனை பெற வேண்டுமென்று அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, உரத் தொழிற்சாலைகள் இந்த விதிகளின்கீழ்தான் வருகின்றன. ஆகவே அவர்களுக்கும் இது பொருந்தும்.

(முற்பகல் 10-10)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, சுற்றுப்புறச் சூழல் எந்த வகைகளில் கெடுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 'சுற்றுப்புறச் சூழல் நீராலும் கெடுகிறது. ஊட்டியில்





உள்ள லேக் ஏரியில் சாக்கடை நீர் கலப்பதால், அதிலும்கூட கெடுதல் இருக்குமா என்பதை வல்லுநர்களைக் கொண்டு ஆராய்ந்து ஊட்டி லேக் ஏரியில் சுற்றுப்புறச் சூழல் கெடாமலிருப்பதற்கு வழிவகை காண அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, இந்த இலாகாவைப் பொறுத்தவரையிலே, மாநகராட்சி, நகராட்சி மற்றும் நகரியம் அமைப்புகளைப் பொறுத்தவரையில், அந்த அமைப்புகள்தான் சரியான வகையில் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். அதுமட்டுமல்லாமல், நாம் அவர்களுக்கு அவ்வாறு செய்ய வேண்டுமென்று கோரி தாக்கீதும் அனுப்புகிறோம். அவை உள்ளாட்சி நிறுவனங்களாக இருப்பதால், நோட்டீஸ் கொடுப்பது கிடையாது. இவற்றை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று தாக்கீது அனுப்புகிறோம். சுத்திகரிப்பு செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். அவைகளும் அவற்றைச் செய்துவிட்டு நமக்குத் தகவல் அனுப்புகிறார்கள். "நீங்கள் அனுப்பிய கருத்துக்களைப் பரிசீலனை செய்து, நடவடிக்கை எடுத்திருக்கிறோம்" என்று தகவல் கொடுக்கிறார்கள். அந்த வகையிலே அதுகுறித்து நடைமுறைப்படுத்தப் படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. மயில்சாமி :** தலைவர் அவர்களே, சிமெண்ட் ஆலைகள் இருக்கக் கூடிய பகுதிகளில் சிமெண்ட் ஆலைகளிலிருந்து வரக்கூடிய புகையினால் சுற்றுப்புற மக்கள் வாழ முடியாத நிலைமை ஏற்படுகின்றது. மேலும் விவசாய நிலங்கள் எல்லாம் விளை பொருள்களை விளைவிக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் இருக்குமிடங்களில் சுற்றுப் புறச் சூழ்நிலையை அவை கெடுக்காதவாறு தடுப்பதற்கு ஏதேனும் சட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, சிமெண்ட், தர்மல் பவர், அயர்ன் ஸ்டீல், ஃபெர்டிலிசர், நைட்ரிக் ஆசிட், சல்பூரிக் ஆசிட் ஆலைகளைப் பொறுத்தவரையில், "தமிழ்நாடு பொல்யூஷன் கன்ட்ரோல் போர்ட்" has evolved ambient air quality standards and emission standards for the six types of industries. என்பதன் மூலம் நாம் நிபந்தனைகளை விதித்திருக்கிறோம். விஞ்ஞான ரீதியாக எப்படி இருக்க வேண்டுமென்ற விதிகளையெல்லாம் நிர்ணயித்திருக்கிறோம்.

[1985 ஜூலை 17

**திரு. சி. இராமலிங்கம்:** தலைவர் அவர்களே, பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர் பகுதிகளில் தோல் பதனிடு தொழிற்சாலைகளின் வாசனையை நாங்கள் வெகு காலமாக அனுபவித்துக்கொண்டு வருகிறோம். பல்லாவரத்தில் இன்றைக்கு பாண்ட்ஸ் கம்பெனி ஆரம்பித்து அந்த வாசனையை மக்கள் ரோடில் போகும்போதும், வரும்போதும் அனுபவிக்கிறார்கள். அந்தத் துர்நாற்றத்தைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? பாண்ட்ஸ் சென்ட் கம்பெனியில் வாசனை சகிக்க முடியவில்லை. அதை மாற்றுவதற்கு ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பாண்ட்ஸ் கம்பெனியிலிருந்து வெளி வரக் கூடிய கழிவு நீரினால் மோசமான நிலைமை இருக்குமானால், அரசு நிச்சயமாக கவனிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இந்த சுற்றுப்புறச் சூழல் எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதற்கு இந்த ஒரு வினாவுக்கு ஆகிக்கொண்டிருக்கின்ற நேரத்தைப் பார்த்தாலே தெரிகிறது. (சிரிப்பு) இதற்கு மட்டும் 15 நிமிடங்களுக்கு மேல் ஆகியிருக்கிறது. அடுத்து திரு. நெல்லை பாலாஜி.

**திரு. நெல்லை பாலாஜி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் வாசனை என்றார்களே, வாசனை என்றால் என்ன, நாற்றம் என்றால் என்ன, துர்நாற்றம் என்றால் என்ன பொருள் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதற்குப் பொருள் அகராதியில் கிடைக்கலாம். மாண்புமிகு அமைச்சரிடம் கிடைக்குமோ என்னவோ. (சிரிப்பு).

## நீலகிரி மாவட்ட தலைமையிட மருத்துவமனை.

*93 வினா—டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், 28—4—1984 ஆம் நாளன்று, சட்டமன்ற மேலவையில், சட்ட மேலவை வினா எண் 171-க்கு அளிக்கப்பட்ட விடையினை, யொட்டி கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

உதகமண்டலத்திலுள்ள நீலகிரி மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் ஏனைய புதிய பிரிவுகள் அமைக்கும் செயற்குறிப்பு தற்பொழுது எந்நிலையில் உள்ளது?



1985 ஜூலை 17]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** இது குறித்து விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, நீலகிரிக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். எனவே அங்குள்ள மருத்துவ மனை முழுத் தகுதி பெற்ற மருத்துவ மனையாக இருக்க வேண்டுமென்று அப் பகுதிவாழ் மக்கள் விரும்புகிறார்கள். 'இன்டென்சிவ் கேர் யூனிட்' என்றால் ஏ.சி. வைக்க வேண்டும். ஆனால் அங்கே இயற்கையே ஏ.சி. வைத்திருக்கிறது. எனவே மேற்படி மருத்துவமனையை முழுத் தகுதி பெற்ற மருத்துவ மனையாக மாற்றும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, இப்போது இந்த மருத்துவமனையில்

T.B. clinic, eye clinic, ENT clinic, obstetrics and gynaecology, post-partum unit, paediatric unit, skin department, S.T.D. clinic, X-ray department, Public Health Laboratory, dental clinic, orthopaedic clinic, psychiatry clinic

என்று 13 இலாகாக்கள் பணியாற்றி செயல்பட்டு வருகின்றன. அது மட்டுமல்லாமல், சித்தா பிரிவும்கூட தனியாக இயங்கிக்கொண்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், இந்த மருத்துவமனைக்கு 1981-82-ல் 44,73,500 ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.•

(முற்பகல் 10-15)

1982-83-ல் 60 லட்சத்து 71 ஆயிரத்து 850 ரூபாயும், 1983-84-ல் 65 லட்சத்து 40 ஆயிரத்து 750 ரூபாயும் இந்த மருத்துவமனைக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, முக்கியமாக நீலகிரியிலே வாழுகிற மக்கள் வலிமையான இதயத்தோடு இருக்கிறார்கள். ஆனால் அங்கு போகிறவர்கள் இதய வியாதியோடு சிரமப்படுகிறார்கள். அங்கு டாக்டர்கள் வருவதற்கு அச்சப்படுவதற்குக் காரணம் அங்கு குடியிருப்பு வசதி இல்லை. அவர்களுக்கெல்லாம் வீடு கிடைக்க வசதிகளை அரசு ஏற்படுத்தித் தருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** உடனடியாக அந்த மருத்துவ மனையில் ஒரு இன்டென்சிவ் கரோனரி யூனிட் ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் சொன்னமாதிரி, குவார்டர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்

@ 66- ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, நீலகிரிக்கு டாக்டர்கள் யாரையாவது மாற்றினால், அதில் பல பேர் போவதில்லை. அந்த நேரங்களில் டாக்டர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் மற்றப் பணியாளர்கள் வந்து விட்டார்கள். புதிதாகப் போகிற டாக்டர்களுக்கு, ஊட்டியை விட்டு டாக்டர்கள் வேறு எங்காவது மாற்றிப் போகிற காரணத்தால் ஏற்படும் குவார்ட்டர்ஸை தருவதற்கோ அல்லது புதிதாக வீடு கட்டித் தருவதற்கோ அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, புதிதாக வீடு கட்டுவதுபற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். உறுப்பினர் அவர்களும் புகார் கொடுத்திருக்கிறார்கள். குவார்டர்ஸை இன்னொருவர் யாருக்கோ ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறார். அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆணையிட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குளோரின் வாயு கசிவு.

* 86. வினா—திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

சென்னை, மணலியில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில், 1985 பிப்ரவரியில் ஏற்பட்ட "குளோரின்" வாயு கசிவுக்குக் காரணமானவர்கள் மீது, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : குளோரின் வாயு கசிவு சென்னை மணலியில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்படவில்லை. மணலியில் உள்ள கோத்தாரி இன்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட் என்ற தொழிற் சாலையில்தான் குளோரின் வாயு கசிவு ஏற்பட்டது:

குளோரின் வாயு கசிவு ஏற்படக் காரணமான தொழிற்சாலையின் பேரில், தொழிற்சாலை சட்ட முரண்பாடுகளுக்கு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திரு. எல். ஜெயச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பெரிய தொழிற்சாலைகளில் அண்மையில் இதுபோன்று குளோரின் வாயு கசிவு ஏற்பட்டுள்ளதா ? அதுகுறித்து நாம் கோர்ட்டுக்குச் சென்றாலும் கூட,



அவர்களுக்கு ஒரு சாதாரண ஃபைன்தான் கட்டச் சொல்கிறார்கள். அவர்களும் கட்டிவிடுகிறார்கள். இதுபோன்ற கசிவுகள் ஏற்படாமலிருப்பதற்கு, போபால் போன்ற சம்பவம் ஏற்படாமலிருப்பதற்கு அரசு மேற்கொண்டு என்ன தீவிரமான நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மணலியில் ஏற்பட்டதுபோல், தமிழ் நாட்டில் வேறு எங்கும் ஏற்பட்டதாக அரசுக்குத் தகவல் வரவில்லை. இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தீவிர மான நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொண்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், மணலியில் இந்தச் சம்பவம் நிகழ்ந்த பிறகு, உடனடியாக அந்தத் தொழிற்சாலைமீது நடவடிக்கை எடுக்கும்படி கூறினார்கள். தமிழ் நாட்டில் இன்றையதினம் மணலி, தூத்துக்குடி, மேட்டூர் ஆகிய பகுதிகளில் இருக்கின்ற ரசாயனத் தொழிற்சாலைகளிலும் இதனைப்போன்ற விபத்துக்கள் ஏற்படக் கூடாது என்பதற்காக, போபால் போல் நிகழக் கூடாது என்பதற்காக நம்முடைய முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் சாத்தப்பா அவர்கள் தலைமையில் உடனடியாக ஒரு குழு நியமித் திருக்கிறார்கள். அந்தக் குழு அநேகமாக எல்லாப் பகுதிகளுக்கும் சென்று எந்தெந்த ஆலைகளில் ஆபத்து இதுபோல் நடந்துவிடுமோ என்று ஆய்ந்து தக்க நடவடிக்கைகளை எப்படி நிர்வாகம் எடுக்க வேண்டும் என்பதற்கும் ஒரு அறிக்கையினை விரைவில் கொடுக்க இருக்கிறார்கள். அது வருகின்ற நேரத்தில் இப்படிப்பட்ட ஆபத்துக்களை, ரசாயனத் தொழிற்சாலைகளைப் பொறுத்த வரை, தடுக்க முடியும்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, மணலி பகுதியில் உள்ள ரசாயனத் தொழிற்சாலையால் காற்று ஏற்கெனவே கெட்டுவிட்டது. அந்தக் காற்றை சுவாசித்தால் நோய் வருகிறது. கழிவுநீர் தேங்கிக் கிடப்பதால் மாடுகள் அதில் விழுந்து செத்துவிடுகின்றன. பயிர்களும் கெட்டுவிடுகின்றன. வாழ் வதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, சுற்றுச் சார்பில் ஏற்படுகிற கேடுகளைப் போக்கத்தான் மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் தனியான துறை இயங்கி அதற்காக காரியங்களைச் செய்து வருகிறது. தொழிற்சாலைகளைப்

பொறுத்தவரை, ஏதேனும் விதிமுறைகள் மீறப்பட்டால், அல்லது முரண்பாடுகள் இருந்தால், தொழிற்சாலை சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விரிவான பதிலுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பெரிய தொழிற்சாலைகளில் இப்படிப்பட்ட தவறுகள் நடக்கும்போது, சீப் இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரீஸ் அல்லது இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரீஸ் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் பெரிய தொழிற்சாலைகளில் தவறு நடந்தால், இத்தகைய அதிகாரிகள் போய்ப் பார்த்தாலும், நடவடிக்கை எடுப்பதில்லை. ஆனால் தமிழகத்தில் உள்ள சிறு தொழில் அதிபர்கள்தான் இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு அதிகமாக உள்ளாகிறார்கள். அவர்கள்மீது தான் வழக்குகள் தொடரப்படுகின்றன. எனவே சிறு தொழில் அதிபர்கள் முதன்முறையாகத் தவறு செய்தால், அவர்களை மன்னித்துவிட வேண்டும் என்றும், பிறகும் தொடர்ந்து தவறு செய்தால் மட்டுமே வழக்குத் தொடர வேண்டும் என்றும் அதிகாரிகளுக்குச் சொல்ல அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, பெரிய தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்பது ஏற்புடைத்தல்ல. குறிப்பாக, இன்றைக்குப் பேசப்பட்ட கோத்தாரி கெமிக்கல்ஸ் என்ற நிறுவனமே ஒரு பெரிய தொழிற்சாலைதான். அவர்கள் இந்தத் தொழிலில் மட்டுமல்ல, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். உ, டெக்ஸ்டைல்ஸ், கெமிக்கல்ஸ் போன்ற பலவற்றில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் விரல் விட்டு எண்ணக்கூடிய பெரிய தொழிற்சாலைகளில் ஒன்றுதான் கோத்தாரி கெமிக்கல்ஸ் என்கிற நிறுவனம். அந்தத் தொழில் நிறுவனத்தின் மீதே வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. பொன்னேரி சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் 7-6-1985 அன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடந்து வருகிறது. எனவே அவர்கள் மீதே பிராசிக்யூஷன் லாஞ்ச் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Institute of Veterinary Preventive Medicine, Ranipet.*

* 87. Q.—Thiru C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state, with reference to the answer to Legislative Council Unstarred Question No. 105 laid on the table of the House on 30th April 1984 :



(a) whether the vacancies in the post of Assistant Research Officers in the Institute of Veterinary Preventive Medicine, Ranipet, North Arcot District, have since been filled up; and

(b) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(இ) கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர், இப்பதவிகளை நிரப்புவதற்கான செயற் குறிப்பினை அரசுக்கு அனுப்பியுள்ளார். இச் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்தப் பதவிகளை நிரப்பத் தேவையான கல்வித் தகுதி பெற்றவர்கள் கிடைக்கவில்லையா அல்லது வேறு காரணங்களால் அந்தப் பதவிகள் இதுவரை நிரப்பப்படவில்லையா ? என்ன காரணத்தால் நிரப்பப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தற்போது 25 உதவி ஆராய்ச்சியாளர்கள் பதவிகள் இருக்கின்றன. அவற்றில் 10 பதவிகள் தற்போது காலியாக உள்ளன. ஆனால் இந்தப் பதவிகளில் நியமிக்கப்படுபவர்களுக்கு நான்கு தகுதிகள்—எலிஜிபிலிடி—குவாலிபிகேஷன்—தேவை என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது :

1. பல்கலைக் கழக மான்யக் குழுவால் ஏற்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு பல்கலைக் கழகத்தின் மூலம் கால்நடை விஞ்ஞானத்தில் பட்டம் அல்லது டிப்ளமோ.

2. கால்நடை விஞ்ஞானத்தில் அல்லது கால்நடைப் பராமரிப்பில் 9 மாதப் பட்ட மேல்படிப்புப் பயிற்சி.

3. இந்த இலாக்காவிலேயே கால்நடை மருத்துவராக 10 ஆண்டு அனுபவம். அதில் இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் இரண்டாண்டு காலப் பணிப் பயிற்சி.

4. அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வுப் பயிற்சி.

இதில் இன்றைக்குச் சிலர் தகுதி பெறாத காரணத்தால், அந்த இடங்கள் காலியாக இருக்கின்றன. என்றாலும் அதன் அவசியத்தைக் கருதி தற்போதுள்ள குவாலிபிகேஷன்களில் தரம், பணிப் பாதுகாப்பு ஆகியவை கெடாத வகையில், சில விதிவிலக்கை அளிப்பது குறித்து அரசு இன்றைக்கு ஆராய்ந்து

கொண்டிருக்கிறது. பணி மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையும் இதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இந்த நான்கு தகுதிகளில் எதையாவது 'டைஅட்' செய்ய முடியுமா என்று ஆராய்ந்து காலியாக இருக்கிற இடத்தை நிரப்புவதற்கு அரசு இன்றைக்கு முயற்சியை மேற்கொண்டிருக்கிறது.

### ஏற்காடு மலை.

* 88. வினா—திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு செய்தி மற்றும் அற நிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஏற்காடு மலையில், 'லேடீஸ் சீட்' என்னும் இடத்திலுள்ள தொலை நோக்காடியை (Telescope) மேலும் சக்தி வாய்ந்ததாக அமைக்கவும், சுற்றுலா வருபவர்களுக்கு அங்கு இளைப்பாறுமிடங்கள் மற்றும் கழிவறைகள் ஏற்படுத்தவும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) தற்சமயம் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, ஏற்காடு மலையில் "லேடீஸ் சீட்" என்று சொல்லும் இடம் மிகவும் கவர்ச்சியான இயற்கை வனப்பு மிகுந்த இடம். தற்போது அங்குள்ள தொலைநோக்காடி அவ்வளவு சக்தி வாய்ந்ததாக இல்லாததால், அங்கே செல்லுகிற மக்கள் சேலம் நகரையோ அல்லது அதைச் சுற்றியுள்ள மற்ற பல பகுதிகளையோ பார்த்து இன்புற முடியவில்லை. எனவே சக்தி வாய்ந்த தொலை நோக்காடியை வைத்தால், அது கவர்ச்சியாக இருக்கும். மேலும் அந்தப் பகுதியில் சாலைகள் அவ்வளவு சிறப்பாக இல்லை. அந்தப் பகுதிக்கு எளிதாகச் சென்று வரக்கூடிய அளவுக்கு மாற்றி அமைத்து தொலை நோக்காடியையும் சக்தி வாய்ந்ததாக மாற்றிட—அது தற்போது முடியாவிட்டாலும் எதிர் காலத்திலாவது—அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-25)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, அங்கே அமைக்கப்பட்டுள்ள தொலைநோக்காடி 28-11-1982 அன்று அமைக்கப்பட்டது. இது அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கருவி. இதனுடைய சக்தி சுமார் பத்து கிலோமீட்டர் தொலைவு வரையில் உள்ள இடங்களைப்



பார்க்க முடியும். சில நேரங்களில் மேக மூட்டம் போன்ற சூழ்நிலை இருந்தால், அப்படிப் பார்ப்பதில் கொஞ்சம் வசதிக் குறைவு இருக்கும், தெளிவாகக் காட்சிகள் தெரியாது. எவ்வளவு சக்திவாய்ந்த கருவியைப் பயன்படுத்தினாலும், அப்படித்தான் இருக்கும். ஆனால் எதிர்காலத்தில் இன்னும் மிகுந்த சக்திவாய்ந்த கருவியைப் பயன்படுத்த முடியுமா என்பதைப்பற்றிப் பரிசீலிக்க இயலும். காரணம் அதற்கு அதிகச் செலவாகும். இந்தச் சூழ்நிலைகளை வைத்துக்கொண்டு, வருகின்ற பயணிகளின் எண்ணிக்கையை மனதிலே வைத்துக்கொண்டு எதிர்காலத்திலே அதைப்பற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

அந்த இடத்திற்குப் போகிற சாலை வசதியாகத்தான் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். நகரியத்தின் பொறுப்பில் உள்ள சாலை அது. அது எந்த அளவிற்குப் பழுதுபார்க்கப்படுகின்றது என்ற விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை. அரசின் கவனத்திலே அது எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. பா. ரா. தாமஸ் : சேலம் நகரம் கூட அந்த இடத்திலேயிருந்து 28 கிலோமீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது. அந்த அளவிற்குக் கூட தெளிவாகத் தெரியவில்லை. அங்கே வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள் சேலம் நகரையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே பத்து கிலோமீட்டர் தூரம் வரை பார்க்கலாம் என்றிருப்பதை மேலும் பல கிலோமீட்டர் அளவிற்குப் பார்க்கலாம் என்று உயர்த்திப் பார்க்கக் கூடிய அளவிற்கு கருவியை வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் அந்தப் பகுதியில் மக்கள் வந்து தங்கி இயற்கையின் வனப்புகளை ரசிக்கக் கூடிய அளவிற்கு தங்கும் வசதிகள் இல்லை. ஆகவே அங்கே சில காலம் தங்கி இளைப்பாறி மக்கள் மகிழ்ச்சியுறும் வகையில் சுற்றுலாத் துறையின் மூலம் இருப்பிடங்களைக் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : சாலையின் தூரம் வேறு, பார்வையின் தூரம் வேறு. சேலத்திலிருந்து வளைந்து வளைந்து செல்லும் சாலையின் வழியாகச் சொல்லும்போது, 28 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். ஆனால் பார்வையில் பத்து கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது. சேலம் நகரத்தைப் பார்க்கத்தான் அந்தத் தொலைநோக்காடியை வைத்திருக்கிறோம். பத்து கிலோமீட்டர் தூரம் என்பது பார்வை தூரம். ஆகவே சேலத்தைப் பார்க்க முடியும். ஆனால் வருகிற பயணிகளின் எண்ணிக்கையை மனதிலே வைத்து எதிர்காலத்திலே அதிக சக்தி வாய்ந்த தொலைநோக்காடியை அமைக்க முடியும்.

[1985 ஜூலை 17

ஏற்காடு நகரத்திலே தங்கும் வசதியைச் செய்து கொடுத்திருக்கிறோம். குறைந்த செலவில் தங்க இளைஞர் விடுதிகள் இருக்கின்றன. வேறு விடுதிகளும் இருக்கின்றன. தொலைநோக்காடியைப் பார்ப்பது என்பது கால் மணி நேரம் அல்லது அரை மணி நேரம்தான் இருக்க முடியும். ஏறத்தாழ இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் தொலைநோக்காடிக்கான கட்டிடம் கட்டி அந்தத் தொலை நோக்காடியை அமைத்து, சிற்றுண்டிசாலையையும் அமைத்திருக்கிறோம். அங்கே பூங்கா இருக்கிறது. இதைப் பார்ப்பதற்கு மேல் யாரும் அங்கே தங்கமாட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் போன்றவர்களுக்கு எப்படி அங்கே தங்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது, எப்படி அந்த இடத்தைத் தங்குவதற்குத் தேர்ந்தெடுத்தார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏற்காடு நகரத்தில் தங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தங்க விரும்பினால் அங்கே போய் தங்கலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஏற்காடு மலையில் உள்ள 'லேடீஸ் சீட்' என்ற இடத்தில் சிற்றுண்டிசாலை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பெரும்பாலும் அங்கே குளிர் பானங்கள், மற்ற குடிக்கின்ற பானங்கள்தான் கிடைக்கின்றன; சிற்றுண்டி கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே சிற்றுண்டிசாலையை ஏற்படுத்த அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

மேலும் பயணிகள் பேருந்து நிலையத்திலிருந்து அந்த இடத்திற்கு நீண்ட தூரம் நடந்தே செல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நடந்து செல்லும்போது இயற்கைக் காட்சிகளைப் பார்க்க வாய்ப்பாக இருக்கிறது என்றாலும், 'டெம்போ' போன்ற மூன்று சக்கர வண்டிகளை ஏற்பாடு செய்து, அதற்கான கட்டணத்தை வசூலித்துக்கொண்டு வாகன வசதியை ஏற்படுத்தித் தந்தால் நலமாக இருக்கும். அத்தகைய ஏற்பாட்டைச் செய்ய அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அந்தச் சிற்றுண்டிசாலையில் எந்த வகையான சிற்றுண்டிகள் பரிமாறப்படுகின்றன என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால் அப்படி வெறும் குடிக்கின்ற பானங்கள் மட்டும் வழங்கப்படுகின்றன என்றால், சிற்றுண்டிகளை வழங்க சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்த இடத்திற்கு குறிப்பிட்ட தூரம் வரை கார்கள் செல்கின்றன. அதற்குப் பிறகு கொஞ்சம் நடந்துபோகிற மாதிரி வாய்ப்பு இருக்கிறது. நடந்து போய் அந்த இடத்தைப் பார்த்தால்தான், இயற்கைக் காட்சிகளை



1985 ஜூலை 17]

அனுபவித்ததாகப் பொருள். மேடு பள்ளங்களில் ஏறி இறங்கி காட்சிகளைப் பார்த்துக்கொண்டு போவதில் கொஞ்சம் கஷ்டம் இருக்கலாம் என்றாலும், இந்தக் கஷ்டத்திற்குப் பிறகு மகிழ்ச்சி ஏற்படுகிறபோதுதான் மகிழ்ச்சிக்கே பொருள் உண்டு.

(முற்பகல் 10-30)

பேருந்து வசதிகளை அதுவரையில் விஸ்தரிக்க வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் கருதுகின்றார்கள். சிறு பேருந்துகள் போகின்ற அளவிற்கு சாலை வசதிகள் இருக்கின்றனவா என்பது எனக்குத் தெரியவில்லை. அப்படி இருந்தால், சிறிய பேருந்துகளை விடுவதற்கு அரசு முயற்சி எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, வேறு சிறிய வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்கள் போகின்ற அளவிற்கு வசதி இருந்தால், அதை அரசு பரிசீலிக்கும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, அந்த இடத்திற்கு 'லேடீஸ் சீட்' என்று ஏன் பெயர் வந்தது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? இருபாலார்களும், ஆண்கள் பெண்கள் இருபாலார்களும் அந்த இடத்திலே இருந்து பார்க்க அந்த இடத்தை அதிகப்படுத்தி அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** தலைவர் அவர்களே, 'லேடீஸ் சீட்' என்று அதற்கு எப்படிப் பெயர் வந்தது என்ற கேள்வியை முன்பே கேட்டிருந்தால், அந்த ஆராய்ச்சியைச் செய்து பதிலை இங்கே சொல்லியிருக்க முடியும். திடீரென்று கேட்டிருக்கின்றார். ஆகவே அந்த முயற்சிக்குள்ளே இங்கே நுழையாமல் இருக்கிறோம். 'லேடீஸ் சீட்' என்று சொல்லும்போது, அங்கு ஒருவருக்குத்தான் இடம் என்றில்லை. அந்த இடத்தில் இருப்பதற்கு பல வசதிகள் இருக்கின்றன. அங்கு எல்லோரும் உட்கார்ந்து பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆகவே நம்முடைய உறுப்பினர் அவர்களும் இவர் ஆண் என்ற வகையிலே போய் உட்கார்ந்து பார்க்கலாம். அதிலே ஒன்றும் தடை ஏற்படாது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, ஊட்டியில் தொட்டபெட்டாவில் அமைக்கப்பட்டிருக்கின்ற அந்த டெலஸ்கோப் பொதுமக்களுடைய அதிகமான வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. அதனால், ஒருவர்பின் ஒருவராக வரிசையில் சென்று பார்த்துவிட்டு வருவதற்கு அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் கூட ஆகிவிடுகிறது. எனக்கேகூட அந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்த இடத்திலே மேலும் டெலஸ்கோப் கருவி

[1985 ஜூலை 17

கள் அமைத்தால் நேரம் அதிகமாக ஆவதைக் குறைக்கலாம். அதற்கு வழி ஏற்படும். ஆகவே பொதுமக்கள் அதிகமாக விரும்புவதால், அந்த வசதிகளைப் பெருக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுடைய அந்த எண்ணிக்கையைக் கருத்திலே கொண்டு, அதிகமாகப் பயன்படுத்துகின்ற சூழ்நிலைகள் இருக்குமானால், இந்தக் கருத்து பரிசீலிக்கப்படும்.

*Helicopter Service from Coimbatore to Mudumalai.*

* 89. Q.—Thiru S. J. SADIQ PASHA : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state :

(a) whether there is any proposal with the Government to operate Helicopter service from Coimbatore to Mudumalai directly; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வசதிகள் குறித்து அந்தத் திட்டங்களில் அமுல்படுத்தப்படுமா? எப்போது ஆரம்பிப்பதாக அரசுக்கு உத்தேசம்? அதிலே ஏற்படக்கூடிய செலவுகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய அவசரத் தேவைகளுக்காக வாங்கப்பெற்ற ஹெலிகாப்டர் இப்போது அதிக அளவிலே பயன்படுத்தப்படாமல் இருக்கின்றது என்ற சூழ்நிலையை மனதிலே கொண்டு, சுற்றுலாத் துறை சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஒரு கருத்தை அரசுக்குத் தெரிவித்தது. கோவையிலே இருந்து ஊட்டி போன்ற இடங்களுக்கு ஹெலிகாப்டரிலே சென்று, ஊட்டியிலிருந்து முதுமலை போன்ற இடங்களுக்கும் சென்று வருகின்ற ஒரு பயணத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். அதுபோல, சென்னையிலிருந்து மகாபலிபுரம், அப்படியே சென்னையைச் சுற்றி வருகின்ற திட்டத்தையும் நிறைவேற்ற முடியும் என்ற அந்தக் குறிப்புகளை எல்லாம் மனதிலே வைத்து, அரசுக்கு அந்த ஹெலிகாப்டர் அதிகச் செலவை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்,



1985 ஜூலை 17]

சுற்றுலா வளர்ச்சியை மனதிலே எண்ணி அதை கிரயம் பெற்றுக்கொள்ளாமல், சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு தருமானால், அந்தச் செலவையெல்லாம் நாம் ஏற்றுக்கொண்டு, அந்தச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று கேட்டிருக்கிறோம். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது. அதிலே நமக்கு என்று இப்போது எந்தச் செலவும் இல்லை. நமக்கு அதிக செலவாகவோ அல்லது இழப்பாகவோ இருக்காது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அப்படி பயணிகள் பயன்படுத்துவதற்கு மத்திய அரசினுடைய விமானப் போக்குவரத்துத் துறையும் சுற்றுலாத் துறையும் அனுமதி வழங்கியிருக்கின்றது. அரசினிடமிருந்து நாம் அந்த பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : தலைவர் அவர்களே, பொதுவாக வெளிநாட்டிலேயிருந்து வரும் பயணிகள் தமிழகத்திற்கு வருவது கணிசமாகக் குறைந்து வருகின்றது. அதற்குக் காரணம் தமிழகத்தில் பல்வேறு வசதிகள் இல்லாததுதான். இப்போது இதுபோன்று ஹெலிகாப்டர் சர்வீஸ் எல்லாம் ஏற்படுத்தினால், நிச்சயமாக பயணிகள் எண்ணிக்கை அதிகமாக ஆகும். நிறைய பேர்கள் வருவார்கள். இதுபோன்ற ஹெலிகாப்டர் சர்விஸ்கள் மதுரையிலே இருந்து கோடைக்கானல், மற்றும் சேலத்திலேயிருந்து ஏற்காடு, கோயம்புத்தூரிலேயிருந்து ஊட்டிக்குப் போக ஏற்படுத்தும் திட்டங்கள் அரசினுடைய பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-35)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட பயணத் திட்டங்களை மனதிலே வைத்துத்தான் 'தேர்ட் லைன் ஃபீடர் சர்விஸ்' என்ற சிறிய விமானப் போக்குவரத்துக்கான அனுமதியை மத்திய அரசிடத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அல்லது மத்திய அரசே அப்படிப்பட்ட பயணத்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது இருக்கும் பிரச்சினை, தமிழக அரசிடத்தில் அதற்குச் சொந்தமான ஹெலிகாப்டர் அதிகப் பயனில்லாமல் இருக்கிறது என்பதுதான். அதைப் பயன்படுத்தலாம் என்ற திட்டத்தைத்தான் மத்திய அரசு அனுமதி பெற்று பரிசிலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. அ. மயில்சாமி : தலைவரவர்களே, முதுமலை போன்ற பகுதிகளுக்கு எல்லாம் கோடை காலத்தில் ஏராளமானவர்கள் செல்கிறார்கள். ஆனால் சில நேரங்களில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக முதுமலைக்குப் பயணிகள் அனுமதிக்கப்படுவதில்லை. அதற்கு அடிப்படைக் காரணம் காட்டுச் செல்வம் அழிவதால்தான், மழை பெய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகையால் காட்டுச் செல்வத்தைக் காப்பாற்ற தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[1985 ஜூலை 17

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவரவர்களே, கோவையிலிருந்து முதுமலைக்கு ஹெலிகாப்டர் விடுவதுபற்றி கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வனச் செல்வத்தைப் பாதுகாப்பதுபற்றிக் கேட்டிருக்கிறார்கள். வனச் செல்வம் பாதுகாக்கப்படுகிறது. அதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். வேறு விவரங்கள் வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட்டால், விவரமாக பதிலளிக்கப்படும்.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவரவர்களே, முதுமலைக்கு ஹெலிகாப்டர் போவதன்மூலம், அதனால் ஏற்படும் சத்தத்தினால் அங்கேயுள்ள யானைகளுக்கு பாதகம் ஏற்படுமென்று 'ஈக்காலஜி எக்ஸ்பர்ட்ஸ்' அபிப்பிராயம் சொல்லுகிறார்கள். அதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவரவர்களே, இந்த மிருகங்கள் எல்லாம் எந்தச் சத்தத்தைக் கேட்டு பயப்படுகின்றன, மிரளுகின்றன, எதிர் பாராத அதிர்ச்சி அடைகின்றன என்பது பழக்கத்தைப் பொறுத்த விஷயம். ஒரு சத்தத்தை முதன் முதலிலே புதிதாகக் கேட்கும்போது, சில மிருகங்களுக்கு எதிர்பாராத சூழ்நிலையில் அதிர்ச்சியை ஏற்படுத்தும். கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் போய்ப் பார்த்தால், வன் விலங்குகளுக்குப் பக்கத்திலேயே நூற்றுக்கணக்கான ஜீப்புகள் பயணம் செய்வதைப் பார்க்க முடியும். மிகப் பெரிய இரைச்சலை ஏற்படுத்திக் கொண்டு, புலிகளுக்குப் பக்கத்தில், சிங்கங்களுக்குப் பக்கத்தில், யானைகளுக்குப் பக்கத்தில் அவை போகின்றன. ஒன்றல்ல, இரண்டல்ல. ஒரே நேரத்தில் ஏறத்தாழ 50, 60 வேன்கள் சுற்றுப் பயணம் செய்யும் காட்சி இருக்கிறது. எனவே, மிருகங்களுக்குப் பழக்கப் பட்டுப்போன சப்தமா அல்லது புதிய சப்தமா என்பதுதான் பிரச்சினை. ஆனால் இந்தச் சத்தத்தைக் கேட்டு மிருகங்கள் பயப்படுவதில்லை. மனிதனின் சப்தத்தைக் கேட்டுத்தான் மிருகங்கள் அனைத்தும் பயப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மனிதனிடமிருந்து இந்த மிருகங்களைப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. ஹெலிகாப்டர் சப்தத்திலிருந்து அல்ல. அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால், அந்த சப்தத்தைக் குறைத்துக் கொண்டோ அல்லது ஏற்படாதவாறோ, அந்த யானைகளுக்குப் பழக்கம் ஏற்படும் வகையில் செய்ய முடியும்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தமிழக அரசு ஹெலிகாப்டரை வாங்கி, எத்தனை மணி நேரம் ஓட்டியிருக்கிறது ? விமான ஓட்டிகள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் ? அவர்களுக்கு அளிக்கப்படும் சம்பளம் பற்றிய விவரங்கள் அளிக்கப்படுமா ?



1985 ஜூலை 17]

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவரவர்களே, சுற்றுலாத் துறையிடத்தில் அப்படிப்பட்ட ஒரு திட்டம் இருக்கிறதா என்பது கேள்வி. நான் சுற்றுலாத் துறை அமைச்சர். அந்தத் துறையின் சார்பிலே பதில் அளித்துக் கொண்டிருக்கிறேன். இந்த ஹெலிகாப்டரைப் பராமரிக்கும் நிர்வாகம் பொதுத் துறையிடத்தில் இருக்கிறது. எனவே, பொதுத் துறையிடத்தில் கேள்வி கேட்டால், முழு விவரம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குக் கிடைக்கும்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அந்த ஹெலிகாப்டரைப் பயன்படுத்துவதற்கு முன்பு அது பாதுகாப்பாக இருக்கிறதா என்று பார்க்க அறநிலையத் துறை அமைச்சர் அவர்களே அதில் பயணம் செய்து பார்த்து, அதற்குப் பிறகு போக்குவரத்துக்கு விட நடவடிக்கை எடுக்கப்படுமென்ற உறுதிமொழியை அமைச்சரவர்கள் அளிப்பார்களா ?

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஹெலிகாப்டர் பாதுகாப்பாக பயணம் செய்யக்கூடிய ஒன்றுதான். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் மிகுந்த எச்சரிக்கையாக இருப்பதற்காக வி.வி.ஐ.பி-க்களை எல்லாம் அதில் ஏற்றக் கூடாது என்பது மரபாக இருக்கிறது. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதில் பல முறை சென்றிருக்கிறார்கள். மத்திய அமைச்சர்கள் பல முறை சென்றிருக்கிறார்கள். பல அதிகாரிகள் சென்றிருக்கிறார்கள். ஆனால் மனித உயிர்கள் என்றால் எல்லாம் ஒன்று தான். பாதுகாப்பான ஹெலிகாப்டர்தான் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம். சில மிக முக்கியமானவர்கள் என்று கருதப்படுகிறவர்கள் அதில் ஏறினால், என்னென்ன வசதிகள் அதில் அவர்கள் பயணம் செய்யும்போது இருக்க வேண்டுமோ அவை எல்லாம் அதில் இல்லை, விதிமுறைகளுக்கு உட்பட்டு இல்லை என்பதுதான் பிரச்சினையே தவிர வேறு ஒன்றுமில்லை. ஆகவே ஹெலிகாப்டர் பாதுகாப்பான ஒன்றுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** கோவையிலிருந்து முதுமலைக்கு ஹெலிகாப்டர் விடுவதில் சிரமம் இருந்தால்கூட, கோடைக்காலத்தில் ஏராளமான பேர் ஊட்டிக்கு வருகிறார்கள், டாக்சிக்கு அதிகப் பணம் கேட்கிறார்கள். அந்த வகையில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் ஊட்டிக்கு வரும்வரையிலும், இங்கே கேள்வி கேட்டுள்ள உறுப்பினருடைய திருப்திக்கு வேண்டியும் ஊட்டிக்காவது ஹெலிகாப்டர் விட இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

[1985 ஜூலை 17

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கிரயம் பெறாமல் இலவசமாக சுற்றுலாத் துறைக்கு அதை வழங்கினால் நன்றாக இருக்கும் என்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அரசு கிரயம் தர வேண்டுமென்று விரும்பி னாலும், சுற்றுலாத் துறை ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறது. இது குறித்து முடிவு செய்யப்பட்ட பிறகு, மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி யடைகின்ற வகையில் நடைபெறும். அச்சப்படத் தேவையில்லை.

### பருத்தி சாகுபடியாளர்கள்.

*90. வினா—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில், பருத்தி சாகுபடியாளர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்க, தனியாக வல்லுனர்களை நியமிக்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) இம்மாவட்டத்தில் கூட்டுறவு பருத்தி அறவை ஆலைகள் தொடங்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை.

(இ) ஆம்.

திரு. அ. ப. சிவராமன் : தென்னாற்காடு மாவட்டத்தில் குறிப்பாக பண்ருட்டி மற்றும் விழுப்புரம் போன்ற வட்டங்களில் 600-க்கு மேற்பட்ட கிராமங்களில் சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகளால் பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால், கோடையில் மிக அதிக அளவில் பருத்தி உற்பத்தி செய்யப்படுவது இங்குதான். அத்துடன் பருத்தி மகசூலுடன்கூட 75 சதவிகிதம் மனிலா ஊடுபயிராகப் பயிரிடப்படுகிறது. மேலும் அங்கு பயிரிடப்படும் பருத்தியைப் பொறுத்த வரையிலும், அது நீண்ட நூல் இழை போன்றவற்றில் இந்தியாவிலேயே முதல் தரம் வாய்ந்தது என்று சொல்கிறார்கள். அங்கு ஏராளமாகப் பருத்தி சாகு படியாவதால் அதிக பருத்தி மகசூல் செய்யும் வகையில் உயர் ரக பருத்தி உற்பத்தி செய்வது பற்றி ஆராய்ச்சி செய்து பருத்தி சாகுபடியாளர்களுக்கு ஆலோசனை கூற இதற்காக ஒரு தனி அதிகாரியை நியமனம் செய்ய வேண்டு மென்று அங்குள்ள பருத்தி சாகுபடியாளர்கள் நீண்ட நாட்களாக அரசுக்குக் கோரிக்கை விடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதோடுகூட நம்முடைய விவசாய இலாகா இயக்குநர் அவர்கள் அண்மையில் இம்மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோதுகூட, இதற்காக வேண்டி ஒரு வல்லுநர் குழு



1985 ஜூலை 17]

அமைக்க வேண்டுமென்று சொல்லி கோரிக்கை தந்திருக்கிறோம். விவசாயத் துறையில் தற்போது ஏராளமான ஆட்களை, நல்ல விளைச்சலை ஏற்படுத்து வதற்காக 'டிரெயினிங் அன்ட் விசிட்' என்கிற முறையில் நியமித்திருக் கிறார்கள். அந்த வகையில் பருத்தி மகசூலை அதிகரிப்பதற்காக ஆலோ சனை நல்க, பருத்தி சாகுபடியில் அதிகமான எண்ணிக்கையில் ஈடுபட்டுள்ள வர்கள் இருக்கிற மாவட்டம் என்கிற வகையில் பருத்தி சாகுபடியாளர்களுக்கு விரைவில் வல்லுநர் குழு ஒன்று ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : ஒவ்வொரு பயிருக்கும் தனித் தனி யாக வல்லுநர்கள் அடங்கிய குழுவை அமைப்பது சிரமம். அந்தந்த மாவட்டத் தில் எந்தப் பயிர் அதிகமாகச் சாகுபடியாகிறதோ அதற்கேற்றவாறு வல்லு நர்கள் ஏற்கெனவே நியமிக்கப்பட்டு அவர்கள் மூலம் ஆலோசனை வழங்கப் பட்டு வருகிறது. அந்த வகையில் இங்கேயும் பருத்தி உற்பத்தி பற்றி ஆலோ சனை வழங்குவார்கள்.

திரு. அ. ப. சிவராமன் : கோவையிலே மைய பருத்தி ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருக்கிறது. அதன் கிளை ஒன்றையாவது தென்னாற்காடு மாவட்டத்தில் அமைக்க மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : ஆராயும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மூலக் கேள்வியின் (இ) பிரிவுக்கு பதி லளிக்கையில் அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொன்னார்கள். ஆகவே, அப்படிப்பட்ட கூட்டுறவு அரைவை ஆலைகள் தொடங்கும் கருத்துருவைப் பற்றிய விவரங்களை நாங்கள் அறிந்துகொள்ளலாமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : விழுப்புரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலமாக தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் நிதி உதவி யோடு 8.5 லட்சம் செலவிலே ஒரு பருத்தி அரைவை ஆலையைத் தொடங்க வேண்டுமென்ற வகையில் கூட்டுறவுப் பதிவாளரிடத்திலேயிருந்து தேசிய மேம் பாட்டுக் கழகத்திற்கு ஒரு கருத்துரு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. அ. ப. சிவராமன் : கோடைப் பருவத்திலே பண்ருட்டி மற்றும் விழுப் புரம் தாலுக்காக்களிலே பயிர் செய்யப்படுகின்ற பருத்தி முழுவதையும், அரைவை செய்வதற்காக, 11 மைல்களுக்கு அப்பால் இருக்கிற பல்வேறு இடங் களுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அப்படி கஷ்டப் பட்டு எடுத்துச் சென்றும் அந்த விவசாயிகளுக்கு உரிய நியாயமான விலை கிடைப்பதில்லை. மேலும் போக்குவரத்துச் செலவும் அதிகமாகிறது. இதை யும் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூட்டுறவு அரைவை ஆலை தோற்றுவிக்கப்படும் என்று சொன்னதற்காக என்னுடைய

இதைஇக்கனிந்த நன்றியை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும் இன்றைக்கு மகாராஷ்டிரத்தில் இருப்பதுபோல, பருத்தியிலே இருக்கிற கொட்டையை நீக்கி, அந்தப் பருத்தியை நல்ல விலைக்கு விவசாயிகள் தருவார்கள். அப்படிச் செய்தால், விவசாயிகளுக்கு உரிய அதிகப்படியான விலை கிடைக்கிறது. அந்த வகையில் 'லிங்கிட் மார்க்கெட்' என்கிற முறையில் இங்கேயும் தென்னாற்காடு மாவட்டத்தில் சில இடங்களில் நிறுவ இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : முதலில் கூட்டுறவு ஆலையைத் தொடங்கிய பிறகு மேற்கொண்டு இந்த அரசு இதுபற்றி ஆராயும்.

(முற்பகல் 10-45)

திரு. எல். ஜெயச்சந்திரன் : தமிழகத்தில் இதுபோன்ற பருத்தி சாகுபடியாளர்கள் அதிக அளவில் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் விளைச்சலுக்கேற்பவும், மார்க்கெட் நிலவரத்திற்கேற்பவும் விலைகள் சரியவும், ஏறவும் செய்கின்றன. இதைக் கட்டுப்படுத்தி, வருடா வருடம் ஒரே சீராக விலைகள் இருக்குமாறு பார்த்துக்கொள்ளும் எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறதா? அப்படி ஒரு சீரான விலை நிர்ணயம் செய்யும் எண்ணமாவது இந்த அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, விவசாயப் பொருளாதாரமே இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது. ஏனென்றால் பருத்தி ஆலைகள் விலை நிர்ணயம் செய்கிறபோது, விலை ஏறவோ இறங்கவோ செய்கிறது. ஆகவே பல்வேறு சூழ்நிலைகளைக் கணக்கில் கொண்டுதான் விலைகளைக் கணக்கிட வேண்டியிருக்கிறது. மேலும், பருத்தி விலை நிர்ணயம் செய்கிற அதிகாரம் நம்மிடமில்லை.

Thirumathi TARA CHERIAN: Sir, will the Hon. Minister kindly tell us whether there is any analysing service centre where cotton is being analysed so that we may also have production of the kind of cotton called Egyptian cotton which is supposed to be the best in the world?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆராய்ச்சிகளையெல்லாம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் செய்து கொண்டிருக்கிறார்கள். நீண்ட இழைப் பருத்தியை, தரமுள்ள பருத்தியை எவ்வாறு எல்லாம் மேம்படுத்தலாம் என்ற ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டிருக்கிறார்கள். அப்போதைக்கப்போது அத்தகைய ஆராய்ச்சிகளின் முடிவுகளும் விவசாயப் பெருமக்களுக்கு அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.



## பண்ருட்டி நகராட்சியில் உள்ள குளோரின் பிளாண்ட்.

*91 வினா.—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) பண்ருட்டி நகராட்சி மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட, உபயோகப்படுத்தப்படும் குளோரின் பிளாண்ட், பழுதடைந்துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இது எவ்வளவு காலமாக பழுதடைந்த நிலையில் உள்ளது?

(உ) இதை பழுதுபார்க்க, எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(இ) மற்றும் (உ) 1976 ஆம் ஆண்டு பழுதடைந்த குளோரின் இயந்திரம் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் பயன்படுத்த முடியாத அளவுக்கு பயனற்றதாகி விட்டதால், பண்ருட்டி நகராட்சி புதிய குளோரின் இயந்திரம் வாங்குவதற்கு முடிவு செய்து, அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவில் புதிய குளோரின் இயந்திரம் வாங்கப்பட்டு பொருத்தப்படும். இருப்பினும் நீரில் தேவையான அளவு பிளீச்சிங் பவுடரைக் கலந்து பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கி வருகிறது.

திரு. அ. ப. சிவராமன் : தலைவர் அவர்களே, தமிழக அரசு பல்வேறு முற்போக்கான திட்டங்களை அறிவித்து, பல்வேறு ஆக்கப்பணிகளை ஆற்றி வருகிறது என்றாலும் கூட, இப்படிப்பட்ட திட்டங்கள், அதிகாரிகளின் செயல்களின் காரணமாக மக்களால் விமர்சிக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1974 ஆம் ஆண்டு குடிநீர்த் திட்டம் அங்கே ஆரம்பிக்கப்பட்டு, 1976 ஆம் ஆண்டு அந்த பிளாண்ட் ரிப்பேர் ஆகிவிட்டது. இதுகுறித்து, 5—9—1984-ல் இந்தக் கேள்வி கேட்டதற்குப் பிறகுதான், குளோரின் பிளாண்ட் ஆரம்பிக்க வேண்டுமென்று நகராட்சி நினைத்து, டெண்டர் கேட்டிருக்கிறது. இதற்கு முன்னாலும் இது போன்ற கேள்விகள் இரண்டு மூன்று முறை வந்திருக்கின்றன. இந்தத் திட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்பட அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, ரூபாய் 30,000 செலவில் புதிய குளோரின் பிளாண்ட் ஒன்றுக்கு நகராட்சி திட்டம் வகுத்து, இந்த முறையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். சிக்கலுக்கு ஆளாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. அ. ப. சிவராமன் :** முதலில் குளோரின் பிளாண்ட் அமைப்பது சம்பந்தமான டெண்டர் கோரப்பட்டது. டெண்டர் கோரப்பட்டதில் அதிகாரிகளுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதன் காரணமாக தவறாக அதை 'கான்சல்' செய்து விட்டார்கள். அங்கே நகராட்சியில் உள்ள இன்சினியருக்கும், வடிகால்வாரிய இன்சினியருக்கும் இடையில் இதன் காரணமாகச் சிக்கல் ஏற்பட்டு, அது தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி, நகராட்சியின் தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க சிறப்பு கவனம் செலுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** சிக்கல் தீர்ந்து விட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

## *Hearing Aids.*

* 94. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state:

(*a*) whether it is a fact that a survey was conducted by the Director of Medical Education to assess the incidence of deafness so as to supply hearing aids to deaf persons; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) 1984-85-ல் இலவச காதொலிக் கருவிகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்திட அரசு முடிவெடுத்தது. பயன் பெறுவோர் தேவையை உணர்ந்து Disability Grade பரிசோதனை முகாம்களின் மூலம் மருத்துவ 'யன் பெறுவோர்களைத் தேர்ந்தெடுத்து, இக்கருவிகளை வழங்குவதென அரசு முடிவெடுத்தது. இப்பரிசோதனை முகாம்கள் சமூக நலத்துறையின் மூலம், மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர் மற்றும் மருத்துவக் கல்வி இயக்குநர் மற்றும் மருத்துவக் கல்வி இயக்குநர் ஆகியவர்களால் அனுப்பப்பட்ட மருத்துவ வல்லுநர் குழுவினால் நடத்தப்பட்டன.





(இ) இம்முகாம்களின் மூலம் மொத்தம் 48,615 நபர்களைப் பரிசோதனை செய்து மொத்தம் 20,560 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, இவ்வாறு காது கேளாதவர்களுக்குக் காதொலி கருவிகள் வழங்கும் திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா? எவ்வளவு கருவிகள் இதுவரை வழங்கியிருக்கிறோம் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, காது கேளாதவர்களுக்குக் காதொலிக் கருவிகள் வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆணையிட்டிருக்கிறது. இதுவரைக்கும் காது கேளாதவர்கள் யாருக்கும் காதொலிக் கருவிகள் கொடுக்கப்படவில்லை. காதொலிக் கருவிகளைச் செய்து கொடுக்கும்படி எல்காட் நிறுவனத்தையும் சிட்கோ நிறுவனத்தையும் கேட்டிருக்கிறோம். 4,580 கருவிகள் செய்து கொடுக்கும்படி கேட்டிருக்கிறோம். எல்காட் நிறுவனம் 2,200 கருவிகள் வழங்கியிருக்கின்றது. சிட்கோ நிறுவனம் இன்னும் வழங்கவில்லை, விரைவில் வழங்கும் தருவாயில் இருக்கிறார்கள். கருவிகள் வந்தவுடனே செங்கல்பட்டு, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் இந்த 4,580 கருவிகளும் வழங்கப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, காது கேளாதவர்களுக்கான இந்தக் காதொலிக் கருவிகளை எந்த வயதினருக்கு வழங்க இருக்கிறோம்? பள்ளிச் சிறார்களுக்கு அவற்றில் எந்த அளவு கொடுக்க இருக்கின்றோம்? பிற மாவட்டங்களிலும் காது கேளாதவர்கள் இருக்கின்றார்களே அவர்களுக்கும் காதொலிக் கருவிகள் கொடுக்க வேண்டாமா? அது குறித்து ஏதாவது திட்டம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும் ஒரு காதொலிக் கருவியின் விலை என்ன, அதன் மதிப்பு என்ன என்றும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும், பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கும் காதொலிக் கருவிகள் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வயது வரம்புபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். 18 வயதுக்குக் குறைந்த பள்ளிக் குழந்தைகளுக்கும், பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கும் மற்றும் வயது முதிர்ந்த ஏழை எளியவர்களுக்கும்கூட கொடுக்கப்படுகின்றன. இக் கருவிகளில் மாடல் 1, மாடல் 2 என இரு வகைகள் உள்ளன. மாடல் 1 கருவி 320 ரூபாய் மதிப்பில் இருக்கும். அதைத்தவிர காதொலி பொருத்தும் கருவி (ஏர் மோல்ட்) 48 ரூபாய் செலவில் வழங்குவதற்காகவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

[1985 ஜூலை 17

திரு. அ. ப. சிவராமன் : தலைவர் அவர்களே, எல்காட் நிறுவனம், சிட்கோ நிறுவனம் இரண்டையும் தனித்தனியே காதொலிக் கருவிகள் செய்து தரும்படி கேட்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இரண்டு நிறுவனங்கள் தயாரிக்கும் கருவிகளுக்குமிடையே தரத்திலும், விலையிலும் வித்தியாசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, இரண்டு நிறுவனங்களின் கருவிகளுக்குமிடையிலும் தரத்திலும், விலையிலும் எந்த வித்தியாசமுமில்லை என்கிற மதிப்பீட்டின் அடிப்படையில்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, காதொலிக் கருவிகள் வழங்கும் திட்டம் நல்ல திட்டம். இது முழுச் செவிடானால்தான் தருவார்களா ? அல்லது கால், அரை, முக்கால் செவிடாக இருந்தாலும் தருவார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் மூலம், முழுமையாக காது கேளாதவர்களுக்கும், அரைகுறையாகக் காது கேளாதவர்களுக்கும் காதொலிக் கருவிகள் வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழக அரசு பல்வேறு புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டியிருக்கின்றது. அவற்றில் ஒன்று காது கேளாதோருக்கான பள்ளிகளை ஏற்படுத்தியதுமாகும். தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திலே காது கேளாதோருக்கான பள்ளியில் முப்பது மாணவ, மாணவிகள் இருக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக இந்த அரசு நல்லபல திட்டங்களை அறிவித்திருந்தாலும், தென்னாற்காடு மாவட்ட சமூக நல அலுவலர் அவற்றை நிறைவேற்ற எந்தவிதமான முயற்சியும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. மேற்படி பள்ளியை ஊர்க்காவல் படையைச் சேர்ந்தவர்கள், ரோட்டரி சங்கத்தினர் எல்லாம் கவனித்து பல உதவிகளைச் செய்து வருகிறார்கள். ஆனாலும் அடிப்படைத் தேவைகள்தான் செய்ய முடிகிறதே தவிர, இதுபோன்ற உதவிகளைச் செய்ய முடியவில்லை. இதற்காக அவர்கள் அரசிடம் காதொலிக் கருவிகள் வழங்கிட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கு விரைவிலே காதொலிக் கருவிகளை அளித்தால், அவர்கள் வாழ்விலே மகிழ்ச்சி ஏற்படும். அவ்வாறு காதொலிக் கருவிகள் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1985 ஜூலை 17]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள காது கேளாதோர் பள்ளியில் படிக்கின்ற அந்தக் குழந்தைகளுக்கும் காதொலிக் கருவிகள் கொடுக்கப்படும்.

திரு. அ. ப. சிவராமன் : தலைவர் அவர்களே, திருச்சியில் உள்ள பார்வையற்றோர் பள்ளியில் இருபாலரும் படித்து வந்தார்கள். இப்போது அங்கே மாணவிகள் மட்டும் படிக்கும் வகையில் மாற்றப்பட்டிருக்கிறது. அப்படியானால் அங்கே படித்த மாணவர்களை என்ன செய்திருக்கிறார்கள் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, இது அடுத்த கேள்வி. இப்போதுள்ள கேள்வி காது கேளாதோர் பற்றியது.

### *Starting School for Girls who are Blind.*

* 95. *Q.*—Thiru A. MAYILSAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state whether there is any proposal with the Government to start one more school exclusively for girls who are blind, during 1985-86?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பார்வையற்ற மாணவியர்களுக்கென தனியாக ஒரு கூடுதல் பார்வையற்றோர் பள்ளி 1985-86 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், பூவிருந்தவல்லியிலுள்ள அரசு பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகளைத் தவிர மற்ற அனைத்து அரசு பார்வையற்றோர் பள்ளிகளில் பயிலும் மாணவியர்களுக்கென, திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசு பார்வையற்றோர் பள்ளியை மகளிர் பார்வையற்றோர் பள்ளியாக 1985-86 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது.

(முற்பகல் 10-55)

திரு. அ. மயில்சாமி : தலைவர் அவர்களே, 1985-86-ல் அப்படிப்பட்ட பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு எண்ணம் இல்லை என்று சொல்லப்பட்டது இரண்டு, மூன்று மாவட்டங்களுக்குச் சேர்த்தாவது அப்படிப்பட்ட ஒரு பள்ளியை ஆரம்பித்தால்தான், அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும். அந்த அடிப்படையில் அடுத்த ஆண்டாவது இப்படிப்பட்ட பள்ளிகளை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, காது கேளாதவர், வாய் பேச முடியாதவர், கண்பார்வை இழந்தவர் இவர்களுக்காக சமூக நலத் துறையிலே எத்தனை தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன, நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன, உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன, மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன ? கல்லூரிகள் ஏதேனும் இருக்கின்றனவா ? அவைகளில் பயன் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, மூன்று கேள்விகள் இருக்கின்றன. பார்வையற்ற பெண்களுக்காகத் தனிப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காது கேளாதோர், பார்வையற்றவர்கள், கை, கால் ஊனமுற்றவர்கள் எல்லோருக்கும் பொதுவான அடிப்படையில் கேள்வி கேட்டிருக்கிறார்கள் இருந்தாலும் இன்றைக்கு தமிழகத்தில் 12 அரசு பார்வையற்றோர் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. கல்லூரிகள் பார்வையற்றவர்களுக்காக நடத்தப்படுகிறதா என்று கேட்டார்கள். பூவிருந்தவல்லியில் மேல்நிலைக் கல்வி வரைக்கும் நடத்தப்படுகிறது.

திரு. சி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லியைப்பற்றித் தான் நான் கேள்வி கேட்க இருந்தேன். அந்தப் பள்ளியை கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னாலே கல்லூரியாக ஆக்குவதாக யோசனை இருந்து வந்தது. அது ஏன் கல்லூரியாக மாற்றப்படவில்லை? அது கல்லூரியாக மாற்றப்படுவதற்குத் தடையாக இருந்த காரணங்கள் என்ன? அங்கு கண் இழந்தவர்களுக்கு கைத்தறித் தொழிலைக் கற்றுக் கொடுத்து வந்தார்கள். இன்னும் பல தொழில்களைக் கற்றுக் கொடுத்து வந்தார்கள். அவைகள் தற்போது நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஏன் அவைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன ? அந்தப் பள்ளி வெள்ளைக்காரன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு நல்ல இட வசதி, தேவையான மற்ற வசதிகளும் இருக்கின்றன. அதைக் கல்லூரியாக மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லியிலுள்ள அரசு பார்வையற்றோர் பள்ளி இப்போதுதான் மேல்நிலைப் பள்ளியாக இயங்கிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த கல்லூரியாக ஆக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். முதலில் கல்லூரியாக ஆக்க தடை விதிக்கப்பட்டு, பிறகு நிறுத்தப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டு, இது மீண்டும் கல்லூரியாக ஆக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.





திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, பார்வையற்ற மாணவர்களைத் தனியாகப் பிரித்து வைப்பது, தனியாகப் பள்ளி நிறுவுவது, கல்லூரி நிறுவுவது, இன்றைய கல்வி முறைக்கே முரணாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களையும் பிற மாணவர்கள் படிக்கிற பள்ளிகளிலே தேவையான அளவு சேர்த்து அவர்களை கல்வி கற்கச் சொல்ல வேண்டுமென்பது தான் மத்திய அரசினுடைய நோக்கம் என்று தெரிகிறது. அந்த முறையிலே எல்லாப் பள்ளிகளிலும் மாணவர்களைச் சேர்க்கும் திட்டத்தைக் கொண்டுவர முன்வருவார்களா ? எனக்குத் தெரியும், சில பள்ளிகளில் பார்வையற்ற மாணவர்கள் சேர்ந்து படித்து முதல் தரத்திலே தேறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பாகுபடுத்தி, தரம் குறைந்தவர்களாக, தன்னம்பிக்கையற்றவர்களாக ஆக்கக் கூடாது என்ற திட்டத்தின் அடிப்படையிலே எல்லாப் பள்ளிகளிலும் பார்வையற்ற மாணவர்களைச் சேர்க்கும் திட்டத்தை ஊக்குவிக்கக்கூடிய திட்டத்தை அறிவிப்பார்களா ? அப்படி அறிவித்தால், அது நன்றாக இருக்குமே. அதோடு மத்திய அரசு ஏராளமான தொகையை பார்வையற்ற குழந்தைகளுக்காக மாநில அரசுக்குக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். நாம் எந்த அளவிலே அந்த உதவியைப் பெற்றிருக்கிறோம் என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். அந்த மாணவர்களுக்கு உதவும் வகையிலே மற்ற மாணவர்கள் படிக்கும் பள்ளிகளிலே "ரிசோர்ஸ் பெர்ஸானல்" என்று ஆசிரியர்கள் நியமிக்கலாம் என்ற திட்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே. அந்த முறையிலே மாநில அரசு எத்தனை "ரிசோர்ஸ் பெர்ஸானல்" நியமித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, பார்வையற்ற மாணவர்கள் பொதுவான பள்ளிக்கூடங்களில் படிக்க விருப்பம் இருந்தால், படிக்கலாம். ஆனால் அந்த மாணவர்களுக்கென்று தனியாகப் பள்ளிகள் ஆரம்பித்து, அவர்களுக்காக 'பிரெய்லி' எழுத்து முறை எல்லாம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் அவர்களுக்கெல்லாம் இன்றைக்கு கல்வி போதிக்கப்படுகிறது. அந்த 'பிரெய்லி' எழுத்துக்கள் எல்லாம் பொதுவான பள்ளிக்கூடங்களில் ஏற்படுத்துவது மிகவும் கடினமாக இருக்கும். அதற்காக தனியாக ஆசிரியர்கள் எல்லாம் போட வேண்டும். அதற்காகத்தான் இப்படி தனிப்பட்ட முறையில் அவர்களுக்கு பள்ளிக்கூடங்கள் ஆரம்பித்து

தனியாக ஒரு கவனம் செலுத்தும்போது நிச்சயமாக அவர்களும் நல்ல முறையில் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற ஒரு நல்ல அடிப்படையில்தான் பார்வையற்ற மாணவர்களுக்காக அரசாங்கமே தனியாக பள்ளிக்கூடங்களை ஆரம்பித்து செயற்படுத்தி வருகிறது.

(முற்பகல் 11-00)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** பல இடங்களில் நமது கண்களுக்கு முன்பாகவும் காவல் துறையினரின் கண்களுக்கு முன்பாகவும் பார்வையற்ற சிறுமிகள் அதிலும் பள்ளிக்குச் செல்ல வேண்டிய பருவத்தில் இருப்பவர்கள் பிச்சை எடுக்கிறார்கள். அல்லது பிச்சை எடுக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். எனவே அப்படிப்பட்டவர்களைச் சமூக நலத் துறையின் மூலமாக பார்வையற்றோர் பள்ளிகளில் சேர்த்துப் படிக்கத் தேவையான வசதிகளைக் கொடுத்து, கட்டாயக் கல்வி கொடுக்கும் வகையில் தீவிரமான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ளுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** எந்த இடத்தில் அம்மாதிரி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால், நிச்சயமாக அப்படிப்பட்ட குழந்தைகளை எடுத்து பள்ளியில் சேர்த்து கட்டாயக் கல்வி அளிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** கடலூரில் இதுபோன்ற பார்வையற்ற மாணவர்களுக்கான பள்ளி ஒன்று இருக்கிறது. 25 மாணவ மாணவிகள் அதில் பயிலுகிறார்கள். கடந்த ஆண்டுவரை மாணவர் ஒவ்வொருவருக்கும் சாப்பாட்டிற்காக அரசு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்தான் கொடுத்து வந்தது. அது போதாதென்ற அடிப்படையில் பொது ஸ்தாபனங்களான ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப், ஊர்க்காவல் படையினர் போன்றவர்கள் அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியதன் பேரில், கடந்த ஆண்டிலிருந்து மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு சாப்பாட்டிற்கு என்று 2 ரூபாய் தற்போது வழங்கப்படுகிறது. அதுகூட மிகவும் சொற்பமான தொகை என்பதால் ஒரு நாளைக்கு ரூ. 5 அல்லது ரூ. 7 ஆக அதை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகளை அரசு பரிசீலிக்கும்.



**திரு. அ. ப. சிவராமன்:** தலைவர் அவர்களே, இருபால் மாணவர்களுக்கான பார்வையற்றோர் பயிற்சிப் பள்ளி திருச்சியில் செயல்படுவதை தற்போது மாணவிகளுக்கான பள்ளியாக ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் இதுவரை அங்கே படித்துவந்த பார்வையற்ற மாணவர்களின் நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தலைவர் அவர்களே, திருச்சியில் உள்ள அரசு பார்வையற்றோர் பள்ளியை மகளிர் பள்ளியாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பள்ளியில் இதுவரை 2 முதல் 6 வகுப்புவரை படித்து வந்த மாணவர்கள் திருச்சிக்கு அருகில் உள்ள மதுரை, திருவாரூர், புதுக்கோட்டை, சிவகங்கை போன்ற இடங்களில் உள்ள பார்வையற்றோர் பள்ளிகளில் சேர்க்கப்படுவார்கள். எட்டு முதல் 9 வகுப்புவரை படித்து வந்த மாணவர்கள் பூவிருந்தவல்லியில் உள்ள அரசு பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளியில் சேர்க்கப்படுவார்கள்.

**திரு. அ. மயில்சாமி:** பார்வையற்றவர்களுக்காக நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்குத் தேவையான அளவு பிரெய்லி முறை பாடப் புத்தகங்கள் பொதுவாகக் கிடைப்பதில்லை என்று சொல்லப்படுகிறதே. அந்தப் புத்தகங்கள் கிடைப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** பார்வையற்றோர் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு பிரெய்லி எழுத்துக்கள் மூலமாகக் கல்வி போதிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சில மாணவர்களுக்கு அப்படிப்பட்ட புத்தகங்கள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். எந்தப் பள்ளியில் அவ்வாறு கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டால், அந்தப் பிள்ளைகளுக்கு உரிய புத்தகங்கள் உடனடியாகக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்

Thirumathi TARA CHERIAN: Hon. Chairman, Sir, the Government reserved 3 per cent of jobs—one per cent for the blind, one per cent for the deaf and one per cent for the physically handicapped—for these people. It will be of interest to us to know how many of these people have been employed

by the Government after the order was passed. If that information is given, people like me can go to the private institutions and find out how many handicapped persons have been employed by those institutions. Therefore, will the Hon. Minister kindly give us the information?

எனவே, முடிந்தால் மந்திரி அம்மையார் அவர்கள் எத்தனை பேருக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் நல்லது. மூன்று சதவிகிதம் கவர்ன்மெண்ட்டில் வேலை கொடுக்கிறார்கள், சில டிபார்ட்மெண்ட்டில் கொடுக்கிறார்கள். கவர்ன்மெண்ட்டில் வேலை செய்ய நல்ல வாய்ப்பு உண்டு. எனவே அவர்களுக்கு அங்கே கொடுத்தால் நல்லதாக இருக்கும். அப்படி அமைச்சர் அம்மையார் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மூலக் கேள்வி பார்வையற்றோர் பெண்களுக்கான கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊனமுற்றவர்களுக்கு 3 சதவிகிதம் ரிசர்வேஷன் அடிப்படையில் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் குறிப்பிடுகிறார்கள். 1 சதவிகிதம் பார்வை யற்றவர்களுக்கு, 1 சதவிகிதம் உடல் ஊனமுற்றவர்களுக்கு, 1 சதவிகிதம் செவிடு ஊமையர்களுக்கு என்று கேட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் தமிழக அரசு ஜாதி அடிப்படையில் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கும் மற்றும் பழங்குடியினருக்கும் மற்றும் பிற்பட்டவர்களுக்கும் ஒப்பன் காம்ப்படிஷனிலும் ஆக மூன்றிலும் அவர்களுக்குக் கொடுக்கிற ஒதுக்கீட்டை வைத்து ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. அதில் எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்பட்டது என்ற விவரம் இல்லை. மூலக் கேள்வி அதுவல்ல. எனவே தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் அறிந்து சொல்லப்படும்.

(முற்பகல் 11-05)

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே. சோஷியல் வெல்ஃபேர் சேர்மனாக அம்மையார் அவர்கள் இருக்கும் நேரத்தில், அவரும் மந்திரியும் சேர்ந்து செய்ய வேண்டிய காரியத்தை இங்கே கேட்பது நியாயம் தானா என்று அறிய விரும்புகிறேன்.





## குறுகிய கால வினா.

### அபிராமம்-நத்தத்தில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி.

1. கு.கா. வினா.—திரு. க. சுப்பு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகேயுள்ள அபிராமம்-நத்தம் மேல்நிலை குடிநீர்த் தொட்டி, திறக்கப்பட்ட மூன்று நாட்களில் இடிந்து விழுந்தது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதனால் ஒரு பெண் மரணமும், ஆறு பெண்கள் படுகாயமும் அடைந்தனர் என்பதும் உண்மையா ?

(உ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(இ) ஒரு பெண் மரணமும், ஐந்து பெண்கள் காயமும் அடைந்தனர்.

(உ) விபத்தின் காரணம் பற்றி அறியவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கவும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. க. சுப்பு : இதற்குக் காரணம் இந்தத் துறையைச் சேர்ந்த மேற்பார்வை செய்த பொறியாளர்களும், ஒப்பந்தக்காரர்களும் செய்த தவறுதான் என்று சொல்லப்படுகிறது. தமிழகத்திலே சின்னமனூர், திருமங்கலம், இராஜபாளையம் போன்ற இடங்களில் இப்படி நடந்திருக்கிறது. குறைந்த சிமெண்டில் அதிக மணலைக் கலப்பதால், இப்படி உயிருக்கே ஆபத்து ஏற்படுகிறது. ஆகவே அந்த ஒப்பந்தக்காரர்களையும், மேற்பார்வை செய்த அதிகாரிகளையும் இதற்குப் பொறுப்பாக்கி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கும்.

[1985 ஜூலை 17

## 12—7—1985 ஆம் நாளுக்கான வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினா.

### சலவையாளர் கூட்டுறவு மத்திய சங்கம்.

* 75 வினா.—திரு. சி. ஆர். கோலப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) பெரியார் மாவட்ட சலவையாளர் கூட்டுறவு மத்திய சங்கத்தில் இருந்த நிர்வாகிகள், ஒருசில தவறுகளைச் செய்ததாகக் கூறி, அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மீது அரசு நடவடிக்கை எடுத்து "சீல்" வைத்துள்ளதாகக் கூறப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், இப்பொழுதுள்ள நிர்வாகத்தைக் கலைத்துவிட்டு, புது நிர்வாகத்தைத் தேர்ந்தெடுக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** (அ) பெரியார் மாவட்ட சலவையாளர் கூட்டுறவு மத்திய சங்கம் என்ற பெயரில் சங்கம் எதுவும் செயல்படவில்லை. ஆனால் பெரியார் மாவட்டத்தில் ஈரோடு கூட்டுறவுச் சலவைச்சாலை என்ற சங்கம், ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அச்சங்கத்தின்மீது அரசு நடவடிக்கை எடுத்து "சீல்" வைத்துள்ளதாகக் கூறப்படுவது உண்மையல்ல.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. ஆர். கோலப்பா :** தலைவர் அவர்களே, நான் ஈரோட்டுக்குச் சென்றிருந்தபோது, இந்தத் தகவலை என்னிடம் தெரிவித்தார்கள். இப்போது செயல்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் இருபதுக்கு மேற்பட்ட சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகள் செயல்படவில்லை என்ற தகவலை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். மாவட்ட அளவிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களை தாலுக்கா அளவிலே, வட்ட அளவிலே பிரித்துக் கொடுத்தால், எங்களுக்குச் சௌகரியமாக இருக்கும் என்று அந்தப் பகுதி சலவைத் தொழிலாளர்கள் கூறுகிறார்கள். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தமிழகத்தில் மட்டும் 16 கூட்டுறவுச் சங்கங்கள் இது சம்பந்தமாக இருக்கின்றன. அதில் நான்கு சங்கங்கள் இலாபத்தில் செயல்படுகின்றன, மீதி 12 சங்கங்கள் நஷ்டத்திலே செயல்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல், தனித்தனியாக வட்டங்கள் வாரியாக ஏற்படுத்துவதில் உள்ள சிரமங்களை சரிபார்த்து, அதற்கான சாத்தியக்கூறுகள் சரியாக இருந்தால், வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும்.



1985 ஜூலை 17]

**திரு. சி. ஆர். கோலப்பா :** இப்போதுள்ள மாவட்ட சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்க்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை அரசாங்கம் பரிசீலிக்கும்.

## 15—7—1985 ஆம் நாளுக்கான வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்ட வினா.

### வீடு கட்டுவதற்கான மூலப்பொருட்கள்.

* 105 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரில், வீடு கட்டுவதற்கான மூலப்பொருட்களின் விலை உயர்வைத் தடுக்க, அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் :** (அ) ஆம்.

(இ) சென்னை நகரில், செங்கல் மற்றும் இதர கட்டிடப் பொருட்களின் விலைகளின் கட்டுக்கு மீறிய உயர்வு பற்றியும் அதைக் கட்டுப்படுத்துவது பற்றியும் அரசு ஆலோசித்தது. இது குறித்து 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்களுடனும், செங்கல் மற்றும் ஓடு உற்பத்தியாளர் சங்கத்தினருடனும் கலந்து விவாதிக்கப்பட்டது. இதன் விளைவாக 1,000 செங்கற்கள் ரூ. 300-க்கு மிகாமல் (அதாவது விற்பனை வரி, மேல் வரி, போக்குவரத்துச் செலவு நீங்கலாக) விற்பனை செய்ய சங்கத்தினர் தாமாகவே ஒப்புக் கொண்டனர். இந்நிலையில் செங்கல் விலைக்கட்டுப்பாடு எதுவும் கொண்டுவரும் அவசியம் உள்ளது என்று கருதப்படவில்லை.

[1985 ஜூலை 17

இதற்குப்பின்னர், ஆகஸ்ட் 1984-ல் தமிழ்நாடு செங்கல் மற்றும் ஓடு உற்பத்தியாளர் சங்கம் அரசிடம் முறையிட்டுக் கொண்டதின் பேரில் மேற்படி சங்கத்துடன் கலந்து பேசிய பிறகு செங்கல் உற்பத்திச் செலவில் தற்போது ஏற்பட்டுள்ள உயர்வினைக் கருத்திற்கொண்டு 1,000 செங்கற்களுக்கு ரூ. 300 என்ற விலையை திருத்தியமைக்கலாம் (விற்பனை வரி, போக்குவரத்துச் செலவு நீங்கலாக) என்று தொழில் வணிக இயக்குநர் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார். இது பற்றி பரிசிலிக்கப்படுகிறது.

செங்கல், கருங்கல், ஜல்லி, மணல் ஆகிய கட்டுமானப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கி, அவற்றின் விநியோகத்தை அதிகரிப்பதன் மூலம் இக்கட்டிடப் பொருட்களின் விலைகளை சீராக வைத்திருக்க இயலும் என்றும், இப்பிரச்சினைக்கு அது ஒரு நிரந்தர தீர்வாக அமையும் என்றும் கருதப் படுகிறது.

(முற்பகல் 11-10)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, இந்த மூலக் கேள்வி அநேகமாக சென்னை நகருக்கு மட்டுமல்லாமல் தமிழ் நாட்டில் உள்ள மற்ற எல்லா நகரங்களுக்கும் பொருந்தும். இன்று வீடு கட்டுவதற்கு ஒரு சதுர அடிக்கு குறைந்த பட்சம் ரூ. 150-க்கு நிர்ணயிக்கப்படுகிறது. நம்முடைய வீட்டு வசதி வாரியம் அறிவிப்பு கொடுத்திருப்பது, ஒரு 800 சதுர அடி அளவிற்கு உள்ள ஒரு கட்டிடத்திற்கு ரூ. 1,30,000 என்று விலை நிர்ணயிக்க வேண்டும் என்று இருக்கின்றது. இப்படி எல்லா மூலப்பொருள் களுடைய விலைகளும் அதிகமாக இருப்பதால், அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. சென்ற பட்ஜெட்டிலே உதாரணத்திற்குச் சொல்வதானால், வரி கூடிவிடும் என்று கருதி இரும்பு விலை ஏறியது. ஆனால் பட்ஜெட்டில் வீடு கட்டும் இரும்புக்கு வரி இல்லை என்று வந்தது. வரி போடவில்லை. ஆனால் ஏற்றப்பட்ட அந்த விலை இன்னும் குறைக்கப்படாமல் இருக்கின்றது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து அப்படி ஏற்றப்பட்ட அந்த விலையை கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் : தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு நிச்சயமாகப் பரிசிலிக்கும். சம்பந்தப்பட்ட வியாபாரி களோடும் உற்பத்தியாளர்களோடும் கலந்து பேசி, இறுதி முடிவு எடுத்து, விலைகள் அதிகமாகப் போகாமல் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1985 ஜூலை 17]

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தனிப்பட்டவர்கள் இந்த வியாபாரத்தில் மிக அதிகமாக ஈடுபட்டு வருவதன் காரணமாக அரசு நடவடிக்கை எடுத்து கட்டுப்படுத்த நினைத்தாலும், சில சமயங்களில் கட்டுப்படுத்த முடியவில்லை. சட்டச் சிக்கல்கள் வருகின்றன. வீடு கட்ட செங்கல், கருங்கல், ஜல்லி, மணல் போன்ற பொருள்கள், இவைகளையெல்லாம் கூட்டுறவு அமைப்பின் மூலமாக விநியோகம் செய்யக்கூடிய நிலைமைகள் உருவானால், ஓரளவுக்கு இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம். இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் : தலைவர் அவர்களே, இப்போதுகூட பல்வேறு பகுதிகளில் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக செங்கல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அதுபோல யாரும் முனைந்து வந்தால், மேலும் பல கூட்டுறவு சங்கங்களை ஏற்படச் செய்ய அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : செங்கல் உற்பத்தி, கல் உடைப்பது போன்ற தொழில்கள் செய்து உற்பத்தி செய்பவர்கள் செங்கல் ஆயிரம் ரூ. 300-க்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது, வெளியிலே உள்ள ஊர்களில் ஆயிரம் செங்கல் ரூ. 150-க்கும் அதற்குக் கீழேயும் கிடைக்கின்றது. இப்போது நாம் ரூ. 300 என்று நிர்ணயித்தால், அங்கேயும் அந்த அளவுக்கு விற்கின்ற நிலைமைகள், அபாயங்கள் ஏற்படும். அங்கே சும்மா இருக்கின்ற நிலத்தை ஆழப்படுத்தி மண்ணை எடுத்து செங்கல் உற்பத்தி செய்கின்றார்கள். நிலங்களை அவர்கள் ஆழப்படுத்தியதுதான் மிச்சம் என்று இருக்கின்றது. இங்கே அந்தச் செங்கல் சேம்பாஸ் வைத்திருப்பவர்கள் ஒரு பெரிய லாபி வைத்திருக்கின்றார்கள். அவர்கள் இதன் விலைகளை நிர்ணயிக்கின்றார்கள். பில்டிங் கட்டுகின்றவர்கள், ஓனர்ஸ் எல்லாம், முதலாளிகள் எல்லாம் இந்த விலையை அதிகமாக நிர்ணயித்துவிடுகின்றார்களோ என்ற அச்சம் எனக்கு வருகின்றது. ஆகவே தமிழகத்திலே எல்லா இடத்திலும் இருக்கக்கூடிய விலைகளை கணக்கிலே எடுத்துக்கொண்டு, அதிலே ஒரு சராசரியான, கட்டுப்படியாகக்கூடிய ஒரு விலையை நிர்ணயிக்க வேண்டும். அரசு முதலாளி களுக்கு விட்டுக்கொடுத்துவிடக்கூடாது. அப்படி விட்டுக்கொடுத்தால், மற்ற இடங்களிலும் விலைவாசிகள் ஏறிவிடும் என்பதை மனதிலே கொண்டு அரசு மறுபரிசிலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி செங்கற்பட்டு நகரத்தைப் பொறுத்து கேட்கப்பட்ட கேள்வி. செங்கற்பட்டைச் சுற்றியுள்ள செங்கற்பட்டு மாவட்ட செங்கல் உற்பத்தியாளர்களோடு கலந்துபேசி எடுக்கப்பட்ட நிலைமைகள் இவைகள். அதற்குப் பின்னர்கூட இரண்டு மாதங்களுக்கு முன்பாக மீண்டும் ஒரு சமரசப் பேச்சு நடத்தி ரூ. 375-க்கு ஆயிரம் செங்கல் என்று முடிவு செய்து அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். இன்றைக்கு விற்கப்படுகின்ற விலை ரூ. 350 ஒரு ஆயிரத்திற்கு என்று வந்திருக்கின்றது. ஆக ரூ. 375 என்று குறிப்பிடப்பட்ட விலைக்கும் குறைவான விலைக்கு செங்கல் கிடைக்கின்றது. மேலும் குறைக்க சாத்தியக் கூறுகள் இருந்தால், அரசு நிச்சயம் பரிசீலிக்கும். சென்னையைப் பொறுத்தவரையிலே, இருக்கின்ற விலையல்லாமல், மேலும் விற்பனை வரி, மேல் வரி, அங்கே இருந்து வருகின்ற போக்குவரத்துச் செலவு எல்லாம் அத்துடன் கூடுதல் ஆகின்றது. சென்னையைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ அமைந்தகரையிலிருந்து அண்ணா நகருக்கு வர வேண்டுமென்றால், சென்னையில் வேறு இடங்களுக்குப் போக வேண்டும் என்றால், ஏறத்தாழ போக்குவரத்துச் செலவு ரூ. 60 அல்லது 70 அளவுக்கு ஆகிவிடுகின்றது. ஆக எல்லாமாகச் சேர்த்து ஏறத்தாழ ரூ. 450. ஆயிரம் செங்கல் அடக்க விலை ஆகிறது. சென்னையைப் பொறுத்தவரை, இந்த நிலை. மற்ற கிராமப் பகுதிகளை இது கட்டுப்படுத்தாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-15)

திரு. சி. இராமலிங்கம் : தலைவரவர்களே, செங்கல் சூளை வைத்து நடத்துகிறவர்கள் மூன்று அடிக்கு மேலே பள்ளம் எடுக்கக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. அவர்கள் அதற்கும் மேலே எடுக்கிறார்கள். மற்றும் புறம்போக்கு நிலங்கள், ஏரி வரவுகால் நிலங்கள், ஏரி ஆகிய இடங்களை அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசு பரிசீலிக்குமா ? அடுத்து, கல் உடைக்கின்ற தொழில் பல்லாவரம், தாம்பரம் பகுதியைச் சுற்றித்தான் இருக்கிறது. கல் உடைக்கும் மலைகளை எல்லாம் அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு, ஆக்ஷன் விடுவதை நிறுத்திவிட்டதால், தாம்பரத்திற்கு அப்பாலிருந்து கல் வரவேண்டியிருக்கிறது. அதற்கு லாரி சத்தம் 100 ரூபாயாகிறது. எனவே இங்கே கல் உடைக்கும் மலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தினால், லாரி ஒன்றுக்கு 100 ரூபாய் அதிகமாகத் தருவது மிச்சமாகும். சென்னைக்கு ஆண்டு ஒன்றுக்கு 25,000 லாரிகள் வருகின்றன. அந்த 25,000 நூறு ரூபாய்கள் மிச்சமாகும். இதையும் கவனத்தில் கொண்டு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?



மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி என்னுடைய துறைக்கு சம்பந்தப்பட்டதல்ல. ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் சம்பந்தப்பட்ட கேள்வி. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### 1. பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம் மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

1. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1985).
2. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1985).
3. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1985).

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1985) பிரதியினை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

[1985 ஜூலை 17

3. தகவல் கோரல்.

பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஆன் எ பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். கோவைப் பகுதியில் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அந்த நிலவரம் குறித்து மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதேனும் விளக்கம் தருவார்களா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் ஏதேனும் சொல்ல விரும்புகிறார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இருக்கின்ற 600 பஞ்சாலைகளில் ஏறத்தாழ இரண்டு இலட்சம் பேர்கள் இன்றைக்குப் பணி புரிகிறார்கள். அந்த 600 பஞ்சாலைகளிலும் உள்ள இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் மத்தியிலே ஒரு அமைதி நிலவ வேண்டுமென்ற நோக்கத்தோடும், தொழிலாளர்கள் நலன் பேண வேண்டுமென்ற கருத்தோடும், ஒட்டுமொத்தமாக (General peace) பொது அமைதி உருவாக வேண்டுமென்ற நோக்கத்தோடும் பல முயற்சிகள் எடுத்து, இரு தரப்பினருக்கும் மத்தியில் இருக்கும் பிரச்சினையைப் பேச்சு வார்த்தைகள் மூலம், கன்சிலியேஷன் மூலம் தீர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால், தமிழக அரசு இன்றைய தினம் அதனை தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறது. தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்பியிருக்கும் இந்த நேரத்தில், தொழிலாளர்களுடைய நலன்கள் பாதிக்கக் கூடாதென்ற நோக்கத்தில் 10 (பி) செக்ஷனை 'இன்வோக்' செய்து, இன்றைய தினம் இடைக்கால நிவாரணமாக 'மெடீரியல் பெனிபிட்ஸ்' கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரங்கள் வெளியாகியிருக்கின்றன. அது குறித்து நேற்றையதினம் கோவையில் 'ஜாயின்ட் ஆக்ஷன் கமிட்டி ஆஃப் டிரேட் யூனியன்ஸ்' பரிசிலனை செய்திருக்கிறது. இன்று எச்.எம்.எஸ். தொழிற் சங்கத்தைச் சார்ந்த திரு. ஏ. சுப்ரமணியம் அவர்கள் என்னிடத்திலே தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு, "அரசாங்கம் ரெபரன்ஸ் செய்திருக்கிறது, அதில் சில அம்சங்கள் குறித்து அரசாங்கத்திடமிருந்து கிளாரிபிகேஷன் பெற விரும்புகிறோம்" என்று சொன்னார்கள். அதன்



1985 ஜூலை 17] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

(முற்பகல் 11-20)

அடிப்படையில் நாளை என்னைச் சந்திக்க முடியுமா என்று சம்மதம் கேட்டிருக்கிறார்கள். நான் அதற்கு இசைவு அளித்துள்ளேன். அதன்படி சம்பந்தப்பட்டவர்கள் நாளை என்னைச் சந்திக்க இருக்கிறார்கள். அப்போது ஓர் ஆரோக்கியமான சூழ்நிலை, இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில், ஏற்படும் என்று மனதார நம்புகிறேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடியவில்லை என்றார்கள். பேச்சுவார்த்தை சுமுகமாக முடிவுற ஒத்துக்கொள்ளாமல் இருந்தவர்கள் முதலாளிகள் சார்பில் வந்தவர்களா அல்லது தொழிலாளர்கள் சார்பிலா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** ஒத்துக்கொள்கிறார்களா இல்லையா என்பதை விட இரண்டு பேரும் சுமுகமான ஒரு முடிவுக்கு வரவில்லை என்பதுதான் உண்மை. அதற்கான முயற்சியில்தான் இப்போது அரசு ஈடுபட்டிருக்கிறது.

**திரு. க. சுப்பு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுப்பதற்கு முன் ஒரு வேண்டுகோள். நேற்றைக்குக் கூட ஒரு முக்கியமான பிரச்சினைபற்றி, விவாதம் நடைபெற்றும் கூட, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின்படி, ஆல் இன்டியா மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடம் ரத்து செய்யப்பட்டு, அந்த இடம் நமது மாணவர்களுக்கு அளிக்கப்படுமென்ற அறிக்கையை இந்த அவையில் வைக்கவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எந்த முறையில் உறுப்பினர் அவர்கள் இதனை எழுப்புகிறார்கள் ?

**திரு. க. சுப்பு :** தகவலுக்காகக் கேட்கிறேன். இரண்டு அவைகளிலும் அறிக்கைகள் வைக்கப்படாததால், பிரச்சினை வருகிறது. ரொம்ப நேரம் விவாதம் நடைபெற்றும் கூட, அங்கே சொன்னதை இங்கே நமக்குச் சொல்லாததால் நமக்குத் தெரியாமல் போய்விட்டது. அதுபோல் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கூட தொழிலாளர்கள் போராட்டம் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்தபோது, மேலவையில் அறிவிக்காத ஒன்றை பேரவையில் அறிவித்திருக்கிறார்கள். அப்போது அவர்கள் இடைக்கால நிவாரணம் அளிப்பது பற்றியும், தொழிலாளர் கோர்ட்டுக்குப் போவது பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களே,

உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர்கள் அறிக்கைகளை வைக்கின்றபோது இரண்டு அவைகளிலும் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் நடைமுறையில் சிக்கல்கள் வருகின்றன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அது சம்பந்தமாக விவாதம் நடைபெறாத காரணத்தால், அப்போது வைப்பது ஏற்புடையதல்ல. விவாதம் நடைபெற்றபோது, பேரவையில் வைக்கப்பட்டது. விவாதம் இல்லாதபோது, தகவலுக்காகச் சொல்லுவதற்கு அதிகாரம் இல்லை என்பதால் வைக்கப் படவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அப்படி இல்லை. எந்த அவையாக இருந்தாலும், அறிக்கை வைத்தால், விவாதம் நடைபெறாவிட்டாலும் கூட, இரண்டு அவைகளிலும் வைப்பதில் தவறில்லை. அதற்காக விவாதம் தேவையில்லை. அதுபோல் இங்கே விவாதம் நடைபெற்ற பின்பு அங்கே வைக்கப் பட்டது அல்லது முன்பே வைக்கப்பட்டது என்பதும் பிரச்சினை அல்ல. மாண்புமிகு அமைச்சர்களையும் கேட்டுக்கொள்கிறேன். அறிக்கைகளை மேலவையில் வைப்பதைத் தவிர்க்கக் கூடாது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: எதிர்காலத்தில் மாண்புமிகு தலைவர் அவர்களுடைய உணர்வுகள் பின்பற்றப்படும்.

## 4. கவன ஈர்ப்பு.

### (1) நவசக்தி-தினகரன் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"சென்னை உயர்நீதிமன்றத்தின் கட்டளைகளின்படி நவசக்தி, தினகரன் மேலாண்மையாளர்களிடமிருந்து தொழிலாளர்களுக்குத் தரப்படவேண்டிய பணத்தை சென்னை மாவட்ட ஆட்சியர் வசூலிக்காததால், அத்தொழிலாளர்களுக்கு எழுந்துள்ள இன்னல்கள் குறித்து".





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்கு 33 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டியதுபோல், துரிதமாக நடவடிக்கை எடுத்து, அந்த 33 ஆயிரம் ரூபாயை தொழிலாளர்களிடம் சேர்ப்பிக்க இந்த அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. சுப்பு: 'நவசக்தி' பத்திரிகையில் 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். தேசபக்தர் வ.உ.சி.-யின் பேரன் திரு. சண்முகசுந்தரம் உட்பட பலர் அங்கே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். 1976 ஆம் ஆண்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை அமுல் படுத்தும்படி அரசு உத்தரவிட்டது. பத்து ஆண்டுகள் ஆகியும் இன்னும் வசூல் செய்து தொழிலாளர்களுக்கு அதை வழங்கவில்லை. இதனால் பல தொழிலாளர்கள் இறந்துவிட்டார்கள். பலர் பேருக்கு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். 5—12—1982-ல் உத்தரவு போடும்போது கூட, 31—3—1983-க்குள் துரிதமாக நடவடிக்கை எடுத்து, அதன் முடிவை இங்கே அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். அப்படியும் 28—2—1983-ல் தான் தாசில்தார் நோட்டீஸ் அனுப்புகிறார். மறுபடியும் 11—3—1983-ல் நிர்வாகம் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்குகிறார்கள். மேலும் ரீஜினல் தொழிலாளர் ஆணையாளர் மற்றும் கலெக்டர் அங்கே ஆஜராகவில்லை. அதோடுகூட ஒரு தரப்பினர் அதற்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டு, அதிகாரிகள் இதில் மிகவும் அசட்டையாக இருப்பது குறித்து இனிமேலாவது துரிதமாக சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

(முற்பகல் 11-25)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, இதுபோன்ற நிறுவனங்கள் கோர்ட் கட்டளைகளை மீறி, தொழிலாளர்களுக்கு பணத்தைத் தராமல் இருப்பதற்காக அரசாங்கமே அவர்கள் மீது வழக்குப் போடலாம். அரசாங்கத்திற்கு அந்தகைய அதிகாரம் இருக்கிறது. தொழிலாளர்களுக்குப் பணம் தர வேண்டுமென்பதற்காக என்று சொல்லியே, தினகரன் பத்திரிகை முதலாளி ஒரு விற்பனைப் பத்திரத்தின் மூலம் நடவடிக்கை எடுத்திருக்கிறார். அதிலேயே

@ 66–67 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பணம் கொடுக்கப்பட வேண்டுமென்று செய்திருக்கிறார். ஆனால் அதை நீதி மன்றத்தில் காட்டாமல் இவ்வளவு தூரம் ஏமாற்றிக்கொண்டு, தொழிலாளர் களைப் பழி வாங்குகிறார்கள். நான் தினகரன் பத்திரிகைக்காகவோ, திரு. கந்தசாமிக்காகவோ இதைச் சொல்ல வரவில்லை. யாராக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஏன் அரசாங்கமே, கோர்ட் கட்டளையை மீறுகிறவர்கள் மீது கிரிமினல் வழக்கு கண்டிப்பாகத் தொடர்ந்து, ஊருக்கு உபதேசம் செய்பவர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டும். அப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## (2) தெலுங்கு கங்கை திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டிய அவசியம் குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"தெலுங்கு-கங்கைத் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு, ரூ. 35 கோடிக்கு மேல் தந்திருக்கும் நிலையிலும், ஆந்திர அரசு இதுகாறும் ஒரு லட்சம் ரூபாய்கூட ஒதுக்காத நிலையிலும், அத்திட்டம் திட்டமிட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியம் குறித்து"

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்தபோது, இருந்த செய்தியை வைத்துத்தான் கொடுத்தேன். பணப் பிரச்சினை மட்டும்தான் அப்போது இருந்தது. இன்றையதினம் இந்தப் பிரச்சினையைப்பற்றி பல்வேறு செய்தி ஏடுகள் விரிவான, பல்வேறு தகவல்களைத் தருகின்றன என்பதைப் பார்த்தேன். தெலுங்கு கங்கா திட்டத்திற்கு ஏறத்தாழ 720 கோடி ரூபாய் செலவாகும் என்றும், அதற்கு தமிழ் நாடு அரசு 185 கோடி ரூபாய் தர வேண்டுமென்றும், அதில் 47 கோடி ரூபாய் இதுவரையில் தந்திருப்பதாகவும், ஆனால் அதில் 23 கோடி ரூபாய்தான் ஆந்திர அரசு செலவு செய்திருப்பதாகவும், இந்த விவர

@ 67–70 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



அறிக்கையில் தரப்பட்டுள்ளது. இப்போது இன்னும் புதிய சிக்கல்கள் வந்திருக்கின்றன. ராயலசீமாவின் வறண்ட பகுதியில் உள்ள 5,71,00 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதிக்காக கிருஷ்ணா ஆற்று நீரை தெலுங்கு கங்கைத் திட்டத்தின் பெயரில் பயன்படுத்துவது நல்லதல்ல என்று கிருஷ்ணா நீர் டிரிபியூனல் தீர்ப்பு சொல்லியிருப்பதாக, கர்நாடகத்தில் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. தேவகவுடா எதிர்ப்பு தெரிவித்திருப்பது இந்த அரசின் கவனத்திற்கு வந்திருக்கும் என்று கருதுகிறேன்.

இந்தத் தீர்ப்புப்படி, ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்கள் மட்டும்தான் கிருஷ்ணா ஆற்று நீரைப் பயன்படுத்த வேண்டும், வேறு எந்த மாநிலத்திற்கும் வழங்கக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டி யிருக்கிறார். அதோடு கூட, ஆந்திரமும், தனது விருப்பம்போல் இந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியாது என்றும் சொல்லியிருக்கிறார். 1977-ல் 15 டி.எம்.சி. தண்ணீரை சென்னைக்குத் தர, ஆந்திராவும், மகாராஷ்டிரமும் சம்மதம் தந்திருப்பதாகவும், கர்நாடக அரசிடம் அதற்கு ஒப்புதல் பெற வில்லையென்றும் அவர் சொல்லியிருக்கிறார். 1977-ல் ஒப்பந்தம் ஏற்பட்டாலும் கூட, அந்த நேரத்திலும் கர்நாடகத்தைக் கலந்து கொள்ளவில்லை என்றும், கால்வாயை வெட்டுவதில்கூட பாதை மாற்றம் செய்திருக்கிறார்கள் என்றும் 300 கோடி டி.எம்.சி. தண்ணீரைக் கொண்டு செல்லும் கால்வாய் ஏற்பாட்டுக்கும் தங்களிடம் ஒப்புதல் பெறப்படவில்லையென்றும், கர்நாடக நீர்ப்பாசனத் துறை அமைச்சர் சொல்லி, இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். இவ்வளவு சிக்கல்கள் இதிலே இப்போது ஏற்பட்டிருக்கின்றன. அப்படி வந்திருப்பதால்தான், இந்தத் திட்டமே நிறைவேற்றப்படுமா என்ற ஐயம் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், ஆந்திர முதல்வர் அவர்கள், திட்டமிட்டபடி இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று தனது அமைச்சரவை முடிவெடுத்திருப்பதாகவும், கர்நாடகத்தின் எதிர்ப்பைக் கண்டு தாங்கள் கவலைப்படப் போவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது). மிக முக்கியமான பிரச்சினை. அதனால்தான் இவ்வளவு விளக்கங்கள் சொல்கிறேன். ஆகவே, அதுமட்டுமல்லாமல், பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கூட, நதிகள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட்ட சொத்துக்கள் என்றும், அதற்குரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேசிய அளவிலான சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த நிலைமையைப் பொறுத்தவரையில், கர்நாடக முதல்வர் முன்பே தெரிவித்துக்கொண்டிருக்கிறார், இப்போது ஆட்சேபனை தெரிவித்திருக்கிறார், இந்த ஆட்சேபனை எதற்கு என்று தெரியவில்லையென்றும் சொல்லியிருக்கிறார்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஜூலை 17

ஆந்திர முதல்வரும், இந்த ஆட்சேபனையை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று சொல்லி, அப்போதைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் ஒப்புதலோடுதான் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்று முடியும் !

(முற்பகல் 11-30)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விளக்கம் கேளுங்கள். இப்படி சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தால் . . .

திரு. க. மீனாட்சிசுந்தரம் : விளக்கம்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதற்காக எவ்வளவு நாழி பேசுவது ? ஒவ்வொருவரும் இப்படிப் பேச ஆரம்பித்தால், சபையை எப்படி நடத்த முடியும் ?

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தெலுங்கு கங்கை திட்டத்தைப்பற்றி மாண்புமிகு பிரதமர் அவர்கள் பதில் கூறுகையில், ஆந்திராவை தெலுங்கு தேசம் கட்சி ஆட்சி செய்தாலும், தமிழ் நாட்டை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்தாலும், கர்நாடகாவை ஜனதா ஆட்சி செய்தாலும், நான் பதில் எழுதுவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பது தமிழகத்தைப் பாதித்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களோ . . . .

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் கேள்வியாகக் கேட்டால் நல்லது. ஏனென்றால் அவர்கள் சொல்கின்ற விவரங்களே நிலைமைகளைச் சிக்கலாக்கி விடக் கூடாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இத்தனை சிக்கல்கள் இருந்தாலும், இதில் சிக்கல் ஏதுமில்லை, தண்ணீர் நிச்சயம் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்களே, அது எவ்வாறு என்றுதான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய விளக்கங்களிலேயே பதிலும் அடங்கியிருக்கிறது என்று நான் கருதுகிறேன். கர்நாடக மாநில அமைச்சர், ஆந்திர மாநில அமைச்சர், இந்தியப் பிரதமர் ஆகிய இவர்களை எல்லாம் முன்னாலே



1985 ஜூலை 17] [டாக்டர் கா. காளிமுத்து]

வைத்துத்தான் அன்றைக்கு விழா நடைபெற்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாக அறிவார்கள் என்று கருதுகிறேன். அந்தத் திட்டம் உரிய வகையிலே தெளிவாக நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. ஆந்திர அரசும் பணத்தைச் செலவழித்துக்கொண்டிருக்கிறது. நாமும், ஒரு தலைமைப் பொறியாளர் தலைமையில் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். வெகு சீக்கிரமாக திட்டத்தை நிறைவேற்ற பணிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். பிரதமர் அவர்களும் இதிலுள்ள சிக்கல்களை எல்லாம் தீர்த்து வைப்பதாக உறுதி கூறியிருக்கிறார்கள். எனவே சிக்கல் ஏதுமில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்தச் சிக்கல்களைப்பற்றி இந்தப் பிரச்சினைபற்றி ஆந்திர முதல்வர் நம்முடைய பிரதமர் அவர்களுடன் பேசியிருக்கிறார். பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. கர்நாடக நீர்ப்பாசன அமைச்சர் . இத் திட்டத்திற்கு மறுப்பு தெரிவித்திருக்கிறார்கள். பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள். . .

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : நம்முடைய முதல்வர் அவர்களும், இந்தியப் பிரதமர் அவர்களுடன் பேசினார்கள். அதுவும் பத்திரிகையில் வந்திருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நன்றி. அப்படிப் பேசியிருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் இப்போதுள்ள திட்டப்படி எப்போது முடிக்கப்படும், அதன்மேல் உள்ள தாவா தீர்க்கப்படுவதற்கு எவ்வளவு காலமாகும் என்பதை அரசு தெரிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள்ளே முடிக்கப்படும்.

5. அரசின் சட்டமுன்வடிவுகள்.

(1) 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1985)

மாண்புமிகு திரு. த. வீராசாமி : தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1985) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1985) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. த. வீராசாமி : தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1985) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1985) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

---

@ 70–71 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



(2) 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1985).

மாண்புமிகு திரு. த. வீராசாமி : தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1985) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1985) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. த. வீராசாமி : தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1985) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1985) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

---

@ 72–75 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 11-35)

**(8) 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1985).**

**மாண்புமிகு திரு. த. வீராசாமி :** தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1985) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 33/1985) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவின் மீது நான் சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

இந்தச் சட்ட முன்வடிவில் நல்ல பல சலுகைகளை மக்களுக்குக் கொடுத்ததற்காக முதற்கண் தமிழக அரசுக்கும், வணிக வரித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது, எலக்ட்ரானிக்ஸ் தொழில் துறையில் தமிழகம் மிகவும் பின்தங்கி இருக்கிறது. அதிலே கண்ணும் கருத்தும் வைத்து, 12 பர்சன்ட் ஆக இருந்ததை 10 பர்சென்டாகக் குறைத்திருக்கிறார்கள். 2 பர்சன்ட் குறைத்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையில் இப்போது பல எலக்ட்ரானிக்ஸ் நிறுவனங்கள் இருக்கின்றன. குறிப்பாக தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் ரேடியோக்கள் தயாரிக்கும் பல நிறுவனங்கள் இருக்கின்றன. அந்த நிறுவனங்களுக்கெல்லாம் காம்போனன்ட்ஸ் கருவிகளுக்கு முழுவதுமாக விற்பனை வரியிலிருந்து சலுகை கொடுத்தால், நிச்சயமாக பல மாநிலங்களிலிருந்து வரும் தொலைக்காட்சிப் பெட்டிகள், ரேடியோக்கள் ஆகியவற்றின் விலைகளைவிடக் குறைவாக நாமும் கொடுக்கலாம். இங்கு விலைகள் அதிகமாக இருப்பதவற்கு முக்கிய காரணம், விற்பனை

@ 75 ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



வரியும், எக்ஸைஸ் டியூட்டியும் தான், அயல் நாடுகளைப் பார்க்கும்போது, மிகக் குறைந்த விலையில் அவைகளைக் கொடுக்கிறார்கள். இந்திய அளவில் பார்க்கும்போது, விலைகள் உயர்வாக இருக்கின்றன. காரணம் வரிகள்தான். வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவற்றிற்கு விற்பனை வரியை முழுவதுமாகக் குறைக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. 5 பர்சென்ட் என்ற அளவில் விற்பனை வரியைப் போட்டால், நிச்சயமாக மேலும் பல தொலைக்காட்சிப் பெட்டிகளை ஏழை எளியவர்கள் வாங்குவார்கள். முன்பெல்லாம் தொலைக்காட்சிப் பெட்டிகள் லக்ஸுரியாக இருந்தன. இப்போதெல்லாம் பாமர மக்களும் அவற்றை வாங்குகிறார்கள். மேலும் பல விற்பனை வரிச் சலுகைகள் கொடுத்தால், தமிழகத்திலே பல தொழில்களைத் தொடங்க முடியும். அந்தத் தொழில்களும் தமிழகத்திலே நன்றாக வளரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சாராயத்திற்கு 6 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடு என்று வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. அனைத்துக் கடைகளிலும் சாராயம் குடிப்பது தவறு என்றும், அது உடல் நலத்தைக் கெடுக்கும் என்றும் நாம் கூறினாலும், இன்று குடிப்பவர்கள் குடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதற்காக நாம் விற்பனை வரியை 6-லிருந்து 25 பர்சன்டாக ஒட்டுமொத்தமாக உயர்த்தியிருப்பது ஏழை மக்களை மிகவும் பாதிக்கும். நாம் பல்வேறு அறிவிப்புக்களைக் கொடுத்தாலும், அந்த அறிவிப்புகள் உடல் நலத்தைக் கெடுக்கும் என்று கூறினாலும்கூட, அவர்கள் குடித்துக் கொண்டுதான் இருப்பார்கள். ஏறத்தாழ 19 விழுக்காடு ஒட்டுமொத்தமாக உயர்த்தியிருக்கிறார்கள். குடிப்பவர்களுக்குச் சலுகைகள் கொடுக்க முடிந்தால் கொடுங்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஏழை மக்கள் உபயோகிக்கும் மிளகாய், மஞ்சள், புளி, கொத்துமல்லி, மிளகு போன்றவைகளுக்கு எல்லாம் மல்ட்டி பாயின்ட் டாக்ஸிலிருந்து சிங்கிள் பாயின்ட் டாக்ஸாக மாற்றியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பொருட்களை எல்லாம், ஏழை மக்கள், குறிப்பாக கிராமங்களில் இருப்பவர்களும், மற்றவர்களும் வாங்குகிறார்கள். இந்த விற்பனை வரியை மேலும் அவர்களுக்கு ஒட்டுமொத்தமாகக் கொடுத்தால், அவர்களுடைய அன்றாடத் தேவைகளை வாங்குவதற்கு மிகவும் வசதியாக இருக்குமென்று கூறிக்கொள்கிறேன். இந்த சட்ட முன்வடிவில் மேலும் பல விற்பனை வரிச் சலுகைகள் வருமென்று எதிர்பார்த்திருந்தோம். ஒருசில கருத்துக்களை மட்டும் நான்

அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி அதற்கு விற்பனை வரியிலிருந்து விலக்கோ, சலுகையோ கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கடலூரிலுள்ள சிப்காட்டில் பல பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. அங்கு பல நிறுவனங்கள் இருக்கின்றன. கடலூரிலே இருப்பதைப்போன்று குஜராத்திலே ஒரு தொழிற்சாலை இருக்கிறது. குஜராத்திலுள்ள தொழிற்சாலையோடு கடலூரில்

(முற்பகல் 11-40)

அமைக்கப்பட்டிருக்கிற இந்தத் தொழிற்சாலை போட்டி போட முடியவில்லை. காரணம் தமிழகத்தில் அதிகமான விற்பனை வரி இருப்பதுதான். இதன் காரணமாக குஜராத்திலிருந்து தமிழகத்திற்கு அவர்கள் பொருட்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் கடலூரிலிருந்து நாம் கொடுக்கிற விலையைக் காட்டிலும் குறைவான விலையில் கொடுக்கிறார்கள். இதன் காரணமாக கடலூரில் தொழிற்சாலை நிறுவியவர்கள் பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரியில் ஒரு கிளை அலுவலகம், விற்பனை நிலையத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கேயிருந்து பொருள்களை சப்ளை செய்கிறார்கள். அதன் மூலம் தமிழகத்திற்கு வர வேண்டிய விற்பனை வரி பாண்டிச்சேரி மாநிலத்திற்குப் போகிறது. எனவே இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து நல்ல வழிமுறைகளைச் சொல்லுவதற்கு அரசு ஒரு உயர்மட்டக் குழுவை அமைக்க வேண்டும். இப்படி விற்பனை வரியைக் குறைத்தால், பல தொழிற்சாலைகளிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய விற்பனை வரி நமது மாநில அரசுக்கே கிடைக்கும். மற்ற மாநிலங்களுக்குப் போகாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, விவசாய மற்றும் வேளாண்மைத் துறையில் பயன்படுத்தப்படும் டிராக்டர்கள், டிரெய்லர்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றிற்கான விற்பனை வரியையும் அரசு குறைக்க முன்வர வேண்டும். நான் வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசும்போதே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். விவசாயத்திற்குத் தேவைப்படும் இப்படிப்பட்ட உபகரணங்களைப் பொறுத்த வரையில், பாண்டிச்சேரி மாநிலத்தில் குறைவான வரியைத்தான் விதிக்கிறார்கள். உழவுக் கருவிகள் மீது 1 சதவீத வரிகூட





வாங்குவதில்லை. ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், அதிகமான விற்பனை வரியை விதித்திருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே தமிழகத்தில் நிறைய ஓர்க்ஷாப்புகள் இருக்கின்றன. முன்பெல்லாம் ஓர்க்ஷாப்புகளில் நடக்கும் லேபர் ஓர்க்குகளுக்கு விற்பனை வரி ஏதும் விதிக்கப்படவில்லை. இப்போது ஓர்க்ஷாப்புகளிலும் விற்பனை வரி விதிக்க வேண்டுமென்று சட்டம் வந்திருக்கிறது. எனவே ஓர்க்ஷாப்புகளைப் பொறுத்த வரையில், அங்கே விதிக்கப்படும் விற்பனை வரியையும் எடுக்க வேண்டும் அல்லது குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே பணிமனைகளுக்குத் தேவையான ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கும்போதும், மற்ற மாநிலங்களைக் காட்டிலும், தமிழகத்தில் அதிகமான விற்பனை வரி இருப்பதன் காரணமாக வெளி மாநிலத்தில் வாங்குகிற நிலைமை இருக்கிறது. எனவே அதையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக இந்த நேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும் வந்திருக்கும் என்று நம்புகிறேன்.

விற்பனை வரி அதிகமாக இருப்பதன் காரணமாக, இன்றைக்கு பலர் பில் இல்லாமலே பொருள்களை விற்பனை செய்து வருகிறார்கள். ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குகிறவர்கள் பில் இல்லாமல்தான் வாங்குகிறார்கள். இதன் காரணமாக அரசுக்குத்தான் உண்மையில் நஷ்டம் ஏற்படுகிறது. எனவே தமிழகத்தில் விற்பனை வரியைக் குறைத்து சலுகையை அளித்தால் நிச்சயமாக நாம் இழப்புக்கு ஆளாகமாட்டோம். மாறாக நமக்கு விற்பனை வரி மூலமாகக் கிடைக்க வேண்டிய அளவுக்குப் பணம் கிடைக்கும் என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு மேலவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரி திருத்தச் சட்ட முன்வடிவின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எலெக்ட்ரானிக்ஸ் பொருள்களைப் பொறுத்தவரையில், 12 சதவீதமாக இருந்த விற்பனை வரியை 10 சதவீதமாகக் குறைத்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதை இன்னும்கூட குறைப்பதற்கு நியாயம் இருக்கிறது. பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஆந்திரத்தில் குறிப்பாக டி.வி. போன்றவற்றிற்கு விற்பனை வரியையே எடுத்துவிட்டார்கள் என்றார்கள். அதன்

காரணமாக இங்கிருக்கும் வியாபாரம் அங்கே போய்விடுமோ என்று கூட அச்சம் தெரிவித்தார்கள். அரசு அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சாராயத்திற்கு விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறார்கள். பொதுவாக தமிழக அரசின் மது விலக்குக் கொள்கை வருமானத்தையே மையமாக வைத்திருக்கிறது என்பது வெளிப்படை பல கால கட்டத்தில் மத்திய அரசு நஷ்ட ஈடு தொகை கொடுத் தால், மதுவிலக்குக் கொள்கையை நாங்கள் முழுமையாக இங்கே அமுல்படுத்து வோம் என்று சொல்லுவதன் பொருளே அரசாங்கத்திற்கு எப்படியாவது வரு மானம் வேண்டும். இந்த மையக் கருத்தை வைத்துத்தான் மதுவிலக்குக் கொள்கையில் அரசு செயல்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, பணம் வேண்டும் என்ற காரணத்திற்காகத் தான் மதுவிலக்குக் கொள்கையை தளர்த்தியிருக்கிறார்கள் என்று குறிப்பிட் டார்கள். அதுவல்ல உண்மை. இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்து வதில் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் அதன் காரணமாகப் பெருகிவிட்ட கள்ளச் சாராயம் போன்ற பல வேதனையான நிலைமைகளைக் கருத்தில் கொண்டுதான் எடுக்கப்பட்டதே தவிர, வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-45)

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஆதாரத்தோடு கூறிவிட முடியும். தமிழக அரசாங்கத்தில் இருந்தவர்கள் பல கால கட்டங்களில் தமிழக அரசுக்கு மதுவிலக்கால் ஏற்படும் நஷ்டத்தை மத்திய அரசு ஈடு கட்ட வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். இதற்குப் பல உவமானங்களைச் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே, அதுவும் ஒரு மருந்தாக இருக்கும், ஆனால் அதுவே காரணம் அல்ல.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : முக்கிய காரணம் என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். ஆறு சதவிதமாக இருப்பதை 25 சதவிதமாக உயர்த்தியிருப்பதற்குக் கூறியுள்ள காரணம், இதனால் சாராயம் குடிப்பவர்கள் குடிக்காமல் திருத்திவிடுவார்கள் என்பது. இது விந்தையான தந்திரமாக



இருக்கிறது. சாராயம் குடிக்கிறவர்கள், விலை உயர்ந்தாலும், குடித்துக் கொண்டேதான் இருக்கப் போகிறார்கள். ஏழைகளிடம் இப்படி 25 சதவீதம் வசூலிப்பது என்பது வரியேயல்ல. திரு. இராஜாஜி அவர்கள் விற்பனை வரி யைக் கொண்டு வந்த காலத்திலே அரை சதவிதம், ஒரு சதவிதம் என்று கொண்டு வந்தது பிறகு மூன்று சதவிதம், ஐந்து சதவிதம் என்றாகி இன் றைக்கு 25 சதவிதம் என்று உயர்ந்திருக்கிறது என்றால், இது வரியே அல்ல, ஏழைகளை கொள்ளையடிப்பது என்று நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன். இதனால் சாராயம் குடிக்கிறவர்கள் குடிப்பதை நிச்சயமாக திருத்தப் போவதில்லை. ஆகவே இந்த அரசாங்கம் ஏழைகளுக்கும ஏழையாக இருப் பவர்களிடம் வரி வசூலிப்பது நியாயமில்லை. அதற்குப் பதிலாக வருமா னத்தை வேறு வழிகளிலே தேடலாம். வருமானத்திற்காக, ஏழைகள் குடிக்கும் சாராயத்திற்குள்ள வரியை ஆறு சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்த்தி யதை நான் கண்டிப்பாக ஆட்சேபிக்கிறேன். வருமானத்திற்காக இல்லை யென்று சொன்னால், நாம் எதிர்பார்க்கும் பலன் உறுதியாகக் கிடைக்கப் போவ தில்லை என்பதையும். சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். குடிப்பதைத் தளர்த்தி விட்டால், சாராயம் உற்பத்தியாகிற அசல் விலைக்கு அல்லது சற்று கூடுதலான விலைக்கு, ஏழை களுக்கு மலிவான விலையில் கொடுக்க வேண்டும். இப்படி வரியைப் போட்டு விட்டதால், அவர்களுடைய சம்பாத்தியத்தில் நான்கில் ஒரு பங்கு அல்லது மூன்றில் ஒரு பங்கு சாராயக் கடைக்கே கொடுக்க வேண்டிய நிலை வருகிறது. இது அரசாங்கத்திற்குப் பாவமான செயல். ஆகவே இந்த வரியை உயர்த்தக் கூடாது என்று என்னுடைய ஆட்சேபனையை கடுமையாகத் தெரிவிக்கிறேன். நான் மதுவிலக்குக் கொள்கையில் அழுத்தந்திருத்தமாக இருக்கிறேன். அதை அமுல்படுத்துவதை நான் ஆதரிக்கிறேன். அப்படி இல்லாமல் அதைத் தளர்த்தி யிருக்கும்போது சாராயத்திற்கு வரியை உயர்த்தக்கூடாது என்று நான் தெரி வித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. வீராசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவின் மீது பேசுகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய நல்ல ஆலோசனைகளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதனை இந்த அரசு ஏற்று நல்ல முறையிலே வருங்காலத்தில் ஆக்கப்பூர்வமான பணிகளை ஆற்றும் என்பதை இந்த நேரத்தில் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. த. வீராசாமி] [1985 ஜூலை 17

மின்னணுவியல் கருவிகளுக்கும் மற்றும் கணக்கிடும் கருவிகளுக்கும் தமிழ்நாடு பொது விற்பனை வரி 12 விழுக்காட்டிலிருந்து பத்து விழுக்காடாக குறைக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்றுப் பேசினார்கள். அதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று தொழில் வளர்ச்சியில் புதிய தொழில் நுட்பங்கள் புகுத்தப்படும் நேரத்தில் மின்னணுவியல் கருவிகளின் பணியும், கணக்கிடும் கருவியின் பணியும் மிக மகத்தானது என்பதை எண்ணி மாண்புமிகு புரட்சித் தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் வரியை 12 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாகக் குறைத்திருக்கிறார்கள். தமிழகத்தில் தொழில்கள் வளர வேண்டும், உற்பத்தி பெருக வேண்டும், வருவாய் பெருக வேண்டும், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவ்வப்போது உள்ள நிலைமைகளுக்கேற்ப ஆய்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறார் என்பதற்கு முன்னோடியாகத்தான் மின்னணுவியல் தொழில் கருவிகளுக்கு பத்து விழுக்காடாக வரி குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தில் விற்பனை வரி அதிகமாக இருப்பதால், பல தொழில்கள் பிற மாநிலங்களுக்குச் சென்று விடுகின்றன என்று சொன்னார்கள். இந்த அரசு உன்னிப்பாக, நிதானமாக, எச்சரிக்கையோடு அவைகளைக் கவனித்து அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடுகிறேன். கடலூரில் உள்ள 'சிப்காட்' நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விற்பனை வரி அதிகமாக இருப்பதால், விலை அதிகமாக இருக்கிறது என்றும், அதே பொருள் குஜராத்தில் உற்பத்தி செய்யப்பட்டு அதை தமிழகத்திற்குக் கொண்டுவரும் போது அதன் விலை குறைவாக இருக்கிறது என்றும், அதனால் குஜராத் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களோடு நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் போட்டி போட முடியவில்லை என்றும் சொன்னார்கள். ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்கு வருகின்ற பொருள்களுக்கு வரி விதிக்கும் உரிமை மத்திய அரசுக்கு உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். மத்திய விற்பனைச் சட்டத்தின்கீழ் அது வருகிறது.



1985 ஜூலை 17] [திரு. த. வீராசாமி]

(முற்பகல் 11-50)

(உறுப்பினர் திரு. எல். ஜெயச்சந்திரன் எழுந்தார்)

நான் பேசி முடித்தபிறகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் கேட்கலாம்.

இன்று பார்லிமெண்டிலே 46-வது திருத்தச் சட்டம் கொண்டு வந்த பிறகு, இந்த வியாபார இடப்பெயர்ச்சி பற்றிச் சொல்லும்போது, அப்படி அவர்கள் உற்பத்தி செய்து, இங்கே பிராஞ்ச் வைத்துக்கொண்டு, வரி கொடுக்காமல் கொண்டு வந்து விற்கின்ற நிலையிலே விலை குறைத்து விற்கப்படுகிறது. எனவே நாடாளுமன்றத்திலே கன்சைன்மெண்ட் கூட்ஸ்களுக்கெல்லாம் அங்கே சட்டம் கொண்டுவரப்படுகின்ற நேரத்தில், நிச்சயமாக அவர்களுக்கும் வரி விதிக்கப்பட்டு இந்திய நாட்டிலே ஒரே சீரான நிலைமை இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் வரி விதிப்பு போடப்பட்டு, ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட்டு, வியாபாரம் முறையாக, சீராக நடைபெறும் என்பதையும் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். நம்முடைய தமிழ் நாடு பொது விற்பனை வரி சட்டத்தைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட சட்டத்தின் கீழ் வரி விதிப்பு அதிகமாக இருந்து, பொருள்களின் விலைகள் ஏறி அதன் மூலம் மற்ற மாநிலங்களோடு போட்டியிட முடியாத நிலை இருக்கின்றது என்று சொன்னால், இதையெல்லாம் இந்த அரசு கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசிய நேரத்தில் ஒன்றைப்பற்றி குறிப்பிட்டார்கள். இப்போது சாராயத்தின் மேல் ஆறு விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடு வரை பொது விற்பனை வரியை உயர்த்திப் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். இன்று தமிழகத்திலே மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருப்பதன் நோக்கம், வருவாயை அடிப்படையாகக் கொண்டு தான், அதன் மூலம் வருகின்ற பிரதானமான வருவாயை கருத்தில் கொண்டு தான் என்று காரணம் சொன்னார்கள். இங்கே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதற்குத் தக்க முறையிலே பதில் சொல்லியிருக்கின்றார்கள். இன்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த மாநிலத்தினுடைய முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன், அண்ணல் காந்தியடிகள் காட்டிய வழியில் நின்று இந்த நாட்டிலே மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் நடத்த வேண்டும் என்று பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்தார்கள் என்பதையும், அதனுடைய கடினமான தன்மையையும் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களும்,

[திரு. த. வீராசாமி] [1985 ஜூலை 17

இரு அவைகளிலும் உள்ள உறுப்பினர்களும் நன்கு விவாதித்திருக்கின்றார்கள் என்பதையும், அதை ஆதரித்தும் இருக்கின்றார்கள். அதற்கு எதிர்ப்பும் தெரிவித்திருக்கின்றார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அறிவார்கள். அப்படி இந்த அரசு பல்வேறு கால கட்டங்களில் பெரும் தலைவர்கள் எல்லாம் சொல்லிய வழியில் அந்த மதுவிலக்குத் திட்டத்தை நடத்திட முயற்சிகள் எடுத்துக்கொண்ட நேரத்தில், நாட்டில் ஏற்பட்ட அவல நிலைகளை நாம் நினைவுகூர வேண்டும். சிறைச்சாலையே கொள்ளவில்லை. அப்படிப்பட்ட கடுமையான மதுவிலக்குச் சட்டத்தின் மூலமாக குற்றங்கள் புரிந்து சிறைக்குச் சென்றவர்கள் எண்ணிக்கை அதிகமானதன் காரணமாக சிறைச்சாலைகளிலே இடம் இல்லை என்ற நிலை ஏற்பட்டது. அதற்கும் மேலாக அருமைத் தாய்மார்கள் கண்ணீர் கடிதங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு எழுதினார்கள். அதன் காரணமாக அவர்கள் தனக்கே உரிய தாய் உள்ளத்தோடு மதுவிலக்குக் கொள்கையை மறுபரிசீலனை செய்தார்கள். அது உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே எந்தச் சட்டமாக இருந்தாலும், அந்தச் சட்டத்தை மதிக்கின்ற உணர்வு சமுதாயத்திலே இருக்கின்ற மக்களுக்கு வர வேண்டும். அப்போது தான் அந்தச் சட்டம் செவ்வனே செயல்படும் என்பதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும். இந்த நேரத்திலே நான் ஒன்று குறிப்பிடுகின்றேன். அவர்கள் சட்டம் மக்களுடைய உணர்வுகளை, உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். அதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அந்த வகையிலே இன்று நம்முடைய சமுதாயத்திலே உள்ள மக்கள் மதுவிலக்குக் கொள்கையை அமுல் நடத்துவதிலே ஒத்துழைப்புத் தராததன் காரணமாகத்தான், இன்னும் சொல்லப்போனால், சில அரசியல் கட்சிகளே இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கின்ற காரணத்தினால், இதற்குக் குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தினால்தான், இப்படிப்பட்ட நிலைமைகள் தமிழகத்திலே உருவாகியிருக்கின்றன என்பதனை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு மெத்த பணிவன்போடு கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இதிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மனமின்றி இதனைக் கொண்டு வந்திருக்கின்றார் என்பதனை இந்த நேரத்திலே மெத்த பணிவன்போடு கூறிக்கொள்கிறேன். பாண்டிச்சேரியிலே மதுவிலக்கு இல்லை. கேரளத்திலே மதுவிலக்கு இல்லை, ஆந்திராவிலே மதுவிலக்கு இல்லை, கர்நாடகாவிலே மதுவிலக்கு இல்லை, தமிழகத்திலே மட்டும் மதுவிலக்கை எப்படி அமுல் செய்வது என்பதனை உறுப்பினர்கள் தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட



1985 ஜூலை 17] [திரு. த. வீராசாமி]

விரும்புகிறேன். இதை வேண்டுகோளாக இந்த அவையில் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த வகையிலேதான் இன்று நிலைமைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மக்களுடைய உயிர்ச் சேதங்களை எண்ணி, கள்ளச்சாராயம் குடித்து உயிரை மாய்த்துக் கொள்கின்ற சூழ்நிலை காரணமாகத்தான், மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குக் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். மதுவிலக்குக் கொள்கையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருக்கின்றார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ரேடியோ, டி.வி. போன்றவைகள் எல்லாம், காலப்போக்கிலே மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கின்ற இந்த நேரத்திலே ஆடம்பரப் பொருள்களாக இருந்த நிலைமைகள் மாறி அவைகள் எல்லாம் அத்தியாவசியமான பொருள்களாக மாறியிருக்கின்றன என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-55)

அந்த அடிப்படையிலே புரட்சித் தலைவர் அவர்களின் அரசு 15 விழுக்காடாக இருந்த ஒருமுனை வரியை 10 விழுக்காடாகக் குறைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். அவர்கள் சொன்னதுபோல, எல்லாப் பொருள்களுக்கு அல்லது சில பொருள்களுக்கு வரியில்லாமல் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அதே நேரத்தில் நல்ல பல வளர்ச்சிப் பணிகளை, திட்டப் பணிகளை, சமுதாய நலப் பணிகளைச் செய்ய நிதி வேண்டுமென்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்தாக வேண்டும். அந்த வகையிலேதான் அரசு வரி விதிப்புக் கொள்கையை வைத்திருக்கிறது. வேளாண் பொருள்களுக்கு பலமுனை வரியை ஒருமுனை வரியாக்கியதைப் பாராட்டினார்கள். அரசின் வருவாய் குறையாத வகையிலே, இன்று பல வேளாண் பொருள்களுக்கு பலமுனை வரியிலிருந்து ஒரு முனைவரியாக்கி, வேளாண் மக்களின் தொல்லைகளை அகற்றவும், சிறிய விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்க இருக்கிறதென்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1985) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு திரு. த. வீராசாமி :** மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 33/1985) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1985) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(4) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்-விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1985).**

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 76 ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** முன் மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மேலவை மாற்றுத் தலைவரவர்களே, ஒரே யொரு கருத்தை மட்டும் சொல்லி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கங்கள் என்று குறிப்பிடப் பட்டுள்ளதைப் பார்க்கும்போது, 11-5-1977-ல் மார்க்கெட்டிங் கமிட்டி கலைக்கப்பட்டு நியமன கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. ஒவ்வொரு ஆண்டாக எட்டு ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டு, அதுவும் முடியாமல் மேலும் நீட்டிப்பதற்கு நியாயமான காரணங்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அரசு சார்பு இல்லாதவர்களைத் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுத்து, கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டும். அதற்கு என்ன தடையாக இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இப்படி கால நீட்டிப்பு கொடுத்துக்கொண்டு, தேர்தலை நடத்தாமல், அரசாங்கம் தன்னு டைய அதிகாரத்திலேயே கமிட்டிகள் அமைப்பது என்பது அரசுக்குப் பெருமை சேர்ப்பதாக அமையாது என்று கூறி, இதற்கு விளக்கத்தை அமைச்சரவர்கள் கூற வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இந்தத் தேர்தலை எட்டு ஆண்டு களாக தள்ளிப் போட்டுக்கொண்டு போனதற்கு என்ன காரணம் என்ற கேள்வி யைக் கேட்டிருக்கிறார்கள். 1959 ஆம் ஆண்டிலே நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். 1962-லிருந்து இது நடைமுறைக்கு வந்தது. அதற்குப் பிறகு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்திலே, நடைமுறையிலே பல்வேறு சிக்கல்களைப் பார்த்து, சட்டத்தின் அடிப்படையிலே மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று முயற்சிகளை மேற்கொண்டோம். இதில், சட்டத்தை மாற்றும் அதிகாரம் என்பது மாநில அரசுக்கும், மத்திய அரசுக்குமுள்ள பொதுப் பட்டியலிலே இருக்கிறது. ஆகவே சில திருத்தங்களைச் செய்து மத்திய அரசுக்கு அனுப்பினோம். அவர்கள் சில உட்பிரிவுகளைச் சேர்க்க வேண்டுமென்று சொல்லி, ஒப்புதல் வழங்கினார்கள். அந்த வகையில் தேர்தல் களை நடத்துவது என்பதோடு, இப்போதுள்ள விதிமுறைப்படி தேர்தல்களை நடத்தினால் ஒவ்வொரு விற்பனைக் கூடத்தின் வருவாயும் தேர்தல் நடத்துவ

தற்கே செலவாகிவிடும், வேறு ஆக்கப் பணிகளைச் செய்ய முடியாது என்பதால், சட்டத்திலே மாறுதல் செய்ய வேண்டியிருக்கிறது. அதைப்போலவே ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் பணியாற்றுகிறவர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டுமென்று சட்டத்திலே மாறுதல் செய்ய வேண்டியிருக்கிறது.

(நண்பகல் 12-00)

அதைப்போலவே இதிலே செயலாளர்களாக பணியாற்றக் கூடியவர்கள் மத்திய அரசினுடைய பயிற்சி நிலையத்தில் போய் பயிற்சி பெறுவதை ஒரு தகுதியாகக் கொண்டு வர வேண்டும் என்கிற முறையிலும் மாறுதலைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதுபோல் வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்ற உளுந்து, முந்திரி போன்றவற்றுக்கு வரி வசூல் செய்ய வேண்டுமென்று சொன்னால், அப்படி வசூலிக்கக் கூடாது என்று சொல்லி தனியார் நீதிமன்றத்தில் தடை வாங்கி விடுகிறார்கள். அதையும் வசூலிக்கும் வகையில் மாறுதல் செய்ய வேண்டியிருக்கிறது. இப்படி பல அம்சங்களை எல்லாம் சேர்த்துத்தான் மாறுதல் செய்திருக்கிறோம். அதோடு கூட கடந்த டிசம்பரில் மத்திய அரசு ஒரு மாதிரி மசோதாவை . . .

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாண்புமிகு அமைச்சர் கூறுகின்ற கருத்துக்களும், காரண காரியங்களும் ஏற்றுக்கொள்ளத்தக்கவை அல்ல. 1976 ஆம் ஆண்டில் 'சூப்பர்சீட்' செய்யப்பட்டு, 'டிராப்ட் பில்' அனுப்பப்பட்டு அது ஆலோசனைக்குப் போய் வந்தது எல்லாம் ஏற்கெனவே தெரிந்ததுதான். இருந்தும் இந்தக் குறைகளையெல்லாம் களைந்து, ஏன் காலதாமதமில்லாமல் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவரவில்லை? அப்படி என்றால், மார்க்கெட் தேவையில்லையா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அதிலே மிக முக்கியமான சில திருத்தங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு சட்டத்தை உருவாக்குவது என்பது மணல்வீடு கட்டி விளையாடுவதுபோல் அல்ல. உடனடியாக நினைத்த உடன் கொண்டு வந்து நிறைவேற்றக் கூடியதும் அல்ல. பல்வேறு சட்டப் பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லும்வகையில் முழுமையாக, சிக்கல் ஒன்றும் இல்லாமல் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். அதன்படி மாறுதல் செய்கிறோம். கடந்த டிசம்பரில் மத்திய அரசு ஒரு மாதிரி மசோதாவை அனுப்பியது.



திரு. எம். பி. சுப்பிரமணியம் : மணல்வீடு கட்டி விளையாடுவதுபோல அல்ல, சட்டம் கொண்டு வருவது என்பது என்று அமைச்சர் சொன்னார். சட்டத்திலுள்ள அடிப்படைப் பிரச்சினையே அதுதான் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் 1976 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை எவ்வளவோ சட்டங்கள் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். மணல் வீடு கட்டி விளையாடுவதுபோல் சட்டம் கொண்டு வருவது எளிதான ஒன்று என்கிற எண்ணத்தில், நான் பேசியதாக அமைச்சர் எண்ணிப் பேசினால், அது தவறு. சட்டம் என்றால் சிக்கல் இருக்கத்தான் செய்யும். சிக்கல்களை நிவர்த்தி செய்து சட்டம் கொண்டுவர வேண்டும். ஆகவே, மணல் வீடு கட்டுவது போல் அல்ல சட்டம் என்கிற வகையில் அமைச்சர் பேசுவதில் பொருளில்லை.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்ற பிரச்சினை எனக்குப் புரிகிறது. விரைவில் காலதாமதமில்லாமல் சட்டத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த வகையில் இந்த அரசு உரிய வகையில் நடவடிக்கை எடுத்து, பல்வேறு திருத்தங்களைச் செய்து சட்டத் துறைக்கு அனுப்பியிருக்கிறோம். அந்தத் துறையிலிருந்து இறுதி வடிவம் பெற்று விரைவில் அது வர இருக்கிறது. ஆகவே தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை இந்த மன்றம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்,

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 32/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 32/1985) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மேலவை மீண்டும் நாளை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-03)

## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

271. 1958 ஆம் ஆண்டு (சென்னை) பாத்தமைத் தொழில் ஒடுக்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து சமூக நலத் துறையின் 26-3-1985 ஆம் நாளிட்ட 825 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [(1956 ஆம் ஆண்டு பாத்தமைத் தொழில் ஒடுக்குமுறைச் சட்டத்தின் (மத்திய சட்டம் 104/1956) 23 (4) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது].

272. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாத்தமைத் தொழில் ஒடுக்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து சமூக நலத் துறையின் 26-2-1985 ஆம் நாளிட்ட 472 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1956 ஆம் ஆண்டு பாத்தமைத் தொழில் ஒடுக்குமுறைச் சட்டத்தின் (மத்திய சட்டம் 104/1956) 23 (4) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது).



273. HV ஸ்பின்டில் ஆய்வுக்கு விதிக்கப்படும் விற்பனை வரியினை 10 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக குறைப்பது குறித்து வணிக வரிகள், சமய அறக்கட்டளைகள் துறையின் 14-5-1985 ஆம் நாளிட்ட 420 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது].

274. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதி நிலை அறிக்கையும், 1984-85 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அனை. அறிக்கையும் [1948 ஆம் ஆண்டு மின் சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 54/1948) 61 (3) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

*186. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 26/1985).

*187. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 27/1985).

*188. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 33/1985).

*189. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 32/1985).

### இணைப்பு

*[7 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 293-க்கான விடையைக் காண்க.]*

உதக மண்டலத்தில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்க குளிர் சாதன வசதி தேவையில்லை என்றும், தற்சமயம் உள்ள கட்டிடத்தில் ஒரு அறையில் அமைக்கலாம் என்றும், இதைத் தொடங்க கூடுதல் பணியாளர் தொகுதி மற்றும் தொடர், மற்றும் தொடராச் செலவினங்கள் வழங்கும் செயற்குறிப்பை மருத்துவப்பணி, குடும்பநலத்துறை இயக்குநர் அரசுக்கு அனுப்பி உள்ளார். இந்த செயற்குறிப்பு அரசினர் பரிசீலனையில் உள்ளது. அரசின் நிதி நிலைமை கருத்தில் கொண்டு பரிசீலித்து ஆணை வெளியிடப்படும்.

2. மேலும் இம் மருத்துவமனையில் உள்ள சிசு நோயியல் மற்றும் கண் சிகிச்சைப் பிரிவைச் சார்ந்த உதவி அறுவை மருத்துவர் பணியிடங்களை சிவில் சர்ஜன் பணியிடங்களாக நிலை உயர்த்தி 18-7-1984 தேதிய 1173 எண்ணுள்ள சுகாதாரத் துறை அரசு ஆணையில் உத்திரவுப் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

### இணைப்பு

*[43 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

அரசு ஆணை (வாலாயம்) என் 852, நாள் 28-4-1978-ன்படி, "நவசக்தி" நாளிதழில் முன்னாளில் பணிபுரிந்த திரு. அ. ஷண்முகசுந்தரம் அவர்களுக்கு சேரவேண்டிய தொழிலாளர் தகராறு பணமாக ரூ. 32,475.11 நிறுவனத்திடமிருந்து வசூல் செய்து தொழிலாளிக்கு கொடுக்கும்படியாக உத்தரவிடப் பட்டது.

மேற்படி அரசு ஆணையை எதிர்த்து சென்னை, உயர் நீதிமன்றத்தில் மேற்படி நிறுவனம் நீதிப் பேராணை என் 3560/79, 3561/79 உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்தனர். உயர் நீதிமன்றம் மேற்படி பணத்தை வசூல் செய்யாதிருக்கும்படி தடுப்பு ஆணை 20—8—1979 நாளில் உத்தரவிட்டது. உயர் நீதிமன்றம் மேற்படி நீதி பேராணை மீது கீழ்க்கண்டவாறு 17—12—1981-ம் நாளன்று உத்தரவிட்டது. தினகரன் நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்கள் முதலானவைகளை எடுத்து உரைப்பதற்கு தகுந்த சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென உத்தரவிட்டது.



மேற்படி உத்தரவின்படி வட்டாட்சியர் (மயிலை-திருவல்லிக்கேணி) மேற்படி நிறுவனத்திற்கு நோட்டீஸ் அல்லது அறிக்கை அனுப்பியும் மேற்படி நிறுவனம் வட்டாட்சியர் முன்னிலையில் ஆஜராகவில்லை.

இதற்கிடையே, பயனாளர் உயர் நீதிமன்றத்தில் நீதி பேராணை 853/81 தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றம் மேற்படி மனுவில் கீழ்க்கண்டவாறு உத்தரவிட்டது:—

"மாவட்ட ஆட்சியர் 30-9-1983-க்குள் துரித நடவடிக்கை எடுத்து வசூல் செய்ய வேண்டும்".

திரும்பவும் மேற்படி நிறுவனம் நீதி பேராணை 10543/83 தாக்கல் செய்து 11-11-1983-ம் நாளில் ஓர் தடுப்பு ஆணை பெற்றனர்.

ஆனால், மேற்படி நீதி பேராணை 10543/83 உயர் நீதிமன்றம் 3-9-1984 அன்று தள்ளுபடி செய்துள்ளது.

வட்டாட்சியர் (மயிலை-திருவல்லிக்கேணி) அவர்களை மேற்படி நிறுவனத்திடமிருந்து உடன் பயனாளருக்கு சேர வேண்டிய தொகையை வசூலிக்கும் படி உத்தரவிடப்பட்டுள்ளது.

### இணைப்பு III

*[44 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

கிருஷ்ணா நதியின் படுகை மாநிலங்களான மராட்டியம், கர்நாடகம் மற்றும் ஆந்திரம் ஆகிய மூன்று மாநிலங்களும் சென்னை நகரின் தேவைக்காக 5 டி.எம்.சி. விதம் மொத்தம் 15 டி.எம்.சி. நீர் கிருஷ்ணா நதியிலிருந்து வழங்கும் என்று 15-2-1976 அன்று அப்போதைய பாரத பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாரால் சென்னையில் அறிவிக்கப்பட்டது. இவ்வறிவிப்பைத் தொடர்ந்து 1976-ல் மத்திய அரசின் தலைமையில் தமிழ்நாடு மற்றும் இம்மூன்று மாநிலங்களும் நீர் வழங்குவது பற்றி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டன. விரிவான ஆய்வுக்குப் பின்னர் சென்னை நகருக்கான 15 டி.எம்.சி. நீரை ஆந்திரத்திலுள்ள ஸ்ரீசைலத்தில் இருந்து பெறும்வகையில் தமிழகம் மத்திய அரசின் முன்னிலையில் இம்மூன்று மாநிலங்களுடன் மற்றொரு ஒப்பந்தம் 1977-ல் செய்து கொண்டது. இத்திட்டத்தை ஆய்வு செய்த ஆந்திர அரசு 1982 நவம்பரில் தமிழக அரசுக்கு ஒரு விரிவான அறிக்கையை அளித்தது. இதைத் தொடர்ந்து இத்திட்டத்தை மேற்கொள்வதற்கான முறைகள் பற்றி ஆந்திர, தமிழக அரசுகளுக்குள் ஒரு ஒப்பந்தம் 18-4-1983 அன்று ஏற்பட்டது. சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவதுடன் ஆந்திரத்

தில் வறண்ட பகுதிகளில் பாசன வசதியும் அளிக்கும் வகையில் இத்திட்டத்தை மேற்கொள்ளவும் இத்திட்டத்திற்காகும் செலவை இத்திட்டத்தில் பயன்படுத்தக் கூடிய நீரளவை அனுசரித்து இரு மாநிலங்களும் பகிர்ந்து கொள்ள வேண்டும் எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இவ்வொப்பந்தத்தில் இத்திட்டத்தின் கீழ் செய்யப்பட வேண்டிய பணிகளின் விவரங்களும், அதற்காகும் செலவினை இரு மாநில அரசுகளும் பங்கிட்டுக் கொள்ள வேண்டிய முறைகளும் விவரமாகக் கூறப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக ஆந்திர எல்லையில் அமையக்கூடிய வேலைகளின் மொத்த மதிப்பீடு சோமசிலா நீர்த் தேக்கத்தின் இரண்டாம் நிலை வேலையின் மதிப்பீட்டையும் சேர்த்து ரூ. 720 கோடியாகும். இதில் ஆந்திரப் பாசனத்திற்கு மட்டுமே தேவையான வேலைகளின் மதிப்பீடு ரூ. 140 கோடி. சென்னை குடிநீர் வசதிக்கும் ஆந்திரப் பாசனத்திற்கும், பொதுவான வேலைகளின் மதிப்பீடு ரூ. 580 கோடி. இதில் தமிழ்நாட்டின் பங்கு சுமார் ரூ. 185 கோடி.

ஆந்திர எல்லைக்குள் நடக்கும் பணிகள் ஆந்திர அரசால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. ஒப்பந்தத்தின் 3-வது ஷரத்தின்படி இத்திட்டப் பணிகளுக்கு ஆகும் செலவில், தமிழகத்தின் பங்கு ஆந்திர அரசால் அரையாண்டிற்கு ஒரு முறை ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் முன்கூட்டியே கணக்கிடப்பட்டு தமிழக அரசுக்குத் தெரிவிக்கப்படும். இத்தொகை தமிழகத்தால் முன்பணமாகக் கொடுக்கப்படும். ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும், தமிழகத்தின் பங்கு கணக்குகள் இறுதியாக்கப்பட்டு, அடுத்துவரும் அரையாண்டு கணக்குகளில் சரிக்கட்டப்பட வேண்டும். மற்றும் ஷரத்து 3-ன்படி இவ்வேலைக்கு தமிழக அரசும், ஆந்திர அரசும் தங்களது பங்கை எவ்வாறு செலுத்த வேண்டும் என்பதை இரு அரசுகளும் சேர்ந்து முடிவு செய்ய வேண்டும்.

1983-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு முன்னர், இத்திட்டத்தின்பொருட்டு இரு மாநிலங்களுக்கிடையேயான பங்கீட்டுத் தொகையாக ரூ. 4 கோடி ஆந்திர அரசு ஏற்கனவே செலவு செய்துள்ளது. அதைத் தொடர்ந்து ஒப்பந்தத்திற்கு



பிறகு 1-4-1985 வரை ரூ. 42 கோடி செலவு செய்துள்ளது. இதில் 1-4-1985 வரை தமிழகம் அளித்துள்ள தொகை ரூ. 35 கோடியாகும். எனவே, 1-4-1985 வரை ஆந்திர அரசு கூடுதலாக செலவு செய்துள்ள தொகை பின்வருமாறு :—

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1983-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு முன்னர் ஆந்திர அரசு செலவு செய்துள்ள தொகை | 4.00 |
| 1983-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்குப் பின்னர் தமிழக அரசு அளித்துள்ள தொகை போக கூடுதலாக ஆந்திர அரசு செலவழித்துள்ள தொகை (ரூ. 42 கோடி — ரூ. 35 கோடி) | 7.00 |
| மொத்தம் | 11.00 |

1985-86-ல் இதுவரையில் ஆந்திரம் தனது பங்காக மேலும் ரூ. 12 கோடி செலவு செய்துள்ளது. ஆகமொத்தம் ஆந்திர அரசு, தமிழக அரசு 1-4-1985 வரையில் அளித்துள்ள தொகைபோக, தனது பங்காக இத்திட்டத்தின் பொருட்டு இதுவரை ரூ. 23 கோடி செலவு செய்துள்ளது. 1985-86-ல் தமிழ் நாடு மேலும் ரூ. 12 கோடி கொடுத்துள்ளது. ஆக மொத்தம் தமிழ்நாடு இதுவரைக்கும் செலுத்திய தொகை ரூ. 47 கோடி.

இத்திட்டத்தின் பொதுவான வேலைகளை முடிப்பதற்கு தமிழகத்தின் பங்கு தவிர, ஆந்திரம் தனது பங்காக சுமார் 400.00 கோடி செலவு செய்ய வேண்டியிருக்கும். ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இத் திட்டத்திற்காக பண ஒதுக்கீடு செய்ய முடியவில்லையென்றும், 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கு அளிக்க வேண்டிய தனது பங்கை அளிக்கும் என்றும் ஆந்திரம் உறுதி அளித்துள்ளது. இதனை ஏற்றுக்கொண்டு, தமிழகம் முதல் இரண்டு ஆண்டுகளில் (1983-84, 1984-85) ஆந்திரம் தனது பங்கை அளிக்க இயலாத நிலையில், திட்டத்தின் செலவினைத் தமிழகம் பெருமளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. தற்பொழுது, 1985-86-ல் இருந்து ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பித்துவிட்டதால், ஆந்திரம் தனது பங்கினை அதிகரிக்க வேண்டுமென்று தமிழகம் கருதுகிறது. ஆந்திரம் அளிக்க வேண்டிய ரூ. 400.00 கோடியை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985-86-லிருந்து) ஒவ்வொரு வருடமும், எவ்வாறு அளிக்கப் போகிறது என்ற விவரங்களை, ஒப்பந்த ஷரத்து 3-ன்படி தெரிவிக்க வேண்டுமென்று மார்ச் 1985-ல் தமிழகம் ஆந்திரத்திற்கு எழுதி இருந்தது.

1985-86 முதல் 1989-90 வரை (7-வது ஐந்தாண்டு திட்டம் முடிய) ஒவ்வொரு ஆண்டும், ஆந்திரமும் தமிழகமும் அதனுடைய பங்கை எவ்வாறு செலுத்த வேண்டுமென்ற முடிவு எடுக்க, அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. மேலும், முதலமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடத்தி இதற்கு ஒரு முடிவு காணப்படும்.

எனவே, இதுகாறும் ஆந்திர அரசு ஒரு லட்ச ரூபாய் கூட ஒதுக்கவில்லை என்பது சரியல்ல. இரு அரசுகளும் விரைவில் இதுபற்றி விவரமாகப் பேசி, வரும் ஐந்தாண்டுகளில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, திட்டம் நிறைவேற எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளும்.

## இணைப்பு-IV

*[48 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

L. *A*. Bill No. 26 of 1985.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Entertainments Tax Act,* 1939.

Be it enacted by the Legislature of the State Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Entertainments Tax (Second Amendment) Act, 1985.

(2) (*a*) Clause (ii) of section 2 in so far as it relates to the addition of new item 19 shall be deemed to have come into force on the 12th December 1984.

(*b*) The rest of this Act shall be deemed to have come into force on the 21st February 1985.

2. *Amendment of Schedule II, Tamil Nadu Act X of 1939.*—In Schedule II to the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939),—

(i) under the heading "*Kanyakumari district*", after item 2, the following item shall be added, namely:—

"3. Kaliakkavillai";



(ii) under the heading "*Madurai district*", after item 18, the following items shall be added, namely:—

"19. Tirunagar.
20. Kombai.
21. Pudupatti.
22. Palayam.";

(iii) under the heading "*Pudukottai district*", after item 2, the following item shall be added, namely:—

"3. Illupur.";

(iv) under the heading "*Salem district*", after item 21, the following items shall be added, namely:—

"22. Narasingapuram.
23. Peddunaickenpalayam.
24. Konganapuram.
25. Pandamangalam.
26. Senthamangalam.
27. Kannankurichi.
28. Attaiyampatti.";

(v) under the heading "*Thanjavur district*", after item 17, the following items shall be added, namely:—

"18. Vallam.
19. Kodaivasal.
20. Aduthurai.";

(vi) under the heading "*Tirunelveli district*", after item 10, the following items shall be added, namely:—

"11. Ettayapuram.
12. Thisayanvilai.
13. Kalakad.
14. Mukkudal.
15. Kilapavoor.
16. Sivagiri.".

I Certify that this is a Money Bill.

Fort St. George,
Madras.
Dated 16—7—85.

P. H. PANDIAN
*Speaker.*

## இணைப்பு–V

[49 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L. A. Bill No. 27 of 1985

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Entertainments Tax Act,* 1939.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Entertainments Tax (Third Amendment) Act, 1985.

(2) (i) Section 6 shall be deemed to have come into force on the 26th December 1977;

(ii) Section 7 shall be deemed to have come into force on the 1st April 1970;

(iii) The rest of the Act shall come into force on such date as the State Government may, by notification appoint.

2. *Amendment of section 3, Tamil Nadu Act X of 1939.*—In section 3 of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939) (hereinafter referred to as the principal Act), in clause (6), for sub-clause (*a*), the following sub-clause shall be substituted, namely:—

"(*a*) the Municipal Corporations of Madras, Madurai, Coimbatore or any other Municipal Corporation that may be constituted under any law for the time being in force, or".

3. *Amendment of section 4-A Tamil Nadu Act X of 1939.*—In section 4-A of the principal Act, in sub-section (1), in item (i) for the words "Exhibitions held in the city of Madras, or in the city of Madurai", the words "Exhibitions held in the Municipal Corporations of Madras, Madurai, Coimbatore or in any other Corporation that may be constituted under any law for the time being in force", shall be substituted.

4. *Amendment of section 4-C, Tamil Nadu Act X of 1939.*—In section 4-C of the principal Act, in sub-section (1), in item (ii), for the words "Exhibitions held in the City of Madurai", the words "Exhibitions held in the Municipal Corporations of Madurai, Coimbatore or any other Corporation that may be constituted under any law for the time being in force", shall be substituted.



5. *Amendment of Section 5-A, Tamil Nadu Act X of 1939.*—In section 5-A of the principal Act, in Explanation I, for the words "available in the theatre", the expression "in the theatre as specified in the licence issued by the competent authority under the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955)", shall be substituted.

6. *Amendment of Section 5-B, Tamil Nadu Act X of 1939.*—For sub-section (5) of section 5-B of the principal Act, the following sub-section shall be substituted, namely:—

"(5) The option permitted under this section shall continue to be in force so long as the proprietor is eligible to pay tax under this section and has not withdrawn his option.".

7. *Insertion of new section 7-C in Tamil Nadu Act X of 1939.*—After section 7-B of the principal Act, the following section shall be inserted, namely:—

"7-C. *Assessment of legal representatives.*—Where a proprietor dies, his executor, administrator or other legal representative shall be deemed to be the proprietor for the purpose of this Act and the provisions of this Act shall apply to him in respect of the entertainments counducted by the said deceased proprietor:

Provided that in respect of any tax, penalty or other amount assessed as payable by any such proprietor or any tax or penalty or other amount which would have been payable by him under this Act if he had not died, the executor, administrator or other legal representative shall be liable only to the extent of the assets of the deceased in his charge".

8. *Amendment of Section* 10-F, *Tamil Nadu Act X of* 1939.—In section 10-F of the principal Act, in the marginal heading, for the word "*Penalty*" the word "*Interest*" shall be substituted.

9. *Insertion of new section 15-B in Tamil Nadu Act X of 1939.*—After section 15-A of the principal Act the following section shall be inserted, namely:—

"15-B. *Prohibition of disclosure of particulars produced before the entertainment tax authorities.*—(1) All particulars contained in any statement made, return furnished, or accounts, registers, records or documents produced under the provisions of this Act or in any evidence given or affidavit or deposition made, in the course of any proceeding under this Act or in any record of any proceeding relaing to the recovery of a demand, prepared for the purposes of this Act shall be treated as confidential and shall not be disclosed.

(2) Nothing contained in sub-section (1) shall apply to the disclosure of any such particulars—

(i) for the purpose of investigation of, or prosecution for, an offence under this Act, or under the Indian Penal Code (Central Act XLV of 1860) or under any other law for the time being in force, or

(ii) to any person enforcing the provisions of this Act where it is necessary to disclose the same to him for the purposes of this Act; or

(iii) occasioned by the lawful employment under this Act of any process for the recovery of any demand; or

(iv) to a civil court in any suit to which the Government are party and which relates to any matter arising out of any proceeding under this Act; or

(v) occasioned by the lawful exercise by a public servant of his power under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) to impound an insufficiently stamped document; or

(vi) to an officer of—

(*a*) the Government of India, or

(*b*) the Government of any State or Union Territory in India with which an agreement for disclosure on a reciprocal basis has been entered into by the Government of the State; or

(vii) to an officer of any department other than the Commercial Taxes Department of the State Government after obtaining the permission of the prescribed authority:

Provided that such particulars shall be furnished under clause (vii) only in exceptional cases and that any officer obtaining such particulars shall keep them as confidential and use them as confidential and use them only in the lawful exercise of the powers conferred by or under any enactment.".

10. *Certain contraventions, etc., not to be offences.*—Notwithstanding the retrospective operation of sections 6 and 7 of this Act, no contravention of, or no failure to comply with any of the provisions of the principal Act as amended by the said sections or any rule made or notification issued thereunder shall render any person guilty of any offence if such contravention or failure—

(i) relates either to any provision inserted in the principal Act by the said sections or to any existing provision thereof, as amended by the said sections; and



I Certify that this is a Money Bill.

Fort St. George,
Madras.
Dated 16—7—85.

P. H. PANDIAN
*Speaker.*

(ii) Occurred on or after the 26th December 1977 in so far as section 6 is concerned and 1st April 1970 in so far as section 7 is concerned and before the date of publication of the Act in the *Tamil Nadu Government Gazette.*

## இணைப்பு-VI

*[50 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

L. A. Bill No. 33 of 1985.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu General Sales Tax Act, 1959.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu General Sales Tax (Third Amendment) Act, 1985.

(2) It shall be deemed to have come into force on the 26th March 1985.

2. *Amendment of the First Schedule to Tamil Nadu Act 1 of 1959.*—In the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959),—

(*a*) in item 41-C, in column (4), for the figures "12", the figures "10" shall be substituted;

(*b*) in item 70 (*c*), in column (4), for the figure "6", the figures "25" shall be substituted;

(*c*) after item 164, and the entries relating thereto, the following item and entries shall respectively be added, namely:—

"165. Agricultural
products, namely,
chillies, tamarind,
turmeric, coriander
and pepper

I Certify that this is a Money Bill.

Fort St. George,
Madras.
Dated 16—7—85.

P. H. PANDIAN
*Speaker.*

## இணைப்பு—VII

[60 ஆம் பக்கத்தில் இனம் 5 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L. A. Bill No. 32 of 1985.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Act, 1985.

(2) It shall be deemed to have come into force on the 11th day of May 1985.

2. *Amendment of section 24, Tamil Nadu Act 23 of 1959.*—In section 24 of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959) (hereinafter referred to as the principal Act), in sub-section (1), for the words "eight years", the words "nine years" shall be substituted.

3. *Persons appointed to carry out the functions of certain market committees to continue.*—(1) Notwithstanding anything contained in the principal Act or in any other law for the time being in force, the persons appointed under clause (*a*) of sub-section (3) of section 24 of the principal Act and holding office immediately before the 11th day of May 1985 (hereinafter in this section referred to as the said persons) shall continue to hold office and carry out the functions of the market committees for such period or periods as the State Government may specify under sub-section (1) of section 24 of the principal Act, as amended by this Act.

(2) Any thing done or any action taken by the said persons during the period commencing on the 11th day of May 1985 and ending with the date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette* shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

263

## பொருளடக்கம்


| | பக்கங்கள். |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள் | 77—108 |
| 2 தகவல் கோரல்— | |
| சனிக்கிழமை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டதால் தனி உறுப்பினர் அலுவலுக்கான நாள் ஒதுக்குவது குறித்து. | 109 |
| 3 அறிவிப்புகள்— | |
| (1) ஆளுநரிடமிருந்து செய்தி | 109 |
| (2) பேரவையிலிருந்து செய்தி | 109—110 |
| (3) தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவைக்கு மேலவையிலிருந்து ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் | 110 |
| (4) சட்ட மன்ற மேலவையின் கூட்டத்தை நீட்டிப்பது குறித்து. | 110 |
| 4 ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம் வேப்பந்தட்டை கிராமத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து. | 111—125 |
| 5 கவன ஈர்ப்பு— | |
| (1) சேலம் சௌடேஸ்வரி கல்லூரி நிர்வாகம் பேராசிரியர்களை வேலை நீக்கம் செய்ததால் ஆசிரியர்கள் படும் இன்னல்கள் குறித்து | 125—127 |
| (2) வில்லிவாக்கம் சிங்காரம் பிள்ளை மேல்நிலைப் பள்ளி தாளாளர் மற்றும் குழு உறுப்பினர்களால் தலைமையாசிரியை மற்றும் ஆசிரியைகள் நியமனங்கள் போன்றவை உள்ளிட்ட முறைகேடுகள் குறித்து | 128—130 |
| 6 அரசின் சட்ட முன்வடிவுகள்— | |
| (1) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைத்தாரர்கள் (தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1985) | 130—137 |


143962

பக்கங்கள்.

6 அரசின் சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி

(2) 1985-ம் ஆண்டு தமிழ் நாடு நிலச் சீர் திருத்த (நிலத்தின் மீது உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட வடிவு எண் 44/1985) 137—140

(3) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் புற நிலம் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட) மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/1985) 140—143

(4) 1985 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதி மன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 35/1985) 144—146

7 அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் 145—147

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

**வியாழக்கிழமை, 1985, ஜூலை 18.**

ஆடி 3, குரோதன—திருவள்ளுவராண்டு 2016.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-00 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மொழி பெயர்ப்பு டிப்ளோமோ வகுப்பு

* 106. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மொழிபெயர்ப்பு டிப்ளோமோ வகுப்புகளைத் துவக்க, அரசு ஏதேனும் முயற்சி செய்து வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, அரசுத் துறையில் இப்போது அரசாணைகளாக இருந்தாலும் சரி, பொது நிகழ்ச்சிகளில் ஆங்கிலத்தில் பேசும்போது தமிழிலும், தமிழில் பேசும்போது ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்க வேண்டிய முக்கியமான கட்டங்கள் வருகின்றன. அதிலே சரியான பயிற்சி இல்லாததன் காரணமாக பல அரசாணைகள், ஆங்கிலத்தில் தெளிவாக இருந்தாலும், தமிழில் சரியாக அமையவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. ஆகவே அத்தகைய குறைபாடுகள் இருப்பதால், இந்தத் துறையில் இருக்கும் ஊழியர்களுக்குத் தக்க பயிற்சியளிக்க டிப்ளமோ கொடுக்க முடியுமா என்றுதான் இந்தக் கேள்வியே கேட்கப்பட்டது. அப்படி டிப்ளமா பயிற்சி கொடுக்க இப்போது நடவடிக்கை இல்லாவிட்டாலும், வேறு ஏதேனும் மாற்று ஏற்பாடுகள் செய்வதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, மொழி பெயர்க்கும் கலையில் பெரும் குறையாக இந்த நிலை இருக்கிறது. பேச்சுக் களை மட்டுமல்லாமல், நூல்களை மொழி பெயர்ப்பதிலும் சரியான மொழி பெயர்ப்பாளர்கள், பயிற்சியாளர்கள் இல்லாததால், மொழி பெயர்ப்பைச்

செய்ய முடியாமல் போய்விடுகிறது. அந்தக் குறைபாட்டை அரசும் உணர்ந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இப்போது இந்த முயற்சியில் இறங்கவேண்டும். குறிப்பாக நம்முடைய இண்டர்நேஷனல் தமிழ் ஸ்டடீஸ் என்ற நிறுவனம், சான்றிதழ் நிலையில் ஒரு பயிற்சி வகுப்பை நடத்துகிறது. அதிலே அதிகமான மாணவர்கள் சேருவதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இதுகுறித்த திட்டம் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தில் இந்தத் திட்டம் பற்றி பரிசீலனையில் இருப்பதாகவும், மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் 1980-81 ஆம் ஆண்டு டிப்ளமோ வகுப்பு இருந்ததாகவும், போதுமான மாணவர்கள் இல்லாததால் அடுத்த அடுத்த 1982—83, 1983—84 ஆம் ஆண்டுகளில் அந்தப் பயிற்சி வகுப்பு நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஆங்கில வகுப்பில் மொழி பெயர்ப்பு இலக்கியத்தில் எம்.ஏ.-வில் இந்த ஆண்டு முதல் அமைத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, புதிதாக இப்படிப்பட்ட பயிற்சி வகுப்புகளை அல்லது டிப்ளமா வகுப்புகளை ஆரம்பித்து புதிய மாணவர்களைச் சேர்க்கும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல பல சங்கடங்கள் இருக்கலாம். சேர ஆர்வம் இல்லாமல் மாணவர்கள் இருக்கலாம். ஆனால் அரசுத் துறையில் இருப்பவர்கள், பேராசிரியர்கள், மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் போன்றவர்கள் சிலரை நாமே தேர்ந்தெடுத்து, குறிப்பிட்ட பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்து, அவர்களை நாம் அனுப்பினால்; அமைச்சர் குறிப்பிட்டதைப் போல, பல புத்தகங்களை, பேச்சுக்களை, அரசாணை போன்றவைகளை மொழி பெயர்க்க சரியான வாய்ப்பாக அமையும். இப்படிப்பட்ட குறைபாட்டால், நடைமுறைப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனால் பொதுமக்கள் சங்கடத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஒரு நிகழ்ச்சியில்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, அவர்கள் பேசியதை மொழி பெயர்க்க முடியாமல் மொழிபெயர்ப்பாளர் திண்டாடினார். முதலமைச்சர் அவர்களே அதைச் சரி செய்யும்படியான நிலைகூட ஏற்பட்டது. வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இவைகளால் நமது பெருமைக்குக் குறைவு ஏற்படுகிறது. ஆகவே அமைச்சர் சொன்னதைப் போல, சிறப்புப் பயிற்சித் திட்டத்தை ஏற்படுத்தி இந்தக் குறைபாடுகளைப் போக்கலாம். முழுமையான பயிற்சி கொடுக்கலாம் அல்லவா? இது குறித்து அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இந்த மொழி பெயர்ப்புத் துறையில் விஞ்ஞான ரீதியாகப் பயிற்சி தந்தால், பயிற்சி பெறுபவர்கள் சுலபமாக மொழி பெயர்க்க முடியும். அந்த நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது. ஆகவேதான், இந்தப் பயிற்சி தேவையென்று அரசு உணருகிறது. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இந்த வகுப்பை ஆரம்பித்தாலும், போதுமான மாணவர்கள் வராததால், அவைகள் வெற்றி பெறவில்லை. இருந்தாலும் மொழி பெயர்ப்புத் துறையில் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலையில் முக்கியத்துவம் தருகிறபோது, இந்தப் பிரச்சினைகள் இயல்பாக நீக்கப்பட்டுவிடுமென்று கருதுகிறோம். ஆகவே, வேலையில் இருக்கிறவர்கள்கூட பயிற்சி பெறுகின்ற முறையில் அவர்களுக்குச் சிரமமில்லாமல் இருக்கும் வகையில் மாலை நேர வகுப்புகள் நடத்த பல்கலைக் கழகங்களையும், நிறுவனங்களையும் கேட்டுக்கொள்ளலாம்.

(முற்பகல் 10-05)

**செல்வி ஆ. லீலாவதி:** தலைவர் அவர்களே, இப்போது பத்தாவது, பன்னிரண்டாவது படிக்கும் மாணவர்கள் ஆங்கிலத்தைப் பெரும்பாலும் பாராமல் படித்து — அதாவது "Mug-up" என்பார்களே அதுபோல படித்து — எழுதுகிறார்கள். அவர்கள் அவ்வாறு படித்துவிட்டு வெளியே வருகிறபோது அவர்களால் ஆங்கிலம் சரளமாகப் பேசவோ புரிந்துகொள்ளவோ முடியவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு தனியார் துறையிலே அதிகமாக "ஃபீஸ்" வாங்கிக்கொண்டு மூன்று மாதத்தில் சொல்லிக்கொடுக்கிறோம், ஆறு மாதத்தில் சொல்லிக் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொடுக்கும் நிலைமை இருக்கிறது. அதுபோல் அரசும் அவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி கொடுத்து, தமிழும் ஆங்கிலமும் அவர்களுக்கு நன்கு தெரியும்படி செய்ய நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, பொதுவாக மாணவர்களுக்கு இதிலே பயிற்சி தருவது என்பது ஒரு தொழில் நுட்பக் கல்வி போல நினைத்து, வேலைவாய்ப்பிற்கான ஒரு பயிற்சியாகக் கருதி, இதை 11, 12 ஆம் வகுப்புகளிலே பாடமாகக்கூட வைக்கலாம். மொழியை முக்கியப் பாடமாக எடுத்துக் கொள்கிறவர்கள், வேலைவாய்ப்புக்கு இதை ஒரு பாடமாக எடுத்துக் கொண்டு நல்லமுறையிலே படிக்கலாம். அப்படிப்பட்ட முயற்சிகளை பல்கலைக்கழகங்கள் எடுப்பதற்கு அரசு வற்புறுத்துகிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, மொழி பெயர்ப்பு டிப்ளமா என்று சொல்லப்படும்போது, தொழில்நுட்ப அறிவை வளர்க்கக்கூடிய பிற

துறைகளில் பிறமொழிகளில் உள்ள புத்தகங்களை மாற்றுவதற்கு மட்டும் இதைக் குறிப்பிடுகிறார்களா ? அல்லது ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்ப்பதை மட்டும் குறிப்பிடுகிறார்களா ? மொழி பெயர்ப்பு செய்யப்படும் போது, ஒரு மொழியில் உள்ள வார்த்தைக்கு இன்னொரு மொழியில் வரக் கூடிய சந்தர்ப்பத்தைப் பொறுத்துத்தான் சரியான பொருள் கொடுக்க முடியும். அதற்கு, அனுபவ ரீதியாகத்தான், உபயோகப்படும் வார்த்தையின் அடிப் படையில்தான் பொருள் கொடுக்க முடியும். அப்படி இருக்கும்போது, இப்படி ஒரு டிப்ளமா பயிற்சி என்பது தேவையா ?

அடுத்து, அனுபவமும் ஆற்றலும் மிக்கவர்களைப் பயன்படுத்தி பிற நாட்டு மொழிநூல்களைத் தமிழிலே மொழி பெயர்க்கவும், ஆங்கிலத்திலிருந்து தமிழிலே மொழி பெயர்க்கவும், அதுபோல் தமிழிலேயிருந்து பிற நாட்டு மொழி களிலேயும், ஆங்கிலத்திலேயும் மொழி பெயர்க்கவும் டிப்ளமா பயிற்சி தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தற்போது ஆங்கிலமும், தமிழும் பாட மொழியாகவும், பயிற்சி மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் இருந்துகொண்டிருக்கின்றன. அதனால்தான் இதை இரண்டையும் முக்கியமாக இப்போது குறிப்பிடுகிறோம். மொழி பெயர்ப்பு என்பது ஒரு டெக்னிக். ஒரு தொழில் நுட்ப அறிவு என்ற முறையிலேதான் முதலில் இவ்விரு மொழிகளிலிருந்தும் மொழி பெயர்ப்பு செய்யும் தொழில் நுட்பப் பயிற்சி தர வேண்டும். அடுத்து, மொழிபெயர்ப்பு அனுபவம் காரண மாகவும், சந்தர்ப்பத்தைப் பொறுத்தும்தான் சரியாகச் செய்ய முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் மனித சமுதாயத்தினுடைய அனுபவத்தையும் பல சந்தர்ப்பங் களிலே அவர்களுக்குக் கிடைக்கின்ற பயிற்சியையும் தொகுத்து, முறைப் படுத்தி, குறிப்பிட்ட கால அளவுக்குத் தருவதற்குப் பெயர்தான் கல்வி. ஆகவே இது அதிலே அடங்கும். எனவே எந்தவிதமான தவறும் இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, ஒரே கொள்கையை உடைய இரண்டு உறுப்பினர்களுக்கிடையிலேயே டிப்ளமா பயிற்சி தேவையா, தேவை இல்லையா என்கிற கருத்து வேறுபாடு இருக்கிறது. பொதுவாக ஆட்சி மொழியாகத் தமிழ்மொழி நடைமுறைப்படுத்தப்படுவதற்கு, அரசுப் பணியிலே இருப்பவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தினால், பயனுள்ளதாக இருக்கு மென்று அரசு கருதுகிறதா ?

அதோடு, ஆங்கிலத்திலிருந்து மட்டுமல்லாமல் மற்ற வெளிநாட்டு மொழி களிலிருந்தும், தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டியது தேவையாக இருப்பதால், அதற்கும் சென்னைப் பல்கலைக் கழகம், மற்ற பல்கலைக்





கழகங்களையும் ஆங்கில மற்றும் வெளிநாட்டு மொழிகளிலிருந்து நூல்களை மொழிபெயர்க்க பயிற்சிகள் மேற்கொள்ள அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, எல்லா மொழி நூல்களையும், தமிழில் மொழி பெயர்க்க வேண்டுமென்ற ஆசையையும், திட்டத்தையும் அரசு வைத்திருக்கிறது. ஆனால் அது சரியான முறையில் நடைபெறவில்லை என்று கருதுகிறேன். மகாராஜன் கமிட்டி மூலம் சில நூல் களை மொழி பெயர்க்க ஏற்பாடுகள் செய்தோம். அதனால் தமிழ் வளம் பெறும், தமிழ் மக்கள் பயன் பெறுவார்கள் என்ற அடிப்படையில் திட்டத்தைச் செயல் படுத்த முன்வந்தோம். பல்வேறு மொழி நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப் பட வேண்டுமென்பதும், தமிழ் நூல்களும் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப் பட வேண்டுமென்பதும், அரசுக்கு உடன்பாடான ஒன்றுதான், ஆனால் மொழி பெயர்ப்புப் பயிற்சி தர வேண்டும் என்று நாம் சொல்கிறபோது, ஓரளவுக்கு தமிழிலேயும், ஆங்கிலத்திலேயும் பயிற்சி பெற்றவர்கள் கூட மொழிபெயர்க்க முடியாமல் திண்டாடுகிறார்கள் என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னார்கள். அதை முதலில் ஒத்துக்

(முற்பகல் 10-10)

கொள்ள வேண்டும். ஆங்கிலமும், தமிழும் தெரிந்துவிட்டால் மட்டுமே மொழி பெயர்க்க முடியாது என்கிற உண்மையை படித்தவர்கள் புரிந்துகொண்டால், அப்போது மொழி பெயர்ப்பதற்குத் தேவையான பயிற்சி அல்லது தொழில் நுட்பத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை ஏற்றுக் கொள் வார்கள். அப்போதுதான் அதில் பயிற்சி பெற வேண்டுமென்ற நிலைமைகள் வரும். பொதுவாக ரஷ்யாவிலிருந்து தலைவர்கள் வரும்போது நாம் கூர்ந்து கவனித்தால், பின் பக்கத்தில் ' இன்டர்பிரிடர் ' நின்று கொண்டு கையிலே ஒரு காகிதத்தை வைத்துக்கொண்டு குறிப்பு எடுத்துக்கொள்வார்கள். குறிப்பு எடுத்துக்கொண்டுதான் மொழி பெயர்க்க வேண்டுமென்ற நடைமுறை ஆரம்ப உண்மை கூட தெரியாமலேதான் இன்றைக்கு பல பேர் மொழி பெயர்ப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அது முறையாகப் பயிற்சி பெறவேண்டிய ஒன்று. அதிலே பலர் ஆர்வம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதை முறையாகச் செய்வார்களேயானால், நல்ல மொழி பெயர்ப்பாகக் கிடைக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்தவர்கள் மொழி பெயர்க்கும் முறையைச் சுட்டிக் காட்டினார்கள். நான்கூட மேல்நாடுகளில் பார்த்தேன்.

அங்கு குறிப்பு எடுத்துக்கொள்வதோடுகூட, யார் ஒருவர் பேசிக்கொண்டிருக்கிறாரோ அவர் பேசுகின்ற நேரத்திலேயே 'சைமல்டேனியஸ்' ஆக, உடனுக்குடன் — இங்கு ஒரு பாரா பேசி நிறுத்திவிட்டு அதற்குப் பிறகு மொழி பெயர்க்கும் வழக்கத்தைப் பார்க்கிறோம் — அங்கு பேசிக்கொண்டிருக்கும் போதே அவர் என்ன பேசுகிறாரோ அதை மொழி பெயர்க்கும்போது, ரொம்ப குயிக்காகவும், சிறப்பாகவும் செய்கிறார்கள். ஆகவே இந்த மொழி பெயர்ப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி விரிவுபடுத்த முயற்சிக்கிறபோது, மேல்நாடுகளில் இருக்கிற தொழில்நுட்ப அறிவில் அங்குள்ள சிலரைக்கொண்டு இங்கே போதிப்பவர்களுக்குப் பயிற்சி அளித்து, அதற்குப் பின்னால் விரிவுபடுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நம்முடைய 'இன்டர்நேஷனல் ஸ்கூல் ஆஃப் தமிழ் ஸ்டடீஸ்' என்கிற ஆராய்ச்சி நிறுவனம் மொழி பெயர்க்கிற புத்தகத்தை வெளியிட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். மேல் நாடுகளில் மட்டுமே அல்லாமல், நம்முடைய பாராளுமன்றத்திலே அப்படிப்பட்ட மொழி பெயர்ப்பு நடைபெறுகிறது. நாம் தமிழிலே பேசினால், உடனே ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து உறுப்பினர்கள் கேட்கிறார்கள். ஆகவே அப்படிப் பயிற்சி பெற்றவர்கள், திறமையானவர்கள் ஆங்காங்கே இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த வசதி பொதுவான முறையிலே தேவையான அளவுக்குக் கிடைக்காத காரணத்தால், இந்தப் பிரச்சினையைப்பற்றி இங்கு பேசிக்கொண்டிருக்கிறோம். ஆகவே வெளிநாடுகளிலே மொழி பெயர்ப்புத் துறையிலே அவர்கள் பெற்றிருக்கிற அனுபவம், தொழில்நுட்ப அறிவை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது வரவேற்க வேண்டிய ஒன்றுதான்.

## அரசினர் (ஆடவர்) மேல்நிலைப்பள்ளி, புதுக்கோட்டை.

* 107 வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை அரசினர் (ஆடவர்) மேல்நிலைப் பள்ளியில், 600 மாணவர்கட்கு மட்டுமே உரிய சாய்வு மேஜை (Desk) போன்ற தளவாடச் சாமான்கள் உள்ளபோதிலும், சற்றொப்ப 1925 மாணவர்கள் அங்கு படித்துவருகிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அப்பள்ளிக்குத் தேவையான தளவாடச் சாமான்கள் வழங்க, அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) புதுக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பெஞ்சுகள் வாங்குவதற்கு ரூ. 25,000 அரசு வழங்கியுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்திலே இருக்கக்கூடிய பெரும்பாலான பள்ளிகளில் போதிய தளவாடங்கள் கிடையாது. அதுவும், உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளி போன்ற பள்ளிகளில் தரையிலே அதுவும் மண் தரையிலே குழந்தைகள் உட்கார்ந்து படிக்கும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி கேள்வி கேட்கும் பகுதிகளிலே, அதற்கு விடை அளிக்கப்படுவதற்கு முன்னாலே அதற்குக் கொஞ்சம் பணம் ஒதுக்கி அதற்குப் பின் பதில் சொல்லிவிடுகிறார்கள். ஆனால் பொதுவாக, இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசு ஒரு புதிய திட்டம் ஏதேனும் வைத்திருக்கிறதா ? அது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? தமிழகம் எங்கும் இப்படிப் பட்ட நிலை இருக்கிறதே. அதுபற்றி நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, கேள்வி கேட்டதனாலேயே அரசு அதைச் செய்யவில்லை. அங்கு குறைபாடுகள் இருக்கின்றன. அரசாணை 2011, நாள் 25—9—1930-ல் அறிவிக்கப்பட்ட தளவாட மானியம்பெறும் சட்டத்தின்படி புதுக்கோட்டை அருள்மிகு பிரகதாம்பாள் மேல்நிலைப் பள்ளிக்கு 1980-81-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசு மானியம் 5 ஆயிரம் ரூபாயும், பொதுமக்கள் நன்கொடை 7,500 ரூபாயும் சேர்த்து 12,500 ரூபாய் மதிப்பில் தளவாடச் சாமான்கள் 1980-81-ல், அதே ஊரிலுள்ள இன்னொரு பள்ளிக்கு, வாங்கித் தரப்பட்டிருக்கின்றன. இந்தப் பள்ளிக்கும் தளவாடங்கள் வாங்குவதற்குப் பரிசீலித்து, நிதி நிலைமையையும், மாற்ற தளவாடங்கள் வாங்க தடை உத்தரவு இருப்பதையும் கருத்தில்கொண்டு, பள்ளியின் நிலைமைகளைக் கருத்தில்கொண்டு, தனி வழக்காகக் கருதி, இப்போது 25 ஆயிரம் ரூபாய் உதவியிருக்கிறோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட பள்ளியைப் பொறுத்தவரையில், அமைச்சர் அவர்கள் இப்போது பதில் சொன்னார்கள். பொதுவாக ஏற்கெனவே இப்படியெல்லாம்கூட பல்வேறு பகுதிகளிலே பள்ளி சீரமைப்பு மாநாடு என்று கடைப்பிடித்திருக்கிறோம். பள்ளிக்குரிய பொருட்களையெல்லாம் பொதுமக்களின் நன்கொடை மூலம் வாங்கி வைக்கிற நடவடிக்கைகளை முன்பு எடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்போது அது முன்பு இருந்ததைப்போல அதிகமாக நடைபெறவில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே தனியாக பொதுமக்களிடமிருந்து கடன் எழுப்பியோ, அல்லது வேறு வகையிலோ எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் இந்தத் தளவாட

சாமான்கள்—பெஞ்ச், நாற்காலி போன்றவைகள்—வாங்கி மாணவர்கள் கல்வி கற்றுக் கொள்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவதற்குரிய ஏற்பாட்டைச் செய்வதற்கு அரசு ஏதேனும் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-15)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, பள்ளிச் சீரமைப்பு மாநாடு அவ்வப்போது சில இடங்களில் இப்போதும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இந்த ஆண்டும் நடத்துவதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்ளலாம். பொதுவாகத் தொடக்கப் பள்ளிகளுக்கு அம்மாதிரியான சீரமைப்பு மாநாடுகள் மூலம் நிறைய பொருள்கள் கிடைத்திருக்கின்றன. எனவே உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தனியாகப் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் நீண்ட காலமாக அலுவலகங்களுக்குத் தேவைப்படும் பர்னிச்சர் வழங்கப்படாமல் இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் தான் அவ்வலுவலகங்களுக்கெல்லாம் தேவையான பர்னிச்சர் வழங்கப்பட்டது. அதையே ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு தமிழகத்தில் பல்வேறு பள்ளிகளில் இத்தகைய குறைபாடுகள் இருப்பதால், அனைத்துப் பள்ளிகளுக்கும் பர்னிச்சர் வழங்கிட அரசு ஆணையிட முன்வருமா ? மேலும் இத்தகைய பர்னிச்சர் தேவை என்று வேறு பள்ளிகள் எவையிடமிருந்தாவது கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தளவாடங்கள் தேவை என்று பல்வேறு பள்ளிகளிலிருந்து கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. மேலும் அவ்வப்போது புதிதாகப் பள்ளிகளை நாம் திறந்து கொண்டிருப்பதால், பள்ளிகளில் தளவாடத் தேவை என்பது தமிழ் நாட்டில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதற்கு ஒரு தீவிர முயற்சியை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. மயில்சாமி :** புதிதாகத் தொடங்கப்படும் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் எந்தவிதமான தளவாடச் சாமான்களும் இருப்பதில்லை. மாணவர்களுக்கானாலும் சரி, ஆசிரியர்களுக்கானாலும் சரி, இதுதான் நிலைமை. அதன் காரணமாக மாணவர்கள் தரையில் உட்கார்ந்து படிக்கிற நிலைமை இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் தனியார் பள்ளிகளில் அத்தகைய நிலைமை இல்லாத காரணத்தால், அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு ஒரு தாழ்வு



மனப்பான்மை (இன்பீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ்) கூட வருகிறது. எனவே பள்ளிகள் தொடங்கும்போதே, ஒட்டுமொத்தமாக அனைத்து தளவாடச் சாமான்களையும் வாங்கும் சிறப்புத் திட்டம் குறித்து அரசு பரிசீலனை செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இவ்வினா புதுக்கோட்டை மேல்நிலைப் பள்ளியைப் பொறுத்தது. துணைக் கேள்வி கேட்கும்போது, பொருளின் முக்கியத்துவத்தைப் பொறுத்தும் எந்தப் பள்ளி பற்றி கேள்வி கேட்கப்படுகிறதோ அது தொடர்பாகவும் தான் கேட்கப்பட வேண்டும். பள்ளி என்பதாலேயே நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளையும் எடுத்துக்கொள்ள ஆரம்பித்தால், அமைச்சர் அவர்கள் பதில் சொன்னாலும், அவையை நடத்துகிற தலைவருக்குக் கஷ்டமாகப் போய்விடும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*Monetary Loss due to promotion.*

* 108 *Q.*—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that a few Secondary Grade Assistants who get promotion as B.T., Headmasters and Higher Grade Teachers who get promotion as Secondary Grade Assistants are subject to monetary loss ; and

(*b*) if so, the action taken to avert the loss ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர்கள் பட்டதாரிகளாக ஆன பிறகு நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அப்படி அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கும்போது, எப்.ஆர். 22-பி படி ஒரு ஊதிய உயர்வு வழங்குவதற்கு விதிமுறை இருக்கிறது. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, அவ்வாறு யாருக்கும் வழங்காமல் இல்லை என்று சொன்னதை நான் ஏற்றுக் கொண்டாலும்கூட, ஒரு குறிப்பிட்ட கல்வி மாவட்டத்தில்—அதாவது

விருதுநகர் கல்வி மாவட்டத்தில்—பணி உயர்த்தப்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கு எப்.ஆர். 22-பி படி கொடுக்கப்படாத காரணத்தால், அவர்கள் இழப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே அதைக் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, தகுந்த ஆணை பிறப்பித்து, அவர்களுக்கு ஓர் ஊதிய உயர்வு வழங்குவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

திரு. பா. ரா. தாமஸ்: தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றிய இளநிலை ஆசிரியர்கள் அரசுத் திட்டத்தின் காரணமாக இடைநிலை ஆசிரியர்களாக உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதாவது 'அப்கிரடேஷன்' செய்யப்பட்டிருக்கிறார்கள். இது பதவி உயர்வுக்குச் சமமானது. அந்த அடிப்படையில் அவர்களுக்கு எப்.ஆர். 22-பி முறையை அனுசரித்து ஒரு ஊதிய உயர்வு வழங்குவதற்கு அரசு ஆணையிட முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இளநிலை ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டார்கள். அந்த அடிப்படையில்தான் எப்.ஆர். 22-பி படி ஒரு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை எண் 367, கல்வி, நாள் 30—3—1984-ல் உத்தரவிட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இடைநிலை ஆசிரியர்கள் பட்டதாரிகளாக மாறி நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இடைநிலை ஆசிரியர்கள் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினால், அவர்களுக்கு பணிப்படியாக ரூ. 15 வழங்கப்படுகிறது. ஆனால் பட்டதாரி ஆசிரியர்களுக்கு இந்தப் பணிப்படி தரப்படுவதில்லை. இரண்டு பேரும் ஒரேவிதமான வேலையைத்தான் அங்கே பார்க்கிறார்கள். பட்டதாரி தலைமை ஆசிரியர்களுக்கு பட்டதாரிகளுக்கு உரிய சம்பளம் கொடுக்கப்பட்டாலும்கூட, பணிப்படி கொடுப்பதில் ஏற்றத் தாழ்வு இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் அவர்களுக்கும் பணிப் படியை வழங்க அரசு ஆணையிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பட்டதாரி ஆசிரியர்கள் பணியாற்றக்கூடிய பதவி என்று வைத்து அவர்களுக்கு நாம் பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தைத் தருகிறோம். அப்பதவியில் இடைநிலை ஆசிரியர்கள் பணியாற்றும்போது, தனியாகப் படி தருகிறோம். அதையே





மறுபடியும் பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தர வேண்டும் என்பதைப்போல மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி இருக்கிறது. அந்த யோசனை இப்போது அரசிடம் இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: ஹையர் கிரேட் டீச்சர் செகண்டரி கிரேட் டீச்சராகப் பதவி மேம்பாடு செய்யப்படும்போது எஃப்.ஆர். 22 (பி)-யின்படி ஊதியம் கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மைதான். ஆனால் ஹையர் கிரேட் ஆசிரியர்களை, செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக எந்தத் தேதியில் பதவி மேம்பாட்டுக்குக் கருதுவது என்பதில் பிரச்சினை இருக்கிறது. அவர் எந்தத் தேதியில் தேர்வை எழுதுகிறார்களோ அந்தத் தேதியிலிருந்து பதவி மேம்பாட்டுக்குரியவர் என்று கருதப்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் வேறு ஒரு தேதியை நிர்ணயித்து எஃப்.ஆர். 22 (பி)-யின் படி ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இதன் மீது நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்களாகவே தேர்வு எழுதி, வெற்றி பெற்று தங்களுடைய தகுதியை உயர்த்திக்கொள்ளும்போது, அப்படித் தர வேண்டும் என்பது சரிதான். ஆனால் அவர்களுடைய தகுதியை உயர்த்த அரசு முயற்சி எடுத்து, ஐந்தாயிரம், பத்தாயிரம் பேரைப் படிக்க வைக்கச் செய்யும்போது, அவர்கள் தேர்வு எழுதிய தேதி என்று இல்லாமல் குறிப்பிட்ட ஒரு தேதியில் இருக்க வேண்டும் என்று சொல்லுவது அரசின் நிதிநிலைமை கட்டுப்பாட்டின் காரணமாகத்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## M. Phil. Course.

*109 Q.—THIRU K. MEENAKSHISUNDARAM (on behalf of Thiru P. MUNUSWAMY): Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that the Assistant Professors who were upgraded from the post of Tutors in Government Colleges, are being given preference over the regular Assistant Professors, to study M. Phil. Course, on deputation, with pay and allowances; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) பயிற்றுநர்/விளக்குநர் பதவியிலிருந்து மேம்படுத்தப்பட்ட உதவிப் பேராசிரியர்கள் 8 ஆண்டுகளுக்குள் எம்.ஃபில். பெற வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. இல்லாவிடில் அவர்களுடைய ஊதிய உயர்வு increment) நிறுத்தப்படும். எனவே பல்கலைக்கழக மானியக் குழுவின் திட்டங்களின் கீழ் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கும்போது பதவி மேம்படுத்தப்பட்ட உதவிப் பேராசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கலாம் என கல்லூரிக் கல்வித் துறை சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்த எட்டாண்டுக் காலத்திற்குள்ளே அவர்கள் எம்.ஃபில். பட்டம் பெற வேண்டும் என்று அரசு நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி பட்டம் பெற வேண்டியவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள், இதுவரையில் பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அந்த விவரம் இப்போது இல்லை.

**திரு. அ. மயில்சாமி:** கல்லூரிகளில் பணியாற்றுகிற பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் ஆகியவர்கள் எல்லாம் எம்.ஃபில். பட்டம், டாக்டரேட் பட்டம் பெற வேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. இந்தப் பட்டங்களைப் பெறுவதற்காக அவர்களை பணி மூப்பின் அடிப்படையில் அனுப்பினால், இந்த வேறுபாடு இருக்காது. ஆகவே இப்பட்டங்களைப் பெறுவதற்காக பணி மூப்பின் அடிப்படையில் அவர்களை அனுப்புவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பயிற்றுநர்கள், விளக்குநர்கள் பதவிகளிலிருந்து உதவிப் பேராசிரியர்களாக மேம்படுத்தப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று சொல்லுகிறோம். அதிலே கருத்து வேறுபாடு இருக்காது என்று கருதுகிறேன். மற்றவர்களை அனுப்பும்போது பணி மூப்பின் அடிப்படையிலே அனுப்பலாம்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** எட்டாண்டுகள் முடித்த பயிற்றுநர்கள், விளக்குநர்கள் ஆகியவர்களுக்கு எம்.ஃபில். படிப்பில் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று இயக்குநர் அவர்கள் கொடுத்த அறிவுரையை 'ஃபாலோ' பண்ணாமல் பல்வேறு தனியார் கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் இஷ்டப்படி எம்.ஃபில். படிக்க அனுப்புகிறார்கள். இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசினுடைய உத்தரவிற்கேற்ப அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** எம்.ஃபில். படிக்க சென்னையில் உள்ள உதவிப் பேராசிரியர்களுக்கு மட்டும் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. மாவட்டங்களில் உள்ள கல்லூரிப் பேராசிரியர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப் படவில்லை. சென்னையிலிருந்து அதிக தூரம் இருப்பதால், அவர்கள் படிக்க முடியாது என்று அதற்குக் காரணம் கூறுகிறார்கள். அவர்கள் லீவ் போட்டு விட்டு படிக்கத் தயாராக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சென்னையில் இருப்பவர்களுக்கு மட்டும் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று சொல்லவில்லை. இதிலே ஏதாவது பிரச்சினை இருக்குமானால், தக்க பரிகாரத்தை அரசு காணும்.

**திரு. பா. ரா. தாமஸ்:** எம்.ஃபில். படிப்பை அஞ்சல்வழி மூலமாகப் பயில வாய்ப்பு உருவாக்கினால், ஆசிரியர்கள் தங்கள் சொந்த முயற்சியின் மூலமாகப் படித்துக்கொள்வார்கள். ஆகவே எல்லாப் பல்கலைக் கழகங்களும் அஞ்சல் வழியின் மூலம் எம்.ஃபில். பயிற்றுவிக்கும் திட்டத்தைப் புகுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பொதுவாக ஆசிரியர்கள் தாங்கள் இருக்கின்ற இடங்களிலேயிருந்து இந்தப் பயிற்சியைப் பெறுவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். முதலாவதாக அன்னை தெரசா பெண்கள் பல்கலைக் கழகத்திலே தொடங்கியிருக்கிறார்கள். விடுமுறை நாட்களில் அங்கே பயிற்சி பெறவும், மீதி நாட்களில் இருக்கின்ற இடங்களில் படிக்கும் திட்டத்தையும் இப்போது செயலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் போல மற்ற பல்கலைக் கழகங்களும் எம்.ஃபில்., பி.எச்.டி. போன்ற பட்டங்களைப் பெறுவதில் உள்ள தடைகளைக் கூடுமான வரையில் நீக்கி, பல்வேறு இடங்களிலிருந்து தகுந்த வழிகாட்டி மூலமாக பட்டங்களைப் பெறுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசின் சார்பில் பல்கலைக் கழகங்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-25)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மானிய குழுத் திட்டத்தின்கீழ் எம்.ஃபில்., பி.எச்.டி. போன்ற படிப்புகள் படிக்க சில பேராசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். அப்படித் தேர்ந்

தேடுக்கும்போது, அவர்கள் படிப்புக்காச் சப்பிடி தொகையை, செலவை பல்கலைக் கழகம் ஏற்றுக்கொள்ளும் என்ற நடைமுறை இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அதைச் செலவழிப்பதிலே நம் அரசுக்கும் பல்கலைக் கழகத்திற்கும் இடையில் சில கருத்துவேறுபாடுகள் இருப்பதாகவும் தெரிகிறது. பணத்தைக் கொடுத்து விடுங்கள், நாங்கள் எப்படியாவது செய்துகொள்கிறோம் என்று நாம் கேட்பதும், பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்தவர்கள், "பணி இடங்களுக்கு ஆட்களைப் போட்டுவிடுங்கள், அதற்குரிய பணத்தை நாங்கள் கொடுக்கின்றோம்" என்று அவர்கள் சொல்வதாகவும் தெரிகிறது. அது உண்மையா? ஆகவே அந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, பல்கலைக்கழக மான்ய குழுத் திட்டத்தின்படி, அவர்களுக்கு உதவி கிடைக்கும் என்று கருதுகிறேன். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், அரசே முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆசிரியர்கள் இந்த எம்.ஃபில். தகுதி பெறுவதற்கான வாய்ப்புக்களை கடந்த 4, 5 ஆண்டு காலமாக அரசு உருவாக்கிக்கொண்டிருக்கிறது. பி.யூ.சி. எடுக்கப்பட்டபோது, ஆசிரியர்கள் 'சர்ப்ளஸ்' ஆக இருக்கின்றார்கள் என்ற நிலைமை உருவாகியது. அந்த நேரத்தில் அவர்களில் பல பேர்களை எம்.ஃபில். படிக்க அனுப்பினோம். அந்தச் செலவை மாநில அரசு ஏற்றுக்கொண்டது. அதை அரசு எடுத்துக்கொண்டிருப்பதால், பல்கலைக்கழகமும் அதற்கிணங்க அவர்கள் உதவி தாராமல் இருக்கலாம். இருந்தாலும் மாநில அரசைப் பொறுத்தமட்டில், ஆசிரியர்கள் தகுதியை உயர்த்திக் கொள்வது என்ற திட்டத்திற்கு நாம் பரிபூரணமான ஆதரவைத் தருவோம்; அந்த முயற்சிகளை மேற்கொள்வோம்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, தமிழக அரசு ஒரு ஆண்டுக்குத்தான் எம்.ஃபில். படிப்பதற்கு என்று ஆசிரியர்களை அனுமதித்தது. அதற்குப் பிறகு அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. திரும்பவும் அந்தத் திட்டத்தைக் கொண்டுவர அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலிக்கும். இன்னொரு செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி எம்.ஃபில்., பி.எச்டி. படித்து பட்டம் பெற்றவர்கள் அதிகமாக இருக்கின்ற கல்லூரிகளில் படிப்பின் தரம் நன்றாக இருக்கிறது என்பதையும் நாம் பார்க்க முடிகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



**செல்வி ஆ. லீலாவதி:** தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் எம்.பில். படிக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்கின்றார்கள். ஆனால் அந்தத் தனியார் நிறுவனங்கள் அவர்களை அனுமதிப்பதில்லை. ஆகவே அரசு கண்டிப்பாக எம்.பில். படிக்க விரும்புகின்றவர்களை அனுமதிக்க வேண்டும் என்று அவர்களுக்கு உத்தரவிட்டு அந்த நிறுவனங்களில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு உதவுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** குறிப்பிட்ட காலத்திற்குள் படித்து முடிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதுவே கட்டாயப் படுத்துவதுபோலத்தான். அதை தனியார் துறை நிறுவனங்கள் உணர்ந்து செயல்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### எண்கள் குறிக்கப்படும் தகடுகள்.

* **110 வினா.—திரு. அ. மயில்சாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஸ்கூட்டர், கார் போன்ற தனியார் வாகனங்களில் எண்கள் குறிக்கப்படும் தகடுகள் குறிப்பிட்ட அளவிலும், நிறத்திலும்தான் இருக்க வேண்டும் என்று நிபந்தனைகள் இருக்கும்போது, அவரவர் விருப்பம்போல் எண்களை எழுதுவது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இதைத் தவிர்க்க எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) தணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட நேர்வுகளில் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படுகிறது.

(இ) இதுபோன்ற தவறுகள் நிகழ்வதைத் தவிர்க்க மோட்டார் வாகனச் சட்டம் 1939 மற்றும் மோட்டார் வாகன விதிகள் 1940-ல் உள்ள விதிகள் வகை செய்கிறது.

**திரு. அ. மயில்சாமி:** தலைவர் அவர்களே, கார், ஸ்கூட்டர் போன்ற வாகனங்களுக்குப் போடும் தகடுகளில் எண்களும், எழுத்துக்களும் போடுகின்றார்கள். அப்படி எழுதும்போது, அவர்கள் அவரவர்கள் பெயர்களை எழுதுகின்ற நிலைமைகள்கூட இருக்கின்றன. அதையெல்லாம் தடுக்க அரசு என்ன

நடவடிக்கை எடுத்திருக்கின்றது? அதே நேரத்தில் கார்களில் எழுதுகின்ற எண்களை முழுக்க முழுக்க தமிழிலேயே எழுத அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கின்றதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அது சுலபத்திலே வழக்கத்திலே வந்துவிட்ட காரணத்தினால், இந்த நடைமுறையை வைத்திருக்கின்றார்கள். மற்றபடி பெயர்களை எழுதுவதைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நாம் வேறு எந்தக் காரணத்திற்காக வாகனங்களை நிறுத்திச் சோதனையிட்டாலும், அப்போது இதையும் சேர்த்துத்தான் சோதனை செய்துகொண்டிருக்கின்றார்கள். அரசினுடைய அனுமதிப்படி எது எதில் என்னென்ன எழுத வேண்டும் என்று இருக்கின்றதோ அப்படித்தான் எழுத வேண்டும். உதாரணத்திற்குச் சொல்வதென்றால், அரசு வாகனம் என்று சொன்னால், 'அ' என்று போடவேண்டும் அல்லது 'ஜி' என்று போட வேண்டும் என்று நாம் வைத்திருக்கிறோம். அதைத் தவிர அந்தத் தகட்டிலே வேறு எதுவும் இருக்கக்கூடாது என்றுதான் விதி இருக்கிறது. அதை மீறியிருந்தால், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10-30)

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவரவர்களே, இந்த மாதிரி வாகனங்களில். எண்கள் சிறிய அளவிலே, கண்டுபிடிக்க முடியாத அளவிலே இருக்கின்றன. எனவே இந்த அளவில் எழுத வேண்டுமென்று சொல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா? அடுத்து, எண்களைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு வெளிச்சம் பிரகாசிப்பதால், பார்க்க முடியாத நிலை இருக்கிறது. எனவே விளக்கின் மேற் பகுதியில் கறுப்பு அடிக்க வாகனங்களின் உரிமையாளர்களுக்கு உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இப்படிப்பட்ட சிரமங்கள் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இரண்டு பக்கமும் எழுதப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியபடி, விளக்குகள் பிரகாசமாகக் கண்ணைக் கூசாத அளவு இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அதன்படி செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்யாதவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம். எழுத்துக்களைப் பொறுத்தவரையில், 6 சென்டிமீட்டர் உயரம், 1½ சென்டிமீட்டர் கனம் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அது 9 சென்டிமீட்டருக்கு மேலே போகக்கூடாது. 2 சென்டிமீட்டர் கனத்திற்கு மேலே போகக்கூடாது என்று இருக்கிறது. ஸ்கூட்டர்கள், கார்கள்,



சிறிய வாகனங்களில் மேலே சொன்ன அளவிலே மூன்றிலே இரண்டு பங்கு அளவுக்கு எழுத வேண்டுமென்ற நிலை இருக்கிறது. இதை மீறி இருந்தால், நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, எழுத்துக்களின் அளவையும், பரிமாணத்தையும் நம்முடைய அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு வாகனத்திற்கும் ஏற்ப தகடுகளின் அளவுகள், எழுதப்படவேண்டிய நீளம் இவைகளைக்கூட வகுத்துத் தந்தால், நலமாக இருக்கும். நம்பர் ப்ளேட்டில் விளக்குகள் பல வண்டிகளில் இல்லாமல் இருக்கிறது. அதைக் கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நம்பர் போர்ட் விளக்கு கட்டாயம் இருக்க வேண்டும். அதைக் கவனிக்க ஏற்கெனவே அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தகடுகளைப் பொறுத்தவரையில், தனியார் பயன்படுத்தக்கூடிய பிரைவேட் கேரியர்ஸ்-லே கறுப்பு போர்டிலே வெள்ளையிலே எழுதப்பட வேண்டும். பொதுவாகப் பயன்படுத்தக்கூடிய பொது வாகனங்கள் அதாவது பஸ், லாரி, ஆட்டோ போன்ற வாகனங்களில் வெள்ளை போர்டிலே கருப்பிலே எழுதப்பட வேண்டும். தகடுகளின் அகல, நீளம் நிர்ணயிக்கப்படவில்லை. காரணம், முன்னாலே ஒரு அளவு, பின்னாலே ஒரு அளவு இருக்கிறது. 'டெம்பரரி ரெஜிஸ்டிரேஷன்'. என்று சொல்லப்படும் வண்டிகளைப் பொறுத்தவரையில். மஞ்சள் பேக்கிரவுன்டிலே சிவப்பிலே எழுத வேண்டும். இதுதான் இருக்கும் முறை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர்களின் வாகனங்களுக்கும், சில குறிப்பிட்ட அதிகாரிகளுடைய வாகனங்களுக்கும் நம்முடைய அரசின் சின்னத்தைப் பொறிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்களுக்கு அந்த உரிமை இல்லை. சட்டமன்ற மேலவைக்கு தனி இலச்சினை இருக்கிறது. சட்டமன்றப் பேரவைக்கும் தனி இலச்சினை இருக்கிறது. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கும் சொந்தத்தில் வண்டி இருந்தால், அந்த வண்டியில் இந்த இலச்சினையை வைக்க அனுமதி அளிப்பதுபற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டியிருக்கும். தலைவரவர்களே உத்தரவிட்டால், அதை அமுலாக்க எங்களுக்குத் தடை இல்லை.

செல்வி ஆ. லீலாவதி : தலைவரவர்களே, ஸ்கூட்டர், கார் போன்றவைகளுக்கு நம்பர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சைக்கிள்களுக்கு இம்மாதிரி நம்பர்கள் இல்லை. இன்றைக்கு சைக்கிள்கள் அதிகமாகத் திருட்டு போகிறது. அவை காவல் துறையினரால் பிடிக்கப்பட்டு, அதிகமான சைக்கிள்கள் காவல் நிலையங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. எந்த சைக்கிள் என்று சைக்கிளைத் திருட்டு கொடுத்தவர்களால் கூற முடியாததால், அநேக சைக்கிள்கள் மக்கி, பாழாகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே சைக்கிள்களுக்கும் நம்பர் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இதை சைக்கிள் வைத்திருப்பவர்களே விரும்ப மாட்டார்கள். எனவே அப்படிப்பட்ட நிலைமையை எடுப்பது சரியாக இருக்குமா என்பது கேள்விக்குரியதாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விதிமுறைகளைப் பார்த்து, மரபுகளைத் தெரிந்து, தலைவருக்கு எங்கே அதிகாரம் இருக்கிறது என்று பார்த்து, பிறகு சொல்கிறேன்.

## புதிய பேருந்துத்தடம்

* 111 வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வாலாஜாப்பேட்டையிலிருந்து சென்னைக்கு, புதிய பேருந்துத் தடம் ஒன்றினை அனுமதிக்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எல். ஜெயச்சந்திரன் : தலைவரவர்களே, தற்போது வாலாஜாப் பேட்டைக்கும் சென்னைக்கும் இடையே எத்தனை வழித்தடங்கள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏறத்தாழ 86 முறைகள் அந்த வழியாக, அந்த இடத்தைத் தொட்டு வருகின்றன.



(முற்பகல் 10-35)

திரு. எல். ஜெயச்சந்திரன் : வட ஆற்காடு மாவட்டத்தில் குறிப்பிட்ட வாலாஜாபேட்டை மட்டுமல்லாமல், அருகில் 2 மைல்களுக்குள் ராணிப் பேட்டை இருக்கிறது. அங்கே சிப்காட் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் இருக்கிறது. அதோடு ஆற்காடும் அருகில்தான் இருக்கிறது. இந்த மூன்று இடங்களிலிருந்தும் பேருந்துகள் எல்லாம் வேலூர் வழியாகத்தான் செல்கின்றன. பேருந்துகள் எல்லாம் இங்கே நிற்காத காரணத்தால், பொது மக்களுக்கு மற்ற இடங்களுக்குச் செல்வதற்கு இடம் கிடைப்பதில்லை. வாலாஜாபேட்டையிலிருந்து பேருந்துகள் புறப்படும் வகையிலான கருத்துரு தற்போது இல்லையென்றாலும் கூட, ஆற்காடு அல்லது ராணிப்பேட்டையிலிருந்தாவது பேருந்துகளை விட வேண்டுமென்ற கருத்துருவாவது அரசின் ஆய்வில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கெனவே 86 முறைகள் பேருந்துகள் வருவதால், தனி கவனம் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் உறுப்பினர் சொல்வதன் அடிப்படையில் அங்கே பேருந்தில் ஏறக்கூடியவர்களுக்கு இடம் கிடைக்காத நிலையில், இன்னொரு பேருந்து விட்டால், அதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதோடு லாபகரமாக இயங்கும் என்கிற நிலை இருந்தால், அது பற்றி ஆய்வு செய்து இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

## தேவரியம்பாக்கத்தில் உள்ள பாலம்

* 112 வினா.—செல்வி ஆ. லீலாவதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கல்பட்டு மாவட்டம், வாலாஜாபாத் ஒன்றியம், தேவரியம்பாக்கத்தில் உள்ள பாலம் பழுதடைந்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்

(இ) இப்பாலத்தை பழுது பார்க்க வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 58,000-க்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, ஒப்பந்தக்காரரிடம், வேலை ஒப்படைக்கப்பட்டு, பழுது பார்க்கும் பணி நடந்து வருகிறது.

செல்வி ஆ. லீலாவதி : பழுது பார்க்கும் வேலை நடந்து வருகிறது என்று சொன்னதற்கு நன்றி. அது எப்போது தொடங்கப்பட்டு, எப்போது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : விரைவாக முடிக்கப்படும் என்று குறிப்பு தந்திருக்கிறார்கள். தேதி விவரம் இல்லை.

### பண்ணுருட்டியில் பேருந்து நிலையம்

*113 வினா திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பண்ணுருட்டியில், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தனிப் பேருந்து நிலையம் ஒன்றை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. அ. ப. சிவராமன் : பண்ணுருட்டி என்பது தாலுகா தலைநகரம். அங்கே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தினுடைய 'பாடிபில்டிங் செக்ஷன்' இருக்கிறது. மேலும் அங்கே மத்திய மாநில அரசுகளுடைய சார்பில் பேருந்து நிலையம் ஒன்று பெரிய அளவில் விஸ்தரிக்கப்பட்டு, கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே நிறைய இடம் இருக்கிறது. அங்கே இறங்குவதற்கு ஆட்கள் இல்லையென்றால், பல பேருந்துகள், நிற்காமலே போய்விடுகின்றன. சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் கூட குறிப்பிட்ட பேருந்து வந்திருக்கிறதா இல்லையா என்பது போன்ற விவரங்களைத் தெரிய முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பண்ணுருட்டியில் அவசியம் திருவள்ளுவர் போக்குவரத்துப் பணிமனை ஒன்று அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கெனவே அங்கே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பேருந்துகளுக்கு 'பாடி' கட்டுகின்ற செக்ஷன் இருக்கிறது என்று உறுப்பினர் குறிப்பிட்டார். மேலும் பேருந்து நிலையத்தைப் பெரிதாக கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு மேலும் தனியாகப் பேருந்து நிலையம்



வேண்டுமா என்பது யோசிக்க வேண்டிய ஒன்று. அந்த இடத்திலிருந்து வேறு இடங்களுக்குப் பேருந்துகள் புறப்படும் அளவிலான பஸ் டெர்மினஸ் அல்ல அது. அந்த இடத்தைத் தொட்டு பேருந்துகள் செல்லும். இந்நிலையில் அதற்காகத் தனி பணிமனை அமைப்பது என்பது சிரமமான ஒன்று. பயனும் ஏற்படாது. ஆனால் இப்போது கட்டுகின்ற அந்தப் பேருந்து நிலையத்தில் இதற்காக என்று தனியாக ஒரு கவுண்டர் ஓப்பன் பண்ணி பேருந்துகள் எல்லாம் சரியாக வருகின்றனவா என்று கண்காணிக்கும் நடவடிக்கையை எதிர்காலத்தில் எடுக்கலாம்.

திரு. அ. ப. சிவராமன் : அதைத்தான் நான் கேட்க விரும்பினேன். அமைச்சர் சொன்னதற்கு நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கேற்ப பேருந்துகள் எல்லாம் அங்கே வந்து புறப்படுகிற வகையில் ஒரு கவுண்டர் அமைத்து, கண்காணித்தாலே அங்குள்ள மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைவார்கள். இந்தப் பணி விரைவுபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : உடனடியாக இல்லாவிட்டாலும் கூட, 'எதிர்காலத்தில்' என்று நான் சொல்லியதற்கு ஏற்ப எவ்வளவு வண்டிகள் ஓடுகின்றன என்று பார்த்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : தென்னார்க்காடு மாவட்டம் கடலூரில் இப்போது இருக்கின்ற திருவள்ளுவர் போக்குவரத்துப் பேருந்து நிலையத்தை மெயின் டிப்போ-ஆக ஆக்குகின்ற செயற்குறிப்பு ஆய்வில் இருப்பதாக அறிகிறேன். எவ்வளவு விரைவில் அது நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தனியாகத் தான் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

### தமிழக மீனவர்களுக்கு கொடுமைகள்

*114 வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன் மற்றும் திரு. க. மீனாட்சி சுந்தரம் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா சார்பில்) : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழக மீனவர்கள் கடல் எல்லையைக் கடந்தார்கள் என்று பொய்யான குற்றஞ்சாட்டி, ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், இது குறித்து தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** (அ) 1974-76-ல் இந்தியா—ஸ்ரீலங்கா ஒப்பந்தத்தின்படி, இறால் பெருமளவில் கிடைக்கும் "கச்சத்தீவு" ஸ்ரீலங்கா வசம் ஒப்படைக்கப்பட்டது. இதனால், நம் மீனவர்களின் மீன் பிடிக்கும் கடற்பகுதி எல்லை குறுகிவிட்டது. இந்தியா—ஸ்ரீலங்கா கடல் எல்லையைத் தெரிந்தோ தெரியாமலோ கடக்க நேரிடும்போது ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்படுகின்றனர். மேலும் இரு நாட்டின் கடல் எல்லைக் கோட்டிற்கு அருகாமையில் மீன் பிடிக்கும்போது, ஸ்ரீலங்கா கடற்படையினரால் அவ்வப்போது நம் மீனவர்கள் தாக்கப்பட்டு அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்கள் இதர தளவாடங்கள் கைப்பற்றப்பட்டன என்ற தகவல்கள் அரசுக்குக் கிடைத்துள்ளன.

(இ) நமது மீனவர்கள், ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கப்படும் போது அல்லது கைது செய்யப்படும் போது மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திற்கும் தெரிவிக்கப் பட்டு அவர்களையும் படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப் படுகிறது. மேலும் நமது மீனவர்களுக்கு பாதுகாப்பளிக்க இந்தியக் கப்பற் படை, கடலோர ரோந்துப்படைகளின் ரோந்து பணி தீவிரப்படுத்தப் பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு, நிதி உதவி நமது முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்தும், பாரதப் பிரதமர் அவர்களின் தேசிய நிவாரண நிதியிலிருந்தும் அவ்வப்போது அளிக்கப்படுகிறது.

(முற்பகல் 10-40)

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தமிழக அரசு இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதற்காக நன்றி. இந்த நடவடிக்கைக்கு ஸ்ரீலங்கா அரசு செவி சாய்த்ததா? நம்முடைய நடவடிக்கைக்கு அவர்களுடைய பதில் என்ன? ஸ்ரீலங்கா மீனவர்கள் இங்கே அத்துமீறி வந்தபோது, நாம் அவர் களைப் பிடித்தாலும், நமது மரபுப்படி அவர்களுக்கு எந்தவித சிறு தொல்லை யும் கொடுக்காமல், உடனடியாக அந்தக் கப்பல்களையும், மீனவர்களையும் அவர்களிடம் ஒப்படைத்து விட்டோம். அதேபோல், நமது மீனவர்களையும் படகுகளையும் ஸ்ரீலங்கா அரசு நம்மிடம் ஒப்படைத்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** இதுகுறித்து நாம் நமது பிரதமர் அவர்களுக்குச் சொல்லி, அவர்கள் அவர்களுக்குச் சொல்லியதன் காரணமாக நமது மீனவர்களையும், படகுகளையும் நம்மிடத்தில் ஒப்படைத் திருக்கிறார்கள். தொடர்ந்து இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எதுவும் ஏற்பட வில்லை.





**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, 1—1—1984-க்கு மேல் குறிப்பாக ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினை இந்தக் கால கட்டத்தில்தான் அதிகமாக எழுந்துள்ளது. இந்த நேரத்தில்தான் நம்முடைய மீனவர்கள் அந்தக் கடல் எல்லைக்குப் போனார்கள் என்று பிடிபட்டார்கள். அப்படி பிடிபட்ட மீனவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? பிடிபட்ட படகுகள் எத்தனை? மீன், வலைகள் போன்ற சொத்துக்கள் எவ்வளவு மதிப்புக்குப் பிடிபட்டன? அவைகளில் எவ்வளவு திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன? இந்த நிலை இன்னும் தொடருகிறதா அல்லது நின்றுவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** இதுவரையில் ஸ்ரீலங்கா கடற்படையால் கைது செய்யப்பட்டு, ஸ்ரீலங்காவில் காவலில் உள்ள மீனவர்கள் எண்ணிக்கை மொத்தம் 5. இந்த ஐந்து பேர்களில் 3 பேர் தப்பி ஓடி விட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களைத் தேடும்படி ஸ்ரீலங்காவை நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஓடியவர்களைத் தவிர மற்றவர்கள் பற்றி தனியாகக் கேள்வி போடவும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல, 'கச்சத் தீவை நாம் அவர் களுக்குக் கொடுத்ததற்குப் பிறகுதான் தமிழக மீனவர்களுக்கு இந்தத் துன்பம் ஆரம்பித்தது. கச்சத் திவு ஒப்பந்தத்தில் நமக்கு மீன் பிடிக்கும் உரிமைபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஸ்ரீலங்கா அரசுக்கு நமது மத்திய அரசு மூலம் நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோமா? முன் பெல்லாம் மீனவர்களைப் பிடித்தால், இத்தனை மீனவர்களையும் இவ்வளவு மீன்களையும் படகுகளையும் பிடித்திருக்கிறோம் என்று எழுதிக் கொடுப் பார்கள். இவ்வளவு வலையைப் பிடித்தோம், இவ்வளவு மீனைப் பிடித் தோம் என்று இப்போது எழுதிக் கொடுப்பதில்லை. மீனவர்களுக்கு இதனால் ஏற்படும் நஷ்டத்தை ஸ்ரீலங்கா ஈடு செய்கிறதா என்று தெரியவில்லை. அப்படி துன்பப்படுகிறவர்களுக்கு நாமே உதவித்தொகை கொடுக்கிறோமா? கச்சத் தீவு ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, கச்சத்தீவு திருவிழா நடத்தப்படவே இல்லை. இவைகளையெல்லாம் நாம் மத்திய அரசு மூலம் ஸ்ரீலங்கா அரசுக்கு வற்புறுத்தப்போகிறோமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** தலைவர் அவர்களே, கச்சத் தீவு ஒப்பந்தம் 1974-ல் ஏற்பட்டபோது, இரு நாட்டைச் சேர்ந்த படகுகளும் தொன்றுதொட்டு அனுபவித்து வந்த சலுகைகளை அனுபவித்துக் கொள்ள லாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1976-ஆம் ஆண்டு இரண்டாவது

[1985 ஜூலை 18

ஒப்பந்தம் ஏற்பட்டபோது, நமது மீனவர்களும் மற்றவர்களும் கச்சத் தீவுக்குப் போக அனுமதி உண்டு என்று குறிப்பிடப்பட்டது. ஸ்ரீலங்கா அரசும், நமது மீனவர்கள் அங்கே தங்களது வலைகளை உலர வைக்கலாம் என்று தான் சொல்லியிருந்தது. எனவே இந்த ஒப்பந்தப்படி நாம் நடக்க வேண்டியிருக்கிறது.

(முற்பகல் 10-45)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, நட்பாக இருந்தாலும் சரி, பகைமையாக இருந்தாலும் சரி, ஒரு நாடு பாதுகாப்பு உணர்ச்சியுடனும், எச்சரிக்கை உணர்ச்சியுடனும் இருக்க வேண்டியது அவசியமாகிறது. ஸ்ரீலங்கா கடற்கரையைச் சுற்றி அந்த நாடு ஏற்பாடு செய்துள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், கப்பல்களை விட்டிருப்பதுபோல், நம்முடைய தமிழ் நாட்டுக் கடற்கரையையொட்டி இல்லை என்று சொல்லப்படுவது உண்மைதானா? அப்படி பாதுகாப்பு ஏற்பாடு நம் கடற்கரையைச் சுற்றி இல்லையென்றால், மத்திய அரசு நம்முடைய தமிழகக் கடற்கரையைச் சுற்றி தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை நிரந்தரமாகச் செய்வது பாதுகாப்புக்கு மிகவும் உகந்ததாக இருக்குமல்லவா? அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, நம்முடைய இந்தியக் கடற்கரையையொட்டி மூன்று கப்பல்கள் தொடர்ந்து பாதுகாப்புக்காக அப்பகுதியிலே சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. ஒரு விமானப் படை விமானமும் அப்பகுதியில் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு அப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடு சிறப்பாக செய்யப்பட்டிருக்கிறது. எந்தவிதமான ஆபத்தும் அப்பகுதியில் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, கச்சத் தீவைக் குறித்து முதலில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அது அமைச்சர் மத்தியிலும், பிரதமர் மத்தியிலும் ஏற்பட்ட ஒப்பந்தம். அதிலே தமிழக மீனவர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமை தரப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஒப்பந்தம் பாம்பன் பால்க் ஜலசந்தி ஒப்பந்தம். அதற்கும் இதற்கும் தொடர்பில்லை. எனவே முதல் ஒப்பந்தப்படி, தமிழக மீனவர்களுக்கு அங்கே மீன் பிடிக்கும் உரிமை இருக்கிறது என்பதை சட்ட வல்லுநர்களைக் கொண்டு இந்த அரசு மத்திய அரசு மூலமாக வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, முன்னாலே இருந்த ஒப்பந்தம் இந்திய மீனவர்கள் மற்றும் யாத்திரிகர்கள் தொடர்ந்து கச்சத் தீவுக்குச் சென்று வரலாம், அதற்கு ஸ்ரீலங்கா அரசின்



1985 ஜூலை 18]

அனுமதி பெறத் தேவை இல்லை என்பதாகும். எனவே இரு நாடுகளின் படகுகள் சென்று வரலாம் என்று சூசகமாகச் சொல்லப்படுகிறதே தவிர, மீன் பிடிக்கலாம் என்பதாக அதிலே இல்லை. மேலும் இதுபோன்ற பிரச்சினை பின்னால் வரலாம் என்றுதான் அதிலே மீன் பிடிக்கும் உரிமை இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு நாவலர் அவர்கள் சொன்னதுபோல, மீண்டும் கச்சத் தீவு குறித்தான ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு இச்சட்ட மன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி அனுப்பலாம் என்கிற யோசனையைச் சொன்னார்கள். அப்படி ஒரு யோசனையை இனிமேல்தான் பரிசீலிக்க வேண்டும்.

### மீன் விற்பனை நிலையங்கள்

* 115 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—1—1985 ஆம் நாளன்றுள்ளபடி, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நடத்தும் மீன் விற்பனை நிலையங்கள் எத்தனை உள்ளன?

(இ) அவற்றை புதுமைப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(உ) எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) 1—1—1985 ஆம் நாளன்றுள்ளபடி, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நடத்தும் மீன் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை பின் வருமாறு :—

| வ. எண். | இடம் | பச்சை மீன் விற்பனை அங்காடிகள் | வறுவல் மீன் விற்பனை அங்காடிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | சென்னை நகரம் .. | 31 | 12 | 43 |
| 2. | திருச்சி நகரம் .. | 6 | 6 | 12 |
| 3. | மதுரை நகரம் .. | 8 | 1 | 9 |
| 4. | கோவை நகரம் .. | 7 | 6 | 13 |
| 5 | பெரியார் மாவட்டம் .. | 4 | 3 | 7 |
| 6. | பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டை | 3 | 1 | 4 |
| 7. | திருவண்ணாமலை | 1 | | 1 |
| | மொத்தம் .. | 60 | 29 | 89 |

143962 600 008.

(இ) மீன் அங்காடிகளை நவீனப்படுத்தும் கருத்துரு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை. ஆனால், தேனாம்பேட்டை, சேத்துப்பட்டு, நந்தனம், அடையாறு, அண்ணாநகர் ஆகிய இடங்களில் மீன் விற்பனை அங்காடிகளை நவீனமாக மாற்றி அமைக்கும் திட்டம் கழகத்தின் ஆய்வில் உள்ளது. மற்றும் தற்போது உள்ள அங்காடிகளை பொருளாதார நிலையில் மேம்பாடு அடையச் செய்திடுவதற்காக அன்றாட ஊதிய அடிப்படையில் ஊழியம் செய்வோருக்குப் பதிலாக தரகின் அடிப்படையில் மீன் விற்பனையாளரை மாற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு மீன் விற்பனையாளர்களை நியமிக்கும்போது மீனவ மகளிர், விதவைகள் மற்றும் இலங்கை அகதிகள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

(உ) மீன் விற்பனை அங்காடிகளை அதிகரிக்கும் திட்டம் தற்போது எதுவுமில்லை. ஆனால் மீன் கொள்முதலைத் தீவிரப்படுத்தி, தற்போதுள்ள மீன் விற்பனை அங்காடிகளை பொருளாதார நிலையில் மேம்பாடு அடையச் செய்த பிறகு மீன் விற்பனை அங்காடிகளை அதிகரிப்பது பற்றி பரிசீலிக்கப் படும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : தலைவர் அவர்களே, இந்தக் கடைகள் கமிஷன் அடிப்படையிலேதான் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன. அதற்குப் பதிலாக வேலை இல்லாத பட்டதாரிகள் நிரந்தரப் பணியாளர்களை வைத்து இதுபோன்ற அங்காடிகளை நடத்த அரசு ஆலோசிக்குமா? மேலும் தற்சமயம் இந்த அங்காடிகளில் மீன் மட்டும்தான் விற்பனை செய்யப்படுகின்றது. அது மட்டுமல்லாமல், கருவாடு, மீன் ஊறுகாய் போன்றவற்றையும் விற்பனை செய்ய வழிவகை இருக்கிறதா? அந்த வகை மீன்களைத்தான் தற்சமயம் அங்கே விற்கிறோம் என்று கருதுகிறேன். எனவே அந்த வகையிலே விற்பனையை பலவிதத்திலும் பெருக்குகிற முயற்சியிலே அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்** : தலைவர் அவர்களே, தற்போது பங்க் என்கிற அடிப்படையில்தான் நாம் சிலரைத் தேர்ந்தெடுத்து, அங்காடிகளில் மீன் விற்பனை செய்து வருகிறோம். எனவே மீன் விற்பனை அங்காடிகளை அதிகரிக்கும் திட்டம் தற்போது நம்மிடத்திலே இல்லை. ஆனால் மீன் கொள்முதலைத் தீவிரப்படுத்தி, பொருளாதார நிலையில் மேம்பாடு செய்ய வேண்டுமென்று கருதிக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக மீன் அங்காடிகளைப் பொறுத்தவரையில், மீன் விற்பனையாளர்களை மாற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு நியமிக்கும்போது மீனவ மகளிர், விதவைத் தாய்மார்கள் மற்றும் இலங்கை அகதிகளுக்கு ஒதுக்கலாம் என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.



(முற்பகல் 10-50)

**திரு. அ. ப. சிவராமன்** : தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா சாலை அருகில் இருந்த வறுவல் மீன் அங்காடியை, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதன் அடிப்படையிலே அங்கிருந்து அகற்றி, சட்டமன்ற விடுதிக்கு எதிரே அமைத்திருக்கிறார்கள். அதை முன்பிருந்த இடத்திலேயே வைத்து வறுவல் மீன் பொறித்துக் கொடுக்கும் வகையிலே அனுமதி அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்** : தலைவர் அவர்களே, தற்போது ரோடு ஓரங்களிலே இருக்கிற கடைகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதற்குப் பக்கத்திலே ரோடு ஓரத்திலே, ரோட்டுக்கு இடையூறு இல்லாத பகுதியிலே இடம் பிடித்து உறுப்பினர் சொன்னதைக் கவனிக்கலாம்.

**செல்வி. ஆ. லீலாவதி** : தலைவர் அவர்களே, கடைகளிலே விற்கும் மீன் விலையைவிட, இந்த பங்குகளில் விற்கும் மீன் விலை அதிகமாக இருப்பதால், பொதுமக்கள் அதிகமாக அங்கு சென்று வாங்குவதில்லை என்று நாங்கள் எண்ணுகிறோம். ஆகையால் இந்த பங்குகளில் விற்கும் மீன் விலையைக் குறைக்க அரசு ஏதேனும் ஏற்பாடு செய்யுமா? சட்டமன்ற விடுதிக்குப் பக்கத்திலேயே மீன் அங்காடி ஒன்று முன்பு இருந்தது. அதுவும் இப்போது மூடப்பட்டுவிட்டது. அங்கு விலை அதிகமாக இருந்ததால்தான், மக்கள் அங்கே வருவதில்லை என்று அங்கு விற்றவர் கூறியிருக்கிறார். ஆகையால் அரசு இந்த விலையைக் குறைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்** : தலைவர் அவர்களே, மீன் சுகாதாரமாகவும், பாதுகாப்பாகவும், விலை ஒரே சீராகவும் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நாம் அங்காடிகளை நடத்தி வருகிறோம். அதிகமான லாப நோக்கத்தோடுகூட அல்ல. தனிப்பட்டவர்கள் ஒரு நாளைக்கு விலையைக் கூட்டுவார்கள், ஒரு நாளைக்குக் குறைப்பார்கள். முடிந்த வரையில் நியாயமான விலையில்தான் இந்த அங்காடிகள் மீனை விற்பனை செய்து கொண்டிருக்கின்றன.

**திரு. ஏ. ஜே. தாஸ்** : தலைவர் அவர்களே, சென்னை நகரிலே ஆட்டிறைச்சி விலை அதிகமான காரணத்தினாலேதான் மீன் சாப்பிடுபவர்கள் அதிகமான மீனை வாங்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். கடைகளிலே விலை அதிகமாக இருக்கிறது. இந்த அங்காடிகளிலே சென்றுபார்த்தால், அங்கு மீன் இல்லை. ஆகவே சென்னை நகரிலே அதிகமான மீன் கடைகளை ஏற்படுத்தும்

[1985 ஜூலை 18

உத்தேசம் அரசுக்கு உண்டா? மேலும், செக்ரடேரியட்டிலே கூட வறுவல் மீன் கடை இல்லை. ஆகவே அதை வைக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவர் அவர்களே, பல பகுதிகளிலே இருக்கிற மீன் அங்காடிகள் லாபத்தில் இயங்காததால், அவை களுக்கு இடம் தேடிக் கொண்டிருக்கிறோம். நல்லமுறையிலே விற்பனையாகக் கூடிய இடங்களைத் தேடிக் கண்டுபிடித்து பின்னர் அப்படிப்பட்ட இடங்களிலே பங்குகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, சென்னையிலே இருப்பவர்கள் கடல் மீன் வகைகளைத்தான் அதிகம் விரும்புகிறார்கள். அது அதிகம் கிடைப்பதில்லை. விசாகபட்டினம் போன்ற இடங்களிலே கடல் மீன் அதிகம் கிடைக்கிறது என்கிறார்கள். அதை வாங்கி இங்கே விற்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவர் அவர்களே, விசாகபட்டினத்திலே கிடைக்கிற மீன் இங்கு கிடைக்கவில்லை. மீன்பிடி கலங்களிலிருந்து கிடைக்கும் மீன்கள், கடலூர், மல்லிப்பட்டிணம், தூத்துக்குடி போன்ற இடங்களிலே கிடைக்கிற மீன்களைக்கூட இங்கே கொண்டுவந்து இந்தப் பங்குகளிலே விற்பனை செய்து கொண்டிருக்கிறோம். எனவே அந்தந்தப் பகுதிகளிலே எந்தெந்த மீனை அதிக அளவுக்குச் சாப்பிட்டு வருகிறார்களோ அந்த அளவுக்குக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

(திரு. சி. இராமலிங்கம் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நான் அப்போதே கூப்பிட்டேன், நீங்கள் மாட்டேன் என்றீர்கள்.

திரு. சி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, மீன் ஒரு முக்கியமான உணவாக மக்களுக்கு இருக்கிறது. இதை அடிப்படையாகக்கொண்டு கேரள அரசு ஒரு கிலோ மீன் 15 ரூபாய், 20 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்கிறது. அதுபோல ஆந்திராவில் நல்ல மீனாக இருந்தால் 20 ரூபாய், மற்ற மீன்களுக்கு 10 ரூபாய், 15 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்து வருகிறார்கள். அப்படி தமிழ் நாட்டிலே விலை நிர்ணயம் செய்யவில்லை. அப்படி விலை நிர்ணயம் செய்து விற்கும் வாய்ப்பை மக்களுக்கு அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1985 ஜூலை 18]

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தற்போது போதிய அளவுக்கு விலை இல்லை. இங்கு கொந்தளிக்கிற கடலிலே, பயங்கரமான நீரோட்டப் பகுதியிலே எல்லாம் இரவு பூராவும் காத்திருந்து மீன் பிடித்து வருகிறார்கள். தங்களுக்கு இப்போதுள்ள விலை போதவில்லை என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மக்களைப் பொறுத்தவரையில், விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். மீனை கடலிலே இருந்துதானே எடுத்து வருகிறார்கள். எனவே விலையைக் கொஞ்சம் குறைத்தால் என்னவென்று மக்கள் தரப்பிலே சொல்லப்படுகிறது. இப்போது முடிந்தவரையில் நியாயமான விலையில்தான் மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்று கருதுகிறேன். எனவே இந்த விலைப் பிரச்சினையில் அரசு இறங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ்: தலைவர் அவர்களே, சென்னை நகரிலே, 150 டிவிஷன்கள் இருக்கின்றன. அதிலே குறைந்தது ஒரு டிவிஷனுக்கு நான்கு மீன் பங்கு கடைகளாவது அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-55)

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவர் அவர்களே, எத்தனை மீன் விற்பனைக் கடைகளை வேண்டுமானாலும் நாம் ஆரம்பிக்கலாம். மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் அதிகமான அளவுக்கு அந்தப் பகுதியில் மீன் வாங்குகிற சூழ்நிலையை உருவாக்கித் தந்தால், நிச்சயமாகச் செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

உடுக்குறியிடாத வினாக்கள்.

மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை

3 வினா.—திரு. அ. மயில்சாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான மாநில படிப்பு உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் 1984-85 ஆம் ஆண்டில், எத்தனை மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது?

(இ) அது எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?

விடை—

(அ) 1984-85-ம் ஆண்டில் 97 மாணவர்களுக்கு ரூ. 90,040 படிப்புதவித் தொகையாக வழங்கப்பட்டது.

(இ) பெற்றோர் (தந்தை அல்லது தாய்) அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றுதல் வேண்டும். அவர்களது ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கும் அதிகமாக இருக்கக்கூடாது. பள்ளியிறுதி/மேனிலையிறுதி/பட்ட இறுதி/பட்ட மேற்கல்வி இறுதி ஆகிய தேர்வுகளில் மாணவர் குறைந்தது 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கும் மிகைப்படுமானால், அம்மாணவர்களுக்கு வெகுமதி ரூ. 100-ம் தகுதி சான்றிதழும் மட்டுமே வழங்கப்படும். மாணவர்கட்கு படிப்புதவித்தொகை ஆண்டுதோறும், அவர்களது பட்ட மேற்படிப்பு கல்வி முடியும் காலம் வரை அனுமதிக்கப்படும்.

## இரயில்வே மேம்பாலங்கள்

4 வினா.—திரு. எல். ஜெயசந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், 11—10—1984 நாளன்று வினா எண்கள் 5, 6 மற்றும் 7-க்கு அளித்த பதிலையொட்டி, கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தேசிய நெடுஞ்சாலைகளில் இருப்புப்பாதை குறுக்கிடும் இடங்களில் 1985-86 ஆம் நிதியாண்டில் எங்கெங்கு இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது ?

விடை—

தேசிய நெடுஞ்சாலைகளில் இருப்புப்பாதை குறுக்கிடும் கீழ்க்கண்ட மூன்று இடங்களில் மேம்பாலங்கள் கட்ட 1985-86 ஆம் ஆண்டு திட்டத்தில் மத்திய அரசு ஒப்புதல் கொடுத்திருக்கிறது :—

| வேலையின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. (இலட்சங்களில்) |
|---|---|
| (1) | (2) |
| 1. தேசிய நெடுஞ்சாலை 47 கி.மீ. 2/8-ல் சேலம் புறவழிச்சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைத்தல். | ரூ. 160.00 |
| 2. தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 395/2-ல் மேட்டூர் கேட் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைத்தல். | ரூ. 90.00 |
| 3. தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 427/0-ல் சமயநல்லூர் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைத்தல். | ரூ. 90,00 |



## கோ-ஆப்டெக்ஸ் மூலம் துணிகள் விற்பனை

5 வினா.—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகம் முழுவதும் 1984-ம் ஆண்டில் மட்டும் கைத்தறித் துணிகளின் விற்பனை கோ-ஆப்டெக்ஸ் (Co-optex) மூலம் எவ்வளவு ?

(இ) இதில், பண்டிகை கால தள்ளுபடி விற்பனை மற்றும் சாதாரண கால விற்பனை எவ்வளவு ?

விடை—

(அ) 1984-ம் ஆண்டில் தமிழகம் முழுவதும் ரூ. 7,089 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்பனையாகியுள்ளது.

(இ) இதில் ரூ. 6,141 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் பண்டிகை கால தள்ளுபடி காலத்திலும், ரூ. 948 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் சாதாரண காலத்திலும் விற்பனை ஆகியுள்ளன.

## உதவிப்பணம் பெறும் வேலையற்ற பட்டதாரிகள்

6 வினா.—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1—3—1985 அன்றுள்ளவாறு, தமிழகத்தில் உதவிப்பணம் பெறும் வேலையற்ற பட்டதாரிகள் எத்தனை பேர் ?

விடை—

1—3—1985 அன்றுள்ளவாறு. 14,971 வேலையற்ற பட்டதாரிகளுக்கு தமிழகத்தில், வேலை வாய்ப்பற்றோருக்கான உதவிப்பணம் வழங்கப்பட்டு வருகிறது.

## வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவில் உள்ளவர்கள்

7 வினா.—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 31—12—1984 முடிய தமிழகத்தில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலை வாய்ப்பில்லாமல், பதிவில் (Live Register) உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் எத்தனை பேர் ?

(இ) அரசுப்பணியில் சேருவதற்கான வயது வரம்பைக் கடந்தோருக்கு வேலை வாய்ப்பு சலுகைகள் அளிக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

(அ) தமிழகத்தில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் 31—12—1984 முடிய பதிவு செய்து வேலையில்லாமல் பதிவில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| 31—12—1984 முடிய ஆண்கள் | 12,88,334 |
| பெண்கள் | 4,19,606 |
| மொத்தம் .. | 17,07,940 |

(இ) அரசுப்பணியில் சேருவதற்கான வயது வரம்பைக் கடந்தோருக்கு வேலை வாய்ப்புச் சலுகைகள் அளிக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

### ஹஜரத் நூர்முகம்மது ஷா அவுலியா தர்கா

8 வினா.—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

பண்ருட்டி ஹஜரத் நூர்முகம்மது ஷா அவுலியா தர்காவிற்குச் சொந்தமான கட்டிடங்கள், நிலங்கள் ஆகிய சொத்துக்களின் மதிப்பு எவ்வளவு ?

விடை—

பண்ருட்டி ஹஜரத் நூர்முகம்மது ஷா அவுலியா தர்காவிற்குச் சொந்தமான கட்டிடங்கள், நிலங்கள் ஆகிய சொத்துக்களின் மதிப்பு கீழ்க்கண்டவாறு உள்ளது :—

| | எண் | மதிப்பு |
|---|---|---|
| சடைகள் | 119 | ரூ. 23,80,000 |
| வீடுகள் | 223 | ரூ. 4.46,009 |
| பள்ளிக்கூடம் | 2 | ரூ. 1,60,000 |
| நிலங்கள் 152 எக்கர் 62 சென்ட் | | ரூ. 22,89,000 |
| மொத்தம் | | ரூ. 62,75,000 |



## 2. தகவல் கோரல்.

### சனிக்கிழமை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டதால் தனி உறுப்பினர் அலுவலுக்கான நாள் ஒதுக்குவது குறித்து

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடர் கடந்த 32 நாட்களாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. சனி-ஞாயிறு ஆகிய இரு நாட்களும் விடுமுறை நாட்களாக அறிவிக்கப் பட்டுள்ளதால், தனி நபர் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதற்கான வாய்ப்பு இப்போது இல்லை. இதைப்பற்றி நான் தலைவரிடம் ஏற்கெனவே குறிப்பிட்டேன். அதற்கு விதியில் மாற்றம் செய்யப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது. ஆனால் நாளைய தினத்தோடு சட்டமன்ற மேலவையின் கூட்டத் தொடர் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. தனி நபர் தீர்மானம் இந்தக் கூட்டத் தொடரில் எடுத்துக்கொள்ளப்படவே இல்லை. அதற்கு உரிய மாற்று ஏற்பாடு ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா என்றும் அதுவும் இந்தக் கூட்டத் தொடரிலேயே எடுத்துக் கொள்ளப்படுமா என்றும், தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கேட்டது சரி. விதிகளில் மாற்றம் செய்யாது அப்படி எடுத்துக்கொள்வதில் அலுவல் ஆய்வுக் குழுவில் சிக்கலை ஏற்படுத்தியது. எனவே விதியை மாற்றப் போகிறோம். மாற்று ஏற்பாடு கண்டிப்பாகச் செய்யப்படும். ஆனால் நாளைக்கே அது முடியும் என்று கூற முடியாது.

## 3. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, ஆளுநர் அவர்கள் 1985 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக் கொள்ளுவதற்குத் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின்

இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

1. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1985).

2. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நிலத்தின்மீது உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1985).

3. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப் படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1985).

4. 1985 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை நீட்டித்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 35/1985).

(3) தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவைக்கு மேலவையிலிருந்து ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவையில் 12—9—1985 அன்று முதல் ஏற்படவிருக்கும் வெற்றிடத்திற்குக் கவிஞர் முத்துலிங்கம் மட்டுமே மனு தாக்கல் செய்திருப்பதால், அவர் அப்பல்கலைக் கழகப் பேரவைக்கு உரியவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கிறேன்.

(4) சட்டமன்ற மேலவையின் கூட்டத்தை நீட்டிப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, இன்று மாலை, பேரவையில் நிறைவேற்றப்படவிருக்கும் அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்து நிறைவேற்றுவதற்காக, மேலவையின் கூட்டம் 19—7—1985 அன்றும் நடைபெறும்.



4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டம் வேப்பந்தட்டை கிராமத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான முன் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். அது எவ்வாறு ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே. திருச்சி மாவட்டம் பெரம்பலூருக்கு அருகே வேப்பந்தட்டை கிராமத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து நான் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

அந்த ஊருக்கு பேருந்து விட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக அந்தப் பகுதி மக்களால் எழுப்பப்பட்டிருக்கிறது. அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலையில் ஒரு போராட்டம் நடைபெற்றது. அந்தப் போராட்டத்தை அரசும் நிர்வாகமும் சரியோரிதமாகச் சமாளிக்காத காரணத்தால், அங்கே துப்பாக்கிச் சூடு ஏற்பட்டு, அதில் ஒருவர் இறந்து போயிருக்கிறார், 150-க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருக்கிறார்கள். இதன் காரணமாக அந்தப் பகுதியிலேயே ஒரு பதட்ட நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. பொதுவாக மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக ஒரு வேண்டுகோளை விட விரும்புகிறேன். அந்தப் பகுதி மக்கள் மாதக் கணக்காக, ஆண்டுக் கணக்காக இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற முடியும் அல்லது முடியாது என்று பதிலளித்து இருந்தால்கூட; போராட்டம் நடைபெறும் வாய்ப்பு இருந்திருக்காது.

அன்னமங்கலம் என்ற ஊருக்கு டவுன் பஸ் போகிறது. ஆனால் அந்த ஊருக்குள் போகாமலேயே அதற்கான கட்டணமாக ரூ. 1½ மட்டும் வசூலிக்கப்படுகிறது. ஊருக்கு வெளிப்புறத்திலேயே பஸ் நின்றுவிடுகிறது. ஒரு ரூபாய் வாங்கினால் போதும். ஆனால் அவர்கள் 1½ ரூபாய் கட்டணமாக வசூலிக்கிறார்கள். இதைப் போக்குவரத்து நிறுவனத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தும்கூட, இதை யாரும் கவனிக்கவே இல்லை. இந்தப் போராட்டம் திடீரென்று ஏற்பட்டுவிடவில்லை. அந்த ஊருக்குப் பேருந்து கேட்டார்கள். பேருந்து விடாவிட்டால், ஜூன் மாதத்தில் போராட்டம் நடத்துவோம் என்று நோட்டீஸ் தந்தார்கள். ஜூலை மாதம் 15-ம் தேதி

போராடியிருக்கிறார்கள். பத்து நாட்களுக்கு மேலாக மக்களைப் போராட்டத்திற்காக தயாரித்திருக்கிறார்கள். பொதுக்கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். ஆக இப்படி போராட்டத்திற்கு முஸ்திபு செய்து, 11 ஆம்

(முற்பகல் 11.00)

தேதி மிகப் பெரிய பொதுக்கூட்டத்தை நடத்தி, அனைத்துக் கட்சியினரையும் பொதுமக்களையும் அழைத்து; போராட்டத்திற்கு முன்முயற்சி செய்து கொண்டிருந்தார்கள் என்பதை போலீஸ் துறையினர் உணர்ந்து அதற்காக தகுதியான அறிவிப்பை, எண்ணத்தை, கருத்தை அரசுக்குத் தெரிவித்திருந்தால்கூட, இந்தப் போராட்டத்தைத் தவிர்த்திருக்கலாம். அப்படிச் செய்யவில்லையானால் போலீஸ் துறை என்ன செய்துகொண்டிருக்கிறது? முன்நடவடிக்கை ஏன் எடுக்கப்படவில்லை? அங்கே போராட்டம் நடைபெற்றபோது கலெக்டர், சப்-கலெக்டர், ஆர்.டி.ஓ., தாசில்தார் ஆகிய அதிகாரிகள் எல்லாம் போயிருக்கிறார்கள். போக்குவரத்துக்கான பேருந்தை விடவேண்டும் என்பதுதான் கோரிக்கை. ஆனால் போக்குவரத்துத்துறையிலிருந்து எந்த அதிகாரியாவது அங்கே சென்றாரா என்றால், செல்லவே இல்லை. அங்கே பேச்சுவார்த்தை நடத்தும்போது, போக்குவரத்து அதிகாரிகள் செல்லாத காரணத்தால், அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படுமா, ஏற்கப்படாதா என்று அப்போது அங்கிருந்த அதிகாரிகளாலே பதில் சொல்ல முடியவில்லை. கல்வித் துறையிலே போராட்டம் நடந்தால், கல்வித் துறை அதிகாரி இல்லாமல் எப்படி பேச்சுவார்த்தை நடத்துவது? இப்படிப்பட்ட போராட்டச் சூழ்நிலைக்குக் காரணம் இதுதானே தவிர வேறு யாரும் அல்ல. இப்படிப்பட்ட நிலையைப் போக்க முன்னாலேயே முயற்சி எடுத்திருக்கலாம். பொதுவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பின்மீது பேசும்போது சொற்பொழிவு ஆற்றக்கூடாது. எதற்காக இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டும் என்பதைப்பற்றிப் பேச வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, நான் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். அது என்னவென்று தலைவர் அவர்கள் முதலில் சொல்லுவது வழக்கம். தலைவர் அதைச் சொல்லவே இல்லை. ஆதலால் நான் அதையும் சொல்லி, அதற்குப் பிறகு விவரங்களைச் சொல்ல வேண்டியிருப்பதால், காலம் அதிகமாகிறது.





**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒத்தி வைப்புத் தீர்மானம் எதற்கு என்று மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்கிறார். அதைப்பற்றி எழுப்ப அனுமதி தந்திருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அனுமதி கொடுத்திருக்கும்போது, அவர் இப்படிச் சொல்லுவது எனக்குத் தண்டனையாக இருக்கலாம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சிக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நேற்று அந்த அவையிலே பேசியாகிவிட்டது. நேற்றே இங்கேயும் இப்பிரச்சினையை எடுத்திருந்தால், ஒரே நாளில் முடிந்திருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இப்போது எடுத்தாகிவிட்டது. மேலே பேசலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அவர்களுடைய கோரிக்கை கவனித்துப் பரிசீலிக்கப்படும் என்று காலத்திலே மடல் சென்றிருந்தால், இந்தப் பிரச்சினையே எழுந்திருக்காது. உரிய நேரத்தில் சரியாகச் செய்யவில்லை. அங்கே வந்திருந்த போராட்டக்காரர்களை லாரியில் ஏறுங்கள் என்று சொல்லி, நாம் ஏற்றுக்கொள்ள முடியாத வார்த்தைகளைச் சொல்லி, அவர்கள் அடித்து உள்ளே தள்ளாமல் இருந்திருந்தால், அவர்கள் இவ்வளவு கொதித்தெழுந்திருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே நடந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. பேச்சுவார்த்தை நடத்திய அதிகாரிகள் ஆத்திரமூட்டும் வகையில் பேசினார்கள் என்பதால்தான், அங்கே பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் இப்போது அங்கே 12 கிராமங்களில் ஆண்களே இல்லை. தங்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊரை விட்டே போய்விட்டார்கள். பெண்களும் ஒளிந்துகொள்கிறார்கள். ஆகவே . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஆகவே அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும்—அதுதானே மாண்புமிகு உறுப்பினருடைய விருப்பம்?

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நான் தொடர்ந்து பேசலாமா கூடாதா என்று தலைவர் அவர்களின் ஆணையை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** விளக்கம் சொல்லக்கூடாது என்று விதியில் இருக்கிறது. ஆகவே விதியைச் சொல்கிறேன். விஷயத்திற்குள் போகக் கூடாது. அவையின் இதர நடவடிக்கைகளை ஏன் ஒத்தி வைக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். தீர்மானத்திலே என்ன சொல்லியிருக்கிறார்கள்?

இதை விவாதிக்க இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டும் என்றுதானே கேட்டிருக்கிறார்? அதற்குத் தலைவர் அனுமதி கொடுக்கும்போது, விவாதத்தைத் தொடங்கினால் எப்படி?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அவையை ஒத்தி வைப்பது பழக்கமில்லையே. ஆகவே சொல்லவேண்டியதைச் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவையை ஒத்தி வைப்பது வழக்கமில்லை என்று சொல்லுகிறார். "நாங்கள் கொடுக்கும் ஒத்தி வைப்புத் தீர்மானங்களை எடுப்பதில்லையே" என்று கேட்கிறார். எடுத்துக்கொண்டால், சொற்பொழிவை ஆற்றுகிறார். தலைவரை இப்படியெல்லாம் ஏன் கஷ்டப்படுத்துகிறார் என்று தெரியவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சிக்கிரம் முடிவிற்கு வர வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அதிக நேரம் கொடுக்க வேண்டும் என்று தலைவர் நினைக்கிறார் என்பது எனக்குப் புரிகிறது. ஆனால் அரசுக்கு எந்த வகையில் சொல்ல வேண்டும் என்று கருதுகிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்த நல்லெண்ணத்தை வைத்து சிக்கிரம் முடிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சு மாண்புமிகு தலைவர் அவர்களுடைய தீர்ப்புக்கு உள்நோக்கம் கற்பிப்பதாக இருக்கிறது. அரசுக்கு எற்றபடி தலைவர் பேசுகிறார் என்று சொல்லுவது சரிதானா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் தீர்ப்பு தரவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசுத் தரப்பு ஒப்புக்கொள்ளும்படி பேசுங்கள் என்று இடையிலே 'அட்வைஸ்' வந்தது. நான் எப்படி அப்படிப் பேச முடியும்? தலைவரின் தீர்ப்பை எதிர்த்து நான் பேசவில்லை. தலைவரின் தீர்ப்பை எதிர்த்துப் பேசும் அளவிற்கு நான் இல்லை. அங்கே பதட்ட நிலை ஏற்பட்டதால், இப்போது அந்த ஊரில் ஆண்களே இல்லை, பெண்களும் ஒளிந்துகொண்டிருக்கிறார்கள். நாங்கள் சென்று அங்கே பார்த்தால்கூட, அவர்களைக் கைது செய்ய வந்திருக்கிறோம் என்று எண்ணி அஞ்சி ஓடுகிறார்கள். இப்படிப்பட்ட மிகப் பெரிய பதட்ட நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அதிகாரியை வைத்து விசாரணை நடத்தப்படும் என்று சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றத்திலே நடந்ததை இங்கே சொல்லக்கூடாது. அந்த அவையில் என்ன நடந்தது என்பதை இங்கே சொல்லக்கூடாது. இங்கே என்ன செய்ய வேண்டும் என்று சொல்லலாம்.

(முற்பகல் 11-05)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அதாவது சட்டமன்றத்திலே அமைச்சர் அவர்கள் பேசியதைக்கூட இங்கே குறிப்பிடக்கூடாது என்று சொன்னால் எப்படி விவாதம் செய்வது? பேரவையில் அறிவித்திருப்பதைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் சிக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** விமர்சனம் செய்தால் சொல்லுங்கள். சட்டமன்றப் பேரவையிலே நடந்த நிகழ்ச்சியை விமர்சனம் பண்ணக்கூடாது என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இவ்வளவு காலம் உறுப்பினராக இருந்தும் இந்த மாதிரி பிடிவாதமாக பேரவை நிகழ்ச்சி குறித்து விவாதித்துக் கொண்டிருப்பது முறையல்ல.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இதிலே அதிகாரிகளுடைய விசாரணை மட்டும் போதாது. ஒரு நீதிபதியை நியமித்து விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விசாரணையை அரசு இன்னும் திறம்பட நடத்திச் செயல்பட வேண்டும். காலத்தே நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட அசம்பாவிதமான நிகழ்ச்சிகளை ஊக்குவிக்காமல் இருக்கவும், அசம்பாவிதமான நிலைமைகள் உருவாகாமல் இருக்கவும் இப்போது இந்த அவையில் ஒரு முடிவுக்கு வரவேண்டியிருப்பதால், இந்த அவையினுடைய இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கும்படியாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர் வட்டத்திலே வேப்பந்தட்டை என்கின்ற கிராமத்திலே 12—7—1985 ஆம் நாள் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்தும், அதிலே நாமெல்லாம் விரும்பாத வகையிலே ஒருவர் மரணம் அடைந்திருக்கின்ற நிலைமைகளை எல்லாம் மனதிலே கொண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இந்தச் சபையினுடைய இதர

அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோரியிருக்கின்றார்கள். இந்தச் சம்பவத்தைப்பற்றி அவர்கள் இங்கே குறிப்பாகச் சில கருத்துக்களையும் சொல்லியிருக்கின்றார்கள். அந்த மக்கள் ஏன் அவ்வளவு ஆவேசப்பட்டார்கள் என்பதற்கு ஒரு காரணத்தையும் சொல்லியிருக்கின்றார்கள். அதைத் தவிர அரசு சரியான முறையிலே தக்க நேரத்திலே நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டையும் சொல்லியிருக்கின்றார்கள்.

முதலில் அங்கே என்ன நடைபெற்றது என்பதை உங்கள் மூலம் இந்தச் சபைக்குத் தெரிவிப்பது பயன் உள்ள வகையிலே அமையும் என்று நான் கருதுகிறேன். அங்கே நடைபெற்ற சம்பவத்தைத் தெரிவித்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுகின்றவாறு அப்படி அரசு அதிகாரிகளுடைய கவனமின்மையாலோ அல்லது அலட்சியப் போக்கினாலோ அந்தச் சம்பவம் நடைபெறவில்லை என்பதை, மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் உட்பட இந்த சபை தெரிந்து கொள்ளும் என்று கருதுகிறேன்.

12—7—1985 அன்று காலை 10 மணிக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. செல்லதுரை, ஓய்வுபெற்ற தாசில்தார் டி. பசுபதி மற்றும் சிலர் தலைமையில் தொண்டபாடி, நெய்குப்பை, நெய்குப்பைபுதூர், மறவநாதம், வி. களத்தூர், திருவலத்துறை மற்றும் அகரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் கிராமத்திற்கு நகரப் பேருந்து வசதி வேண்டும் என்ற கோரிக்கையுடன் இதர கோரிக்கைகளையும் வலியுறுத்தி பெரம்பலூர்-ஆத்தூர் சாலை வேப்பந்தட்டை என்னும் இடத்தில் பேருந்துகளைத் தடுத்து மறியல் செய்ய ஒன்று கூடியுள்ளனர். வேப்பந்தட்டையில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க தாசில்தார் 12—7—1985 அன்று 8 மணிக்கே சென்றுள்ளார். மங்களமேடு ஆய்வாளர், 3 சார் ஆய்வாளர்கள், 1 தலைமைக் காவலர், 9 காவலர்கள் மற்றும் நான்கு பிரிவு ஆயுதப்படைக் காவலர்கள் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர்.

சுமார் இரண்டு ஆயிரம் பேர் 10-30 மணிக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் உள்ள பேருந்து நிற்குமிடத்தில் வந்து சாலையில் அமர்ந்துகொண்டு, திரு. செல்லத்துரை ஆரம்பித்து வைக்க மறியலைத் தொடங்கி உள்ளனர். பெரம்பலூர் தாசில்தார், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையர் மற்றும் மங்களமேடு காவல் ஆய்வாளர் போராட்டத் தலைவர்களை பேச்சு வார்த்தை நடத்த அழைத்துள்ளனர். ஆனால் போராட்டத் தலைவர்கள் வர மறுக்கவே, தாசில்தார் மற்றும் அதிகாரிகள் அவர்களிடம் சென்று, அவர்களின்



கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் அனுப்பி தக்க விரைவு நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்வதாகக் கூறியுள்ளனர்.

மேலும் சட்ட விரோதமாகக் கூடுவதற்கு தடையுத்தரவு அமலில் இருப்பதை நினைவுபடுத்தினர். ஆனால் அக்கிராமத்தினர்கள் உறுதிமொழிக்குத் திருப்தி அடையாமல், கலைந்து செல்ல மறுத்துள்ளனர். உடனே டவுன் பஸ் வசதிக்கு அனுமதியளிக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர். இவ்வாறு பேச்சு வார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கையில், தஞ்சாவூர்-சேலம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் சோழன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த சில பேருந்துகளை கூட்டத்தினர் தடுத்துள்ளனர். நேரம் செல்லச் செல்ல கூட்டம் சுமார் 3,700 ஆக உயர்ந்துள்ளது.

(முற்பகல் 11-10)

அரியலூர் கோட்டாட்சித் தலைவர் பிற்பகல் 2 மணியளவில் சம்பவ இடத்திற்கு விரைந்து தலைவர்களை பேச்சு வார்த்தைக்கு அழைத்துள்ளார். ஆனால் அவர்கள் வர மறுத்துள்ளனர். கோட்டாட்சித் தலைவர் மறியல் நடக்கும் இடத்திற்குச் சென்று, தான் மாவட்ட ஆட்சித் தலைவரின் சார்பாக வந்துள்ளதாகவும், அவர்களின் கோரிக்கைகளை உடனடியாகக் கவனிப்பதாகவும் உறுதி கூறியுள்ளார். போராட்டத் தலைவர்கள் தாங்கள் போராட்டம் செய்பவர்களுடன் கலந்து பேசி கோட்டாட்சித் தலைவரிடம் வருவதாகக் கூறிச் சென்றுள்ளனர். அவர்கள் திரும்பி வராததால், கோட்டாட்சித் தலைவர், மீண்டும் தலைவர்களைச் சந்தித்து, போராட்டத்தைக் கைவிடுமாறும், 16—7—1985 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு வருமாறும், இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் போக்குவரத்துத் துறையிடம் கலந்து தக்க நடவடிக்கை எடுப்பார் என்றும் கூறியுள்ளார். மாலை 4-30 மணிக்கு கோட்டாட்சித் தலைவர் மற்றும் அதிகாரிகளுடன் போராட்டத் தலைவர்கள் பேசி, 16—7—1985 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர், போக்குவரத்துக் கழக அதிகாரிகளைச் சந்திக்க ஒப்புக்கொண்டனர். இந்தக் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் அங்கு கூடியிருந்த தலைவர்களின் வேண்டுகோளின்படி தயாரிக்கப்பட்டது. அதில் கையெழுத்திடுமாறு கேட்டபோது, மீண்டும் மறியல் செய்பவர்களைக் கலந்து பேசி கையெழுத்திடுவதாகக் கூறிச் சென்றவர்கள், பின்னர் திரும்பி வந்து கையெழுத்திட விருப்பமில்லை என்று கூறியுள்ளனர்.

மீண்டும், கோட்டாட்சித் தலைவர் மறியல் செய்பவர்களைக் கலைந்து செல்லுமாறும், போக்குவரத்துக்கு வழி விடுமாறும் கேட்டுக் கொண்டதோடு, மேலும் தடை செய்தால் கைது செய்ய நேரிடும் என்று கூறியுள்ளார். உடனே

[திரு. இராம. வீரப்பன்] [1985 ஜூலை 18

திரு. செல்லத்துரை மற்றும் இதர தலைவர்கள் கூட்ட நடவடிக்கைகள்மீது கையெழுத்திடாது வெளியே வந்து, மறியல் செய்பவர்களை நோக்கி ஒரு துவாலையை (டவலை) அசைத்து சமிக்ஞை காட்டியதாகவும், இதனைக் கண்ணுற்ற கூட்டத்தினர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தைச் சூழ்ந்து கொண்டு மாலை 5-30 மணியளவில் கற்களை வீச ஆரம்பித்ததாகவும் தெரிய வருகிறது. அதிகாரிகள் வெளியே வந்து சமாதானப்படுத்த எவ்வளவோ முயன்றும், கூட்டத்தினர் தொடர்ந்து கற்களை வீசியுள்ளனர். இதனால் காவலர்களுக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டன. கோட்டாட்சியர், ஆய்வாளர், திருச்சி காவல் துறை துணைக் கண்காணிப்பாளர், பெரம்பலூர் தாசில்தார் ஆகியோர் காயமுற்றனர். உடனே சட்டவிரோதக் கூட்டம் என அறிவித்து எச்சரிக்கை செய்தும். கூட்டத்தினர் கலையாமல் தொடர்ந்து கல் எறிந்த தோடு அலுவலகத்திற்கும் தீ வைத்தனர்.

கூட்டம் கலையாததால், கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வெடிக்கப்பட்டன. இதுவும் பலனளிக்காமல் போகவே தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதற்கிடையில் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கதவுகள், கண்ணாடி சன்னல் களை கூட்டத்தினர் நொருக்கியும், கோட்டாட்சித் தலைவர் ஜீப், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஜீப் மற்றும் காவல் துறை வேன் ஒன்றுக்குத் தீ வைத்தும், தாசில்தார் ஜீப்பினை சேதப்படுத்தியும் உள்ளனர். அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு சைக்கிள், ஒரு மொபட் ஆகியவைகளுக்குத் தீயிடப்பட்டது. வன்முறைக் கூட்டத்தினர் காவலர்கள் மற்றும் அதிகாரி களைத் தாக்குமாறும் கொல்ல வேண்டுமென்றும் கூச்சலிட்டனர். எனவே, காவலர் மற்றும் அதிகாரிகள் உயிருக்கும், உடமைக்கும், பொதுச் சொத்து களுக்கும் ஆபத்து உருவாகிய நிலையில் மீண்டும் தகுந்த எச்சரிக்கைக்குப் பிறகு காவல் துறையினர் பக்-ஷாட் சுட ஆரம்பித்தனர். தொடர்ந்து பால் அம்யூனிஷன் குண்டுகளைச் சுட ஆரம்பித்தனர். இதன் பின்னர் வன்முறைக் கூட்டம் கலைந்து ஓட ஆரம்பித்தது. இதில் 46 காவலர்கள், கோட்டாட்சித் தலைவர், அவர் உதவியாளர் ஆகியோர் காயமுற்றனர். இதில் 7 பேர்கள் பலத்த காயமடைந்தனர். கூட்டத்தினர் தொலைபேசிக் கம்பிகளைத் துண்டித்து மேலதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள முடியாதபடி செய் துள்ளனர். காயமடைந்தவர்கள் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப் பட்டனர். இதில் ஒரு காவலர் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இச் சம்பவத்தில் 30 வயதுள்ள ஒருவர் குண்டடிபட்டு இறந்துள்ளார்.



1985 ஜூலை 18] [திரு. இராம. வீரப்பன்]

இச்சம்பவம் குறித்து கேள்வியுற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் மாலை 7 மணிக்கு வேப்பந்தட்டைக்குச் சென்றுள்ளார். மருத்துவ மனைக்குச் சென்று காயமடைந்தோரைப் பார்வையிட்டுள்ளார். தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது குறித்து வழக்கு ஒன்று ஐ.பி.சி. 147, 148, 149, 332, 307, 435 ஆகிய பிரிவுகளின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. குண்டடி பட்டு இறந்த நல்லன் என்பவரின் மகனான பழனிமுத்து என்னும் கட்டியக்காரன் உடல் கோட்டாட்சித் தலைவரால் சவப் பரிசோதனை செய்யப் பட்டு, மருத்துவ மனையில் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு, உறவின ரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தின் தொடர்பாக 59 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போது நிலைமை அமைதியாக உள்ளது என்ற இந்த விவரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அரசுக்குக் கிடைத்திருக்கின்றன.

மாண்புமிகு தலைவர்களே, இதன் தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் சில செய்திகளை இங்கே தெரிவித்தார்கள்.

(முற்பகல் 11-15)

இந்தக் கலவரம் ஏன் நடைபெற்றது? ஏன் அந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறுகின்ற அளவுக்கு நிலைமை முற்றியது? இதற்கு அரசினுடைய, அரசு அதிகாரிகளுடைய, போக்குவரத்துத் துறையினுடைய அஜாக்கிரதை யும் அலட்சியமும் காரணம் என்று குறிப்பிட்டார்கள். இந்த மக்களுடைய வேண்டுகோள் என்ன என்பதையும் நான் உங்கள் மூலம் இந்த சபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பேருந்துகளைப்பற்றி அவர் களுடைய கோரிக்கை பெரம்பலூர்—திருவலந்துறை டவுன் பஸ் குறித்த தாகும். அதாவது வேப்பந்தட்டை, நெய்குப்பை, வி. களத்தூர் வழியாக விடப்பட வேண்டும். இந்தக் கோரிக்கையைப் பொறுத்தவரையில், இப் பொழுது ஏற்கெனவே திருச்சி—வி. களத்தூர் பேருந்து ஓடிக்கொண்டிருக் கிறது. ஆனால் அவர்கள் அதை டவுன் பஸ்ஸாக விட வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த டவுன் பஸ்ஸுக்கும் மற்ற பஸ்ஸுக்கும் என்ன வித்தியாசம் என்று முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். இரண்டும் பஸ் தானே, ஏன் டவுன் பஸ் கேட்கிறார்கள்? டவுன் பஸ் என்பது மிகக் குறைந்த கட்டணத்திலே விடப்படுகின்ற பேருந்து. ஒரே தூரத்திற்கு சாதாரணமாக நீண்ட தூர பேருந்திலே ஏறினால் எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அதில் 60 சதவிகிதம், சில நேரத்தில் 50 சதவிகிதம் கட்டணம் செலுத்தினாலே அந்தத் தூரத்திற்கு நம்முடைய நகரப் பேருந்துகளிலே போய்விடலாம். அதிலும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள்

[திரு. இராம. வீரப்பன்] [1985 ஜூலை 18

ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தான் இந்த 8 ஆண்டுக் காலத்தில் சுமார் 4,500 பேருந்துகள் புதிய வழித் தடங்களிலே விடப்பட்டிருக்கின்றன என்றால், அதிலே 2 ஆயிரத்திற்கு அதிகப்பட்ட பேருந்துகள் நகரப் பேருந்துகள். இந்தக் கிராமப்புறத்து மக்களுடைய தேவையை மனதில் வைத்து புரட்சித் தலைவர் அவர்கள் தான் மிகக் குறைந்த செலவிலே கிராமத்தையும் நகரத்தையும் இணைப்பதற்காக எப்படி தன்னிறைவுத் திட்டங்கள் என்கிற பெயராலே இணைப்புச் சாலைகளை போட்டார்களோ அப்படி கிராமப்புறங்களில் எல்லாம் சாலைகளை அமைத்து நகரப் பேருந்துகளையும்விட்டு இந்த கிராமப்புறத்து மக்கள் நகரத்தினுடைய வசதிகளையும் அறிவையும் வாய்ப்புகளையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காக சுமார் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட நகரப் பேருந்துகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்; அதுவும் குறைந்த கட்டணத்திலே. அதனுடைய விளைவாக எங்கே பார்த்தாலும் நகரப் பேருந்துகள் வேண்டும், நகரப் பேருந்துகள் வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்து கொண்டே இருக்கின்றன. குறைந்த கட்டணத்திலே நீண்ட தூரத்திற்குச் செல்ல முடியும் என்கிற அடிப்படை தான் அதற்குக் காரணம். நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி வருவதற்கு முன்னாலே, நகரப் பேருந்துகள் 25 கிலோ மீட்டர் தூரம் தான் செல்ல முடியும் என்கிற முறையில் வரையறுக்கப்பட்டிருந்தது. நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் அதை 30 கிலோ மீட்டராக நீட்டித்திருக்கிறார்கள். ஆனால் இவர்கள் கேட்கிற இந்த பெரம்பலூர்-திருவலத்துறை என்கிற அந்த கிராமம் 36 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆகவே 36 கிலோமீட்டர் தூரமுள்ள ஒரு கிராமத்தோடு இணைப்பதற்கு நகரப் பேருந்தை விட முடியாது என்பது இப்போதிருக்கிற நிலைமை. ஆனால் அங்கே ஏற்கெனவே பேருந்து ஓடிக்கொண்டிருக்கிறது. பேருந்து இல்லாமல் இல்லை. ஆகவே இந்தக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் இருக்கின்ற சிக்கல் இதுதான்.

இரண்டாவது பெரம்பலூர்—நெற்குளம் வழியாகச் செல்லும் பஸ்ஸை நெய்குப்பை வழியாக ஓட்ட வேண்டும். இப்படிச் செய்தால் அங்கே கிருஷ்ணாபுரம், பெண்பக ஊர் என்கிற அந்த ஊர்களைத் தொட்டுக் கொண்டு போகிற அந்தப் பேருந்துகள் அந்தப் பகுதிக்குப் போக முடியாமல் ஆகிவிடும். நெய்குப்பைக்கு ஏற்கெனவே மொபசல் பஸ், அதாவது நீண்ட தூர வெளியூர்களிலே செல்கின்ற பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. தினசரி 4 சிங்கிள்கள் ஓடுகின்றன. ஆகவே தான் இந்த நீண்ட தூரத்தைக் கருத்திலே கொண்டு நகரப் பேருந்தை விட முடியாத சூழ்நிலை அங்கே அதிகாரிகளுக்கு போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்பட்டிருக்கிறது.



1985 ஜூலை 18] [திரு. இராம. வீரப்பன்]

மூன்றாவது கோரிக்கை தொண்டபாடிக்கு தனி ஸ்டேஜ் வேண்டும் என்பது. அதற்கும், அந்தத் தனி ஸ்டேஜை இங்கே போடுகிறபோது, வேறு இடங்களை அவர்கள் தடுத்தாக வேண்டும். அதைப் பரிசீலிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதைத்தவிர விவசாயிகளின் மோட்டார் பம்ப்செட், பைப் ஆகியவற்றை பஸ்களில் ஏற்றிச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்பது. அது இப்போது அனுமதிக்கப்பட்டு ஏற்றிச் செல்லப்படுகிறது.

அடுத்து, 414 என்ற நம்பருடைய பேருந்தை மாற்றி அதற்கு புதிய வண்டி விட வேண்டும் என்பது. ஏற்கெனவே ஒரு பஸ் ஓடிக் கொண்டிருக்கிறது. அதை பழைய பேருந்து என்று அவர்கள் கருதுகிறார்கள். அதற்குப் பதிலாகத் தான் புதிய வண்டி வேண்டுமென்று கேட்கிறார்கள். புதிய வண்டி என்றால் பல லட்சக்கணக்கான ரூபாய்களை முதலீடு செய்து தயாரிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆகவே இருக்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ப எவ்வாறு இருக்கிறது என்பதை எல்லாம் எண்ணிப்பார்த்து தான் அதிகாரிகள் அந்தமாதிரி பஸ்களை விட வேண்டும். ஆகவே ஏதோ பேருந்து வசதியே இல்லை, பேருந்தே இல்லாமல் கிராமங்கள் இருக்கின்றன என்று என்னுகிற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையின் மூலம் சபைக்குத் தகவலாக தந்துகொண்டிருக்கிறார்கள். அது தவறு. சரியான கருத்தல்ல அது என்பதை நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் முன்னாலேயே சொன்னதுபோல, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இந்த கிராமப் பகுதி மக்களுடைய நன்மைகளுக்கு, முன்னுரிமை தந்து திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருகின்ற காரணத்தாலே, எல்லா கிராமங்களிலேயும் இன்றைக்கு அந்தத் தேவைகளைக்

(முற்பகல் 11-20)

கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். காரணம் கோரிக்கைகளை நிறைவேற்றுகிற அரசு வந்திருக்கிறது, என்ற எண்ணத்தில் கேட்கிறார்கள். கேட்பதில் தவறு இல்லை. ஆனால் எப்படி அதை நிறைவேற்ற முடியும்? சட்டவிதிகள் எப்படி அதற்கு இடம் தருகின்றன? சட்டவிதிகளைக் கூட மாற்றிக்கொள்ளலாம். அப்படி பேருந்துகளை விடுகிறபோது, ஒருவேளை நஷ்டத்தில் ஓடினால், இங்கே அதற்கான வரவு செலவுக் கணக்குகளை வைக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன கேட்பார்கள் தெரியுமா? "நஷ்டத்தில் பேருந்துகளை ஓட்ட ஒரு போக்குவரத்து நிறுவனமா? அலட்சியமான நிர்வாகம், அலட்சியமான அதிகாரிகள் அங்கே இருக்கிறார்கள், இதற்கு ஒரு ஆட்சியா?" என்று கேட்பார்கள். ஆகவே, இதிலே இரண்டு பக்கத்தையும் பார்த்துத்தான், இலாபம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, நஷ்டம் வந்தால் அது தாங்குகிற அளவுக்கு நஷ்டம் இருந்தாலும் பரவாயில்லை என்று சொல்கிற அளவுக்கு

டவுன் பஸ்களைக் குறைந்த கட்டணத்தில் கிராமப்புறங்களில் ஓட்டிக்கொண்டிருக்கிறோம். சமுதாயம் வளர்ந்துகொண்டிருக்கும்போது, கோரிக்கைகளும் வளர்ந்து கொண்டிருப்பதை தவறு என்று அரசு சொல்லவில்லை. அப்படி கிராம மக்கள் வைக்கின்ற கோரிக்கைகளையெல்லாம் நாங்களும் ஏற்றுக் கொண்டுதான் செய்கிறோம். ஆனால் தவணை கொஞ்சம் ஆகலாம், காலம் கொஞ்சம் ஆகலாம். எதற்கும் நினைத்த உடனேயே எல்லாம் நடக்க முடியாது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தப் போராட்டத்திற்கு என்ன காரணம் என்று நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நல்லவேளை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோதே, அந்தத் தகவலை இங்கே தெளிவாகத் தந்தார்கள். காரணம் அந்தப் பகுதியில் இரண்டு மாதங்களாகவே திட்டமிட்டு, பல இடங்களில் கூட்டங்கள் எல்லாம் போட்டு, ஒரு போராட்ட முஸ்தீபே செய்யப்பட்டது என்று இங்கே உறுப்பினரே பேசி, அது பதிவும் ஆகியிருக்கிறது. கிராம மக்களின் நியாயமான கோரிக்கையான டவுன் பஸ் வேண்டும். குறைந்த கட்டணத்தில் டவுன் பஸ்ஸில் போக முடியும், ரெகுலர் பஸ்ஸில் போக வேண்டியிருந்தால் அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது என்று சொல்லி டவுன் பஸ்ஸில் போக விரும்புகிறார்கள் என்று நம்மாலே புரிந்துகொள்ள முடிகிறது.

ஆனால் அந்த கிராம மக்களைப் பயன்படுத்தி, பல கிராம மக்களை, பல கிராமங்களை ஒன்றாக இணைத்து, இரண்டு மாத காலமாக ஒரு போராட்ட முஸ்தீபே தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அன்றையதினம் ஒரு போராட்டத்திற்கே தயாராக மக்களைத் திரட்டி வந்திருக்கிறார்கள். ஆகவே தான், காலையில் மறியலுக்கு வந்து உட்கார்ந்தவர்களை மாலை வரை அதிகாரிகள் எல்லாம் சேர்ந்து பேசியும் மறியலை நிறுத்த மறுத்தார்கள். இதிலே தலைமையேற்றிருந்தவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த ஒரு தலைவர். இதிலே ஒரு துரதிருஷ்டம் என்னவென்றால், தலைமையேற்றவர் ஓய்வுபெற்ற ஒரு தாசில்தார். இங்கே அடிபட்டவர்களிலும் ஒரு தாசில்தார் இருக்கிறார். அவரும் தாசில்தாராக இருந்தபோது, இப்படிப்பட்ட சூழ்நிலைகளைச் சந்திக்கவேண்டிய அவசியம் அவருக்கும் வந்திருக்கும். அப்படிப்பட்ட மக்களைச் சமாதானப்படுத்த வேண்டிய பொறுப்பும் அந்தத் தாசில்தாருக்கு இருந்திருக்கும். ஆனால் இன்றைக்கு ஓய்வு பெற்றதற்குப் பிறகு, அவரே ஆயிரக்கணக்கான மக்களைத் திரட்டிக்கொண்டு வந்து ஒரு போராட்டத்தை நடத்துகிறார். அங்கே ஒரு கலவரத்தை உருவாக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறார் என்று சொன்னால், அவர் எந்த நோக்கத்தில் செய்திருக்கிறார்? கிராம மக்கள் நன்மையைக் கருதியா? அல்லது கிராம மக்களுடைய நன்மையையே



தன்னுடைய கடமையாகக் கொண்டிருக்கிற இந்த ஆட்சிக்கு ஏதாவது களங்கம் கற்பிக்க வேண்டும், குறைப்படுத்த வேண்டும், சிக்கலில் மாட்டி வைக்க வேண்டுமென்ற காரணத்தாலா என்பதை, மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், தெரிந்துகொள்ளவும் விரும்புகிறேன்.

ஆகவே, இப்படிப்பட்ட தலைவர்கள் அதை முன்னின்று நடத்தியிருக்கிறார்கள். பின்னாலே ஆர்.டி.ஓ.-வும் மற்ற உயர்ந்த அதிகாரிகளும் உட்கார்ந்து பேசி, 16 ஆம் தேதி மாவட்ட ஆட்சித்தலைவரைச் சந்திக்கலாம், போக்குவரத்துக் கழக அதிகாரிகளை அழைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் பேசுவார் என்பதை அந்த கிராம மக்கள் இரண்டு மாத காலமாக திட்டமிட்டார்களே, போராட்ட முஸ்தீபு செய்தார்களே, அவர்களே அங்கே ஒத்துக்கொண்டு, நாங்கள் அங்கே போய் மறியல் செய்கிறவர்களைக் கேட்டுக்கொண்டு வருகிறோம் என்று சொல்லிவிட்டுப் போனார்களே, அவர்கள் மீண்டும் வந்து மறியலை நிறுத்த மறுத்திருக்கிறார்கள்.

அவர்களுடைய விருப்பப்படி தயாரிக்கப்பட்ட அந்த நடைமுறைக் குறிப்பேட்டில் கையெழுத்துப் போட மறுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் தாண்டி வெளியில் வந்ததற்குப் பிறகு, அங்கேயிருந்து கூட்டத்திற்கு சைகை காட்டியிருக்கிறார்கள். கலவரம் தொடங்கியிருக்கிறது. தாக்கியிருக்கிறார்கள். அலுவலகங்களை நொறுக்கியிருக்கிறார்கள். அங்கேயிருந்த பஸ்கள், வேன்கள், ஜீப்கள் எல்லாம் கொளுத்தப்படுகின்றன. அதிகாரிகள் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு நாமெல்லாம் விரும்பாத சூழ்நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. தடியடிப் பிரயோகம், கண்ணீர் குண்டு பிரயோகம், அதற்குப் பிறகு பல்வேறு முறைகளைக் கையாண்டு இறுதியாக பக்ஷாட் பயன்படுத்தப்பட்டு, யாரும் செத்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் அந்த 'பால் அம்யூனிஷன்' என்ற அந்த சிறிய ரவையைப் பயன்படுத்துகிற துப்பாக்கியைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இருந்தாலும் யாரும் விரும்பாத ஒரு மரணம் அங்கே சம்பவித்திருக்கிறது. ஆனால் என்ன இதிலே துரதிருஷ்டவசமென்றால் எய்தவன் எங்கோ இருக்கிறான், அம்பை நோவதில் பயனில்லை என்றுதான் சொன்னோம். போராட்ட முஸ்தீபு செய்தவர்கள் எல்லாம் எங்கேயோ இருக்கிறார்கள். ஆனால் ஒன்றும் தெரியாத கிராம மக்களிலே ஒருவர் தன்னுடைய இன்னுயிரைப் பலியாகத் தந்திருக்கிறார். அதிகாரிகள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். பலியானவர் வேறு கிராமத்தைச் சார்ந்தவர். இங்கே கொண்டுவந்து பலியாக்கப்பட்டிருக்கிறார். காரணம்தான் நமக்கு முன்னாலேயே தெரிகிறதே.

(முற்பகல் 11-25)

போராட்ட முஸ்தீபு இரண்டு மாத காலமாகத் தயாரிக்கப்பட்டது என்று அவர்களே சொன்னார்கள். காரணம் இந்த மாநிலத்து மக்கள் அமைதியாக இருக்கிறார்கள், இந்த அமைதியைக் குலைப்பதற்காக திட்டமிடுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. நம் கிராம மக்களுக்கான எல்லா நன்மைகளையும் செய்வதற்கு இந்த அரசு முயன்று கொண்டிருக்கிறது. எவ்வளவு செலவானாலும் நன்மை செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட ஒரு வன்முறையைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். அதிலும் ஓர் அரசியல் கட்சியைச் சார்ந்தவர் — முன்னால் தாசில்தாராகப் பணியாற்றியவர் — இப்படி பொறுப்பிலே இருந்தவர்கள் காலையிலே தொடங்கி மாலைவரை என்ன சொல்லியும் கேட்காமல், ஏதோ ஒரு திட்டத்தோடு வந்திருக்கிறார்கள் என்று எண்ணுகின்ற முறையிலே இந்தக் காரியம் நடந்திருக்கிறது. கடைசியில் யார் வைத்த கொல்லியோ வீடு வந்து சேர்ந்தது என்று ஒன்றும் அறியாத் கிராமத்துத் தோழன் இன்றைக்குப் பலியாகி இருக்கிறான். அதிகாரிகளும் மற்றவர்களும் தாக்கப்பட்டிருக்கிறார்கள், காயமடைந்திருக்கிறார்கள்.

இந்தச் சம்பவம் குறித்து எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்திருக்கிறது. ஒரு மாவட்ட வருவாய் அதிகாரியை விசாரணை மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த விசாரணையில் இன்னும் தெளிவாக, இதற்கு அடிப்படைக் காரணம் என்ன, இதிலே உள்ள உள்நோக்கம் என்ன, இதிலே சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம் யார், இங்கேயுள்ள அமைதியைக் குலைப்பதற்கென்றே யாராவது முயலுகிறார்களா என்கிற உண்மைகள் எல்லாம்கூட நமக்குக் கிடைக்கும். ஆகவே இந்தக் கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

அந்தக் கிராமத்திலே ஆண்களே இல்லை, பெண்கள்தான் இருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் அவர்களை விரட்டுகிறார்கள் என்று எப்போதும் சொல்கின்ற குற்றச்சாட்டை இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலேயும் சொல்கிறார்கள். ஆண்களே இல்லையென்றால், கலவரம் செய்வதற்கென்று நாள் முழுதும் முயற்சித்த ஆண்கள், சில நேரங்களில் தப்பித்துக்கொள்வதற்கு, இப்போது தலைமை ஏற்றுப் போனார்களே, அவர்களே வழியைச் சொல்லிக் கொடுப்பார்கள். ஏனென்றால் எப்படித் தப்பித்துக்கொள்வது, எப்படி கலவரம் செய்வது, எப்படி தலைமறைவாக இருப்பது என்பதுதான் இந்தக் கலவரம் விளைவிப்பவர்கள் கற்றுக்கொண்டிருக்கிற ஆரம்பப் பாடம். அங்கே போலீஸோ வேறு எந்தத் துறையோ போய் அங்கேயுள்ள கிராம மக்களைத் துன்புறுத்தாது. தேவை இல்லாமல் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாது.



ஓர் உயர்ந்த மாவட்ட வருவாய் அதிகாரி இச்சம்பவம் குறித்து விசாரணை செய்ய இருக்கிறார். விசாரணைக்குப் பிறகு எல்லா உண்மைகளும் தெரியும். இன்றைக்கு பூங்காவாக இருக்கின்ற தமிழகத்தில் ஆங்காங்கே இப்படிப்பட்ட சிறிய சிறிய சம்பவங்களை உருவாக்கி, இந்த அமைதியைக் குலைக்கின்ற முயற்சியிலே யாரும் ஈடுபடவேண்டாமென்று அன்போடு அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இப்போது அங்கே எந்தப் பதட்ட நிலையுமில்லை, வேறெந்த சம்பவமும் நிகழவில்லை, அமைதியாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவை இல்லை என்கிற கருத்தை உங்களுடைய முடிவுக்கு விட்டு விட்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு மேலவை முன்னவர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து விவாதிக்க அவையை ஒத்திவைக்கத் தேவை இல்லை என்று கருதுகிறேன்.

## கவன ஈர்ப்பு.

### (1) சேலம் சௌடேஸ்வரி கல்லூரி நிர்வாகம் பேராசிரியர்களை வேலைநீக்கம் செய்ததால், ஆசிரியர்கள் படும் இன்னல்கள் குறித்து.

செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, "சேலம் சௌடேஸ்வரி கல்லூரி நிர்வாகம், பேராசிரியர்களையும் மற்றும் தலைவரையும் வேலை நீக்கம் செய்ததால், அக்கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்கள் படும் இன்னல்கள் குறித்து".

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன்று விஷயங்களைக் கூறியிருக்கின்றார். அதாவது, திரு. ஐ. கோபாலகிருஷ்ணன் என்பவர் இயக்குநரின் ஆணையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மனு கொடுத்து 10—7—1985 வரை பொறுப்பு முதல்வராகப் பணியாற்றத் தற்காலிக உத்தரவு பெற்றிருக்கிறார்

@ 147 ஆம் பக்கத்தில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

என்றும், இரண்டாவதாக இதுகுறித்து கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆணைகளையும், நீதிமன்ற ஆணைகளையும்கூட சேலம் சௌடேஸ்வரி கல்லூரி நிர்வாகம் செயல்படுத்தவில்லை என்றும் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. கல்லூரி இயக்குநர் அவர்களுடைய ஆணைகளையும், நீதிமன்ற ஆணையையும் ஏற்றுக்கொள்ளாமல் சேலம், சௌடேஸ்வரிக் கல்லூரி நடக்கிறது என்றால், அரசு ஏன் அந்தக் கல்லூரியை எடுத்து நடத்தக் கூடாது என்றும், இன்னும் இம்மாதிரியாக அரசு ஆணைகளுக்கும், நீதிமன்ற ஆணைகளுக்கும் கீழ்ப்படியாமல் இருக்கும் பள்ளிகளையும், கல்லூரிகளையும் அரசே ஏன் ஏற்று நடத்தக் கூடாது என்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அவற்றை இந்த அரசு ஏற்று நடத்துமா என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இந்த நிர்வாகத்தின் சார்பிலே அவர்கள் சில குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே கல்லூரி தலைவர் நியமனத்திலே ஏற்பட்டிருக்கிற ஒரு பிரச்சினை குறித்தும் இந்த விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே சௌடேஸ்வரி கல்லூரியின் நிர்வாகம் அரசின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அதை மீறி நடப்பார்களானால், அதை ஏற்று நடத்தும் வழி முறைகளை அரசு பின்பற்றும்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, சேலம் சௌடேஸ்வரி நிர்வாகம் சீர்கெட்டிருக்கும் நிலையில் அதை எடுத்து நடத்துவதற்கான நடவடிக்கைகளை ஆய்ந்து வருவதாக அரசு குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இங்கே விவர அறிக்கையில் குறிப்பிட்டதோடு நிறுத்தப்படாமல், அந்தக் கல்லூரி நிர்வாகம் மிகவும் மோசமான நிலையில் நடந்து வந்திருக்கிறது என்பதை தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1980-ல் இந்தக் கல்லூரி நிர்வாகம் கல்லூரி முதல்வரைத் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்தது. அது ஆரம்பம். கடந்த 5 ஆண்டுகளில் 15 ஆசிரியர்களைத் தற்காலிக வேலை நீக்கம், நிரந்தரப் பணி நீக்கம் செய்திருக்கிறது. கடைசியாக 1—3—1985 அன்று இந்த நிர்வாகம் கல்லூரி முதல்வரை தன்னுடைய அறைக்கு வரவழைத்து. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் விளக்கம் கேட்க வேண்டும். அதைப்பற்றி வரலாறு சொல்லக்கூடாது. சுருக்கமாகச் சொல்லிவிட்டு விளக்கம் கேட்கலாம்.



**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, சுருக்கமாகக் கூறுவதற்கு முன்னால் அந்தக் கல்லூரியைப்பற்றி 25 பக்கத்திற்கு குறிப்புகள் வைத்திருக்கிறேன். நான் இரண்டே வரிகள் கூறுவதால், எதற்காக நான் கடமையாற்ற வந்திருக்கிறேனோ அது நிறைவேறாத காரணத்தால் ஒன்றிரண்டைப்பற்றியாவது கூறுவதற்கு அனுமதிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன். 1—3—1985 அன்று நாகராஜன் என்ற கல்லூரி முதல்வரை அந்த நிர்வாகம் செருப்பால் அடித்ததை, அவர் தமிழக கவர்னருக்கும், அரசுக்கும் தெரிவித்திருக்கிறார். அந்த நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுபோக இதுபோன்ற நடவடிக்கைகளில் அந்த நிர்வாகம் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. தேசத்திற்கு விரோதமாக. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒரு அறிக்கையே படிக்கிறீர்களே, விளக்கம் கேட்கும் நேரத்தில் அறிக்கை படிப்பது சரியல்ல. தகவல்கள் என்று சரித்திரத்தையே சொன்னால், என்ன அர்த்தம்? அந்தச் சொற்பொழிவு எல்லாம் கல்விபற்றி வரும்போது வைத்துக்கொள்ளலாம். விளக்கத்தைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** ஆகவே அந்த நிர்வாகத்தை அரசு ஏற்று நடத்துவதோடு, ஏற்று நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னால், கல்லூரி ஒழுங்காக தன்னுடைய நிர்வாகத்தை உயர்த்துகின்ற அளவில் அரசு தன்னுடைய கிரான்ட்டை நிறுத்துவதற்குரிய அதிகாரம் அரசுக்கு இருப்பதால், அதை நிறுத்தி, நிர்வாகத்தை அரசினுடைய ஆய்வுக்குக் கொண்டுவர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, தனியார் கல்லூரி நிர்வாகம் தவறு செய்கின்றபோது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதும், அல்லது முடிந்தால் அந்த நிர்வாகத்தை ஏற்று நடத்த வேண்டுமென்பதும் சரியான ஒன்றுதான். ஆனால் அதே நேரத்தில் கல்லூரியை மூடுகின்ற அளவுக்கு நாம் நடவடிக்கை எடுப்போமேயானால், அதனால் மாணவர்களும், அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்களும்தான் பாதிக்கப்படுவார்கள். ஆகவே இதிலே நாம் பொறுமையாகத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தவறுகள் செய்திருப்பார்களேயானால், அரசு நிச்சயமாக அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, தொந்தரவு கொடுத்த கல்லூரியை அரசு தன்னுடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும்; அதே நேரத்தில் மற்றவர்களும் அந்தத் தவறுகளுக்கும் காரணமாக இல்லாமல் இருக்க வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்திலே ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[1985 ஜூலை 18

(2) வில்லிவாக்கம் சிங்காரம்பிள்ளை பெண்கள் மேல்நிலைப் பள்ளி தாளாளர் மற்றும் குழு உறுப்பினர்களால் தலைமையாசிரியை மற்றும் ஆசிரியைகள் நியமனங்கள் போன்றவை உள்ளிட்ட முறைகேடுகள் குறித்து.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—

“ வில்லிவாக்கம் சிங்காரம்பிள்ளை பெண்கள் மேல்நிலைப் பள்ளி தாளாளர் மற்றும் குழு உறுப்பினர்களால் தலைமையாசிரியை மற்றும் ஆசிரியைகள் நியமனங்கள் போன்றவை உள்ளிட்ட முறைகேடுகளால் ஏற்பட்ட கடுமையான நிலை குறித்து ”.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, அரசு பிறப்பித்த ஆணை 780/80 அடிப்படையில், மூன்றாவது நிலையில் இருக்கக்கூடிய ஆசிரியர்களை இரண்டாவது நிலைக்கும், இரண்டாவது நிலையில் இருக்கக்கூடிய ஆசிரியர்களை ஒன்றாவது நிலைக்கும்தான் கொண்டுவர வேண்டும். ஆனால் சிங்காரம்பிள்ளை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மூன்றாவது நிலையிலிருந்த ஆசிரியையை தலைமை ஆசிரியையாக இப்போது பணியாற்றுவதற்கு அனுமதித்தார்கள். நல்லவேளை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை. அவர்களுடைய நியமனத்தை ஏற்காததோடு, சரியான முறையில் அங்கு தலைமை ஆசிரியையைப் போட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது முறையாக எடுத்திருக்கிறார்களா என்பதைக் குறித்து நாம் சட்டத் துறையுடன் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுடைய கருத்தைத் தெரிந்து கொண்டதற்குப் பிறகு, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, அங்கே நியமனங்கள் நடைபெறும் போது, ஆசிரியர் அல்லாத பணிகளுக்கு கம்யூனல் ரொட்டேஷன் பின்பற்றப் பட வேண்டும். அதோடு அது எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சு மூலமாகத்தான் எடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை இருக்கிறது. அங்கே கடைநிலை ஊழியர்களைப் பொறுத்தவரை, ஷெட்யூல்டு காஸ்ட்டைச் சேர்ந்தவரை

@ 148 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1985 ஜூலை 18] [திரு. க. சுப்பு]

இந்தத் தடவை எடுக்க வேண்டும். அப்படி பியூனுக்குரிய வேலைக்கு ஆள் எடுக்கும்போது, தவறுதலாக ‘ நான்-அவைலபிலிட்டி சர்ட்டிபிகேட் ’ வாங்குகிறார்கள். இந்த வேலைக்கு ஆள் கிடைக்காமல் போகுமா என்று யோசிக்காமல் அதற்கு ஒரு ‘ நான்-அவைலபிலிட்டி சார்ட்டிபிகேட் ’ வாங்கி, முஸ்லிம் ஒருவரை நியமித்திருக்கிறார்கள். எஸ்.சி. போட வேண்டிய இடத்திலே முஸ்லிம் ஒருவரை நியமித்திருக்கிறார்கள். அது ஆண்கள் பள்ளியிலே நடந்திருக்கிறது. பெண்கள் பள்ளியைப் பொறுத்தவரையில், ஒருவரை நியமிக்க விரும்புகிற காரணத்தால், எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் பட்டியல் கேட்கிறார்கள். முதல் முறை, இரண்டாவது முறை தான் விருப்பப்பட்டவர் வரவில்லை. பிறகு மூன்றாவது முறை கேட்டு அதிலே அவரை நியமிக்கிறார்கள். இதற்கிடையே பணியிடம் ஆறு மாதம் காலியாக இருந்த காரணத்தால், முன்தேதியிட்டு ஒருவரை தவறாகக் கையெழுத்துப் போடச் சொல்லி சம்பளத்தைப் பெறுவதற்குரிய முயற்சி நடைபெற்றிருக்கிறது. அதோடு இன்டக்டெட் ஆசிரியர்களை ‘ ரிவர்ட் ’ பண்ணக் கூடாது என்று விதி இருக்கிறது. ஆனால் சிங்காரம்பிள்ளை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இன்டக்டெட் டீச்சராக இருந்த சிவகாமி என்பவரை ‘ ரிவர்ட் ’ பண்ணிவிட்டு அந்த இடத்திலே சுசிலா இராமகிருஷ்ணன் என்பவரைப் போட்டிருக்கிறார்கள் 16 மாதங்கள், இன்ஸ்பெக்டர் ஆஃப் கேர்ள்ஸ் ஹை ஸ்கூல்ஸ் சம்பளம் கொடுப்பதற்கு மறுத்தும்கூட, இப்போது அரசாங்கத்திலே இருந்து ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-35)

அதைப் போலவே சுகுணா என்ற ஆசிரியர் ‘ ரிவர்ட் ’ செய்யப்பட்டு ஒரு போஸ்ட்-கிராஜுவேட் ஆசிரியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். கல்வித் துறையிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவரை அந்தப் பள்ளியின் கரெஸ்பான்டென்ட் ஆக நியமித்திருப்பதால், அவர் தவறான முறையில் மேலே இருக்கிற அதிகாரிகளை எல்லாம் அணுகி காரியங்களைச் செய்துவிடுகிறார். எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சிலிருந்து வந்ததாகச் சொல்லி தவறான பட்டியலைக் காட்டி சிலரை நியமித்திருக்கிறார். இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்கெனவே விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் போராட்டமே நடத்தியிருக்கிறார்கள். எனவே இதைப்பற்றி முறையாக ஒரு உயர்மட்ட அதிகாரி மூலம் விசாரணை செய்து பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

தாளாளர் மற்றும் குழு உறுப்பினர்களால் தலைமையாசிரியை மற்றும் ஆசிரியைகள் நியமனங்கள் போன்ற உள்ளிட்ட முறைகேடுகள் குறித்து

[1985 ஜூலை 18

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்படிப்பட்ட பல்வேறு குற்றச் சாட்டுகள் இங்கேயும் வெளியேயும் அந்த நிர்வாகத்தின்மீது எழுந்ததோடு, எங்கள் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டிருக்கிற காரணத்தால், கூடுதல் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் இதுகுறித்து விசாரணை செய்து அறிக்கை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்

### 6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1985).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1985) ஆய் விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகைமுறை கள்) திருத்தச் சட்ட முன்வடிவை நான் ஆதரிக்கிறேன். இம்மாநிலத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்படாத பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர் கள் குத்தகை பாக்கிகளை தவணை முறையில் செலுத்த கால நீட்டிப்புக்காக இச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது. அதன்படி 1984 ஆம் ஆண்டு ஜூன் 30 ம் தேதிக்குள் கட்ட வேண்டிய தவணையை 1985 ஆம் ஆண்டு செப்டம்பரில் கட்டுவதற்கும், 1984 டிசம்பர் 31-க்குள் கட்ட வேண்டிய பாக்கி யை 1986 ஆம் ஆண்டு மார்ச் 31-க்குள்ளும் கட்டுவதற்கும், அதைப் போலவே

@ 149-151 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1985 ஜூலை 18] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

1985 ஆம் ஆண்டு ஜூன் 30-க்குள் கட்ட வேண்டிய தவணையை 1986 செப்டம்பர் 30-க்குள் கட்டவும் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் 31-க்குள் கட்ட வேண்டிய தவணை பாக்கியை 1987 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-க்குள் கட்டவும், அதனையும் வட்டியின்றி செலுத்துவதற்கும் இந்தச் சட்ட முன் வடிவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் வரவேற்கிறேன்.

ஆனால் இதைக் குறித்து ஒரு கருத்தை மட்டும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். இவ்வாறு பொதுவாகக் கால நீட்டிப்பு செய்து தவணை முறையில் கட்டுவதற்கு வசதி செய்திருந்தாலும்கூட, இப்போது பயிரிடக் கூடியவர்கள், அதாவது குத்தகைதாரர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதை அரசு முன்கூட்டியே சிந்தித்து அதற் குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்களும் வந்திருப்பதால், இருக் கின்ற நிலைமையை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதிலும் குறிப் பாகக் கடைமடைப் பகுதிகளில் இருக்கும் குத்தகைதாரர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மேட்டூரில் இன்றையதினம் தண்ணீர் திறந்து விடப்பட்டாலும்கூட, தஞ்சை மாவட்டத் தின் கடைமடைப் பகுதிகளில், அதாவது டெல்டாப் பகுதிகளில் இன்னும் தண்ணீர் வரவில்லை. மேட்டூரிலேயே 7,500 கன அடி தண்ணீர்தான் விடப் படுகிறது. பொதுவாகவே வழக்கமாக இந்த நேரத்தில் விடப்படும் தண்ணீ ரின் அளவு சுமார் 10,000 முதல் 15,000 கன அடியாக இருக்கும். அப்போது தான் கடைமடைப் பகுதிகளில் உள்ளவர்கள் பயிரிட முடியும். 7,500 கன அடி மட்டுமே விடப்படுவதால் அது போதுமானதாக இருக்கப் போவதில்லை. இதன் காரணமாகவே நடவு செய்ய வேண்டிய பணிகள் பாதிக்கப்பட்டிருக் கின்றன. எனவே இந்த நேரத்தில் கடைமடைப் பகுதி பாதிக்கப்படும் சூழ் நிலை இருப்பதால், பயிர் விளையாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி பயிர் பாதிக்கப்பட்டால், இந்தத் தவணையைக்கூட எப்படி திருப்பிக் கட்ட முடியும் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே அரசு அவசர அவசரமாக எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை இப்போதே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-40)

17 ஆம் தேதி மாலை நிலவரப்படி மேட்டூர் அணையில் 68.90 அடி தண்ணீர் இருந்தது. நீர் வரத்தோ 1,500 கன அடி. ஆனால் 7,000 கன அடி நீரை வெளியே விடுவதால் அதேகமாக அணையே வற்றக்கூடிய சூழ்நிலை

ஏற்படும். ஆகவே கர்நாடக மாநிலத்தோடு அவசரமாகப் பேச்சுவார்த்தை நடத்தி வரக்கூடிய தண்ணீரின் அளவை அதிகப்படுத்த முழுமூச்சாக நடவடிக்கை எடுத்தால்தான், பயிர்களைக் காப்பாற்ற முடியும், விவசாயிகளையும் காப்பாற்ற முடியும், பயிரிடும் குத்தகைதாரர்களும் இந்த ஆண்டு தவணையைச் செலுத்த முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்ற எதிர்பார்ப்போடு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு முக்கியமான காரணங்களுக்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே வறட்சியால், மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பல்வேறு நிவாரணங்கள் அளிக்கப்படுகின்றன. மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இது பொருந்தாது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத்தான் சலுகை அளிக்கப்படுகிறது. வெள்ளத்தால் பாதிக்கப்படாத பகுதியில் இருப்பவர்களுக்கு தவணையை ரத்து செய்வதற்கு இடமில்லை. அப்படிப்பட்டவர்களுக்குச் சலுகை வழங்கப்படாது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் நிலச்சுவாந்தார்களுக்குக் குத்தகை கொடுக்க வேண்டும் என்பது நியாயத்தின் அடிப்படையில் இருந்தாலும், கஷ்டம் இருந்தால் தவணை முறையில் கொடுக்கலாம் என்ற அடிப்படையில், 30-6-1983 வரை கட்டுக் குத்தகை செலுத்தத் தவறியிருந்தாலும், நான்கு தவணைகளில் செலுத்தலாம் என்று அரசாங்கம் சலுகை அளித்திருக்கிறது. இது கட்டுக் குத்தகைதாரர்கள் நலன் கருதி இந்த அரசாங்கம் கருணையோடு எடுத்த நடவடிக்கையாக இருந்தாலும், இதிலே சில கஷ்டங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் உணர்வதைப் போல, உறுப்பினர்கள் உணர்ந்த காரணத்தால், இன்றையதினம் மேலும் ஆறு மாதங்களுக்குக் கால நீட்டிப்புக் கொடுத்து அப்போது வசூலித்தால் போதும் என்று சலுகை காட்டியிருக்கிறது. ஏற்கெனவே குத்தகை செலுத்தத் தவறியிருந்தால், அவர்களை வெளியேற்றலாம் என்று இருந்த காரணத்தால், அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இப்போது கால நீட்டிப்பு வந்திருப்பதால், மீண்டும் 'அவர்களைக் கொண்டு வந்து அந்தக் கட்டுக் குத்தகைதாரர்களிடம் அந்த நிலத்தை ஒப்படைக்கும் வகையில் அரசாங்கம் சலுகை அளித்து இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்ட குத்தகைதாரர்கள் பலன் பெறுவார்கள். மேலும் கால நீட்டிப்பு இருப்பதால், பலன் பெறுவார்கள் என்பது வரவேற்கக்கூடிய அம்சம்.



ஆனால் கட்டுக் குத்தகைதாரர்கள் நில உடைமையாளர்களுக்குக் கொஞ்சம் 'டிமிக்கி' கொடுக்கிறார்கள். இதிலே எனக்கு அனுபவம் இருக்கிறது. நானே வழக்கறிஞராக இருந்து சில வழக்குகளை நடத்தியிருக்கிறேன். ஒரு ஆசிரியர் இரண்டு, மூன்று ஏக்கர் நிலம் வைத்திருப்பார். அவரால் இந்தக் குத்தகையை வாங்க முடியாது. இப்படி பலவீனமாக சில பிரிவினர் இருக்கிறார்கள். நான் பெரிய பணக்காரர்களை, பெரிய நிலச்சுவாந்தார்களைச் சொல்லவில்லை. அவர்களில் பல பேருக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் விதிவிலக்கு அமுல் ஆகாததால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்குக் குத்தகைப் பணம் கிடைக்கவில்லை என்று புகார் சொல்லும் நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சிறு நில உரிமையாளர்களுக்குக் குத்தகைப் பணத்தைக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்காதவர்களை நிலத்திலிருந்து வெளியேற்ற வேண்டும். அதிலே சலுகை காட்டத் தேவையில்லை. அப்படிப்பட்ட இடங்களில் கொஞ்சம் கறாராக இருந்தால் நல்லது. சில இடங்களில் இப்படி பாதிக்கப்பட்டவர்கள் அந்த நிலத்தை விற்றுவிடலாம் என்று கருதினாலும் விற்க முடியவில்லை. நகர்ப்புறங்களில் வீட்டைக் காலி செய்ய பகடி கேட்பதைப் போல கட்டுக் குத்தகைதாரர்கள் நில உரிமையாளர்களிடம் பகடி கேட்கிறார்கள். இப்படி கட்டுக் குத்தகைதாரர்கள் கம்பு வைத்துக்கொண்டு அடிதடி ஆட்களாக இருக்கிறார்கள். ஆகவே இரண்டு, மூன்று ஏக்கர் வைத்திருக்கக்கூடிய சிறு நில உரிமையாளர்களுக்குக் குத்தகை தருவதில் தவணை தேவையில்லை. குத்தகைதாரர்கள் அந்த நிலத்தின் விலையைவிட அதிகப் பணத்தை காலி செய்வதற்காகக் கேட்கிறார்கள். அதனால் நில உரிமையாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் குத்தகைதாரர்கள் அல்ல, குத்திட்டிக்காரர்கள். ஆகவே இப்படிப்பட்ட சாதாரண சிறு நில உரிமையாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று சுட்டிக் காட்டி இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர்கள் பற்றி கொண்டுவரப்பட்டிருக்கிற திருத்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். குத்தகைதாரர்கள் திருத்தச் சட்ட முன்வடிவு வரவேண்டியதன் இன்றியமையா தன்மையை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவ்வப்போது குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க எந்தெந்த வகையிலே இயலுமோ அந்தந்த வகையிலே தமிழக அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது

(முற்பகல் 11-45)

அந்த அடிப்படையிலேதான், மேலும் அவர்களுக்குப் பாதுகாப்பு தரவும் வேண்டும். அதே சமயத்தில் அதுவரை ஏற்கெனவே நிலுவையில் இருக்கின்ற தொகையை ஒட்டுமொத்தமாக ஒரே தடவையில் செலுத்துகின்ற அளவுக்கு நில உடைமையாளர்கள் வற்புறுத்தி அவர்களைத் தொல்லைக்கு ஆளாக்குவார்களோ என்று கருதித்தான், தவணை முறையிலே தள்ளிப் போட்டிருக்கிறோம். அந்த வகையிலேதான் இதுவரையிலே இருக்கின்ற நிலுவையை மற்ற பாக்கிகளை 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 29/84-ல் குறிப்பிட்டுள்ளபடி, குத்தகை பாக்கியை நான்கு சம அரை ஆண்டுத் தவணைகளில் தர வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். முதல் தவணை 15-11-1985 அன்று அல்லது அதற்கு முன்னர், இரண்டாவது தவணை, 31-3-1986 அன்று அல்லது அதற்கு முன்னர், மூன்றாவது தவணை 15-11-1986 அன்று அல்லது அதற்கு முன்னர், நான்காவது தவணை 31-3-1987 அன்று அல்லது அதற்கு முன்னர் தரவேண்டும் என்று, அதற்கு வழிவகுக்கின்ற முறையிலேதான் இந்தத் திருத்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. சாதாரணமாகவே இதைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூட இங்கே சொல்லவில்லை என்றாலும், வெளியிலேயும், வேறு பல இடங்களிலேயும் அப்படி எடுத்துச் சொல்கின்றார்கள். இது அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணமோ அல்லது அரசாங்கம் கொடுத்து திருப்பி வாங்க வேண்டிய நிலைமையில் இருப்பதோ அல்ல. இது நில உடைமையாளர்களுக்கு குத்தகைதாரர்கள் தரவேண்டிய ஒன்று. ஆகவே குத்தகைதாரர்கள் அதைத் தர வேண்டியதில்லை என்று சட்டம் இயற்றுவோமானால் நிலவுடைமைக்காரர்கள் பாதிக்கப்படுவார்கள். நிலவுடைமைக்காரர்கள் எல்லாம் பெரும் பணக்காரர்கள் அல்லது வசதி படைத்தவர்கள் என்று நாம் சொல்ல முடியாது. விதவைத் தாய்மார்கள், சாதாரணமானவர்கள் எல்லாம் இருக்கின்றார்கள்.

அரை ஏக்கர், ஒரு ஏக்கர், ஒன்றேகால் ஏக்கர் என்று வைத்துக்கொண்டு, அதைக் குத்தகைக்கு விட்டு, வாழ்க்கை நடத்த வேண்டிய நிலையில் இருக்கின்றவர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் பெண்களும் இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் குத்தகைப் பணம் தாராமல் இருந்தால், அவர்கள் வாழ்க்கை நடத்துவதே மிகவும் கடினமாக இருக்கும். எனவே அவர்களையும் நாம் ஓரளவுக்குக் காப்பாற்ற வேண்டும். அதே நேரத்தில் குத்தகைதாரர்களுக்கு ஏற்படுகின்ற சூழ்நிலைகளையொட்டி பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் இதை வைத்திருக்கிறோம். அவர்களுக்கு இன்னமும் சலுகைகள் அளித்திருக்கிறோம். ஏற்கெனவே இருந்த



நிலைமைகள் எல்லாம் மாறி மாறி, இப்போது 75, 25 என்று ஆகியிருக்கிறது நிலவுடைமையாளர்களுக்கு 25 பங்கும், குத்தகைதாரர்களுக்கு 75 பங்கும் அளிக்க வேண்டும் என்றும், அதற்கு மேலும் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு, 25 விழுக்காடு பாதிக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலை ஏற்படுமானால், எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவுக்கு குத்தகையிலேயும் தள்ளுபடி செய்யலாம் என்றெல்லாம் பாதுகாப்புச் சட்டம் வைத்திருப்பதன் காரணமாக அவர்களுக்கும் குறைபாடு இல்லாமலும் அதிகக் கஷ்டம் இல்லாமலும் நில உடைமையாளர்களுக்கும் கஷ்டங்கள் இல்லாத அளவுக்கும்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினையையொட்டி, இதோடு சேராவிட்டாலும்கூட, இதனுடைய விளக்கத்தைப் பெறுகின்ற வகையில் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஒரு பொருளைக் குறிப்பிட்டார்கள். காவிரி ஆற்றுத் தண்ணீர் இப்போது இருக்கின்ற அளவிலே 120 அடி கொள்ளளவு மொத்தம் இருக்க வேண்டும் இன்றைய நிலையில் 68.5 அடிக்குத்தான் தண்ணீர் அதிலே வந்து சேர்கின்ற அளவுக்கு இருக்கின்றது. ஆனால் வெளியிலே 7,515 கியூசெக்ஸ் விடுகிறோம். குறிப்பாக தஞ்சை மாவட்டப் பகுதி, திருச்சி மாவட்டப் பகுதி, காவிரி ஆற்று தண்ணீர் பாசனப் பகுதி பற்றியெல்லாம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் எடுத்துச் சொன்னமாதிரி, விதை விடுதல், நடவு நடுதல் ஆகிய வேலைகள் நடக்கின்ற இந்தக் காலத்திற்குக் கூடுதலாகத் தண்ணீர் தேவைப்படுகிறது என்று கருதி, நாம் இப்போது கூடுதலாகத் தண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் மழை இல்லை என்கின்ற நிலவரம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆக இருக்கின்ற அளவைப் பொறுத்து எவை எவைக்கு வெளியிடலாம் என்று கணக்கிட்டுப் பார்த்து, வெளியிட்டுக்கொண்டிருக்கின்றார்கள். நமக்கு அப்படிப் பற்றாக்குறை ஏற்படுகின்றபோதெல்லாம்கூட கர்நாடக முதல்வர் அவர்களோடு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பேசும் போதெல்லாம்கூட, நம்முடைய நிலைமைகளை அவ்வப்போது அறிந்து ஓரளவுக்கு அவர்களும் கூடுதலாகத் தண்ணீர் பெற்றுத் தருகின்றார்கள். அப்படி நெருக்கடி நிலைமைகள் ஏற்படும்போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்களிடம் பேசுவார்கள். ஏற்கெனவே மூன்று முறை, நான்கு முறை அவர்கள் நமக்குத் தண்ணீர் தந்து உதவியிருக்கின்றார்கள். அப்படி அவர்கள் உதவுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது கர்நாடக மாநிலத்திற்கும் தமிழக மாநிலத்திற்கும் அப்படிப்பட்ட ஒரு நல்லுறவு நீடித்துக்கொண்டு வருகிறது. காவிரி ஆற்று நீர் பங்கீடு பிரச்சினை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜுலை 18

யைக்கூட மிகவும் சுமுகமாக நாமே தீர்த்துக்கொள்ளலாம் என்ற கருத்தை கர்நாடக மாநிலத்தினுடைய முதலமைச்சர் திரு. ஹெக்டே அவர்களும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களும் அதற்கு இசைவு அளித்திருக்கின்றார்கள். விரைவிலே அதற்கு ஒரு கூட்டத்தைக் கூட்டிச் செய்யலாம் என்று தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றபோது, அன்றாடம் நிலைமைகளைக் கண்காணித்துக்கொண்டு குறுவைப் பயிர், சம்பா பயிர் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு எந்த அளவுக்கு முடியுமோ அதை அரசு கண்காணித்து நீர்ப் பாசனத்திற்கு ஏற்றபடி வசதிகளை அரசு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்து இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை ஏற்று பேரவைக்குத் திருப்பி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 43/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 43/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.



1985 ஜுலை 18]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 43/1985) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 11-50)

(2) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நிலத்தின்மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1985).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, நிலச் சீர்திருத்த (நிலத்தின்மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, நிலச் சீர்திருத்த (நிலத்தின்மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. க. சுப்பு : மேலவைத் துணைத் தலைவரவர்களே, இப்போதிருக்கிற சட்ட விதிகளின்படி பப்ளிக் டிரஸ்டாக இருந்தாலும், கல்வி நிறுவனங்களாக இருந்தாலும், மருத்துவ மனைகளாக இருந்தாலும், அவற்றுக்கு எல்லாம் நிலத்தை வாங்கக்கூடிய அதிகாரமில்லை. அதை மாற்றி, நியாயமான காரணங்களுக்காக அவையெல்லாம் நிலத்தைப் பெற சட்டத் திருத்தம்

---

@ 151-153 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வேண்டுமென்ற முறையில், இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. Even for bonafide purposes வாங்க முடியவில்லை. இதனால் 'மாலபைடி பர்ப்பசஸ்'-க்குக்கூட வாங்குகிறார்கள் என்பது தெரிகிறது. கல்வி நிறுவனங்கள் என்று வைத்துக்கொண்டு, பப்ளிக் டிரஸ்ட் என்று வைத்துக் கொண்டு, மருத்துவ மனை என்று வைத்துக்கொண்டு அதிலே பல தவறுகள் நடக்கின்றன. இதை உணர்ந்திருப்பதால், (even for bonafide purposes) நியாயமான காரணங்களுக்கு இடையூறாக இருப்பதால், முக்கியமான காரணங்களுக்காக விதி விலக்கு கொடுக்கலாம் என்று இந்தச் சட்டத் திருத்தத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. குறிப்பாக என்னுடைய கருத்து, மருத்துவமனை வைப்பதற்கு, மருத்துவக் கல்லூரிகள் நிறுவுவதற்கு என்று இது வந்திருப்பதால், தமிழ் நாட்டில் மேலும் மருத்துவக் கல்லூரிகள், மருத்துவ மனைகள் வர இது வழி வகுக்கும். அப்படிப்பட்டவர்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். கல்வி நிறுவனங்கள் என்ற பெயரில் ஏதாவது ஒன்றை ஆரம்பித்தால், அதை ஊக்குவிக்க வேண்டியதில்லை. பல பேர்; அதன்மூலம் அந்தஸ்து, சொத்துக்கள் சேர்க்க வேண்டுமென்று ஆரம்பிக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காக அரசாங்கமே நினைத்தால்தான் கொடுக்க முடியும் என்று இருக்கிறது. அந்த அடிப்படையில் சட்டத் திருத்தம் வந்திருப்பது ஒரு பாதுகாப்பு. அதைப் பக்குவமாகப் பயன்படுத்த வேண்டும். மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் நம்முடைய தேவைக்கேற்ப ஆரம்பிக்க ஊக்குவிக்கும் வகையில் இந்தச் சட்டத் திருத்தம் அமைந்திருக்கிறது. ஆகவே இதை வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இந்தச் சட்டத்தினுடைய உண்மையான நோக்கத்தைச் சிறப்பாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படை நோக்கம், கல்வி விரிவாகவும், சிறப்பாகவும் நடைபெற பல்வேறு வகைகளிலே அதற்கு ஊக்கம் தர வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதாகும். மருத்துவ மனை போன்ற நோய் தீர்க்கும் நிறுவனங்களுக்கும் அதிக ஊக்கம் தர வேண்டியவர்களாக இருக்கிறோம். பொருள் வசதி படைத்தவர்கள் பல்வேறு அறக் கட்டளைகள் அமைக்கும்போது, அதன்மூலம் சாதாரணமாக அன்னச் சத்திரம் வைப்பதை விட, பள்ளிகள், கலைக் கல்லூரிகள், தொழில் நுட்பப் பயிலகங்கள், மருத்துவ மனைகள் போன்றவற்றை வைக்க ஊக்குவிப்பது மிக மிக நல்லது. ஏற்கெனவே



நாம் ஓரளவுக்கு உச்ச வரம்புச் சட்டத்திலே அனுமதித்திருக்கிறோம். பல்கலைக் கழகங்களோடு இணைக்கப்பட்ட கல்லூரிகள் 40 ஏக்கர்; உயர்நிலைப் பள்ளிகள் 20 ஏக்கர்; ஆரம்பப் பள்ளிகள் 20 ஏக்கர்; மாணவர்கள் தங்கும் விடுதி 25 ஏக்கர்; தொழில் நுட்பப் பயிலகங்கள் 25 ஏக்கர் வைத்திருக்கலாம் என்று அனுமதித்திருக்கிறோம். இந்த வசதி படைத்த நிறுவனங்கள் மிக மிகக் குறைவு. பல கல்லூரிகள், பல பள்ளிகளுக்கு ஒரு குழி நிலம்கூட இல்லாத அளவுக்கு இருக்கிறது. ஆனால் அவர்கள் விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று சொல்லும்போது, 1-3-1972-க்குப் பிறகு எந்த அறக் கட்டளையும் நிலத்தைப் புதிதாக வாங்கக்கூடாது என்று வைத்திருக்கிறோம். இந்த நிலையில், கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள் ஆகியவற்றை பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் விரிவாக்கம் செய்வதற்குத் தேவையான நிலத்தை, அரசாங்கத்திற்கு எழுதி, அதில் நியாயம் இருக்கிறதா என்று கண்டறிந்து, அரசாங்கம் ஒப்புக்கொண்டதற்குப் பிறகு வாங்கலாம். ஆனால் அவர்கள் விருப்பப்படி 500 அல்லது 1,000 ஏக்கர் நிலம் கேட்டால், அதை அரசு அனுமதிக்காது. அவர்கள் எந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொடுக்கப் போகிறார்களோ, அதற்கு எவ்வளவு தேவைப்படுகிறதோ அதனைப் பெறும்

(முற்பகல் 11-55)

வகையில், அதற்கு அங்கிகாரம் அளிக்கும் வகையில் விதி இடம் பெறும் வகையில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவினை இந்த மன்றம் ஏற்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, நிலச் சீர்திருத்த (நிலத்தின்மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1985) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1985)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

@ 153-156 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. க. சுப்பு: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற பப்ளிக் சேரிட்டி, எஜுகேஷனல் இன்ஸ்டிட்யூசன்ஸ், ஹாஸ்பிட்டல்ஸ், இன்டஸ்ட்ரியல் அன்டர்டேக்கிங்ஸ் போன்ற அமைப்புகள் எல்லாம் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக நிறுவப்பட்டிருக்கின்றன. கல்விப் பணி, மருத்துவப் பணி போன்ற நல்ல நோக்கங்களுக்காகச் செயல்படும்போது அதற்குப் பணம் தேவைப்படுகிறது. தவிர்க்க முடியாத நிலையில் இப்படி பணம் தேவைப்படும்போது, இந்த அமைப்புகளிடம் வேக்கன்டாக, வீணாக தேவையில்லாமல் இருக்கின்ற நிலங்களை விற்று நல்ல காரியத்திற்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்துவதற்காக இச்சட்டமுன்வடிவில் வழிவகை செய்யப் பட்டிருக்கிறது. இன்றைக்கு ரிலிஜியஸ் என்டோமென்ட் துறையை எடுத்துக் கொண்டால், நிறைய நிலங்கள் வீணாக இருக்கின்றன. அவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட நல்ல நோக்கங்களுக்காக மருத்துவ சேவை, கல்வி சேவை போன்றவைகளை ஏற்படுத்துவதில்லை. அதுபோல் அநாதைகளுக்கும் உதவுவதில்லை. இப்படிப்பட்ட நல்ல காரியங்களை அவர்களும் செய்யலாம். இன்றைக்கு நல்ல நோக்கங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள் தங்களிடம் வீணாக இருக்கின்ற நிலங்களை விற்று அந்தவகையில் நோக்கத்தை எய்துவதற்கு வழிவகை இல்லை. அதற்கு வழிவகை செய்யும் வகையில் இச்சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இதன்படி அரசு பெர்மிஷன் கொடுத்தால்தான் அவர்கள் விற்க முடியும். இப்படிப்பட்ட ஒரு நல்ல விதியை வைத்திருப்பது நல்லதுதான். இல்லாவிட்டால் அவர்கள் இஷ்டப்படி விற்றுவிடுவார்கள். அதைத்தான் நாம் அனுபவத்தில் பார்த்து வருகிறோமே. நியாயமான நல்ல நோக்கங்களை அடைய விதி விலக்கு அளிப்பதுடன் அரசு அனுமதி அளிக்கும் வகையில் கல்வி நிறுவனங்களுக்காக வேண்டியும், தூய நோக்கங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவனங் களுக்காக வேண்டியும் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த நகர்ப்புற நிலம், உச்சவரம்பும் முறைப்படுத்துதலும் திருத்தச் சட்ட முன்வடிவை நான் வர வேற்று அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொல்லியதுபோல், முக்கியமான நோக்கங் களை நிறைவேற்றுகின்ற வகையில் இடைக்காலத்தில் ஏற்பட்ட சில இடை யூறுகளைக் களையும் வகையில் இச்சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக் கிறது. நான் முன்னாலேயே உரையிலே கூறியபடி, அறநிலையங்களுடைய சீரிய நோக்கங்கள் சிலவற்றை நிறைவேற்றும் வகையில் இது கொண்டு வரப் பட்டிருக்கிறது. புதிதாக பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற

வைகளை அமைக்க முன்வருகின்ற வகையில், பல்தொழில் பயிலகங்களைப் புதிதாக அமைக்க முன்வருகின்ற வகையில், நிலைமைகள் வரும்போது, கல்வித் துறையின்மூலம் சிலபல நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. ஒரு பொறியியல் கல்லூரி வைக்க வேண்டுமென்றால், கார்ப்பரேஷன் என்றால் 100 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். அதுவே கிராமப்புறம் என்றால் 150 ஏக்கர் இருக்க வேண்டும். இதுபோன்ற அமைப்புகள் எல்லாம் நீண்ட காலத்திற்கு நிலைத்து நின்று சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்ற அடிப்படையின்பேரில் தான், இவ்வளவு ஏக்கர் நிலம் இருந்தால் தான் அனுமதிக்கப்படும் என்கிற வகையில் வழிவகை செய்திருக்கிறோம். அதுபோல் பல்தொழில் பயிலகங்களை எடுத்துக்கொண்டால், நகர்ப் புறங்களில் ஆண்களுக்காக என்றால் 15 ஏக்கர் இருக்க வேண்டும், அதுவே பெண்களுக்காக என்றால் 10 ஏக்கர் இருக்க வேண்டும். அதுவே கிராமப்புறங்களில் என்றால் ஆண்களுக்காக என்றால் 25 ஏக்கரும், பெண்களுக்காக என்றால் 15 ஏக்கரும் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட அமைப்புகளை டிரஸ்டிகள் அமைக்க வேண்டுமென்று முன் வரும்போது, இன்றைக்கு ஏராளமாக இருக்கின்ற நிலங்களை விற்கவோ வாங்கவோ முடியாமல் சிரமப்படுகிறார்கள். இன்றைக்கு அறநிலையத்தினுடைய நிலத்தை விற்று கல்வி நிறுவனங்களை அல்லது தொழிற்சாலைகளை தொடர்ந்து நடத்துகின்ற அடிப்படையில் நோக்கங்களை அடைகின்ற வகையில் இதில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் நிலத்தை விற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது. தொழிற்சாலையில் நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது, மூடக் கூடிய சூழ்நிலை வருகிறது, தொழிலாளர்கள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்கள் வரும்போது, அரசாகப் பார்த்து, ஆடிட் ரிப்போர்ட்டுகளை எல்லாம் பார்த்து, அந்தக் குறிப்பிட்ட நிறுவனத்திடமிருந்து நிலத்தின் ஒரு பகுதியை அடகு வைப்பதன் மூலமோ, அதன்மூலம் கடன் பெறுவதன் மூலமோ அல்லது விற்பதன் மூலமோ அந்த அமைப்பு சிறப்பாக நடைபெற முடியும் என்கிற நிலை ஏற்பட்டால், அத்தகைய நிலைக்கு வழிவகை இருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இச்சட்டத் திருத்தம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது.

(நண்பகல் 12.00)

ஆகவே விற்பவர்கள் யார் என்பதையும் எந்த நோக்கத்தோடு விற்கிறார்கள் என்றும் இந்தச் சட்டத்தின்மூலம் கண்காணிக்க முடியும். அதேபோல் வாங்குகிறவர்களும் எதற்காக வாங்குகிறார்கள், எப்படிப் பயன்படுத்துகிறார்கள்



என்பதையும் கவனிக்கிற வகையில், விதிமுறைகள் வகுக்கப்பட்டு நிபந்தனைகள் இருக்கின்றன. எனவே, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 45/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) 1985 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல், சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1985).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

திரு. க. சுப்பு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு செங்கை மாவட்டம் சைதாப்பேட்டை தாலுக்காவில், 12 ஊராட்சிப் பகுதிகள் சென்னையில் சேர்க்கப்பட்டதன் விளைவாக, ஆர்டினரி, ஒரிஜினல், சிவில் ஜுரிஸ்டிக்ஷன் இப்போது நகர எல்லை முழுவதும் வருகிறது. நகரில் 12 பஞ்சாயத்துப் பகுதிகள் சேர்க்கப்பட்டிருப்பதால், இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, ஹைக்கோர்ட்டுக்கு வேலைப்பளு அதிகமாகிவிடும். சிட்டி சிவில் கோர்ட்டுக்கும் அதிகமான வேலைப் பளு வரும். ஆகவே அதற்கேற்ற வகையில் அங்குள்ள வேலைகளுக்கேற்ப ஊழியர்களும் அதிகமாக நியமிக்கப்பட வேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் நீதிமன்றங்களில் ஊழியர்கள் பொதுவாக குறைவாக இருப்பதால், பொதுமக்கள் ரொம்ப சிரமப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. காப்பியிஸ்டுகள் ரொம்பக் கொஞ்சமாக இருக்கிறார்கள். ஆகவே கீழே வேலை செய்யும் ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தால்தான், இந்த வேலைப்பளு சுமையாக இருக்காது. இதை அதிகரிப்பது அமைச்சர் மற்றும் அரசாங்கத்தின் கடமையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையைப்போல மற்ற இடங்களில் உள்ள

* 80-81 ஆம் பக்கங்களில் இணைப்பு V] ஆக அச்சிடப்பட்டுள்ளது.



கோர்ட்டுகளில் ஊழியர் பற்றாக்குறை இருக்கிறது. இதனால் கேஸ்கள் அதிகமாக பெண்டிங்காக இருக்கின்றன. ஆகவே நிறைய ஊழியர்கள் வேண்டும்.

இப்போது முகவை மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து விட்டதால், ஸ்ரீவில்லிபுத்தூருக்கான மதிப்பு குறைந்திருக்கிறது. ஆகவே அந்த மரியாதையை காப்பாற்ற அங்கே ஸ்ரீவில்லிபுத்தூரில் மாவட்ட நீதி மன்றம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டிஸ்டிரிக்ட் மற்றும் செஷன்ஸ் கோர்ட் கொண்டுவர வேண்டும். அதை ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரி இந்தச் சட்ட முன் வடிவை ஆதரித்து அமைகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கூறியதைப்போல, 19 கிராமங்கள் சென்னை மாநகராட்சியுடன் எம்.எம்.டி.ஏ. வுடன் உட்படுத்தப் பட்டு ஏற்கெனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஹைக்கோர்ட்டுடைய சிவில், ஒரிஜினல், ஜுரிஸ்டிக்ஷனுடைய அதிகார வரம்பும் அதையொட்டி சிட்டி சிவில் கோர்ட்டின் அதிகார வரம்பும், கிரிமினல் கோர்ட்டின் அதிகார வரம்பும் இந்தப் பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட வேண்டு மென்று இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்ட முன்வடிவை ஏற்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல், சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவர், அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல், சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1985) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1985) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 19—7—1985, வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-04)

## 7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

275. தருமபுரி மாவட்டத்திலுள்ள கரியமங்கலத்திற்கு என்று தனியாக ஒரு ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தை அமைப்பது தொடர்பாக ஊர் வளர்ச்சித் துறையின் 23—5—1985 ஆம் நாளிட்ட, 402 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].



### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

* 190. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1985).

* 191. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1985.)

* 192. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1985).

* 193. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1985).

194. உடுக்குறியிடாத வினாக்கள் 3 முதல் 8 வரையிலான விடைகள்.

## இணைப்பு

[125 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

சேலம் சௌடேஸ்வரி கல்லூரியின் முதல்வர் டாக்டர் ட்டி. சி. எ. ஜி. நாகராஜன் என்பவரைச் சில காரணங்களைக் காட்டி கல்லூரியின் நிர்வாகக் குழு தனது 5—6—1985 நாளைய தீர்மானத்தின்படி 6—6—1985 முதல் தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது. தவிர இந்த முதல்வரின் பணியிடத்தில் அதே கல்லூரியைச் சேர்ந்த திரு. ஜி. கோபாலகிருஷ்ணன் என்பவரை 6—6—1985 முதல் பொறுப்பு முதல்வராகவும் நிருவாகம் நியமித்துள்ளது. எனினும் இந்தப் பொறுப்பு முதல்வர் பணியிடத்தில் திரு. ஜி. கோபாலகிருஷ்ணன் என்பவரை நியமனம் செய்தது சரியல்ல. இவருடைய பணியிடம் அரசு மானியத்திற்கு ஏற்கப்படவில்லை. எனவே இவருடைய நியமனத்தைக் கல்லூரிக் கல்வி இயக்குநர் அனுமதிக்கவில்லை. ஆனால் திரு. கோபாலகிருஷ்ணன் என்பவர் இயக்குநரின் இந்த ஆணையை எதிர்த்து

* 17—7—1985 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

உயர்நீதி மன்றத்தில் மனு கொடுத்து 10—7—1985 வரை பொறுப்பு முதல்வராகப் பணியாற்றத் தற்காலிக உத்திரவு பெற்றிருக்கிறார். உபரி ஆசிரியர் மாற்றுப் பணித் திட்டத்தின்கீழ் சேலம் சௌடேஸ்வரி கல்லூரிக்கு மாற்றப்பட்ட திரு. சி. வி. ஸ்ரீதரன் என்பவரைப் பணியேற்க நிர்வாகம் அனுமதிக்கவில்லை. இது குறித்துக் கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆணைகளையும் நீதிமன்ற ஆணைகளையும் கூட சேலம் சௌடேஸ்வரி கல்லூரி நிர்வாகம் செயல்படுத்தவில்லை. பொதுவாகத் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள முதல்வர் திரு. நாகராஜன் என்பவருக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே சுமுகமான உறவு நிலவாமையால் ஆசிரியர்களும் மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சில முறைகேடுகளை இக்கல்லூரி மேலாண்மை செய்துள்ளதன் அடிப்படையில் சேலம் சௌடேஸ்வரி கல்லூரியை அரசு தன் பொறுப்பில் ஏற்று நடத்தலாமா என்பது குறித்த கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

## இணைப்பு II

[128 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

சென்னை, வில்லிவாக்கத்திலுள்ள சிங்காரம் பிள்ளை மகளிர் மேல்நிலைப் பள்ளியில் திருமதி பியூலா மாசிலாமணி என்பவர் 6—2—1985 முதல் தலைமை ஆசிரியையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். கீழ்க்கண்ட காரணங்களால் அன்னாரது நியமனம் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. சிங்காரம் பிள்ளை பள்ளி சங்கத்தின் கீழ் சிங்காரம் பிள்ளை மகளிர் மேல்நிலைப் பள்ளி, சிங்காரம் பிள்ளை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் தொடக்க நிலைப் பள்ளி ஆகிய 3 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இம்மூன்று பள்ளிகளும் ஒருங்கிணைப்பு அமைப்பு என (Corporate Body) பள்ளி நிர்வாகம் ஆணை பெற்றுள்ளது. இதன் அடிப்படையில் சிங்காரம் பிள்ளை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பணிபுரியும் திரு. எஸ். விசயராகவன் என்பவர் திருமதி பியூலா மாசிலாமணி என்பவரை விட பணியில் மூத்தவர். எனவே அன்னார் தனக்கு அந்த நியமனத்தை அளிக்குமாறு கோரி பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி) அவர்களுக்கு மேல்முறையீடு செய்துள்ளார். திருமதி பியூலா மாசிலாமணியின் நியமனம் அங்கீகரிக்கப்படாத நிலையில் அவருக்கு உதவி ஆசிரியை பணியிடத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

2. ஆசிரியர் நியமனங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட வேண்டிய வழக்குகள் எதுவும் கல்வித்துறையில் நிலுவையில் இல்லை.



3. மேலும் 23—10—1982 நாளிட்ட பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் ஆணை எண். 36090/ஜி6-81-இுள்ள உத்தரவின்படி, அப்பள்ளியில் பணியாற்றிய திரு. வி. எஸ். பலராம், திருமதி வி. எஸ். ஸ்வர்ணாம்பாள் மற்றும் திருமதி பி. அனுராதா ஆகிய மூவரை மீண்டும் பணியில் எடுத்துக்கொள்ள பள்ளி நிர்வாகம் தவறியதால் இப்பள்ளிக்கு நேரடி மான்யம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே மேலாண்மையினரால் குறுக்கீடுகள் எதும் ஏற்பட இனி வாய்ப்பில்லை.

4. ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதார் அனைவருக்கும் முறையாக ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. எந்தப் பணியாளர் சார்பிலும் ஊதியம் வழங்கப்படாமல் நிலுவையில் இல்லை. ஊதியம் வழங்குவதில் தாமதமும் இல்லை. பள்ளியில் பணிபுரியும் ஊழியர்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. பத்தி 1-ல் குறிப்பிட்டுள்ளதைத் தவிர வேறு குறைபாடுகள் கல்வித் துறையின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை. அம்மாதிரி கொண்டு வரப்பட்டால், தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## இணைப்பு III

[130 ஆம் பக்கத்தில் இனம் 6 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 43 of 1985.

(As passed by the Assembly.)

*A Bill to amend the Tamil Nadu Cultivating Tenants (Special Provisions) Act, 1984.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Cultivating Tenants (Special Provisions) Amendment Act, 1985.

(2) The provisions of this Act, except sections 4 and 5, shall be deemed to have come into force on the 1st July 1984.

2. *Declaration.*—It is hereby declared that this Act is for giving effect to the policy of the State towards securing the principles laid down in clause (c) of Article 39 of the Constitution.

3. *Amendment of section 5, Tamil Nadu Act 29 of 1984.*—In section 5 of the Tamil Nadu Cultivating Tenants (Special Provisions) Act, 1984 (Tamil Nadu Act 29 of 1984) (hereinafter referred to as the principal Act), in sub-section (1), for clauses (i) to (iv) the following clauses shall be substituted, namely :—

"(i) the first instalment, on or before the 15th November 1985;

(ii) the second instalment, on or before the 31st March 1986;

(iii) the third instalment, on or before the 15th November 1986; and

(iv) the fourth instalment, on or before the 31st March 1987.".

4. *Special provisions in respect of certain decrees and suits.*—Notwithstanding anything contained in the principal Act,—

(*a*) where a decree has been passed on or after the 1st July 1984 but before the date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*, on the ground that the cultivating tenant has failed to pay the first, second and third instalments of the arrears of rent referred to in sub-section (1) of section 5 of the principal Act, on or before the 30th June 1984, 31st December 1984 and 30th June 1985 respectively, such decree shall not be executed, unless such cultivating tenant fails to make the payment of the said instalments, on or before the 15th November 1985, 31st March 1986 and 15th November 1986, respectively :

(*b*) where any suit has been filed on or after the 1st July 1984 and pending on the date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*, for the recovery of the first, second and third instalments of the arrears of rent referred to in clause (*a*), the court shall pass a decree for the payment of such instalments as would become payable under the provisions of sub-section (1) of section 5 of the principal Act, as amended by this Act.

5. *Right to restoration of possession of evicted cultivating tenants.*—(1) Notwithstanding anything contained in any judgment or decree or order of any court or competent authority and subject to the provisions of the principal Act, as amended by this Act, every cultivating tenant who had been evicted from any land on



or after the 1st July 1984, but before the date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*, on the ground that, he has not paid, on or before the 30th June 1984, 31st December 1984 and 30th June 1985, the first, second and third instalments respectively, of the arrears of rent referred to in sub-section (1) of section 5 of the principal Act, shall, on application to the competent authority, *within such period as may be prescribed*, be entitled to be restored to possession of such land and to hold it with all the rights and subject to all the liabilities of a cultivating tenant under the Tenants Protection Act or, under the Public Trusts Act, as the case may be.

(2) The provisions of sub-section (4) of section 4 of the Tenants Protection Act or, as the case may be, sub-section (2) of section 20 of the Public Trusts Act shall, so far as may be, apply to applications under sub-section (1).

## இணைப்பு IV

[137 ஆம் பக்கத்தில் இனம் 6 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

(L.A. Bill No. 44 of 1985.)

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act*, 1961.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Act, 1985.

2. *Declaration.*—It is hereby declared that this Act is for giving effect to the palicy of the State towards securing the principles laid down in clause *(b)* and (*c*) of Article 39 of the Constitution.

3. *Definition.*—In this Act, " principal Act " means the Tamil Nadu Land Reformes (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), as subsequently modified.

4. *Tamil Nadu Act 58 of 1961, as subsequently modified, to have effect subject to modifications.*—The principal Act shall have effect as if,—

(1) in sub-section (3-C) of section 5, after the expression "anything contained in this Act", the expression "but subject to the provisions of section 37-B and section 73" had been inserted;

(2) after section 37-A, the following section had been inserted, namely :—

"37-B. *Public trust or educational institution to apply to Government for permission to hold or acquire land for educational or hospital purposes.*—(1) Notwithstanding anything contained in this Act, but subject to the provisions of section 73,—

(*a*) if any public trust created before the 1st March 1972 desires to hold or acquire any land in excess of the ceiling area for the purpose of, and in the case of any public trust created after the 1st March 1972, if such public trust desires to hold or acquire any land for the purpose of—

(i) establishing any educational institution or hospital; or

(ii) expanding any existing educational institution or hospital by way of addition to, alteration of, or improvement to, any educational institution or hospital, or

(*b*) if any educational institution or hospital desires to hold or acquire any land in excess of the ceiling area for the purpose of expanding the educational institution or hospital by way of addition to, alteration of, or improvement to, the educational institution or hospital,

it shall make an application to the Government for permission to hold or acquire such land. Every such application shall be in writing and shall contain such particulars, *as may be prescribed.*

*Explanation.*—In this section and in clause (iv-A) of section 73, 'educational institution' means any college (including engineering or medical or agricultural or veterinary college) or any school or other equivalent institution or any polytechnic institution.





(2) The Government may grant the permission whether prospectively or retrospectively for the whole or part of the land specified in the application subject to such conditions as they deem fit or refuse to grant such permission. The order granting such permission shall contain the particulars of the land in respect of which such permission is granted.

(3) The Government shall, in deciding whether to grant or refuse the permission under sub-section (2), take into consideration the following factors, namely :—

(*a*) the purposes and objectives of the public trust or educational institution or hospital, as the case may be;

(*b*) whether the land is required for immediate use or use in future; and

(*c*) such other particular as *may be prescribed.*

(4) The Government may cancel the permission in respect of any land granted under this section on the breach of any condition specified by the Government.";

(3) in section 73, after clause (iv), the following clause had been inserted, namely :—

"(iv-A) any land in respect of which the Government have granted permission to any public trust or educational institution or hospital under section 37-B and such permission continues in force :

Provided that such land shall be exempt only so long as the conditions if any, specified by the Government are complied with;".

## இணைப்பு V

140ஆம் பக்கத்தில் இனம் 6 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க /

(L.A. Bill No. 45 of 1985.)

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Urban Land (Ceiling and regulation) Act, 1978.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Amendment Act, 1985.

2. *Declaration.*—It is hereby declared that this Act is for giving effect to the policy of the State towards securing the principles laid down in clauses (*b*) and (*c*) of Article 39 of the Constitution.

3. *Amendment of section 6, Tamil Nadu Act 24 of 1978.*—In section 6 of the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act, 1978 (Tamil Nadu Act 24 of 1978) (hereinafter referred to as the principal Act), for the expression " No person ", the expression " Subject to the provisions of section 21-A, no person " shall be substituted.

4. *Amendment of section 20, Tamil Nadu Act 24 of 1978.*—In section 20 of the principal Act, in sub-section (3), for the expression " any law for the time being in force ", the expression " any law for the time being in force but subject to the provisions of section 21-A " shall be substituted.

5. *Insertion of new section 21-A in Tamil Nadu Act 24 of 1978.*—After section 21 of the principal Act, the following section shall be inserted, namely :—

" 21-A. *Public charitable or religious trust or industrial undertaking to apply to State Government for permission to sell vacant land for certain purposes.*—(1) Notwithstanding anything contained in section 6, section 20 or in any other provisions of this Chapter or in any other provisions of this Act,—

(*a*) if any public charitable or religious trust (including wakf) desires to transfer by way of sale, mortgage, lease or otherwise, the whole or part of any vacant land held by it, for the purpose of—

(i) promoting the objects of the public charitable or religious trust (including wakf) or for the purpose of proper maintenance or preservation of the public chartiable or religious trust (including wakf) ; or

(ii) establishment of any educational institution or hospital—

(A) by the said public charitable or religious trust (including wakf) out of the proceeds of such transfer, or



(B) by the transferee of such vacant land or person deriving rights through such transferee, or

(iii) expanding any existing educational institution or hospital by way of addition to, alteration of, or improvement to, any educational institution or hospital—

(A) by the said public charitable or religious trust (including wakf) out of the proceeds of such transfer, or

(B) by the transferee of such vacant land or person deriving rights through such transferee; or

(*b*) if any educational institution or hospital desires to transfer by way of sale, mortgage, lease or otherwise the whole or part of any vacant land held by it, for the purpose of—

(i) expanding the educational institution or hospital by way of addition to, alteration of, or improvement to, the educational institution or hospital—

(A) by the said educational institution or hospital out of the proceeds of such transfer; or

(B) by the transferee of such vacant land or person deriving rights through such transferee; or

(ii) promoting the objects of the educational institution or hospital or for the purpose of proper maintenance or preservation of such educational institution or hospital ; or

(*c*) if any industrial undertaking desires to transfer by way of sale, mortgage, lease or otherwise, the whole or part of any vacant land held by it for the purpose of promoting the activities of the industrial undertaking or proper maintenance and preservation of the industrial undertaking,

the public charitable or religious trust (including wakf) or the educational institution or the hospital or the industrial undertaking as the case may be, shall make an application to the State Government for permission to transfer the whole of such vacant land or part thereof. Every such application shall be in writing and shall contain such particulars *as may be prescribed.*

*Explanation 3.*—In this section, 'industrial undertaking' means trust' shall have the same meaning as in the Explanation to clause (iv) of sub-section (1) of section 20.

*Explanation* 2.—In this section, 'educational institution' means any college (including engineering or medical or agricultural or veterinary college) or any school or other equivalent institution or any polytechnic institution.

*Explanation 3.*—In this section, 'industrial undertaking' means any industrial undertaking which bonafide carries on any industrial operation.

(2) The State Government may grant the permission, whether prospectively or retrospectively, for the whole or part of the land specified in the application subject to such conditions as they may deem fit or refuse to grant such permission. The order granting such permission shall contain the particulars of the land in respect of which such permission is granted.

(3) The State Government shall, in deciding whether to grant or refuse permission under sub-section (2) take into consideration the following factors, namely :—

(*a*) the purposes and objectives of the public charitable or religious trust (including wakf) or of the educational institution or of the hospital or of the industrial undertaking, as the case may be;

(*b*) whether the transfer of the vacant land is to be effected for immediate use or for use in future; and

(*c*) such other particulars *as may be prescribed.*

(4) Nothing in this Chapter shall apply to any vacant land in respect of which the State Government have granted permission under this section and such permission continues in force.

(5) The State Government may cancel the permission in respect of any land granted under this section on the breach of any of the conditions specified by the State Government.



## இணைப்பு V

[144 ஆம் பக்கத்தில் இனம் 6 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. Bill No. 35 of 1985.

(As passed by the Assembly.)

*A Bill to provide for the extension of the ordinary original civil jurisdiction of the Madras High Court to certain areas.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and saving.*—(1) This Act may be called the Madras High Court (Jurisdictional Limits) Extension Act, 1985.

(2) Nothing in this Act shall affect any suit or other legal proceeding pending in any court at the date of the commencement of this Act.

2. *Extension of ordinary original civil jurisdiation of Madras High Court.*—Notwithstanding anything contained in the Madras High Court (Jurisdictional Limits) Act, 1927 (Tamil Nadu Act IV of 1927) or any other law for the time being in force, the ordinary original civil jurisdiction of the High Court of Judicature at Madras shall also extend to the areas comprised in the revenue villages specified in the Schedule.

# THE SCHEDULE.

*(See section 2)*

| *District.* (1) | *Taluk.* (2) | *Revenue village.* (3) |
|---|---|---|
| Madras | (1) Fort-Tondiarpet | (1) 30 Selaivayal |
| | | (2) 31 Kodungaiyur |
| | | (3) 32 Jambuli |
| | | (4) 33 Erukkancheri |
| | (2) Purasawakkam-Perambur. | (1) 65 Kulathur |
| | | (2) 71 Konnur-Malligaicheri |
| | | (3) 73 Villivakkam |
| | (3) Egmore-Nungambakkam. | (1) 79 Thirumangalam |
| | | (2) 106 Koyambedu |
| | | (3) 110 Saligramam |
| | | (4) 104 Sencheri I Bit |
| | | (5) 105 Sencheri II Bit |
| | (4) Mambalam-Guindy | (1) 104 Virugambakkam |
| | | (2) 111 Kodambakkam |
| | | (3) 103 Nesapakkam |
| | | (4) 137 Velacheri |
| | | (5) 138 Taramani |
| | (5) Mylapore-Tiruvalikkeni. | (1) 139 Kanagam |
| | | (2) 140 Thiruvanmiyur |

V 218 No. 3.

## பொருளடக்கம்

143962

V211,32/NS

NSS. 218-3


பக்கங்கள்.

1. வினாக்கள்–விடைகள் .. 159—191

2. அறிவிப்புகள்—

(1) ஆளுநரிடமிருந்து செய்தி .. .. 192, 281—283

(2) பேரவையிலிருந்து செய்தி .. .. 192—194

3. கவன ஈர்ப்பு—

(1) திருச்சி மாவட்டம், முதுவத்தூரில் உள்ள முன்னோடி சிமெண்ட் ஆலைத் தொழிலாளர்களுக்கு நேர்ந்துள்ள இன்னல்கள் குறித்து .. 194—196

(2) சென்னை இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் உள்ள அறுவை அரங்கு மூடியிருப்பது குறித்து .. .. 196—198

4. அரசின் சட்ட முன்வடிவுகள்—

(1) 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு வரிவிதிப்பு (கால வரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1985) .. .. 199—208

(2) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1985) .. .. ... 210—228

பக்கங்கள்.

(3) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1985) .. .. 229—242

(4) 1985–ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல்—தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1985) .. .. 243—264

(5) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு தீயணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1985) .. 275—273

(6) 1985–ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1985) .. .. 274—280

5. தகவல் கோரல்—

பொது நிறுவனங்கள், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் குறித்து .. .. 208

6. அரசின் தீர்மானம்—

நிகழ்ச்சி நிரலில் மாற்றம் .. .. 209

7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் 283 286


# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1985 ஜூலை 19

(ஆடி 4, குரோதன—திருவள்ளுவராண்டு 2016.)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Master Plan.*

*116. Q.—Thiru P. R. THOMAS and Thiru C. R. LAKSHMIKANDHAN: Will the Honourable the Minister for Information and Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that master plans for Rameswaram, Kanyakumari, Coimbatore and Mamallapuram have been sent to the Government of India by the State Government, seeking assistance; and

(b) if so, the stage at which the matter now stands?

*மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:* இராமேஸ்வரம், கன்னியாகுமரி, மாமல்லபுரம் ஆகிய மூன்று இடங்களை அபிவிருத்தி செய்ய பெருந்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கோவை மாவட்டத்திற்கு பெருந்திட்டம் தயாரிக்கப் படவில்லை. இராமேஸ்வரம் பெரும்திட்டத்தில் உள்ள திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டது. கன்னியாகுமரி, மாமல்லபுரம் அபிவிருத்திக்காக முறையே ரூ. 151.00 இலட்சம், 383.71 இலட்சம் நிதியுதவி கேட்கப்பட்டது. இதில் மாமல்லபுரம் அபிவிருத்திக்காக ரூ. 21.71 இலட்சம் மட்டும் மத்திய அரசு 1984-85 ஆம் ஆண்டில் நிதியுதவி வழங்கியுள்ளது. கன்னியாகுமரி, மாமல்லபுரம், இராமேஸ்வரம், உதகமண்டலம் ஆகிய இடங்களின் அபிவிருத்திக்காக மத்திய அரசின் மூலமாக ரூ. 28.00 கோடி உலக வங்கியிடம் நிதியுதவி கேட்கப்பட்டது. அந்த உதவி கிடைக்கவில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, இவ்வாறு இந்த நகரங்களிலே மாஸ்டர் பிளான் அபிவிருத்திக்காக தயாரித்து எவ்வளவு காலமாக மத்திய அரசிடம் நிதி உதவி கோரி அனுப்பப்பட்டு தேக்கம் அடைந்திருக்கிறது? அதைத் துரிதமாகப் பெறுவதற்கு நம் மாநில அரசு எவ்வகையில் வற்புறுத்தத் திட்டமிட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தினுடைய பெருந்திட்டத்திற்காக நிதி உதவி கேட்டு ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. பிறகு, இராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற இடங்களுக்கு மூன்று, நான்கு ஆண்டுகளுக்குள்ளே அத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவர்களிடத்திலே உதவி கேட்டிருக்கிறோம். மத்திய அரசைப் பொறுத்தவரை, இப்படிப்பட்ட மிகப் பெரிய திட்டங்களுக்கு சுற்றுலா வளர்ச்சி என்கிற அடிப்படையில், அவர்கள் உதவி செய்வதற்கான முறைகளை வைத்துக்கொண்டிருக்கவில்லை. ஆகவேதான் இதிலே தாமதம் ஏற்படுகிறது. நம் இந்தியாவிலேயே சுற்றுலா வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இப்படிப்பட்ட மாஸ்டர் பிளான்களைத் தயாரித்து உதவி கேட்டிருக்கிற மாநிலம் நம் மாநிலம் மட்டும்தான் என்றும் மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. தமிழகத்திலேதான் சுற்றுலா வாய்ப்புகள், உலகத்தினுடைய சுற்றுலாப் பயணிகள் பார்ப்பதற்கான மிகச்சிறந்த தொன்மையான வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களெல்லாம் இருக்கின்றன என்று நாம் குறிப்பிட்டிருக்கிறோம். அதை மத்திய அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சுற்றுலாவை வளர்க்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிற மத்திய அரசு இதைப்போன்ற திட்டங்களுக்கு உதவி வழங்கினால்தான், நாம் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் (Infrastructure) என்று அழைக்கப்படுகின்ற, சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றபோது அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நாம் உருவாக்கித் தர முடியும். இந்தத் திட்டங்களின் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளை உருவாக்குவது மட்டுமல்லாமல், அந்தப் பகுதியை வளர்ப்பதற்கும், வளர்ச்சியுறச் செய்வதற்கும், அப்பகுதி மக்கள் வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கும், அந்தப் பகுதியே வளர்ச்சி அடைவதற்கும் இந்தத் திட்டங்கள் பயன்படும் என்றுதான் நாம் மாஸ்டர் பிளானைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறோம். மத்திய அரசு இப்படிப்பட்ட மாஸ்டர் பிளான்களை ஏற்றுக்கொண்டு நிதி உதவி செய்வதை ஒரு கொள்கையாக இதுவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, இத்தகைய பெருந்திட்டங்களுக்கு உதவி செய்யும்போது, மத்திய அரசினுடைய பங்குத் தொகை எவ்வளவு? மாநில அரசினுடைய பங்கு எவ்வளவு?





அடுத்து, இந்தக் கேள்வியில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற நகரங்களைத் தவிர, தமிழ்நாட்டில் வேறு ஏதேனும் நகரங்களுக்குப் பெருந்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவா என்கிற விவரங்கள் இருந்தால், அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவர் அவர்களே, அதைத்தான் இவ்வளவு நேரமாகக் குறிப்பிட்டேன். மத்திய அரசினுடைய பங்கு என்ற அளவுக்குக் கொள்கையை இன்னும் அவர்கள் வகுக்கவில்லை. நாம் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை உருவாக்கி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசு இதிலே கொள்கை முடிவு எடுத்து, "நாங்கள் இவ்வளவு பங்கைத் தருகிறோம், மாநில அரசு இவ்வளவு பங்கைப் போட வேண்டும்" என்று சொல்வார்களேயானால், நாம் அதைப் பரிசீலிக்கலாம். ஆனால் இந்த மாஸ்டர் பிளான் திட்டங்களை ஏற்றுக்கொண்டு அவற்றிற்கு நிதி உதவி செய்வது என்கின்ற அடிப்படையில் அவர்கள் இன்னும் கொள்கையளவில் முடிவுக்கு வராத சூழ்நிலையில், நாம் அந்த உதவியைக் கேட்டும் மத்திய அரசு நிதி உதவி வழங்கவில்லையானால், உலக அளவில் நிதி உதவி வழங்குகின்ற நிறுவனங்கள் மூலம்—அதாவது உலக வங்கி மூலம்—"நீண்ட கால கடனாகக் குறைந்த வட்டிக்கு நீங்கள் வாங்கித் தாருங்கள். அதை நாங்கள்

(முற்பகல் 10-05)

திருப்பிச் செலுத்திவிடுகிறோம். அதற்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே அவர்கள் எந்த அளவு உதவி செய்கிறார்கள், அதிலே மத்திய அரசின் பங்கு என்ன என்கின்ற பிரச்சினை இப்போது எழவில்லை. அடுத்து, இதைப்போன்ற மாஸ்டர் பிளான் கொடைக்கானலுக்கும் உருவாக்கச் சொல்லியிருக்கிறோம். ஏற்காடு போன்ற மலைவாழ் இடங்களுக்கும் மாஸ்டர் பிளான் உருவாக்குவதிலே தமிழக அரசு ஈடுபட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் பெருமளவுக்கு நிதி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்போது சுற்றுலாவை ஒரு தொழிலாக ஆக்க வேண்டுமென்ற கருத்து பரவலாகப் பேசப்படுகிறது. இன்றுகூட செய்தித்தாளில் டில்லியில் நடந்த கூட்டங்களில் முடிவுகள் வந்திருக்கின்றன. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம், உலக வங்கியிடம் கேட்பதுபோலவே, குறைந்த வட்டியிலே நிதி உதவி பெறுவதற்கு மாநில அரசு முயற்சி செய்யலாமல்லவா. அதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போன்று, நம்முடைய இந்தியாவிலே இருக்கிற நிதி நிறுவனங்கள், எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்கள் எல்லாம் கடன் வழங்குவதற்காக மத்திய அரசு ஒரு அடிப்படையை வைத்துக் கொண்டிருக்கிறது. அதாவது, வணிக அடிப்படையிலே இயங்கு கின்ற நிறுவனங்கள் அல்லது வணிக அடிப்படையிலே இருக்கின்ற தேவைகள், அவைகளுக்காக கடன்கள் வழங்கினால் அது மீண்டும் திரும்பப் பெறு வதற்கு வசதியாக இருக்குமென்ற கொள்கையை மத்திய அரசு வைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதனாலேதான் இப்படிப்பட்ட வளர்ச்சித் திட்டங்களிலிருந்து வருமானம் நேரடியாகக் கிடைக்காது என்று கருதப் படும் திட்டங்களுக்கு அவர்கள் பரிந்துரை செய்வதற்கு இன்னும் முன் வரவில்லை. நம்முடைய அரசின் வேண்டுகோள், கருத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துத்தான். சுற்றுலாத் துறைக்காகச் செய்யப்படுகின்ற செலவுகள் அல்லது முதலீடுகளுக்கு அதிலேயிருந்து என்ன வருமானம் வருகிறது என்பதைப் பார்த்தால், அது நேரடி வருமானமாகத் தெரியாது. ஒரு பகுதியை வளர்ச்சியுறச் செய்வதற்காக நாம் முதலீடு செய்கிறபோது, அந்தப் பகுதி வளர்ச்சியடைகிறது. அந்த கேப்பிடல் என்பது வருமானம் வருகிற கேப்பிட்டலாக, முதலீடாக இல்லையானாலும், அதன் மூலம் சுற்றுலாப் பயணிகளைக் கவருகிற நேரத்தில், அவர்கள் பயணம் செய்கிற நேரத்தில் அங்கே பல்வேறு வளர்ச்சிகள் ஏற்படுகின்றன. குறிப்பாக இந்தியாவுக்கு வெளிநாட்டுப் பயணிகள் மூலம் ஆயிரம் கோடி ரூபாய் வரை இன்றைக்கு வெளிநாட்டுச் செலாவணி எந்தவிதமான முதலீடும் இல்லாமல் கிடைக்கிறது என்று தெரிகிறபோது, அதற்கு தமிழகத்தில் இன்னும் அதிகமான சூழ்நிலை, வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே அந்த அடிப்படையிலேதான் இந்த நிதி உதவியை அளிக்க வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு அதிலே இன்னும் ஒரு கொள்கை முடிவை எடுக்கவில்லை. வருகிற சுற்றுலாத் துறை அமைச்சர்கள் மா நாட்டில் மாநில அரசின் சார்பிலே இந்தக் கொள்கையை வலியுறுத்துவோம். ஆனால் குறிப்பாக சுற்றுலாவைப் பொறுத்தவரை, ஒரு மிகச் சிறந்த எதிர் காலம் இன்றைக்கு இருக்கிறது என்பது தெரிகிறது. காரணம், இந்தத் துறையை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள்தான் வைத்திருக்கிறார்கள். அவர்கள் இதிலே மிகுந்த அக்கறை செலுத்துகிறார்கள். ஆகவே மாநில அரசின் கருத்துக்களை கவனத்திலே எடுத்து மத்திய அரசு இதற்கான நிதி உதவி செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுமென்று எதிர்பார்க்கலாம்.





திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையினுடைய பணிகளையெல்லாம் தொழில் என்ற முறையிலே அறிவித்தால், மாநில அரசு, மத்திய அரசு என்னென்ன சலுகைகள் அதிலே பெற முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, இப்போது தொழிற்சாலைகளுக்கு என்னென்ன சலுகைகளை மத்திய அரசு, மாநில அரசு வழங்கிக் கொண்டிருக்கிறதோ அந்தச் சலுகைகளை இந்த சுற்றுலாத் துறையின் மூலம் ஏற்படுத்தப்படும் 'மோட்டல்'கள் மற்றும் பயணிகளுக்கான வசதிகளைச் செய்து தரும் நிறுவனங்கள், அதைப்போல் இதன் தொடர்பான பல்வேறு அமைப்புகள் அந்தச் சலுகைகளைப் பெற முடியும். அதை தொழில் என்று அதிகாரபூர்வமாக அறிவித்ததற்குப் பிறகு, அதன் தொடர்பாக எந்தெந்தத் தொழில்கள் அதன் மூலம் சலுகைகள் பெற முடியும் என்பது பின்னாலே நிர்ணயிக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பெரும் திட்டம்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிக நுணுக்கமாகத் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் அந்தத் திட்டம் அமைந்திருக்கிறது. ஏழாவது திட்டத்தில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டிற்கு பெரும் நிதி ஒதுக்குவதற்காக மத்திய அரசு இருக்கிற நிலையில், அந்த மலைவாழ் மக்களுக்குப் பயன்படும் வகையில் நீலகிரி மாவட்டம், கொடைக்கானல் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசுடன் இணைந்து இதை வற்புறுத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, மாஸ்டர் பிளான் என்பதைக் கூர்ந்து நோக்கினால், இதில் பல்வேறு அடிப்படைத் திட்டங்கள் இடம் பெறுகின்றன என்பது தெரியும். சாலை வசதிகள், குடி நீர் திட்ட வசதிகள், இருப்பிட வசதிகள், வீட்டு வசதி, சுகாதார வசதிகள் என்று இப்படி பல்வேறு வசதிகள் அந்த மாஸ்டர் பிளானில் அடங்கி யிருக்கின்றன. ஆகவே பணம் ஒவ்வொரு துறையின் சார்பிலும் செலவழிக்கப் பட வேண்டிய அவசியம் இருக்கிறது. மத்திய அரசு மலைப்பகுதி மேம் பாட்டுத் திட்டம் அல்லது மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் சில திட்டங்களை அறிவித்திருக்கிறது. அப்படிச் செய்யும்

போது, அவர்களின் திட்டத்தின்படி, சில செயல்முறைகளுக்குத்தான் அங்கீகாரம் அளிக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்தின் அடிப்படையில் அவர்கள் குறிப்பிடுகிற அந்த வரையறைக்குள் வருகிற செயல்முறைக்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, நாம் சில திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். ஆனால் நாம் விரும்புவது அப்படியல்ல. 'தனித் தனியாக ஒரு பகுதியில் மட்டும் செலவு செய்தால் அதனால் ஏற்படுகிற வளர்ச்சி என்பது முழுமையாக இல்லை. எனவே எல்லா வளர்ச்சியும் எல்லாத் துறைகளிலும் ஏற்பட வேண்டுமென்றால், மாஸ்டர் பிளான் என்கிற அந்த அடிப்படையில் திட்டமிடப் பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்கிறோம்.

### கோவை-குற்றாலம் நீர்வீழ்ச்சி.

* 117 வினா—**திரு. அ. மயில்சாமி:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சிறுவாணிக்கருகில் உள்ள கோவை-குற்றாலம் நீர்வீழ்ச்சியை, சுற்றுலா மையமாக அறிவித்து அபிவிருத்தி செய்யும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது அபிவிருத்தி செய்யப்படும்?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. அ. மயில்சாமி:** தலைவர் அவர்களே, கோவை-குற்றாலம் என்கிற அந்தப் பகுதி தற்போது அபிவிருத்தி அடையாத நிலையிலேயே இன்றைய தினம் பலரும் அங்கே வந்து கண்டு களிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. அந்தப் பகுதியை அபிவிருத்தி செய்ய இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அபிவிருத்திப் பணிகள் எந்த ஆண்டிலிருந்து எவ்வளவு தொகை செலவிடப் பட்டு தொடங்கப்பட இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** கோவை-குற்றாலம் என்று அழைக்கப்படுகிற அந்த அருவிப் பகுதி மிகச் சிறந்த ஒரு பகுதியாக, இயற்கை எழில் நிறைந்த பகுதியாக விளங்குகிறது. அது வனத் துறைக்காக ஒதுக்கப்பட்ட காட்டிற்குள் இருக்கிற காரணத்தால், சில திட்டங்களை நிறைவேற்றுவதில் சங்கடங்கள் இருக்கின்றன. காரணம் 'கன்சர்வேஷன் ஆப் பாரஸ்ட்ஸ் ஆக்ட்' என்கிற மத்திய அரசின் சட்டத்தின்படி, வனத்



துறைக்குள் எந்தத் திட்டங்களை அல்லது எந்தப் பணிகளை நிறைவேற்ற வேண்டுமானாலும், மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுக்கொண்டாக வேண்டும். ஆகவே அதற்கான திட்டங்களையும் பணிகளையும் நிறைவேற்று வதில் தாமதம் ஏற்படுகிறது.

இந்தப் பகுதியை நாம் மேம்பாடு செய்வதற்கு சுமார் 36 லட்சம் ரூபாய் செலவில் சில திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம். அதில் முதல் கட்டமாக ரூ. 14 லட்சம் தொகையும் இரண்டாவது கட்டமாக ரூ. 22 லட்சம் தொகையும் செலவிட இருக்கிறோம். மிக விரைவில் இதற்கான திட்டங்கள் செயல்படத் தொடங்கும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** கோவை நகர் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. மக்கள் தொகை பெருகி வருகிறது. அங்கே வாழ்கிற மக்களுக்குப் பொழுது போக்குவதற்குப் பெரிய பூங்காக்களோ அல்லது வேறு பொழுது போக்கு அமைப்புகளோ இல்லாத நிலையில் இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவதோடு இதுபோன்று வேறு ஏதேனும், சுற்றுலா நோக்கத் தோடு நிறைவேற்றுவதற்கு உரிய திட்டங்கள் அரசிடம் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவர் அவர்களே, அந்த உணர்வின் அடிப்படையில்தான் இந்தத் திட்டத்தையே இப்போது செயல் படுத்த வேண்டும் என்று அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. அதைப் போல் கோவை மாவட்டத்தில் திருமூர்த்தி மலை நீர்வீழ்ச்சிப் பகுதி மாவட்ட உலாத் தலம் என்கிற அந்தச் சிறப்பைப் பெற்று உருவாக்கப்படுகிற திட்டத்தில் முதல் உரிமை தரப்பட்டு இப்போது அந்தப் பணிகள் அங்கே நடைபெற்று வருகின்றன.

### சுற்றுலா மையங்கள்.

* 118 வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் 12—4—1985 அன்று சட்ட மன்ற பேரவையில், வினா எண் 21-க்கு அளித்த விடையினையொட்டி, கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில், சுற்றுலா மையங்களை உருவாக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இருக் கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

[1985 ஜூலை 19

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) ஆம்;

(இ) இந்த இரு மாவட்டங்களில் தலா இரண்டு மாவட்ட உலாத் தலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இரண்டு இடங்களையும் நாங்கள் அறியலாமா? தென்னாற்காடு மாவட்டத்தில் வீராணம் ஏரி, பிச்சாவரம் காட்டுப் பகுதி, கல்ராயன் மலைப் பகுதி போன்ற சிறப்பான இடங்கள் இருக்கின்றன. மேலும் ஆலயத்திற்குப் புகழ்பெற்ற நடராஜர் ஆலயம் சிதம்பரத்தில் இருக்கிறது. வடாற்காடு மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலையில் உள்ள ஆலயம் மிகப் புகழ்பெற்ற ஆலயமாகும். மேலும் அங்குள்ள சாத்தனூர் அணைக்கட்டு, ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலை போன்ற பல இடங்கள் இருக்கின்றன. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியிருக்கும் இந்த இரண்டு மாவட்டங்களிலும் வளர்ச்சியை ஏற்படுத்த இத்தகைய இடங்கள் சுற்றுலாத் தலங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டால், அந்தப் பகுதி மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர அது உதவியாக இருக்கும் என்ற அடிப்படையில் இந்த இடங்களையும் சேர்த்து அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-15)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தென்னாற்காடு மாவட்டத்தில் பிச்சாவரம், கோமுகி அணைக்கட்டுப் பகுதி ஆகிய இரண்டு இடங்களையும் மாவட்ட உலாத்தலமாகத் தேர்ந்தெடுத்து திட்டங்கள் நிறைவேற்றலாம் என்று முடிவு செய்யப்பட்டது. பிச்சாவரத்தைப் பொறுத்தவரையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே அவர்களே அதைப்பற்றி புகழ்ந்து இந்திய குடியரசுத் தலைவர் திரு. ஜாகிர் உசேன் அவர்களை அழைத்து வந்து, அந்த இடத்தைக் காட்டி, மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக அதை ஆக்க வேண்டுமென்று விரும்பிய அந்த உணர்வை மதித்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், அதை ஒரு மாவட்ட உலாத் தலமாக மாத்திரம் ஆக்க வேண்டாம், உலக சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டும் என்று கருதி, சுமார் 30 இலட்சம் ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டு இப்போது 20 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டு, பல்வேறு திட்டங்கள் அங்கே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அடுத்த கட்டமாக 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆகவே அதை சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த தலமாக மாற்றிவிட்ட காரணத்தால், வேறு இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னோம்.



1985 ஜூலை 19]

கோமுகி அணைக்கட்டு என்ற பகுதி. அது ஒரு மிகச் சிறந்த நீர்வீழ்ச்சி உள்ள பகுதி. ஆண்டு முழுவதும் நீர்வீழ்ச்சி இருக்கிற பகுதியாகக் கருதப்படுகிறது. அது கல்ராயன் மலைப் பகுதியில் இருக்கிறது. இந்த மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்கிறபோது அங்கே மக்கள் போய்வரத் தேவையான சாலை வசதிகள் இல்லையென்பதால், அந்தச் சாலைகளைப் போட 50 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்கிய நிதியிலிருந்து இதற்குச் செலவு செய்யலாமா என்று பார்த்தால், அந்தத் திட்டம் இதிலே சேர்க்கப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்தப் பகுதியின் சாலை வசதிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆகவே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து சாலையைப் போட்டதற்குப் பிறகு கோமுகி அணைக்கட்டு பகுதி பற்றிய பரிசீலிக்க முடியும் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இவைகளை மனதிலே வைத்து தென்னாற்காடு மாவட்டத்தில் இரண்டு மாவட்ட உலாத் தளங்களை பூரம் நிறைவேற்றியாக வேண்டும். முடிவு செய்தாக வேண்டும். பிச்சாவரத்தைப் பொறுத்தவரையில், அது மிகச் சிறந்த நேஷனல் அண்டு இண்டர்நேஷனல் டூரிஸ்ட் ஸ்பாட்டாக வளம் பெற்று வருகிறது. பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

வட ஆற்காடு மாவட்டத்திலே சுற்றியிருக்கிற அமிருதி பகுதியில் இரண்டு மாவட்ட உலாத் தலங்கள் மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. அதற்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தென்னாற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் சுற்றுலா மேம்பாட்டுக்காக உரிய திட்டங்களைப் பற்றி அறிவித்தமைக்காக அப்பகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பிச்சாவரத்தைப் பொறுத்தவரையில், பேருந்துப் போக்குவரத்து இன்னும் அதிகப்படுத்தாததன் விளைவாக, மக்கள் அங்கு சரிவரப் போய் வரமுடியவில்லை. மேலும் மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்ட இரண்டு திட்டங்களைப் பொறுத்த வரையில் அவைகள் சிறப்பான இடங்களாக இருந்தாலும், நல்ல முறையில் அவற்றைப்பற்றி விளம்பரம் இல்லாததால், மக்களுடைய கவனத்தை ஈர்க்காத இடங்களாக இருக்கின்றன. ஆகவே சுற்றுலாத் துறையின் மூலமாக அந்த இடங்களைப் பற்றி விளம்பரங்கள் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு ஒரு முறை இங்கே பேசும்போது 'வீராணம் ஏரி' போன்ற இடங்களை சுற்றுலா மையமாக ஆக்காவிட்டாலும், 'எக்ஸ்கர்ஷன் சென்டர்' என்ற அளவிலே

ஆக்குவது குறித்து பரிசிலிக்கலாம் என்று சொன்னார்கள். அப்படிச் சில இடங்களை 'எக்ஸ்கர்ஷன் சென்டர்' களாக ஆக்க ஏற்பாடு செய்யலாம் அல்லவா? அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** பிச்சாவரத்தைப் பொறுத்த வரையில், மிகச்சிறந்த விளம்பரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டு வருகின்றன. 'டிஸ்ட்ரிக்ட் எக்ஸ்கர்ஷன் சென்டர்' என்பதைத் தான் தமிழில் மாவட்ட உலாத்தலம் என்று அழைக்கிறோம். தென்னாற்காடு மாவட்டத்திலே பிச்சாவரம் பகுதி உலகச் சிறப்புமிக்க சுற்றுலாத் தலமாக மாறி வருவதால் 'டிஸ்ட்ரிக்ட் எக்ஸ்கர்ஷன் சென்டர்' என்று சொல்லப்படுகிற மாவட்ட உலாத் தலமாக வீராணம் ஏரி இருக்கின்ற பகுதியை ஆக்க அங்குள்ள பகுதிகளை அழகுபடுத்தலாமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பிச்சாவரம் பகுதியைப் பற்றிச் சொல்லியிருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கூறியது போல், பிச்சாவரத்திற்குப் பேருந்துகள் சரியாகச் செல்வதில்லை. பயணிகள் அங்கே செல்ல பேருந்து வசதிகள் இல்லை. இதனால் அங்கு தங்கும் வசதிகள் இருந்த போதிலும், பயணிகள் வருவதில்லை. சிதம்பரம் வரையில்தான் பேருந்துகள் செல்கின்றன. பிச்சாவரத்திற்குச் சரியாக வருவதில்லை. ஆகவே சுற்றுலாப் பயணிகள் அங்கே செல்லக்கூடிய வகையில் அமைச்சர் அவர்கள் பேருந்து வசதிக்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவர் அவர்களே, நம்முடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலே விடப்படுகிற சுற்றுலாப் பேருந்துகள், பிச்சாவரத்தையும் சென்று பார்த்துவிட்டுத்தான் போக வேண்டும் என்று அந்தப் பட்டியலில் இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி இல்லையென்றால், அதைச் சேர்ப்பதற்கான முயற்—கள் உடனடியாக எடுத்துக் கொள்ளப்படும். மற்ற போக்குவரத்து வசதிகளைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே போக்குவரத்துக் கழகத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறோம். கிள்ளை வரையிலே செலுத்தப்படுகின்ற அந்தப் பேருந்துகள் பிச்சாவரத்திலே



நாம் கட்டியிருக்கின்ற உணவு விடுதி வரை செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்திலேயிருந்து தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போது இதைத் தெரிந்துகொண்டார்கள்? சமீபத்திலே அவர் தெரிந்துகொண்ட செய்தியா? அல்லது நீண்டகாலமாகிவிட்டதா என்று தெரியவில்லை. சமீபத்திலே இது வரை பேருந்துகள் விடப்படவில்லை என்று இருக்குமேயானால், உடனடியாகப் பேருந்துகளை அதுவரையில் செலுத்துவதற்கு, நீட்டிப்பதற்கு தகுந்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும். போக்குவரத்துக் கழகமும் வேறு ஏதாவது சட்டபூர்வமாகத் தடைகள் அதற்கு இல்லையென்றால், உடனடியாக அமல் நடத்துவார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, மேலவையில் முன்பு தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள திருவக்கரை பற்றி நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அது பற்றி நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்கள். இப்போது அது மத்திய அரசினுடைய தொல்பொருள் துறை கட்டுப்பாட்டில் இருக்கின்றது. ஆனால் உண்மையில் இப்படிப்பட்ட மிகச் சிறப்பான இடம் சரியான முறையில் பாதுகாக்கப்படாமல் இருக்கிறது. ஒரு மிகப் பெரிய மட்டமே புதைந்து பாறையாக மாறி இருக்கிறது. அது கேட்பாரற்று இருக்கின்றது. பல இடங்களில் அப்படி அங்கே இருக்கின்றன. மத்திய அரசின் கண்காணிப்பில் இல்லாத இடங்களிலே அப்படி இருக்கின்றன. அதையெல்லாம் நம் மாநில அரசு நம்முடைய சுற்றுலாத் துறைக்கு கையகப்படுத்தி சிறந்த சுற்றுலா மையமாக ஆக்கலாம். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்கின்றார்கள்?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது சுற்றுலாத் தலம் என்பது மாத்திரமல்ல, மிகச் சிறந்த யாத்திரைத் தலங்களில், அதாவது தொன்மையான ஆலயங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டிருக்கின்ற இடங்கள் எல்லாம் அங்கே இருக்கின்றன. அவற்றைச் சுற்றுலாத் தலங்கள் என்று மாத்திரம் அழைக்க முடியாது. அவை நாம் எல்லாம் போய் பார்க்க வேண்டிய அருமையான உலா தலங்கள், யாத்திரைத் தலங்கள். அதிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற திருவக்கரை மிகுந்த முக்கியமான ஒன்று. உலகத்திலே வரலாற்று ஆசிரியர்கள், கல் தோன்றியது அதற்குப்பின் தான் மண் தோன்றி என்றெல்லாம் சொல்லியிருக்கின்றார்கள், ஆனால் அங்கே இருக்கின்ற அற்புதம், மரம் கல்லாக மாறிக்கொண்டிருக்கின்ற ஒரு காட்சி. இது எத்தனை ஆயிரம் ஆண்டுகளாக அப்படி மாறிக்

கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்தாலே ஆச்சரியப்படக்கூடியதாக இருக்கிறது. அது மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினுடைய கண்காணிப்பிலே, அவர்களுடைய நிர்வாகத்திற்குள்ளே, பத்திரமாக, பாதுகாப்பாக இருக்கிறது என்றுதான் நான் எண்ணிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்கள் அலட்சியப் போக்கைக் காட்டி அதைக் கவனிக்காமல் விட்டிருக்கின்றார்கள் என்று தெரிவிக்கின்றார்கள். அது உண்மையாக இருக்குமானால், அவர்களையே அதை ஜாக்கிரதையாக, பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தலாம். காரணம் மத்திய அரசினுடைய தொல்பொருள் ஆய்வுத் துறையிலேயிருந்து நாம் ஒரு இடத்தைத் திரும்பப்பெறுவது என்பது மிகப் பெரிய காரியம், மிகச் சங்கடமான காரியமும்கூட. அவர்கள் சுலபத்திலே அதை நமக்குத் தர மாட்டார்கள். ஆனாலும் அதைப் பாதுகாப்பதற்கு மேலும் அந்த மாவட்டத்து மக்களே அதைப் போய்ப் பார்த்தார்களா என்று என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. அதைப் பிரபலப்படுத்தி, மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு அந்த அற்புதமான ஒரு இயற்கைச் செல்வத்தையும், வரலாற்றுச் செல்வத்தையும் பார்ப்பதற்கான முயற்சிகளை நம்முடைய சுற்றுலாத் துறையும் அறநிலையத் துறையும் சேர்ந்து மேற்கொள்ளும்.

## தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்.

*199 வினா.—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு செய்தி மற்றும் அற நிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு தேயிலைத் தோட்டக் கழகம், 1984-85 ஆம் ஆண்டில், ஆதாயம் ஏதும் ஈட்டியுள்ளதா ?

(இ) ஆம் எனில், இலாபம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** (அ) மற்றும் (இ) ஆம். ஜூலை 1984 முதல் ஜூன் 1985 முடிய ஓராண்டுக் காலத்தில் தேய்மான மதிப்பிற்கு வகை செய்த்து போக வரி மற்றும் படி உட்பட தோராயக் கணக்குகள் படி சுமார் ரூ. 180 லட்சம் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு இலாபம் கிடைக்கும்.



**திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டு இயற்கையாக மழை பெய்யாத நிலையிலேயும்கூட, தேயிலைத் தோட்டக் கழகம் லாபம் பெற்றிருக்கின்றது. தேயிலைத் கழக நிலத்தின் மொத்தப் பரப்பளவு எவ்வளவு? அதை மேலும் கூடுதலாக ஆக்க அரசு முயலுமா ?

(முற்பகல் 10-25)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவரவர்களே, 10 தோட்டங்கள் ; 1580.44 ஹெக்டேர் பரப்பளவிலே இருக்கிறது. இப்போது மேலும் அதை விரிவுபடுத்துகின்ற கருத்து அரசிடத்தில் இல்லை. காரணம், இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தினால், இயற்கையாக நமக்குக் கிடைத்திருக்கின்ற வனச் செல்வங்களை அழித்து விட்டுத்தான் தேயிலைத் தோட்டங்களை உருவாக்க வேண்டிய நிலை இருக்கிறது. காடுகளை அழித்துவிட்டு, தேயிலைத் தோட்டங்கள் போடுவது இப்போது கூடாது என்ற கருத்தின்படி, இந்தத் தேயிலைத் தோட்டங்களை விரிவு படுத்தும் திட்டத்தை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவரவர்களே, 'பப்ளிக் அன்டர்டேக்கிங்ஸ்' என்று செயல்படுகிற நிறுவனங்களில் தேயிலைத் தோட்டக் கழகம்தான் சிறப்பாகச் செயல்படுகிறது. இந்த நிறுவனம் லாபகரமாக நடைபெறுவதற்கு அதன் நிர்வாக இயக்குநர் ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. அமைச்சரவர்களே, அவர்களைப் பல முறை பாராட்டியிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அரசினுடைய பாலிசி மேட்டர் அடிப்படையில் அந்த நிர்வாக இயக்குநரை மாற்ற உத்தரவு பிறப்பித்திருப்பதாக அறிகிறேன். நான் அனுபவத்தின் அடிப்படையில் சொல்கிறேன், சிறப்பாகப் பணியாற்றும் நிர்வாக இயக்குநர்களை மாற்றுவதால், அந்த நிறுவனங்கள் லாபமின்றி நஷ்டம் அடைவதைப் பார்க்கிறோம். எனவே அவர் அங்கேயே தொடர்ந்து செயல்பட அரசு அனுமதிக்குமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகுந்த ஜாக்கிரதையாக ஒரு அதிகாரிக்காக இங்கே பரிந்துரை செய்திருக்கிறார்கள். மிகச் சிறந்த அதிகாரிகளைப் பாராட்டுவதிலே தவறில்லை. அதிகாரிகள் தவறு செய்கிறபோது, அந்தத் தவற்றைச் சுட்டிக் காட்டும் பொறுப்பு மன்றத்திற்கு இருக்கிறது, உறுப்பினர்களுக்கு இருக்கிறது. ஆகவே சிறந்த அதிகாரிகளைப் பாராட்டுவதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். மேலும், நான் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கும் துறையிலே உள்ள அதிகாரி பாராட்டப்படுவதாலே நான் மிக்க மகிழ்ச்சியடை

கிறேன். குறிப்பிட்ட அதிகாரியாலே இந்தத் தேயிலைத் தோட்டக் கழகம் லாபம் ஈட்டுகிறது என்று சொல்லுகிற அந்தக் கருத்து அவருக்கு யாராலோ தவறாகத் தரப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஒருவேளை அந்த அதிகாரியே அந்த முயற்சியை எடுத்துக் கொண்டிருப்பார்களோ என்று கருதுகிறேன். காரணம், தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு அவர் சென்று 3 ஆண்டுகளுக்கு அதிகமாகியிருக்கிறது. அதற்கு முன்னாலேயே அந்தத் தேயிலைத் தோட்டக் கழகம் இருக்கிறது. அதன் தொடக்கத்திலே லாபம் வரவில்லை என்றால்—எப்போதும் விதையைப் போட்ட உடனே லாபம் வராது. அது முளைத்து, செடியாகி, மரமாகி, அது பலன் தரும்போது தான் லாபம் வரும். அதைப்போல இவர் போய்ச் சேரும் நேரம், அது பலன் தரும் நேரமாக இருக்கலாம். காக்கை உட்கார பனம் பழம் விழுந்த கதையாக இவர் போய்ச் சேர்ந்த காலம் பலன் தரும் காலமாக இருக்கிற தென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர் சிறந்த அதிகாரி. ஆனால் அவரைவிட சிறந்த அதிகாரிகள் இந்தத் துறையிலே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். அவர் அங்கேயிருந்து விடுபட்டு. தாய்த் துறையான வனத் துறையிலே பொறுப்பான பதவிக்கு வந்துவிட்டார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதிகாரியைப் பாராட்டியதற்கு நன்றி. அதே நேரத்தில் மற்ற அதிகாரிகளுக்கு அந்தத் திறமை இல்லை என்று சொல்லி, அதனால் இப்போது பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கும் அதிகாரி வருத்தப்பட்டுக் கொள்ளக்கூடாது. இப்போது போய் இருக்கிறவரும் அவரைவிட சிறந்த அதிகாரி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தமிழ் நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திடம் கர்நாடக அரசு, 2000 ஹெக்டேரில் தேயிலைத் தோட்டம் அமைக்க ஆலோசனை கேட்டு, அவர்களும் ஆலோசனை அளித்திருக்கிறார்கள் மத்திய அரசு நிதி உதவியோடு அமைக்கும் அந்தத் தேயிலைத் தோட்டங்களில் ஸ்ரீலங்கா அகதிகளை வேலைக்கு அமர்த்த வேண்டுமென்று ஆலோசனை வழங்கப்படுமா? தேயிலைத் தோட்டக் கழகம் லாபகரமாக நடக்க, ஸ்ரீலங்காவிலிருந்து தோட்டங்களில் பணியாற்றிய அந்தத் தமிழர்கள், அகதிகள் இங்கே வந்ததுதான் காரணம், அவர்கள் உழைப்புதான் காரணம். அந்த அடிப்படையிலே அவர்களை கர்நாடக அரசு ஏற்று, பணியில் அமர்த்த இந்த அரசு வற்புறுத்துமா?



**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவரவர்களே, இந்தத் தேயிலைத் தோட்டம் தோற்றுவிப்பதற்கு அடிப்படைக் காரணம் ஸ்ரீலங்காவிலிருந்து குடி பெயர்ந்து நம்முடைய நாட்டுக்கு வந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில் மத்திய அரசு உதவியில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. இதனாலே வளம் மிகுந்த காட்டுச் செல்வம் அழிக்கப்பட்டு. அந்தத் தேயிலைத் தோட்டம் உருவாக்கப்பட்டிருக் கிறது.

(முற்பகல் 10-30)

இப்பொழுது கர்நாடக அரசிடத்திலிருந்து அவர்கள் யோசனை கேட்டி ருக்கிறார்கள் என்றால், இப்பொழுது இருக்கிற நடைமுறையைத் தெரிந்து அதன்படி கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் என்றால், அது மத்திய அரசின் அனுமதியோடு என்று இருக்குமேயானால், மத்திய அரசு இப்படிப் பட்ட திட்டங்களுக்கு உதவி செய்வதைப் பொறுத்தவரையில் கூட, ஸ்ரீலங்கா விலிருந்து வருகின்ற அகதிகள் என்று அழைக்கப்படுகிற அந்தத் தமிழ் மக்களுக்காகத் தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. அப்படி இருக்குமேயானால், கர்நாடக அரசிடம் போய் ஸ்ரீலங்காவிலிருந்து வருகின்ற தமிழர்களை தொழிலாளர்களாக வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிற உரிமை நமக்குக் கிடையாது. அந்தப் பொறுப்பை மத்திய அரசு ஏற்றிருக்கும். அப்படி இல்லையென்றால், ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற உணர்வுடன் அவர்கள் நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். மேலும் அவர்கள் வந்து பாடுபட்டதால்தான், லாபம் ஈட்டுகிறது என்றார்கள். அப்படி என்றால் 7, 8 ஆண்டுகள் நஷ்டம் அடைந்திருக்கிறது. அது யாரால் என்று உறுப்பினர் தான் சொல்ல வேண்டும்.

விதைகள் விநியோகம்.

* **120 வினா—திரு. அ. ப. சிவராமன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) விவசாயிகளுக்குத் தேவையான விதைகளை, முழு அளவில் அரசு உற்பத்தி செய்து விநியோகிக்கிறதா?

(இ) இல்லை எனில், முழு அளவில் விநியோகம் செய்ய திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

[1985 ஜூலை 19

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) விவசாயிகளுக்குத் தேவையான விதைகளை முழு அளவில் அரசு உற்பத்தி செய்து விநியோகம் செய்வது என்பது இயலாது.

(இ) முழு அளவில் விதை விநியோகம் செய்ய அரசிடம் தற்பொழுது திட்டம் ஏதும் இல்லை.

**திரு. அ. ப. சிவராமன் :** நமது நாடு ஒரு விவசாய நாடு. நம்முடைய நாட்டினுடைய பொருளாதாரம் விவசாயத்தை நம்பியிருக்கிறது. இந்த நிலையில் விவசாயிகளுக்குத் தேவையான வீரிய விதைகளை முழு அளவில் உற்பத்தி செய்து தர முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொல்வது எனக்கு வருத்தத்தைத்தான் தருகிறது என்றாலும், எந்தெந்த விதைகள், எத்தனை சதவிகித அளவுக்கு அரசால் தரப்படுகின்றன என்றும், எத்தனை வீரிய விதை உற்பத்தி நிலையங்கள் இருக்கின்றன என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** நெல் 12 விழுக்காடு, உளுந்து 15 விழுக்காடு, சோள ரகம் 7 விழுக்காடு, வீரிய விதை சோளம் 40 விழுக்காடு, கம்பு 40 விழுக்காடு. மக்காச்சோளம் 40 விழுக்காடு, பயிறு வகைகள் 10 விழுக்காடு, பருத்தி 15 விழுக்காடு. இதற்காக நாம் இந்த ஆண்டு கூட 931.44 லட்சங்கள் செலவிட்டிருக்கிறோம். தேசிய விதை நிறுவனம், மைய அரசு விதை உற்பத்தி நிறுவனம், கூட்டுறவு விதை உற்பத்தி நிறுவனம், தனியார் விதை உற்பத்தி நிறுவனங்கள் போன்றவைகள் உற்பத்தி செய்யக் கூடிய விதைகளுக்கு நாம் சான்று வழங்குகிறோம்.

**திரு. அ. ப. சிவராமன் :** வீரிய விதை உற்பத்தியைப் பொறுத்தவரையில், விவசாயிகள் அவற்றைப் பயன்படுத்துவதன் வாயிலாக நல்லமுறையில் மகசூல் கிடைக்கிறது. அது கிடைக்கப்பெறாத விவசாயிகள் குறைந்த அளவு மகசூலைப் பெறுகிறார்கள். இப்படி வீரிய ரக விதைகள் கிடைக்காததன் காரணமாக இன்றைக்கு தேசிய நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் இனிமேலாவது வீரிய ரக விதைகளை, விவசாயிகளுக்குத் தேவைப்படும் அளவுக்கு அதிக அளவில் உற்பத்தி செய்ய இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** அந்த வகையில் முயற்சி மேற்கொண்டிருக்கிறோம்.



1985 ஜூலை 19]

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** வீரிய ரக விதைகளை உற்பத்தி செய்வதைப் பொறுத்தவரையில், அந்த நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் நெல் விதையைப் பொறுத்தவரையில். இப்போது இருக்கின்ற வீரிய ரக நெல் வகைகளை விட இன்னும் கூடுதல் மகசூல் பெறக்கூடிய வகையில் புதிய விதைகளை உற்பத்தி செய்கின்ற ஆராய்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறதா ? அதனால் பயன் கிடைத்திருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நல்ல பலனும் கிடைத்திருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப் படுகின்ற விதைகள் விற்பனை செய்யப்படுகின்ற விலைக்கும் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டு சான்று அளிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற விதைகளின் விலைக்கும் ஏதாவது வேறுபாடு இருக்கிறதா ? அப்படி ஏதாவது வேறுபாடு இருந்தால், இனிமேல் வேறுபாடில்லாமல் சமன் செய்யப்பட்டு இரண்டும் ஒரே விலையில் விற்க ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** ஒவ்வொரு ரகத்தையும் பொறுத்து விலை இருக்கிறது. ஒட்டுமொத்தமாக அதுபற்றிச் சொல்ல இயலாது.

நகரசுத்தித் தொழிலாளர்கள்.

* 121 வினா—திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்திலுள்ள நகராட்சிகளில், பெருகிவரும் மக்கட் தொகைக்கு ஏற்ப, நகரசுத்தித் தொழிலாளர்கள் அதிகப்படுத்தப்பட்டுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அவர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) நகராட்சிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு அதிகப்படியான நகரசுத்திப் பணியாளர்களின் பணியிடங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

(இ) நகராட்சிகளில் நகர சுத்தித் தொழிலாளர்கள் பணியிடங்கள் கூடுதலாக தேவைப்படும்போது நகராட்சி மன்றக் குழு கூடி தேவைப்படுகின்ற பணியிடங்களுக்காக உரிய நகர் மன்றத் தீர்மானம் நிறைவேற்று

கின்றது. அத்தீர்மானம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் வழியாக நிதி நிலையைக் கருத்தில் கொண்டு பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை இயக்குநருக்கு பரிந்துரையுடன் அனுப்பிவைக்கப்படுகின்றது. இப்பணியிடங்களைத் தோற்றுவிப்பதற்கு என உள்ள அளவுகோலின்படி இத்தீர்மானம் பரிசீலனை செய்யப்பட்டு புதியதாக கேட்கப்படுகின்ற பணியிடங்கள் மேற்படி அளவுகோலுக்கு உட்பட்டு இருப்பின் அப் பணியிடங்கள் புதியதாகத் தோற்றுவிக்க பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரால் உரிய உத்திரவுகள் வழங்கப்படுகின்றன.

(முற்பகல் 10-35)

திரு. அ. ப. சிவராமன்: தலைவர் அவர்களே, இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னதாக, 25—9—1942-ல் அரசாணை என் 4142-ல் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற எல்லா நகராட்சிகளிலும், நகரசுத்தித் தொழிலாளிகளிடம் பிரச்சினைகள் இருக்கின்றன. போதுமான பணியாளர்கள் இல்லாததால் பொதுவாக எல்லா இடங்களிலும் சுகாதாரக் கேடுகள் நிறைய உள்ளன. இதற்காகப் போடப்பட்டுள்ள ஒரு கமிட்டிகூட தனது பரிந்துரைகளை வழங்கியுள்ளதாகத் தெரிகிறது. இது ஒரு பழைய நடைமுறை. இதை மாற்றி, புதிய நடைமுறைகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பண்ருட்டி நகராட்சியில், 244 பேர் நகரசுத்தித் தொழிலாளர்களாகப் பணியாற்றவேண்டும், ஆனால் 62 பேர்கள்தான் பணியாற்றுகிறார்கள். 182 பேர்கள் பற்றாக்குறை இருக்கிறது. சுகாதார ஆய்வாளர்கள் 5 பேர் இருக்க வேண்டுமென்பதற்குப் பதிலாக, 2 பேர்தான் இருக்கிறார்கள். மேஸ்திரிகள் கூட 4 பேர்களுக்குப் பதிலாக இருவர் இருக்கிறார்கள். எனவே இதைக் கருத்தில்கொண்டு, புதிய நடைமுறைகளைக் கொண்டுவந்து, பொது சுகாதாரம் மிக முக்கியமானதாக இருப்பதால், போதிய புதிய நகரசுத்தித் தொழிலாளர்களை நியமிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, ஏற்கெனவே மூலக் கேள்விக்குச் சொன்ன பதிலைத்தான் மீண்டும் சொல்ல வேண்டும். அதற்கென்று சில விதிமுறைகள் உள்ளன. இப்போது விதிகளை மாற்ற இயலாது. உறுப்பினர் பண்ருட்டி நகராட்சி பற்றிச் சொன்னார். தனிப்பட்ட ஒரு நகராட்சியைப்பற்றி அதிலுள்ள பிரச்சினைகளை எழுத்து மூலம் எழுதிக் கொடுத்தால், உடனடியாகக் கவனிக்கப்படும். பொதுவாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நான் ஏற்கெனவே சொன்ன பதில்தான் இதற்கும்.



டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அதிக சுற்றுலாப் பயணிகள் வருவதால், நகரசுத்தித் தொழிலாளர்கள் அதிக அளவில் நியமிக்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே கோரிக்கை தந்திருந்தார்கள். இதைப்பற்றி நமது ஆளுநர் அவர்களும் கருத்துத் தெரிவித்து, அதிகப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று அரசுக்குச் சொல்லியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, பொதுவாக நகர சுத்தி தொழிலாளர்கள் வாழ்கிற குடியிருப்புக்கள், அவர்களுடைய நிலைமைகள், அங்கேயுள்ள சுகாதார நிலைமை மகிழ்ச்சிகரமாக இல்லை. பரிதாபத்திற்குரிய வகையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகரசுத்தித் தொழிலாளர்கள் தாங்கள் வாழ்கிற இடங்களை தாங்களே சுத்தமாக வைத்துக்கொள்வது மிக முக்கியமான கடமை என்ற அடிப்படையில், அவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க உரிய வசதிகள் செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, எந்தக் காரியமாக இருந்தாலும், நிதிநிலைமையைப் பொறுத்துத்தான் செய்ய வேண்டும்.

திரு. அ. ப. சிவராமன்: தலைவர் அவர்களே, பண்ருட்டி நகராட்சியைப் பொறுத்தவரையில், பற்றாக்குறை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது தவறு. ஆளுநர் அவர்களே நீலகிரி போன்ற இடங்களில் நகரசுத்தித் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். திருச்சியிலும் பற்றாக்குறை இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் பொது சுகாதாரத்திற்கு மிக அத்தியாவசியமானவர்கள். அந்த அடிப்படையில் இதைப் பொதுக் கருத்தாகக் கொண்டு, தமிழகத்தில் இருக்கிற அத்தனை நகராட்சிகளிலும் நகரசுத்தித் தொழிலாளிகளை அதிகப்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நான் சொன்னது தவறு என்று சொன்னதற்கு நன்றி. நான் தவறாகச் சொல்லவில்லை. உறுப்பினர், பண்ருட்டி நகராட்சியில் உள்ள பற்றாக்குறைபற்றிச் சொன்னதை நான் காதால் கேட்டேன். அதைப்பற்றி நான் பேசும்போது, அவர் ஆறுதல் பெறக்கூடும் என்றுதான் திருப்பிச் சொன்னேனே தவிர. மற்ற

இடங்களில் பற்றாக்குறை இல்லை என்று நான் சொன்னதாக உறுப்பினர் கற்பனை செய்துகொள்ளத் தேவையில்லை. உறுப்பினரே பண்ருட்டி நகராட்சியில் ஆட்கள் பற்றாக்குறை இருப்பதாகச் சொன்னார். அதை நான் கவனிக்கிறேன், முழுமையாக எழுதிக் கொடுத்தால், கவனிக்கப்படும் என்று நான் பதில் சொன்னேன். எல்லா இடத்திலும் பற்றாக்குறை இருக்கிறது என்பதில் எனக்கு கருத்து வேறுபாடு இல்லை. நகராட்சியாக இருந்தாலும், முனிசிபாலிட்டியாக இருந்தாலும், கூடுதலாக ஆட்களை நியமிக்க வேண்டுமென்றால், பல கோடி ரூபாய் கூடுதல் செலவாகும். கொள்கை ரீதியாக, இப்போது பட்ஜெட் போட்டு நிறைவேற்றி, முடிகிற நேரத்தில் புதிதாக எந்த அறிவிப்பையும் சொல்ல முடியாது. நிதிநிலைமைக்கேற்றவாறு செய்யப்படக்கூடிய நிலைமைதான் இருக்கிறது.
We cannot involve ourselves in any financial commitments. It is a very simple matter.
என்பதற்காகத்தான் சொன்னேன்.

Thirumathi TARA CHRIAN: Sir, we have not been informed of any change in the portfolio of the Honourable the Health Minister. Is he in charge of Public Health matters in Municipal Administration also? Secondly, may I know whether the conservancy bullock-carts would be taken away and better kind of conservancy vans introduced in their place? I would also like to point out the housing rcheme for the scavengers — I am sorry to use that word —has not been properly implemented. They are living near the cemetery in Royapuram. The place where they live is worse than the cemetery. Will they be provided better houses and also other facilities and amenities?

The Hon Dr. H. V. HANDE: Sir, I though the honourable Member, who is a senior Member, would be aware of the fact that the Municipal Health Administration is partly monitored by the Health Department. I do not know how she allowed this slip to occur. The question regarding facilities for the sanitary workers is exactly the point raised by the hon. Member Thiru Sivaraman. It will definitely be taken into consideration. The whole problem is that all these things involve certain financial commitments. After the Budget has been finalised and the Appropriation Bill has been passed, I cannot involve myself in any financial commitment. That is why I exercised some caution in my reply and said that we would examine all these things. As and when our financial position gives us a chance to improve the facilities for the sanitary workers in the Municipalities, these things will definitely be taken into consideration,





கங்கப்பா காகித ஆலைக்கழிவு.

* 122 வினா.—திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், வடக்குத்து, கங்கப்பா காகித ஆலையிலிருந்து வெளியேறும் தொழிலக நீரியற் கழிவினால் (Effluent) சுற்றுப்புற சுகாதாரம் மாசு அடைந்து வருவதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(இ) அரசு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

(முற்பகல் 10-40)

திரு. அ. ப. சிவராமன்: தலைவர் அவர்களே. கங்கப்பா பேப்பர் ஆலையிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர் வாய்க்கால் வழியாகச் சென்று, பொது வாய்க்கால் வழியாகச் சென்று வீராணத்திற்குப் பக்கத்திலே இருக்கின்ற ஓர் அருமையான ஜீவநதியாக இருக்கின்ற நதியிலே கலக்கிறது. முன்பெல்லாம் மக்கள் அந்த நதி நீரைக் குடிநீராகவும், குளிப்பதற்கும் பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள். இப்போது இந்தக் கழிவு நீர் கலப்பதால், அந்த நதி நீர் உபயோகமில்லாமல் வீணாகிக்கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், அந்தத் தண்ணீரைக் குடிக்கின்ற கால்நடைகளும் இறந்து போகின்றன என்று சொல்கிறார்கள். அந் நதி நீர் பாய்கின்ற விளை நிலங்களும் பாழ்பட்டுப் போகின்றன என்று சொல்கிறார்கள். அரவிந்த் டிஸ்டில்லரியில் முதலில் வாய்க்காலில் விட்டு ஓரளவுக்கு சுத்தம் செய்துவிட்டு, பிறகு வெளியில் விடுகிறார்கள். ஆனால் இவர்கள் நேரடியாக ஜீவநதியில் விடுகிறார்கள். இதையெல்லாம் கணக்கிலேகொண்டு உடனடியாக இதைத் தடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, கங்கப்பா காகித ஆலையைப் பொறுத்தவரையில், அவர்கள் நம்மிடம் 8—9—1982 அன்று பொல்யூஷன் கண்ட்ரோல் ஆக்ட்டின்கீழ் அனுமதி தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நாமும் அவர்களுக்கு அனுமதி கொடுத்தோம். பிறகு 25—2—1984 அன்று நாம் அந்த ஆலையை ஆய்வு செய்தோம். அந்தச் சமயத்தில் அவர்கள் சரியான முறையில் சுத்திகரிப்பு செய்யாமல் கழிவு நீரை ஆற்றில் விட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, உடனடியாக அவர்

களுக்கு நோட்டீஸ் கொடுத்தோம். அவர்களும் அதை உடனடியாகச் சரி செய்து விடுவதாக வாக்குறுதி கொடுத்தார்கள். பிறகு இரண்டு முறை 14—5—1984 மற்றும் 21—9—1984 தேதிகளில் effluent sample எடுத்து பரிசோதனை செய்ததில். அவர்கள் சரியாகச் செய்யவில்லை என்பது நமக்குத் தெரிய வந்தது. அதன்பிறகு 16—2—1985 அன்று நடைபெற்ற போர்டு மீட்டிங்கில் செக்ஷன் 44-ன் கிழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். ஆகவே அவர்களுக்கு வெகு விரைவில் லைசன்ஸ் ரத்து செய்யக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### உணவுப் பண்டங்களின் விலை.

* 123 வினா—திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

உணவகங்களில் வழங்கப்படும் உணவுப் பண்டங்களின் விலைகளை, தமிழக அரசே நிர்ணயிக்கும் கருத்துரு ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, ஆம். உணவகங்களில் வழங்கப்படும் உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கான அவசியத்தை உணர்ந்து, வரும் ஆகஸ்ட் 8 ஆம் திங்களில் தலைமைச் செயலகத்தில் உணவு விடுதிகள் ஓட்டல் உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட இருக்கிறது. உணவகங்களில் வழங்கப்படும் உணவுப் பண்டங்களில் சாதாரண மக்களால் அதிகமாக விரும்பப்படும் உணவுப்பண்டங்களுக்கான விலையினை சட்டப்படி நிர்ணயிப்பதற்கான கருத்துருவும் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, முன்பும் இதுபோன்று இந்த உணவுப் பண்டங்களின் விலைபற்றிப் பேசும்போது, நம் தமிழக அரசு, இந்த உணவு வகைகளின் விலையைக் குறிப்பிடும்போது எ கிரேடு, பி கிரேடு, சி கிரேடு ஓட்டல்கள் என்று நிர்ணயித்து, அதற்குத் தகுந்தாற்போல் விலையை நிர்ணயம் செய்ய ஆலோசிக்கும் என்று கூறினார்கள். அதையும் வரும் ஆகஸ்ட் 8 ஆம் தேதி நடக்கவிருக்கிற கூட்டத்தில் ஆய்வு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 10-45)

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற விதிகளின்படி, ஐந்து ஸ்டார், மூனறு ஸ்டார் ஓட்டல்களிலே விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் இப்போது நமக்குக் கிடையாது. இன்னும் சொல்லப்போனால், ஃபைவ் ஸ்டார், த்ரீ ஸ்டார் ஓட்டல்களிலே சட்டப்படி இந்த விலைக்குத்தான் நீங்கள் விற்க வேண்டுமென்று கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் எதுவும் இப்போது இல்லை. ஆனால் ஆந்திராவில் இருப்பது போல், குறைந்தபட்சம் ஒரு 10 வகையான பொருட்களுக்கு இங்கும் விலை நிர்ணயம் செய்யலாம். சாதாரண நடுத்தர மக்கள் உட்கொள்கின்ற உணவுப் பொருட்கள், குறிப்பாக இட்லி, மெது வடை, ரவா உப்புமா, தோசை, காபி, தேனீர், அளவு சாப்பாடு, அளவு சாப்பாடு ஸ்பெஷல், சாம்பார் சாதம், தயிர் சாதம்—இந்த 10 அயிட்டங்களுக்கு விலை நிர்ணயிப்பதற்கு தனியாக ஒரு பிரயோஜனமான சட்டத்தைக் கொண்டுவர முடியுமா என்பதைப்பற்றி அரசு பரிசிலித்துக் கொண்டிருக்கிறது. ஆகஸ்ட் 8 ஆம் தேதி அதுபற்றி ஓட்டல் உரிமையாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறோம். சட்டம் வருவதற்கு முன்னாலே இப்போது விலையேற்றம் இருப்பதைக் கருத்திலே கொண்டு, பேச்சு வார்த்தை மூலம் பேசி ஓரளவுக்கு விலையைக் குறைக்க முடியுமா என்று பார்ப்பதற்கு விரும்புகிறோம். ஓட்டல் உரிமையாளர்களை அழைத்துப் பேசினால், வியாபாரிகள் அவர்களுக்குத் தருகிற அத்தியாவசியமான, அவசியப் பண்டங்களின் விலையை ஏற்றி விடுகிறார்கள். அதனால் தான் ஓட்டல் பண்டங்களின் விலையை ஏற்ற வேண்டியிருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். அந்த அடிப்படையிலே வருகிற 25 ஆம் தேதி வியாபாரிகள் சங்கத்துடன் கலந்து பேச்சு வார்த்தை நடத்தவும் திட்டமிட்டிருக்கிறோம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திலே வெஜிடேரியன் உணவுகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இது நான்-வெஜிடேரியன் உணவுக்குப் பொருந்தாதா? நான்-வெஜிடேரியன் உணவுப் பொருள்களின் விலைகள்கூட அதிகமாக இருக்கிறது. நான்-வெஜிடேரியன் உணவுப் பண்டங்களை விற்கும் ஓட்டல்காரர்களை அழைத்துப் பேசி அதன் விலையைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நாம் சட்டம் கொண்டுவர விரும்புவதே சாதாரண ஏழை எளிய மக்களின் நிலைமைகளைக் கருத்தில் கொண்டுதான். பிரியாணி சாப்பிடுபவர்களையோ, சிக்கன் சாப்பிடுபவர்களையோபற்றி நாம் அதிகமாகக் கவலைப்படுவதில்லை. நடைமுறைப் படுத்துவதிலேயும், அதை அப்படிக் கொண்டு வருவதிலேயும் ஏராளமான சங்கடங்கள் இருக்கின்றன.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, பிரியாணியைச் சொல்லவில்லை, சிக்கனைச் சொல்லவில்லை. சாதாரணமான மட்டன் கூட விலை ஏறியிருக்கிறது. சென்னையில் கிலோ 32 ரூபாய்வரை விற்கிறது. நம்முடைய பக்கத்திலே 22 ரூபாய் விற்கிறது மாண்புமிகு திரு. இராசாராம் அவர்கள் நான்-வெஜிடேரியன் அல்லவா! அவர்கள் நிறைய நான்-வெஜிடேரியன் உணவு சாப்பிடுவார். தினமும் கோழிக்கறி சாப்பிடுவார். விலை ஏறிப்போனதனால், கஷ்டமாக இருப்பதனால் . . . .

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பிரச்சினை என் சாப்பாட்டைப்பற்றி அல்ல; நாட்டைப்பற்றித்தான் பிரச்சினை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நாடு என்பது எங்களையெல்லாம் உள்ளடக்கித்தான் இருக்கிறதே தவிர, நாடு என்று தனியாக ஒன்றும் இல்லை. அதனாலே அமைச்சர் அவர்கள் தவறான கருத்தைச் சொன்னதாகக் கருதுகிறேன். பிரியாணி, சிக்கன் என்பது ரொம்ப மோசமான உணவல்ல. டாக்டர்கள் கூட சிக்கன் சாப்பிட சிபாரிசு செய்கிறார்கள். நான்-வெஜிடேரியன் உணவுகளையும் கட்டுப்படுத்த அரசு முன்வராதா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் சொன்னதைத் தவறாக எடுத்துக் கொண்டார்கள் என்று நினைக்கிறேன். நான் கூட நான்-வெஜிடேரியன். எனவே என்னையும் உள்ளடக்கித்தான் சொன்னேனே தவிர, உறுப்பினரை மட்டும் குறிப்பிட்டு தனியாகச் சொல்லவில்லை. இருக்கிற சட்டங்களின்படி இப்போது நடவடிக்கை எடுக்க இயலாது என்பதைத்தான் சுட்டிக்காட்டினேன். இருந்தாலும் அதுவும்கூட நல்ல யோசனைதான். அது முடியுமா என்பதைப்பற்றி யோசிப்போம்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, பல மாதங்களுக்கு முன்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபோன்று ஓட்டல் அதிபர்களை எல்லாம் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி விலை நிர்ணயம்



செய்தது பத்திரிகையில் வந்தது. முன்பு நடந்த விலை நிர்ணயத்தை ஓட்டல் உரிமையாளர்கள் அமுலுக்குக் கொண்டுவந்தார்களா என்று அறிய விரும்புகிறேன். மற்றும் இப்போது ஆகஸ்ட் 8 ஆம் தேதி ஆரம்பிக்க இருக்கும் கூட்டத்திற்கும், முன்பு நடந்த கூட்டத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன? இரண்டும் ஒரே விலை நிர்ணயம் குறித்ததுதானா? இதுபோன்று தமிழகம் முழுவதற்கும் விலையை நிர்ணயிக்கப் பரிசீலிப்பார்களா? அப்படிப் பரிசீலிக்காவிட்டால், அதுகுறித்து அரசு அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, கடைசியாக ஓட்டல் நிர்வாகத்தினருடன் பேச்சு நடந்தது டிசம்பர் 1984. அப்போது அவர்களுடன் பேசி, ஏதோ நாம் சொன்ன அத்தியாவசியமான உணவுப் பொருட்களுக்கு எல்லாம் 5 பைசா, 10 பைசா குறைக்க வேண்டுமென்று அப்போது இந்த அதிகாரிகள், அமைச்சர் மட்டத்திலே ஆலோசனை கூறப்பட்டு, அதை அவர்கள் பின்பற்றி விலையைக் குறைத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே, 6, 7 மாதங்கள் ஆனதனாலே சில ஓட்டல்களில் சோதனை செய்கிறபோது விலைப் பட்டியலை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, விலையேற்றம் இருப்பதை உணர்ந்தோம்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் இங்கே பேசும்போதும் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மறுபடியும் அவர்களிடம் பேசுவதற்காக இப்போது கூட்டம் கூட்டப்பட இருக்கிறது. இப்போதிருக்கும் சட்டப்படி அந்தக் கூட்டத்தில் கூட நாம் அவர்களுக்கு ஆலோசனைதான் சொல்ல முடியும். கட்டுப்படுத்த முடியாது. எனவே ஆலோசனைகளைச் சொல்லுகிறோம். இப்படி அவர்களிடம் கலந்து பேசித்தான் முடிவெடுக்கிறோம். ஆனால் அவர்களும் அவர்களுக்குரிய சங்கடங்களைச் சொல்லுகிறார்கள். அதாவது "நாங்கள் விலையை ஏற்றுவதற்குக் காரணமே எங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களைச் சப்ளை செய்யும் வியாபாரிகள் அந்தப் பொருள்களின் விலையை உயர்த்திவிட்டிருக்கிறார்கள். அந்த விலைக்கு நாங்கள் வாங்கி உணவுப் பண்டங்களைத் தயார் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே அவர்களும் விலையைக் குறைக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். எனவேதான் அந்தக் கூட்டத்தையும் 25 ஆம் தேதி கூட்டியிருக்கிறோம். நம்முடைய ஆலோசனைகளை அவர்கள் ஓரளவுக்குப் பின்பற்றுகிறார்கள். பின்பற்றாவிட்டாலும் நாம் சட்டப்படி அவர்கள்மீது

நடவடிக்கை எடுக்க இப்போது நமக்கு அதிகாரம் இல்லை. எனவேதான் தனியாக ஒரு சட்டத்தைக் கொண்டுவர முடியுமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓட்டல உரிமையாளர்களைக் கூட்டிப் பேசுகிறபோது, இட்டிலி, வடை, தோசை என்றவற்றிற்கு மட்டும் விலையை நிர்ணயித்து ஒப்புதல் அளித்து விடுகிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு இட்டிலி ரவா இட்டிலியாகவும், மைசூர் போண்டா ராக்கெட் போண்டாவாகவும், தோசை ஸ்பெஷல் தோசையாகவும் மாறி, அவற்றைக் கூடுதலான விலைக்கு ஓட்டல்களில் விற்கிறார்கள். இதை அரசு அறியுமா? எனவே ரவா இட்டிலி, மைசூர் போண்டா, தவலை வடை, ஸ்பெஷல் தோசை போன்றவற்றிற்கும் சேர்த்துப் பேசி விலை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: நாம் போண்டாவுக்கு விலை நிர்ணயித்தால், அவர்கள் ராக்கெட் போண்டா என்று போடுகிறார்கள். நாம் ராக்கெட் போண்டாவுக்கு விலை நிர்ணயித்தால். அவர்கள் ஸ்பெஷல் ராக்கெட் போண்டா என்று போடுவார்கள். அதற்கு வேறு ஒரு விலையை நிர்ணயம் செய்து விடுகிறார்கள். சட்டப்படி இப்படித்தான் தயாரிக்க வேண்டும், இன்ன விலைக்குத்தான் விற்க வேண்டும் என்று நாம் நடைமுறைப் படுத்த முடியாது. எனவே நாம் இப்போது அதிகமாக கவனம் செலுத்துவது ஏழை எளிய மக்கள் உபயோகிக்கும் சாதாரண உணவுப் பண்டங்களுக்கு ஒரு நியாயமான விலையை நிர்ணயிக்க வேண்டும் என்பதுதான். அதை நிறைவேற்றுவதற்குரிய வழிவகைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உறுதியாக அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். எனவே ஏழை எளிய மக்கள் வாங்கி உண்கிற உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க வேண்டும் என்று கவனமாக இருக்கிறோம். அதற்குத்தான் ஆலோசனை கொடுக்கிறோம், அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறேன். ஸ்பெஷல் ஐட்டங்களைப்பற்றி உடனடியாகச் செய்வதற்கு ஒன்றுமில்லை. இருந்தாலும் ஓரளவுக்கு அதைப் பற்றியும் என்ன செய்யலாம் என்று இந்த அரசு யோசிக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: வியாபாரிகளுடைய கூட்டத்தை அமைச்சர் அவர்கள் 25 ஆம் தேதியும் உணவக உரிமையாளர்களின் கூட்டத்தை 8 ஆம் தேதியும் கூட்டியிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். சென்னை நகரில் உள்ளவர்களுக்கு மட்டுமா அல்லது பிற மாவட்டப் பகுதிகளில் உள்ளவர்களையும்





உள்ளடக்கியதா இந்தக் கூட்டம் என்று அறிய விரும்புகிறேன். ஏழை எளிய மக்கள் பயணம் செய்கிற திருவள்ளுவர் போக்குவரத்துப் பேருந்துகள் இரவு நேரங்களில் நிற்கிற கடைகளில் உணவுப் பண்டங்களின் தரம் குறைந்திருக்கிறது, விலையும் மிகவும் அதிகமாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா? அந்தக் கடை உரிமையாளர்களையும் சேர்த்து இந்த விலைக் கட்டுப்பாட்டை அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து பேருந்துகளில் பயணம் செய்கிற ஏழை எளிய மக்களையும் இந்த அரசு காப்பாற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: மாண்புமிகு உறுப்பினருக்கே நன்கு தெரியும், எந்தப் பிரிவாக இருந்தாலும் அங்கே ஒரே சங்கமாக இருப்பதில்லை. ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் என்று மாநில அளவில் அல்லது மாவட்ட அளவில் ஒரே சங்கமாக இல்லை. ஐந்து, ஆறு வகையான சங்கங்களை வைத்திருக்கிறார்கள். சென்ற தடவை 15 நாட்களுக்கு முன்னால் கூட்டம் போட்டபோது, தமிழ் நாடு முழுவதுமாக என்று அறிவித்த காரணத்தால், 500 பேருக்கு மேல் அந்தக் கூட்டத்திற்கு வந்துவிட்டார்கள். பத்தாவது மாடியில் உள்ள மாநாட்டுக் கூடத்தில் அந்த மீட்டிங் வைத்திருந்தும், அதைத் தள்ளி வைக்க வேண்டிய அவசியம் வந்துவிட்டது. இப்போது சென்னை நகரைப் பொறுத்தவரையில் தான், கூட்டம் போட்டுப் பேச இருக்கிறோம். அதற்குப் பிறகு உணவுத் துறை அதிகாரிகளும் மாவட்ட ஆட்சியாளரும் மாவட்ட அளவில் அங்கே உள்ள சங்கங்கள் மற்றும் சாலையோர இரவு உணவு அகங்கள் ஆகியோரின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி முடிவெடுப்பார்கள். அப்படி மாவட்ட வாரியாகப் பேச்சுவார்த்தை நடக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: நடுத்தர மக்கள் சாப்பிடும் உணவகங்களில் இப்போது இட்டிலி இளைத்துவிட்டது. தோசை நம் ஆசை அளவில் இல்லை. வடை விடை அளிப்பதுபோல் மிகவும் சுருக்கமாக இருக்கிறது. விலை நிர்ணயிப்பதோடு எடை அளவையும் உணவுப் பண்டங்களுக்கு நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். இரவு நேரக் கடைகளில் மலிவாகப் பண்டங்களைத் தருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை அரசு செய்து கொடுக்க முன்வருமா, பொதுமக்களின் நன்மைக்காக சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்களில் உள்ளதைப்போல் இங்கேயும் பரவலாக அத்தகைய கடைகள் வந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கும் அரசு ஆதரவு தருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. திருநாவுக்கரசு: விடை போன்ற வடை இருப்பதைத் தடை செய்யத்தான் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறோம். (சிரிப்பு)

Thirumathi TARA CHERIAN: Sir, I think there is a perpetual controversy between the hoteliers and the Government in this matter. We are talking about 'Rocket Bondas' and other things. But we do not seem to express what we are trying to say. A small committee, consisting of doctors, has come to Madras from Delhi. It visited the canteen in the premises of the Government Royapettah Hospital. This canteen is run by deaf girls under the auspices of the State Social Welfare Board. The members of the committee have tasted the food prepared there. They are so satisfied that they do not want to take even a cup of coffee elsewhere. I invite the Honourable Chairman, the Honourable Ministers and the honourable Members to visit that canteen on any day convenient to them. Similar canteens are also run in the premises of the Indian Oil Company and the Madras Refineries Limited. In the canteen in the Indian Oil Company premises, nearly 2,000 meals, both *a la carte* and full meals, are prepared every day. In the premises of the Housing Board also, there is a similar canteen which serves nearly 3,000 people. All these are run under the auspices of the State Social Welfare Board which is a small organisation. If the Honourable Minister wants, I can give him all the particulars. To start such a canteen, what we need is a small site near a bus-stand or some such other place. If such a site is given, I can see to it that a canteen is started there in a matter of one or two days, with the help of the State Social Welfare Board. It will immensely benefit the people because they can go there, pay a small price and get wholesome food prepared under hygienic conditions. Will the Government allow us to do it?

(முற்பகல் 10-55)

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: இதுபோன்ற திட்டங்களை தமிழகத்தில் எந்தப் பகுதியிலே வேண்டுமானாலும் துவங்கலாம், தடை ஏதுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் ஆலோசனை சொல்லுவதை அரசு வரவேற்கிறது.

செல்வி ஆ. லீலாவதி: சட்டமன்ற புதிய விடுதியில் உள்ள ஓட்டலில் விலை அதிகமாக இருக்கிறது. இதனால் வெளியே சென்று வாங்கும் நிலைமை இருக்கிறது. அவர்கள் ஓட்டல் நடத்தும் இடத்திற்கான வாடகைகூட இல்லாமல் இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அப்படி இருக்கும்போது, விலை ஏன் அதிகமாக இருக்கிறது? அதையாகிலும் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: நான் சொன்னது எல்லா ஓட்டல்களுக்கும்தான். எனவே வருகிற கூட்டத்திலே பேசுகின்றபோது, இவைகள் எல்லாம் யோசிக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: விலையைக் குறைத்தால் தரத்தைக் குறைப்பது, எடையை அதிகரித்தால் தரத்தைக் குறைப்பது என்பது வாடிக்கையான நிகழ்ச்சியாக இருக்கிறது. நீண்டகாலமாக இப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. தனியார் துறையிலே எல்லா உணவு விடுதிகளும் இருப்பதும், அவர்களுக்கு போட்டியில்லாமல் இருப்பதும்தான் இதற்குக் காரணம். இதனால்தான் அவர்களுடைய ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது. சட்டத்தின் மூலமாக அவர்களைக் கட்டுப்படுத்த முடியுமா என்ற சந்தேகம்கூட இருக்கிறது. ஆகவே படித்த இளைஞர்கள் 'நாசா' போன்ற அமைப்புகள் மூலமாக வெற்றிகரமாகக் கடைகளை நடத்துவதால், அவர்களுக்கு அரசுத் துறையின் மூலமாகவோ அல்லது கூட்டுறவுத் துறையின் மூலமாகவோ உணவு விடுதிகளை நடத்த இடங்கள் ஏற்பாடு செய்து கொடுத்து நிதியுதவியும் செய்து கொடுத்தால், அதன் மூலமாக பரவலான முறையில் போட்டி மனப்பான்மையோடு கடைகளை நடத்தி விலைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா? அரசுத் தரப்பிலே இதனால் கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டாலும்கூட, ஆரம்பத்திலே இந்தக் கடைகளை ஆரம்பிக்கலாம். இது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: இந்த யோசனையைக் கேட்கிறபோது இனிமையாகத்தான் இருக்கிறது. இதை நடைமுறைப் படுத்துவதில் ஏராளமான சங்கடங்களும், ஏராளமான நஷ்டமும் அரசுக்கு வந்து சேரும். ஆகவே தற்போது இதுபோன்ற திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

பானூர் தொழுநோய் பிச்சைக்காரர்கள்.

*124 வினா—செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கல்பட்டு மாவட்டம், பானூரில் உள்ள தொழுநோய் பிச்சைக்காரர்கள் கடந்த மார்ச் (1984 மார்ச்) மாதத்தில், தங்களுக்குக் கொடுக்கப்படும் உணவு போதவில்லை என்று, சாலை மறியல், உண்ணாவிரதம் போன்ற செயல்களில் ஈடுபட்டது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) ஆம்.

(இ) பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லவாசிகளின் நலன் கருதி அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுத் தொகையை நாளொன்றுக்கு, வயது வந்தோர்க்கு இரண்டு ரூபாய் முப்பது பைசாவிலிருந்து நான்கு ரூபாயாகவும், பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்கட்கு ரூபாய் 1-15-லிருந்து ரூபாய் 2.50 ஆகவும் உயர்த்தி அரசு ஆணை எண் 127? சமூகநலம், நாள் 29—3—1984-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

**செல்வி ஆ. லீலாவதி :** ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும் அளவு மிகக் குறைவாக இருப்பதால், அங்கே போதிய அளவு உணவு கொடுக்க முடியவில்லை என்று பேசப்படுகிறது. ஆகவே அதை மேலும் போதிய அளவிற்கு உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, இப்போது தான் பெரியவர்களுக்கு ரூ. 2.30 ஆக இருந்தது, ரூ. 4 என்று உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதுபோலவே சிறுவர்களுக்கு, 12 வயதிற்குட்பட்டவர்களுக்கு ரூ. 1.15 ஆக இருந்தது ரூ. 2.50 ஆக உயர்த்திக்கொடுக்கப்பட்டுள்ளது. நிதிநிலைமைகளை நாம் ஒருபுறம் பார்த்து அதற்குப் பிறகு தான் அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, இங்கேயுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு என்ன உணவுகள் அளிக்கப்படுகின்றன ? மேலும் அவர்களுக்கு சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் விடுமுறைகள் விடப்படுவதாகவும் அந்த நாட்களில் அவர்கள் சென்னை நகரத்தின் பகுதிகளுக்கு வந்து பிச்சை எடுத்து பொதுமக்களுக்குப் பெருந்தொல்லைகள் கொடுப்பதாகவும் சொல்கின்றார்கள். அது உண்மையா ? அப்படி உண்மையென்றால், அந்த விடுமுறை விடுவதைத் தவிர்க்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, தேவைக்கு உகந்தவாறுதான் சாப்பாடு கொடுக்கப்படுகிறது. அதைப்பற்றி விவரம் தற்போது என்னிடம் கொடுக்கப்படவில்லை. இருந்தாலும், அவர்களுடைய தேவைக்குத் தகுந்த மாதிரி உணவுகள் கொடுக்கப்படுகின்றன. உறுப்பினர் அவர்கள் விடுமுறை அளிப்பதுபற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றியும் அரசு பரிசீலிக்கும்.



### உரம் மற்றும் பூச்சி மருந்தின் விலை.

* 125 வினா—**திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களின் (Credit Societies) விற்பனை செய்யும் உரம் மற்றும் பூச்சி மருந்து ஆகியவற்றின் விற்பனை விலைக்கும், அதே துறையைச் சார்ந்த கூட்டுறவு விற்பனை சங்கங்களின் (Marketing Societies) விற்பனை விலைக்கும் வேறுபாடு இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரங்களை விநியோகிப்பதில் ஒப்படைப்பு முறை Consignment basis மற்றும் ரொக்கக் கொள்முதல் முறை Cash and Carry basis ) என்ற இரு முறைகள் இருப்பதாலும், பூச்சிகொல்லி மருந்துகள் மாநிலத்தில் வெவ்வேறு பகுதிகளிலுள்ள இரு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து விநியோகிப்பதாலும், இந்த விலை வித்தியாசங்கள் ஏற்படுகின்றன.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு ஒரு விவரம் தருவது நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு விற்பனை சங்கங்கள், மற்றும் விவசாயிகள் கடன் சங்கங்கள் மூன்றிலும் விலைகள் மாறுபட்டிருக்கின்றன. விஜய் எம்.எப். 17-17 உரம் ரூ. 117 தனியார் துறையிலும், கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ. 119-க்கும், விவசாயிகள் கடன் சங்கத்தில் ரூ. 122-க்கும் விற்கப்படுகின்றது. இதைப் போலவே விஜய் யூரியா; தனியார் நிறுவனத்திலே 106 ரூபாய்க்கும், கூட்டுறவு விற்பனைச் சங்கத்திலே 108 ரூபாய்க்கும், விவசாயக் கடன் சங்கத்திலே 111 ரூபாய் 18 காசுக்கும் விற்கப்படுகிறது. டி. ஏ. பி. என்று சொல்லப்படுகின்ற உரம், தனியார் நிறுவனங்களிலே 129 ரூபாய்க்கும், கூட்டுறவு விற்பனை சங்கங்களில் 133 ரூபாய் 50 காசுக்கும், விவசாயிகள் கடன் சங்கங்களில் 138 ரூபாய் 50 காசுக்கும் விற்கப்படுகிறது. என். எல். சி. யூரியா தனியார் நிறுவனங்களில் 105 ரூபாய்க்கும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 108 ரூபாய்க்கும், விவசாயிகள் கடன் சங்கங்களில் 110 ரூபாய் 18 காசுக்கும் விற்கப்படுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் அமைச்சர் என்று நினைத்துக்கொண்டு பதில் சொல்கின்றாரா அல்லது அமைச்சர் அவர்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கின்றாரா?

திரு. அ. ப. சிவராமன்: ஒரு விவரமாகச் சொல்வது பின்னாலே விவசாயிகளுக்குப் பலன் அளிக்கும் என்ற காரணத்தினாலேயே விவரத்தைச் சொன்னேனே தவிர வேறு காரணம் அல்ல. எனவே இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இதுபோல விலை வித்தியாசம் இருப்பதால், இந்த விவசாயக் கடன் சங்கத்திலே விவசாயிகள் கடனாக உரத்தைப் பெற்று அதற்குப் பின்னாலே தனியார் நிறுவனங்களிலே, கடனாகப் பெறுகின்ற அந்த எம்.எப். 17-17 உரத்தை உபயோகப்படுத்த முடியாத அளவில் விற்கின்றார்கள். காரணம் என்னவென்றால் அவர்கள் அதை சில நேரங்களிலே அவர்களுக்குக் காலம் கடந்து கொடுக்கின்றார்கள். அப்படி அவர்கள் பெறுகின்றபோது, ரூ. 124-க்குப் பெற்றிருக்கின்ற உரத்தை, ரூ. 117 கடன் இருக்கின்ற காரணத்தினால், ரூ. 110-க்கு விற்க வேண்டியிருக்கின்றது. அதனாலே அவர்களுக்குரிய பெரிய அளவில் நஷ்டம் ஏற்படுகிறது. அதைக் கருத்திலே கொண்டு விலையை ஒரே மாதிரி தனியார் நிறுவனங்களிலே இருக்கின்ற அளவுக்கே அவர்களுக்குக் கடனாகப் பெற்றுத் தருவதற்கு இந்த அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தச் சிக்கல்கள் நடைமுறையிலே இருந்துகொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் நாம் அங்கே கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலமாக கன்சுமர்ஸ் பேசிஸில், அந்த உரங்களை ஒப்படைப்பு விலையில் கொடுக்கின்ற நேரத்தில், அந்த விற்பனையில் எந்த அளவுக்கு விலை 'பிக்ஸ்' செய்கின்றார்களோ அந்த விலைக்குத்தான் கொடுக்க முடியும். காரணம் நாம் கடனாகக் கொடுத்தால், அதை விற்க விற்க இணையத்திற்கு கட்டிக்கொண்டிருக்கின்றார்கள். அதே நேரத்தில் மார்க்கெட்டிங் சொசைட்டியில் கொடுக்கின்ற நேரத்தில் அவர்கள் ரொக்கமாக வாங்கி அவர்கள் லாபத்தைக் குறைத்து விற்றுக்கொள்கின்றார்கள். ஆகவே எசி.எஸ்.ஐ விட மார்க்கெட்டிங் சொசைட்டியிலே கொஞ்சம் விலை குறைத்து விற்க முடியும். ஆனால் தனியார் துறையைப் பொறுத்தவரைக்கும், அவர்கள் இஷ்டத்தைப் பொறுத்து லாபத்தைக் குறைத்தோ கூட்டியோ விற்கலாம். அங்கே விவசாயக் கடன் சங்கங்களோடு போட்டியிடுகின்ற முறையிலே அவர்கள் விற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அதைப் போன்று விவசாயிகள் அவர்களால் உபயோகிக்க முடியாத உரங்களை தனியார் கடையிலே குறைந்த



விலைக்கு விற்கின்ற காரணத்தினாலே, அந்த உரங்களை வைத்துக்கொண்டு நம்மோடு போட்டிபோடக்கூடிய அளவுக்கு விற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இதையெல்லாம் கருத்திலே கொண்டுதான் அரசு இன்றைக்கு எல்லா சங்கங்களுக்கும் ஒப்புக் கொள்முதல் செய்து குறைந்த விலையில், லாபத்தைக் குறைத்து விற்கின்ற நிலையில் நடைமுறைகளை துரிதமாகச் செய்துகொண்டிருக்கிறது.

திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களை விட்டுவிட்டு, கூட்டுறவுச் சங்கம், விவசாயக் கடன் சங்கம் இந்த இரண்டையும் கருத்திலே கொண்டு, விவசாயக் கடன் சங்கங்கள் கொள்முதல் செய்கின்ற செலவினங்களைக் குறைத்துக்கொள்ளச் செய்து, இந்த நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்ற பூச்சி மருந்துகள், உரங்கள் சரியான விலையிலே அவர்களுக்கு கிடைக்கச் செய்ய, இந்த அரசு உத்தரவிடுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11.05)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மேலவைத் தலைவரவர்களே, இரண்டு நிறுவனங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. தமிழகத்திலே இருக்கிற 4,700 கூட்டுறவு விவசாய சங்கங்களிலே 700 சங்கங்கள் தான் லாபகரமாக நடக்கின்றன. அந்தச் சங்கங்கள்தான் பணத்தைக் கட்டி, உரத்தை வாங்கும் தகுதி பெற்றிருக்கின்றன. மீதி இருக்கும் சங்கங்கள் விற்பனை இணையத்தின் தயவால் உரம், பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவைகளைக் கொடுக்கின்றன. அவர்கள் என்ன விலை சொல்லுகிறார்களோ, அந்த விலைக்குத்தான் இவர்கள் விற்க முடியும். அதையெல்லாம் கருத்திலேகொண்டு, நடைமுறையிலே உள்ள சிக்கல்களை நிவர்த்தி செய்து, எல்லா சங்கங்களும் ரொக்கமாகப் பணத்தைக் கொடுத்து, உரத்தை வாங்கி, விற்கலாமா என்பது பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் அவர்கள் தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம் மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவினை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1985) மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் படிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்:

1. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி விதிப்பு (காலவரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/85.)

2. 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல்—தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/85.)

3. தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/85.)

4. தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/85.)



5. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/85.)

### (3) முன்னாள் மேலவைச் செயலாளர் அவர்களைப் பாராட்டி, பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றியதற்கு நன்றிக் கடிதம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முன்னாள் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளது:—

"பேரன்புடையீர், தங்களது 17—7—1985 நாளிட்ட கடிதமும், சட்டமன்ற மேலவையில் என்னைப் பாராட்டி 1985, ஜூலை 11 ஆம் நாள் நிறைவேற்றப்பெற்ற தீர்மானமும் கிடைக்கப் பெற்றேன்.

கடந்த 9 ஆண்டுகளாக சட்டமன்ற மேலவைச் செயலாளராக நான் ஆற்றிய பணிவான தொண்டினை சிறப்பித்துப் பாராட்டியும், சட்டமன்றப் பேரவைச் செயலாளராக நான் ஏற்றிருக்கும் புதிய பொறுப்பில் வெற்றி காண நல் வாழ்த்து தெரிவித்தும் சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றியுள்ள அரசினர் தனித் தீர்மானத்திற்கு எனது அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவராக விளங்கும் தாங்களும், மேலவை முன்னவரும் மற்றும் மாண்புமிகு மேலவை உறுப்பினர்கள் அனைவரும் என்பால் காட்டிய பரிவையும், அன்பையும் நான் நன்கு உணர்வேன். என்னுடைய குறைகளைப் பொருட்படுத்தாது, எனது தகுதிகளைச் சிறப்பித்து மேலவையில் தாங்களும் அவை முன்னவரும் அவையின் சார்பாகப் பாராட்டியதற்கு நான் பெரிதும் கடமைப்பட்டவன் ஆவேன். சட்டமன்ற மேலவைச் செயலாளராகப் பணியாற்ற எனக்குக் கிடைத்த வாய்ப்பை ஈடு யிணையில்லாத பெரும் பேறாகவே கருதுகிறேன்.

தங்கள் எல்லோரது ஆசியும், வாழ்த்துக்களும் புதியதாகப் பொறுப்பேற்றிருக்கிற பணிக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிப்பனவாக உள்ளன. அவற்றைப் பெருமையோடும், பூரிப்போடும் விலை மதிப்பில்லாச் செல்வமாகப் பணிவோடு ஏற்று, போற்றிப் பாதுகாத்து வருவேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவ [1985 ஜூலை 19

தங்கள் எல்லோரது நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ற வகையில் பேரவைச் செயலாளர் பணியிலும் தொடர்ந்து விழிப்புணர்வோடும், தொய்வில்லா அக்கறையோடும் பணியாற்றுவேன் என உறுதி அளிப்பதோடு, மாண்புமிகு மேலவைத் தலைவராகிய தங்களுக்கும், மேலவை முன்னவர் அவர்களுக்கும், ஏனைய மாண்புமிகு மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

3. கவன ஈர்ப்பு.

(1) திருச்சி மாவட்டம் முதுவத்தூரில் உள்ள முன்னோடி சிமெண்ட் ஆலைத் தொழிலாளர்களுக்கு நேர்ந்துள்ள இன்னல்கள் குறித்து.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"திருச்சி மாவட்டம் முதுவத்தூரில் உள்ள முன்னோடி சிமெண்ட் ஆலையை தனியாருக்கு விற்கும் நோக்கத்தால் எழுந்துள்ள நிலை குறித்தும் அதனால் தொழிலாளர்களுக்கு நேர்ந்துள்ள வேலையின்மையும் இன்னல்களும் குறித்தும்."

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, விவர அறிக்கை @அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. க. சுப்பு : இந்த முன்னோடி சிமெண்ட் ஆலை டிட்கோ. சார்பில் நடத்தப்பட்ட ஒன்று. மத்திய அரசிடம் ஆராய்ச்சிக்காக கொடுக்கப்பட்டு மறுபடியும் நம்மிடம் இது வந்திருக்கிறது. மினி சிமெண்ட் ஆலைகள் எல்லாம் இன்றைக்கு ஆராய்ச்சிக்காகவும் பயன்படுகின்றன. இந்நிலையில் தனியார் அதிக விலைக்குக் கேட்டால், விற்று விட எண்ணியிருப்பதாகவும் தெரிய வருகிறது லாபகரமான ஒரு தொழிற்சாலையை தனியாருக்கு விற்றுவிடுகிறோம் என்றால், நஷ்டத்தில் இயங்கினாலும், தனியாருக்கு விற்கக்கூடிய சூழ்நிலை உருவாகாதா? அதுபோல் வேலையில்லாத சில தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது. எத்தனை பேர்களுக்கு, எவ்வளவு அவ்வாறு வழங்கப்பட்டிருக்கிறது?

---

@ 287 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1985 ஜூலை 19]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அங்கு ஏற்படுத்தப்பட்ட அந்த சிமெண்ட் ஆலை ஒரு பெரிய ஆலை அல்ல. ஆராய்ச்சி நிறுவனத்திற்காக உருவாக்கப்பட்ட சிறிய ஆலை. அதிலே தொழிலாளர் பிரச்சினை வந்தால், அந்த ஆலை 1982 ஆம் ஆண்டிலே மூடப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு மூடப்பட்டது. அதிலே 72 பேர் பணிபுரிந்துகொண்டிருந்தார்கள். 39 பேர் நஷ்ட ஈடு வாங்கிக்கொண்டு வேலையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார்கள். மற்றவர்கள் வேலை கேட்கிறார்கள். அதைத்தான் டான்செம் நிறுவனம் 1983 ஆம் ஆண்டிலிருந்து ஏற்று நடத்திக்கொண்டிருக்கிறது. மேலும் புதிய தொழிலாளர்கள் அதிலே நியமிக்கப்பட வேண்டுமா என்பது பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு இருக்கிற வேலையாட்கள் போதுமானவர்களாக இருக்கிறார்கள். இன்றைக்கு விற்க வேண்டுமா வேண்டாமா என்கிற பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஆராய்ச்சிக்காகப் போடப்பட்ட சிறிய ஆலை அது. சில பேர் விற்கிறீர்களா என்று கேட்டார்கள். விற்கலாமா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் விற்க வேண்டுமென்ற நிலைக்கு வரவில்லை.

திரு. க. சுப்பு : முன்னோடி சிமெண்ட் ஆலை என்கிற வகையில் நிறுவப்பட்ட பல ஆலைகள் இன்றைக்கு இந்தியாவில் வெற்றிகரமாக நடைபெறுகின்றன. இதுபோல் இன்னொரு முன்னோடி சிமெண்ட் ஆலை தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வெற்றிகரமாக, லாபகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் இன்றைக்கு வெளியே கூடுதல் விலைக்கு சிமெண்டை விற்பதற்கான சலுகையும் இருக்கிறது. இப்படி லாபகரமாக இயங்கும் ஒன்றை தனியாருக்குக் கொடுத்தால் தொழிலாளர்களுக்கு தொல்லைகள் ஏற்படும். அதை விட அரியலூரில் இருக்கும் சிமெண்ட் ஆலையுடன் இதனையும் இணைத்து, முன்புபோல் வெற்றிகரமாக இந்த சிமெண்ட் ஆலையை நடத்துவதற்கு இந்த அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இன்றைக்கு டிட்கோ நிறுவனத்தை நாம் ஏற்படுத்தி, அதன் மூலம் தொழில்களை அதிக அளவில் உருவாக்கி, தொழில்கள் நல்லமுறையில் நடைபெற்றதால், அவற்றை தனியார் வாங்க முன் வந்தால், அவர்களுக்குத் தருவோம் என்கிற வகையில் வழிவகை செய்திருக்

கிறோம். வழிவகை செய்திருக்கிறோமே தவிர அப்படி யாருக்கும் தாவில்லை. இது நல்லமுறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் இதனைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசு முடிவெதுவும் எடுக்கவில்லை. ஆனால் அரசைப் பொறுத்தவரையில், டிட்கோவால் நடத்தப்படுகின்ற தொழில்கள் நல்லமுறையில் நடைபெறுகின்றன என்றால், அவற்றை ஏற்று நடத்த யாராவது முன்வந்தால், அவர்களிடம் கொடுத்து விட்டு மீண்டும் நல்ல முறையில் வேறு தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்பது தான் அரசின் கொள்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (2) சென்னை இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் உள்ள அரங்கு மூடியிருப்பது குறித்து.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு அணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"சென்னை இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் உள்ள ஒரு அறுவை அரங்கு கடந்த மூன்று மாதங்களாக மூடி இருப்பதும் அதனால் பொது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்கள் குறித்து.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் (மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே சார்பில்) :** துணைத் தலைவரவர்களே, விவர அறிக்கை* அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** விவர அறிக்கையில் இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் 50 ஆயிரம் ரூபாய் செலவில் எப்ரல் 8 ஆம் தேதி நிழல்படாத விளக்கு நிறுவப்பட்டிருப்பதாகவும் மற்றும் கட்டிடப் பராமரிப்பு வேலைகள் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு நிழல் படாத விளக்குகள் மற்றும் கட்டிடப் பராமரிப்பு சம்பந்தப்பட்ட வேலைகளை மே கடைசி வாரத்திலும், ஜூன் முதல் வாரத்திலும் முடித்திருப்பதாகவும் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.

---

ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.





(முற்பகல் 11-15)

ஆனால் கடந்த 40 நாட்களாக வண்ணப்பூச்சுக்காக மட்டும் அந்த ஆபரேஷன் தியேட்டர்கள் மூடப்பட்டிருக்கின்றன. வெறும் வண்ணப் பூச்சுக்காக 40 நாட்கள் மூடப்பட்டிருப்பதால், பல ஆப்பரேஷன்கள் நடைபெறாமலிருப்பதாகச் சொல்கிறார்கள். அங்கே நடைபெறவேண்டிய ஆப்பரேஷன் கேஸ்கள் வேறு ஆபரேஷன் தியேட்டருக்கு அனுப்பப்படுவதால், பொது மக்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது. ஆகவே இந்தப் பணிகள் விரைவில் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, வண்ணப்பூச்சுக்காக மட்டுமல்ல. அங்கே இருக்கிற குழாய்கள் ரிப்பேராகி ஒழுக ஆரம்பித்து விட்டன. கட்டிட வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. ரூ. 50 ஆயிரம் செலவில் நிழல்படாத விளக்குகளையும் அமைக்கவேண்டியிருக்கிறது. இவைகள் முடிந்துகொண்டிருக்கின்றன. வேறு ஒன்றுமில்லை. தியேட்டர் மூடியிருப்பதால், எந்த அவசர ஆப்பரேஷனும் நடக்காமல் போய் விடவில்லை. ஆபரேஷன்கள் தடையின்றி நடக்கின்றன.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த விவர அறிக்கையிலேயே இந்த விளக்கங்கள் இருக்கின்றன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இல்லாததால், தொழில் அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கிறார்கள். அதன் காரணமாக அவர்களால் விரிவான பதில் அளிக்க முடியவில்லை என்பதை நான் புரிந்து கொள்கிறேன். நிழல் படாத விளக்குகள் மே மாதக் கடைசியில் அமைக்கப்பட்டுவிட்டதாகவும், மற்ற கட்டிட வேலைகள் ஜூன் முதல் வாரத்தில் முடிந்து விட்டதாகவும் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது வண்ணப் பூச்சுக்காக மட்டும்தான் பாக்கி வைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குத்தான் 45 நாட்கள் தேவையா என்று கேட்டேன். இப்போது உள்ள நடைமுறைப்படி, பொதுப்பணித் துறையிடம்தான் இந்தக் கட்டிட வேலைகள், குழாய் போடும் பணிகள், மற்ற வேலைகளை எல்லாம் ஒப்படைக்கிறார்கள். இதுபோன்ற மருத்துவமனைப் பணிகளை மருத்துவத் துறையின் கட்டுப்பாட்டிலேயே ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்தி, அவர்களிடம் கூட குறைந்த டெண்டர் கேட்டு, அவர்களிடம் ஒப்படைத்தால் காலதாமதம் குறைக்கப்பட்டு விரைவில் பணிகள் நடக்க வாய்ப்பிருக்கும். அனுமதி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொதுப்பணித் துறைக்குப் பதிலாக தனி இலாகாவை ஆஸ்பத்திரிப் பணிகளுக்காக என்று ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அது இயலாத காரியம். பொதுப்பணித் துறை மூலம்தான் நாம் செயல்பட வேண்டும். எந்தவிதமான தாமதமும் ஏற்படவில்லை. விவர அறிக்கையில் மிகத் தெளிவாக எல்லா விபரங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. by way of maintenance service என்று போட்டிருக்கிறது. அது பழைய பில்டிங். ஆகவேதான் பல்வேறு வேலைகளுக்காக மூடப்பட்டு, 3 மாதங்களுக்குள் முடிக்க வேண்டுமென்று சொல்லி பணிகளும் நடந்திருக்கின்றன. இன்னும் 15 நாட்களில் அது இயங்க ஆரம்பிக்கும். இதற்காக பொதுப்பணித் துறையிடம் கொடுக்க வேண்டிய வேலையை நாமே செய்யலாம் என்றால், அந்த அளவுக்குப் பெரியதாக 'பாரலல் டிபார்ட்மெண்ட்' வைத்துக்கொள்ள வேண்டும். இவைகளையெல்லாம் நன்றாகச் சிந்தித்துத்தான், இப்படி வைத்திருக்கிறார்கள். ராயப்பேட்டை மருத்துவ மனையில் 5 ஆபரேஷன் தியேட்டர்கள் இருக்கின்றன. ஏ மற்றும் பி, பழைய பில்டிங்கில் இருக்கிறது. சி தியேட்டர் புதிய கட்டடத்தில் இருக்கிறது. ஒன்று கான்சருக்காக, மற்றொன்று ஆக்சிடெண்ட்டுக்காக. ஏதாவது ஒரு ஆபரேஷன் தியேட்டர் ரிப்பேரானாலும் மற்றவற்றில்தான் செய்ய வேண்டும். இது எல்லா மருத்துவ மனைகளுக்கும் பொதுவானதுதான். இங்கு மட்டுமில்லை. யாரோ சொல்லியிருப்பதை வைத்து மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொல்லியிருக்கிறார் என்று கருதுகிறேன். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தியேட்டர்களைப் பழுது பார்க்கத்தான் வேண்டும். அந்த நிலைமைதான் ஏற்படும். One Operation Theatre may be under repair. It is a common thing in any hospital anywhere in the world. நாம் அவ்வாறு பொதுப் பணித் துறை செய்யக்கூடிய வேலையை எடுத்துக் கொண்டாலும்கூட, அந்தச் சங்கடங்கள்

(முற்பகல் 11-20)

ஏற்படும். மேலும் இன்னொரு பிரச்சினையும் ஏற்படும். நல்வாழ்வுத் துறை, பொதுப் பணித் துறை போலவே பொதுப் பணித் துறை செய்ய வேண்டிய வேலைகளையும் செய்ய வேண்டி வரும். பொதுப் பணித் துறையினர் தற்சமயம் அவர்கள் வேலையை நல்ல முறையில் செய்து கொண்டிருக்கிறார்கள். எந்தப் பிரச்சினையும் நாம் பார்க்கவில்லை.



4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி விதிப்பு (கால வரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1985).**

மாண்புமிகு திரு. அ. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி விதிப்பு "(கால வரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்.—

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட "1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு வரி விதிப்பு (கால வரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த சட்ட முன்வடிவு தேவையற்றது என்பதை முதலிலேயே குறிப்பிட விரும்புகிறேன். கால வரையறை இல்லாத ஒரு சட்டம் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். வரி விதிப்பு (கால வரையறை பொருந்தாது) என்று சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. சில நேரங்களில் குற்றங்களைக் கண்டு பிடிக்க காலதாமதமாகிவிடுகிறது என்றும், அப்படி ஏற்படுகின்ற காலத்திலே குற்றங்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்றும், அதற்காக இதைக் கொண்டு வருகிறோம் என்றும் காரணம் சொல்கிறார்கள். ஏற்கெனவே இருக்கிற சட்டங்கள் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க போதாது என்று சொல்கிறார்கள். 36-வது அத்தியாயத்தில் விதிகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

---

@ 289 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

Limitation for taking cognisance of certain offences.

அதிலே முக்கியமாக இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. 468 ஆவது பிரிவும் 473 ஆவது பிரிவும் முக்கியமானவை. 468 ஆவது பிரிவைப் பார்த்தால்,"

"468. Bar to taking cognizonce after lapse of the period of limitation : Except as otherwise provided elsewere in this Code, no Court shall take cognizance of an offence of the category specified in sub-section (2), after the expiry of the period of limitation.

The period of limitation shall be—

(*a*) six months, if the offence is punishable with fine only;

(*b*) one year, if the offence is punishable with imprisonment for a term not exceeding one year;

(*c*) three years, if the offence is punishable with imprisonment for a term exceeding one year but not exceeding three years."

இவ்வாறு குறிப்பிட்ட காலவரையறை சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் காலவரையறை கூடாது என்று கருதி இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது, 'டாக்சேஷனை'ப் பொறுத்தவரையில், அஸ்ஸெஸ்மெண்ட் நடைபெறுகிறது. அதிகாரிகள் மேற் பார்வை செய்கிறார்கள். அவ்வாறு நடைபெற்றாலும்கூட, ஐந்தாண்டுகள் வரை நடவடிக்கை எடுக்கலாம் என்ற முறை இருக்கிறது. இவைகளை எல்லாம் எடுத்துவிட்டு காலவரையறையற்ற நடைமுறை என்று சொன்னால், அது அதிகாரிகள் கரத்தைத்தான் பலப்படுத்தும். பிரோகிரஸி வளரும். சாதாரண வியாபாரிகளை 'ஹராஸ்' செய்யும் என்று நான் கருதுகிறேன்.

இப்போதுள்ள சட்டங்களின்படி குற்றத்தைக் கண்டுபிடித்தால், குற்றத் தைக் கண்டு பிடிக்கும் தேதியிலிருந்து காலவரையறை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. குற்ற விசாரணை முறைச் சட்டம் 473 ஆவது பிரிவின் படி, .

"Extension of period of limitation in certain cases.—Notwithstanding anything contained in the foregoing provisions of this Chapter, any Court may take cognizance of an offence after the expiry of the period of limitation, if it is satisfied on the facts and in the circumstances of the case that the delay has been properly explained or that it is necessary so to do in the interests of justice."



அப்படி அந்தக் காலத்திற்குள்ளே வழக்கைத் தொடர முடியவில்லை என்றாலும் கூட, சட்டத்தில் இடமிருக்கிறது. எனவே காலதாமதம் ஏற்பட்டாலும்கூட, அந்தக் கால தாமதத்திற்குக் காரணங்களை விளக்கிச் சொல்லி வழக்கு மன்றத்தில் நடவடிக்கை எடுக்கலாம் என்றிருக்கிறது. அப்படி இருக்கும் போது, இவ்வாறு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவருவது அதிகார வர்க்கத்திற்கு உபயோகப்படக்கூடிய சட்டமாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். இது ஒரு ஆபத்தான சட்டம். இந்தச் சட்டத்தில் என்ன

(முற்பகல் 11-25)

காரியத்திற்கு என்று குறிப்பிடப்படவில்லை. அப்படி நடவடிக்கை எடுக்க முடியாமல் போன வழக்குகள் எவ்வளவு? அதனால் ஏற்பட்டிருக்கின்ற வரி இழப்பு எவ்வளவு? இந்த விவரங்கள் எல்லாம் குறிப்பிடப்படவில்லை. இந்தச் சட்டம் துஷ்பிரயோகத்திற்குத்தான் இடம் அளிக்குமே தவிர உண்மையில் பலன் அளிக்காது என்று நான் கருதுகிறேன். ஒரு விபரம் நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு. அந்த வழக்கினுடைய சாராம்சம் என்னவென்றால்.— ஒரு அஸஸி 6 லட்சம் ரூபாய் கேஷ் கொடுக்க வேண்டியிருந்தது. அது வழக்குமன்ற நடவடிக்கையில் இருந்த காரணத்தினாலே, இந்த அஸஸி இலாக்காவுக்கு செக்கியூரிட்டி கொடுத் திருக்கிறார். அந்த செக்கியூரிட்டியை கடைசியாக நிறைவேற்றுவதற்காகப் போய் பார்க்கும்போது, அந்த செக்கியூரிட்டி கொடுத்ததற்கான மூல ஆதாரங் கள், டைட்டில் டீட்ஸ் கிடையாது. அந்த செக்கியூரிட்டி ரிஜிஸ்டர் செய்யப் படவில்லை. கடைசியாக சொத்தே அவருக்குச் சொந்தம் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. எனவே அரசாங்கத்தின் மூலமாக 6 லட்சம் ரூபாய் வரி வசூலிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு, உயர்நீதிமன்றத்தில் வழக்கு இருக் கிறது. அமைச்சர் அவர்கள், சேல்ஸ் டாக்ஸுக்காக நான் குறிப்பிட்ட நபர் களை அழைத்துப் பேசினால், விவரங்களை எல்லாம் புரிந்து கொள்ளலாம் என்று கருதுகிறேன். இது எங்கு போய் முடியுமென்றால், அதிகாரிகள் அசட்டைக்குத்தான் இடம் கொடுக்கும். நடவடிக்கை எடுக்காமல் விட்டு, திடீரென்று ஒரு நாள் நடவடிக்கை எடுத்து வியாபாரிகளுக்கு மிகுந்த தொல்லை கொடுக்கின்ற நிலையாகத்தான் இருக்க முடியுமென்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அது மாத்திரமல்ல. இந்தச் சட்டம் தமிழ் நாடு முழுவது மாக விஸ்தரிக்கப்படுமென்று அதிகாரம் அமைந்திருக்கிறது. இந்தச் சட்டத்திலே ஆபத்து இருப்பதாக நான் கருதுகிறேன். எனவே இதுபோன்ற சட்டங் களை நிறைவேற்றுவது பொருத்தமல்ல, நியாயமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருக்கின்ற சட்டங்களே போதுமான சட்டங்கள்தான். அதுவும்

விற்பனை வரி இலாக்கா மற்ற இலாக்காக்கள் எல்லாம் வேகமாகச் செயல்பட வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்களிடம் நான் ஒரு விவரத்தைக் கேட்க விரும்புகிறேன். எத்தனை கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வரவேண்டியிருக்கிறது? இன்னும் எவ்வளவு பாக்கி இருக்கிறது? எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அந்த நடவடிக்கைகளிலே கவனம் செலுத்தவில்லை. அந்தப் பாக்கிகளை எல்லாம் வசூலிக்க விற்பனை வரிச் சட்டத்திலே இடம் இருக்கிறது. எனவே இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பது அவ்வளவு சரியல்ல, முறையல்ல. எனவே நான் இந்தச் சட்ட முன்வடிவைக் கண்டிக்கிறேன் என்று சொல்லி அமைகிறேன்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, நடைமுறையில் ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்களையோ, அனுபவங்களையோ வைத்துக்கொண்டு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே வரி ஏய்க்கக்கூடியவர்கள் எப்படி ஏய்க்கிறார்கள் என்பதை நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறோம். பம்பாய் போன்ற நகரங்களிலே வரி ஏய்க்கக்கூடியவர்கள் வைத்திருந்த ஆவணங்கள் எல்லாம் கைப்பற்றப்பட்ட பிறகு, அவையெல்லாம் அதிகாரிகளினுடைய வீட்டிலே இருந்து திரும்பவும் இருக்கிற இடம் தெரியாமல் போனதை எல்லாம் பார்த்தோம். ஆவணங்களையே திருடிக் கொண்டு போகக்கூடிய அளவுக்கு சக்தி பெற்றவர்கள்தான் இவ்வளவு பெரிய வியாபாரங்களிலே இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் யாரையும் கைக்குள் போட முடியும். இவர்களுடைய வரி ஏய்ப்பு நடவடிக்கைகளை யாரும் மேம்போக்காகக் கண்டுபிடித்துவிட முடியாது. இவர்கள் சாதாரணமானவர்களுடைய கண்களுக்குப் புலப்படக்கூடிய அளவுக்கு இந்தத் தவறுகளைச் செய்யக்கூடியவர்களாக இருக்கமாட்டார்கள். அவர்கள் அந்தத் துறையிலே மிகவும் வல்லுநர்களாக இருக்கக்கூடியவர்களை, எக்ஸ்பர்ட் ஆக இருப்பவர்களைத்தான் பிடித்துக்கொள்வது வழக்கம். அப்படிப்பட்டவர்களின் ஆலோசனையின் பேரில் நடைபெறக்கூடிய காரியங்கள்தான் அவை. ஆகவேதான் இந்த வரி ஏய்ப்பு நடவடிக்கையும் உடனடியாக நம்முடைய கணைத்திற்கு வருவதில்லை. கறுப்புப் பணம் அதிகமாக உருவாவதற்கு அது ஒரு காரணம். உண்மையான வரியைக் கட்டுவது இல்லை. வரியைக் கட்டுவதற்கு 'டர்ன் ஓவர்' காட்டுவதில்லை. என்ன வரவு செலவு என்பதைக் காட்டாமலேயே குறைத்துக் காட்டுவது. குறைத்துக் காட்டி வரியை ஏய்ப்பது. இந்தமாதிரியான நடவடிக்கைகளால் நாட்டினுடைய பொருளாதாரமே நாசமடையக்கூடிய நிலையில் இருக்கிறது. நமக்கு ஏன் வசூலிப்பது ரொம்பக் கடினமாக இருக்கிறது? வரியைத்தான் விதித்துக்கொண்டு போகிறோம்.



இப்பொழுதுதான் கடந்த சில ஆண்டுகளாக, வருமான வரியை, விற்பனை வரியை அதிகமாக வசூலிக்கக்கூடிய நிலைக்கு வந்திருக்கிறோம். அதுவும் கொஞ்சம் துரிதமான நடவடிக்கை எடுத்து அதைச் செய்து கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இருக்கிற நிலைமையில் இப்போது சில சட்டங்களைக் குறிப்பிடுகிறார்கள். தமிழ்நாடு பெட்டிங் டாக்ஸ், என்டர்டைன்மென்ட் டாக்ஸ், ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ், லோகல் அத்தாரிட்டி பைனான்சிங் டாக்ஸ், அடிஷனல் டாக்ஸ், இதுமாதிரி 7 மாநிலச் சட்டங்கள் வரி சம்பந்தப்பட்ட சட்டங்கள், வரி ஏய்ப்பைக் கண்டு பிடிப்பதற்கு காலதாமதம் ஆகலாம். காலதாமதம் ஆகிவிட்ட காரணத்ினாலேயே எல்லாவிதமான புலன் விசாரணையும் முடிந்து, வழக்குகளை நீதிமன்றத்திற்குக் கொண்டு போகும்போது, நீதிபதிகள் அதை 'ஃபைலிலே' எடுப்பதில்லை. மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே அதிலே என்ன இருக்கிறது என்று சொன்னால் May take, if the Court is satisfied கோர்ட் satisfy ஆக என்ன செய்ய வேண்டுமென்றால் அதில் பல கஷ்டமான விஷயங்கள். ***

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீதிபதியைக் குறை சொல்வது நியாயமல்ல, முறையல்ல. May or may not என்பது சட்டத்தில் இருக்கின்ற விஷயங்கள். அதைத் திருத்திட போகாமல் எந்த அளவுக்குச் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்ல வேண்டுமே தவிர நீதிபதிகளையோ, நீதிமன்றத்தையோ குறை கூறிப் பேசுவது முறையல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, நீதிபதிகளின் குறையல்ல. எல்லோரும் மனிதர்கள்தான். நீதிபதிகள் என்பவர்கள் மகாத்மாக்கள் அல்ல. அவர்களும் மனிதர்கள்தான். நம்மைப்போன்று வழக்கறிஞர்களாக இருந்து வரி ஏய்ப்பவர்களுக்காக வாதிட்டுவிட்டு அப்புறம் வருகிறவர்கள்தான் அவர்களும்.

(முற்பகல் 11-30)

மனிதர்கள்தான் நீதிபதிகளாக வருகிறார்கள். வரி ஏய்ப்பவர்களுக்கு நீதிமன்றங்களில் வாதாடிவிட்டு அதற்குப் பின்னாலே நீதிபதியாகவும் வர முடியும். எனவே நீதிபதிகள் என்பவர்களும் மனித சமுதாயத்தில் இருப்பவர்கள்தான். எப்படி வரியை ஏய்க்க முடியும் என்பதற்காக வழிசொல்லி வாதாடிவிட்டு

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

(திரு. சுப்பு)

வருகிறவர்களும் நீதிபதிகளாக வரக்கூடிய அமைப்பில் இருந்து கொண்டு, நீதிபதிகள் என்பவர்கள் நமக்கு அப்பாற்பட்டவர்களைப் போல் பேசக் கூடாது. ஒரு வழக்கில் பல்கிவாலாவை சாதாரண மனிதன் ஒருவன் 'எங்கேஜ்' செய்ய முடியுமா? அந்த அளவுக்கு சாதாரண மனிதனால் பணம் கொடுக்க முடியுமா? ஒரு நிமிஷத்திற்கு இவ்வளவு பணம் என்று கேட்கிறவர் களை நாம் வைக்க முடியுமா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வழக்கறிஞர்களாக இருந்தவர் கள் நீதிபதிகளாக வந்திருக்கலாம். ஆனால் நீதிபதிகளாக வந்த பிறகும் அதே உணர்வோடுதான் தீர்ப்பு தருகிறார்கள் என்று சொல்லுவது நியாய மாகாது.

**திரு. க. சுப்பு :** நான் அப்படிச் சொல்லவில்லை. நீதிபதிகள் என்பவர்கள் எவிடென்ஸை சாட்சியங்களை வைத்துத்தான் தீர்ப்பளிக்க வேண்டும். தங்கள் இஷ்டப்படி வைத்துத்தான் நீதிபதிகள் தீர்ப்பு சொல்ல முடியும். ஆதாரங்கள் அவர்கள் செய்ய முடியாது. அவர்கள் முன்னாலே எந்த கொண்டு வரப்படுகின்றனவோ அதை வைத்துக் கொண்டு, எப்படி வழக் கறிஞர்கள் வாதாடுகிறார்களோ அந்தத் திறமையைப் பொறுத்து அவர்கள் தீர்ப்பு எழுத வேண்டும். எனவே திறமையான முறையில் வாதாடுகிற வழக்கறிஞர்களை வைத்தால், ஒரு வழக்கு வெற்றி பெற்றுவிடும் வாய்ப்பு இருக்கிறது. திறமையான வழக்கறிஞர்களை யார் வைக்க முடியும்? கோடிக் கணக்கான ரூபாய், லட்சக் கணக்கான ரூபாய் வைத்துக்கொண்டு வரி ஏய்ப்பு செய்கிறவர்கள்தான் அப்படிப்பட்டவர்களை வைக்க முடியும். இப்படிப் பட்டவர்களின் மீதான வழக்கில் புலன் விசாரணை செய்து உடனடியாக வழக்கைத் தாக்கல் செய்வது என்பது கஷ்டம். எனவேதான் அதற்கான காலத்தை நீட்டிப்பதற்காக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக் கிறார்கள். இந்த அனுபவம் ஏதோ நமக்கு மட்டும் ஏற்படவில்லை. மத்திய அரசுக்கே இத்தகைய அனுபவம் ஏற்பட்டதால், அவர்கள் இதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது Economic Offences (Inapplicability of Limitation) Act, 1974 (Central Act 12 of 1974) இப்படி சென்ட்ரல் சேல்ஸ் டேக்ஸ் சம்பந்தப்பட்டவைகளைக்கூட லிமிடேஷனிலிருந்து மத்திய அரசே எடுத்திருக்கிறது. அவர்கள் இந்தியா முழுவதும் ஆளுகிறவர்கள். அப்படிப்பட்ட மத்திய அரசுக்கே இந்த கசப்பான அனுபவம் ஏற்பட்டிருக் கிறது. ஆகவே லிமிடேஷனிலிருந்து எடுக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு



வந்திருக்கிறார்கள். அதை முன் மாதிரியாக வைத்து, நாம் படுகிற சிரமங்களை யும் மனதில் வைத்து இந்த விதி விலக்கைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது யாரையும் பழிவாங்குவதற்காக அல்ல. யாரையும் கொடுமை செய்ய வேண்டும் என்று அல்ல. அப்படி அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்றால், கோர்ட்டில் விடுவிக்கப்படப் போகிறார்கள். ஆனால் வழக்குப் போடுவதற் குள்ள லிமிடேஷனை எடுத்திருக்கிறார்கள், அவ்வளவுதான். லிமிடேஷன் சிவில் கேஸ்களுக்கு இருக்கலாம். கிரிமினல் கேஸ்களுக்கு இருப்பது எப்படி நியாயமாக இருக்க முடியும்? எனவே மத்திய அரசே இந்த விதி விலக்குக்கு ஒரு சட்டம் போட்டு வழி காட்டிய பிறகு, நாம் இன்றைக்கு அதைப் பின் பற்றிக் கொண்டிருக்கிறோம். "மே" அல்லது "டிஸ்கிரிஷன்" என்று வைத்துவிட்டால், நீதிபதி எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம். அதில் ஜஸ்டிஸ் கிடைக்கும். ஆனால் நமக்குக் கிடைக்க வேண்டிய பணம் வசூல் ஆகாது. ஆகவே சட்டமாகவே போட்டுவிட்டால், நீதிபதிக்கும் கஷ்டமில்லை, நமக்கும் தொந்தரவில்லை. ஆகவே அந்த முறையில் நடைமுறைச் சிக்கலைத் தவிர்க்கக் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம் என்ற காரணத்தாலும், ஏமாற்று கிறவர்களை விட்டுவிடக் கூடாது என்ற காரணத்தாலும், ஏமாற்றுகிறவர் களுக்கு ஆதரவாக இருக்க முடியாத நிலையில் நான் இதை வரவேற்கிறேன் என்று சொல்லி, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. த. வீராசாமி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் வருகிற குற்றங்களுக்கு கால வரையறை பொருந்தாது என்ற இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சட்ட முன்வடிவு ஏதோ திடீர் என்று கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடிவு அல்ல. யாரையாவது பாதிக்க வேண்டுமென்றோ அல்லது வேண்டுமென்றே யாரையாவது பழிவாங்குகிற வகையிலோ இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படவில்லை என்பதையும் முதற்கண் தெளி வாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அனுபவத்தின் வாயிலாகவும், நடை முறைச் சிக்கல்கள், சிரமங்கள் காரணமாகவும் கொண்டு வரப்பட்ட சட்டமே தவிர, வேறு அல்ல என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அனுபவ நடைமுறைச் சிரமங்கள் என்கிறபோது, இது ஏதோ மாநில அரசுக்கு மட்டுமல்ல, மத்திய அரசுக்கும் ஏற்பட்டு அந்த சிரமங்களின் அடிப்படையில், அனுபவத்தின் அடிப்படையில் மத்திய அரசே 1974 ஆம் ஆண்டு இத்தகைய கால வரையறை பொருந்தாது என்ற சட்டத்தை, வரி விதிப்புச் சட்டங்களின்

கீழ் இழைக்கப்படும் குற்றங்களுக்குப் பொருந்தாது என்று கொண்டு வந்து இன்றைக்கு நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செக்ஷன் 473 பற்றிக் குறிப்பிட்டார்கள். அது இன்னும் மேலும் காலதாமதத்திற்குத்தான் வழிவகை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

குற்றவியல் நீதிமன்றத்திற்கு வழக்கை எடுத்துச் செல்லும்போது, அபராதம் என்றாலோ அல்லது 6 மாதத்திற்கு அல்லது ஒரு ஆண்டிற்கு சிறைத் தண்டனை என்று பலவகையான பொருளாதாரக் குற்றங்களுக்காக வழக்குத் தொடரும்போது பல நேரங்களில் காலம் கடந்துவிடுகிறது.

(முற்பகல் 11-35)

அதனால் பல்வேறு குற்றங்களைப் புரிந்தவர்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள், அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்ற காரணத்தின் அடிப்படையில், இப்படி குற்றவாளிகள் குற்றங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளக்கூடாது, தண்டிக்கப்படவேண்டும், அரசுக்கு வர வேண்டிய வருவாயை வசூலிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு இந்தக் கால வரையறை பொருந்தாது என்ற சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன். மத்திய அரசு கூட, இத்தகைய சட்டத்தை, மத்திய அரசுச் சட்டம் 12/1974 என்று கொண்டுவந்திருக்கிறது. அதற்கடுத்து அதைப் பின்பற்றி மகாராஷ்டிரா அரசு 1976-ல் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதற்குப் பின்புதான் நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள், இந்தக் காலவரையறை பொருந்தாச் சட்டம் இல்லாததால் எத்தனை வழக்குகளை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லவில்லை என்று கேட்டார்கள். கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் இந்தக் காலவரையறை பொருந்தாத சட்டம் இல்லாததன் காரணமாக, நாம் எடுத்துச் சென்ற வழக்குகள்—370. இவைகள் காலத்தோடு நீதிமன்றத்திலே தொடரப்பட்டன. 5,311 வழக்குகளை வழக்குமன்றத்திலே தொடரவில்லை. காலம் கடந்துவிட்ட காரணத்தால், குற்றவாளிகள்



தப்பித்துக் கொண்டார்கள் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னதுபோல நல்லெண்ணத்தோடு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும், அரசுக்கு வருவாய் இழப்பு இருக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடு இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டதே தவிர, யாரையோ பழி வாங்கவோ, தண்டிக்கவோ இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்படவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நீதிமன்றத்திற்குச் சென்று நீதிபதிகளைத் திருப்திப்படுத்தி, காரணங்களை எடுத்துச் சொல்லி அவர்கள் மனநிறைவு பெற்றால்தான், நாம் வழக்கைத் தொடர முடியும் என்ற வழிவகைப் பிரிவு 473-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றுள்ள புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசு, "நீதிபதிகள் நீதிபதிகளாக இருக்க வேண்டும்" என்று விரும்புகிறது என்பதைக் கூறிக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, வரி விதிப்பு (காலவரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, அட்டவணை, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. த. வீராசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, வரி விதிப்பு (காலவரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, வரி விதிப்பு (காலவரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1985) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. தகவல் கோரல்.

பொது நிறுவனங்கள், பொது கணக்குக் குழுவின் அறிக்கைகள் குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, on a point of clarification, பொது நிறுவனங்கள், பொது கணக்குக் குழு ஆகியவற்றின் அறிக்கைகள் அவையில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே சில அறிக்கைகள் ஆங்கிலத்திலேயும், சில அறிக்கைகள் தமிழிலேயும், சில அறிக்கைகள் தமிழில் மட்டும், சில அறிக்கைகள் ஆங்கிலத்தில் மட்டும், சில அறிக்கைகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் இருக்கின்றன. எஞ்சியுள்ள அறிக்கைகளையும் வைக்க மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அறிக்கைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் வைக்கப்பட வேண்டும்.



விலைக்கு விற்கின்ற காரணத்தினாலே, அந்த உரங்களை வைத்துக்கொண்டு நம்மோடு போட்டிபோடக்கூடிய அளவுக்கு விற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இதையெல்லாம் கருத்திலே கொண்டுதான் அரசு இன்றைக்கு எல்லா சங்கங்களுக்கும் ஒப்புக் கொள்முதல் செய்து குறைந்த விலையில், லாபத்தைக் குறைத்து விற்கின்ற நிலையில் நடைமுறைகளை துரிதமாகச் செய்துகொண்டிருக்கிறது.

திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களை விட்டுவிட்டு, கூட்டுறவுச் சங்கம், விவசாயக் கடன் சங்கம் இந்த இரண்டையும் கருத்திலே கொண்டு, விவசாயக் கடன் சங்கங்கள் கொள்முதல் செய்கின்ற செலவினங்களைக் குறைத்துக்கொள்ளச் செய்து, இந்த நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்ற பூச்சி மருந்துகள், உரங்கள் சரியான விலையிலே அவர்களுக்கு கிடைக்கச் செய்ய, இந்த அரசு உத்தாவிடுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11.05)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மேலவைத் தலைவரவர்களே, இரண்டு நிறுவனங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. தமிழகத்திலே இருக்கிற 4,700 கூட்டுறவு விவசாய சங்கங்களிலே 700 சங்கங்கள்தான் லாபகரமாக நடக்கின்றன. அந்தச் சங்கங்கள்தான் பணத்தைக் கட்டி, உரத்தை வாங்கும் தகுதி பெற்றிருக்கின்றன. மீதி இருக்கும் சங்கங்கள் விற்பனை இணையத்தின் தயவால் உரம், பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவைகளைக் கொடுக்கின்றன. அவர்கள் என்ன விலை சொல்லுகிறார்களோ, அந்த விலைக்குத்தான் இவர்கள் விற்க முடியும். அதையெல்லாம் கருத்திலேகொண்டு, நடைமுறையிலே உள்ள சிக்கல்களை நிவர்த்தி செய்து, எல்லா சங்கங்களும் ரொக்கமாகப் பணத்தைக் கொடுத்து, உரத்தை வாங்கி, விற்கலாமா என்பது பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

5. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(2) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1985)

(மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் சார்பில்)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு, பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள். மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

அரசின் சட்ட முன்வடிவுகள் இனத்தை வழக்கமாக மாற்றுவதில்லை. அமைச்சர் அவர்களுக்கு எதிர்பாராத ஒரு வேலை வந்துவிட்டதால்தான் மாற்றவேண்டியதாக ஆகிவிட்டது. அதுதான் அதற்குக் காரணம். சட்ட முன்வடிவு நிகழ்ச்சி நிரலில் வந்த பிறகு வரிசையில் மாற்றுவது என்பது வழக்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 291–301 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



உள்ளடக்கியதா இந்தக் கூட்டம் என்று அறிய விரும்புகிறேன். ஏழை எளிய மக்கள் பயணம் செய்கிற திருவள்ளுவர் போக்குவரத்துப் பேருந்துகள் இரவு நேரங்களில் நிற்கிற கடைகளில் உணவுப் பண்டங்களின் தரம் குறைந்திருக்கிறது, விலையும் மிகவும் அதிகமாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா? அந்தக் கடை உரிமையாளர்களையும் சேர்த்து இந்த விலைக் கட்டுப்பாட்டை அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து பேருந்துகளில் பயணம் செய்கிற ஏழை எளிய மக்களையும் இந்த அரசு காப்பாற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: மாண்புமிகு உறுப்பினருக்கே நன்கு தெரியும், எந்தப் பிரிவாக இருந்தாலும் அங்கே ஒரே சங்கமாக இருப்பதில்லை. ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் என்று மாநில அளவில் அல்லது மாவட்ட அளவில் ஒரே சங்கமாக இல்லை. ஐந்து, ஆறு வகையான சங்கங்களை வைத்திருக்கிறார்கள். சென்ற தடவை 15 நாட்களுக்கு முன்னால் கூட்டம் போட்டபோது, தமிழ் நாடு முழுவதுமாக என்று அறிவித்த காரணத்தால், 500 பேருக்கு மேல் அந்தக் கூட்டத்திற்கு வந்துவிட்டார்கள். பத்தாவது மாடியில் உள்ள மாநாட்டுக் கூடத்தில் அந்த மீட்டிங் வைத்திருந்தும், அதைத் தள்ளி வைக்க வேண்டிய அவசியம் வந்துவிட்டது. இப்போது சென்னை நகரைப் பொறுத்தவரையில் தான், கூட்டம் போட்டுப் பேச இருக்கிறோம். அதற்குப் பிறகு உணவுத் துறை அதிகாரிகளும் மாவட்ட ஆட்சியாளரும் மாவட்ட அளவில் அங்கே உள்ள சங்கங்கள் மற்றும் சாலையோர இரவு உணவு அகங்கள் ஆகியோரின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி முடிவெடுப்பார்கள். அப்படி மாவட்ட வாரியாகப் பேச்சுவார்த்தை நடக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: நடுத்தர மக்கள் சாப்பிடும் உணவகங்களில் இப்போது இட்டிலி இளைத்துவிட்டது. தோசை நம் ஆசை அளவில் இல்லை. வடை விடை அளிப்பதுபோல் மிகவும் சுருக்கமாக இருக்கிறது. விலை நிர்ணயிப்பதோடு எடை அளவையும் உணவுப் பண்டங்களுக்கு நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். இரவு நேரக் கடைகளில் மலிவாகப் பண்டங்களைத் தருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை அரசு செய்து கொடுக்க முன்வருமா, பொதுமக்களின் நன்மைக்காக சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்களில் உள்ளதைப்போல் இங்கேயும் பரவலாக அத்தகைய கடைகள் வந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கும் அரசு ஆதரவு தருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: விடை போன்ற வடை இருப்பதைத் தடை செய்யத்தான் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறோம். (சிரிப்பு)

வேண்டும், எப்படி எப்படி இருந்தால் கருவிகளைப் பொருத்தலாம் என்பதைச் சொல்கின்றார்கள். அது அவர்களுக்குத் தெரியும். ஆனால் மாநகராட்சியில், நகராட்சியில் இருப்பவர்களுக்கு அது தெரியாது. அவர்கள் பார்க்கக்கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் அதுபற்றித் தெரிந்தவர்களை, இன்ஜினியர்களை, ஆட்டோமைபைல் பற்றித் தெரிந்தவர்களை நியமித்தால், நியாயமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படி இல்லாமல், கமிஷனரே பார்க்க வேண்டும் என்றால், அந்தக் கமிஷனர் நிச்சயமாகப் போய் பார்க்கமாட்டார். அவருக்குக் கீழே உள்ள அலுவலர்களைத் தான் அனுப்புவார். அவர்களுக்கு ஜாக்கி என்றால் தெரியாது, ஸ்பேனர் என்று சொன்னால் தெரியாது, அப்படிப்பட்டவர்கள் எப்படிப் பார்க்க முடியும்? நான் தவறாகச் சொல்லவில்லை. அவர்களுக்குத் தெரிந்ததைத் தான் அவர்களால் செய்ய முடியும். ஆகவே, உரிமம் வழங்கும் இந்த அதிகாரத்தை இதுபோன்று மோட்டார் வெகிக்கிள்ஸ் ஆர்கனைசேஷனில் உள்ள அசிஸ்டெண்ட் என்ஜினியர் அல்லது அவருக்குக் கீழ் உள்ள சூப்பர்வைசர் போன்றவர்களுக்கு வழங்கலாம். அவர்கள் பார்த்து உரிமம் வழங்கலாம். எந்த ஒரு கொள்கைக்காக நாம் இதைக் கொண்டுவருகிறோமோ அதை முழுமையாக நிறைவேற்ற முடியும் என்று இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, இதுபோன்று அதிகாரிகள் பழைய இரும்பு விற்பவர்களை, பணி மனைகளைப் பார்த்து உரிமங்கள் வழங்குவதற்கு பொதுவாக ஒரு கால வரம்பினைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். 60 நாட்கள் என்று இருக்கின்றது. 60 நாட்கள் என்பதை 30 நாட்கள் அல்லது 45 நாட்கள் என்று குறைக்கலாம். அப்படி இந்த உரிமம் கொடுக்கவில்லை என்றால், உடனடியாக உரிமம் வழங்கப்பட்டதாகக் கொள்ளவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிடவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஏனென்று கேட்டால், இப்போது சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பலரும் பல தொழில்களை ஆரம்பித்திருக்கிறார்கள். குறிப்பாக கடலூரில் பார்த்தால், இப்போது நகராட்சியிலே கொடுக்கப்பட வேண்டிய உரிமங்கள் இன்னமும்கூட கொடுக்கப்படவில்லை. அப்படி இன்னும் வழங்காமல் இருக்கின்றார்கள். மேற்கொண்டு இதுபோன்ற அதிகாரங்கள் கொடுத்தால், இதுபோன்ற காலதாமத நிலைமைகளைத் தவிர்க்கலாம். அப்படி காலதாமதம் ஆனால், 45 நாளில்





கிடைக்கவில்லை என்றால், 46 ஆவது நாள் கிடைத்ததாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று கூற வேண்டும் என்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நம்முடைய மாநில அரசானது ஒரு மாவட்டத்திலே 2, 3 பெரிய ஒர்க்ஷாப்ஸ், 'கவர்மென்ட் அப்ரூவ்ட் ஒர்க்ஷாப்ஸ்' என்று வைத்திருக்கின்றார்கள். இப்போது டி.வி.எஸ். போன்று வைத்திருக்கின்றார்கள். அது போலவே தென்னாற்காடு மாவட்டத்தில் இரண்டு ஒர்க்ஷாப்கள் அப்ரூவ் பண்ணி வைத்திருக்கின்றார்கள். ஏற்கெனவே கூறியதுபோல, ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழக அரசு வைத்திருப்பதுபோல், ஒரு ஆர்கனைசேஷன் போல் வைத்து அதில் உள்ள பொறியாளர்கள் மூலமாகப் பார்த்து உரிமம் வழங்குகின்ற முறையைக் கொண்டு வரலாம். அதுபோன்ற பெரிய ஒர்க்ஷாப்புகள் எல்லாம் இதுபோன்ற அதிகாரிகளிடம் உரிமம் வாங்க வேண்டுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-45)

அடுத்ததாக, பெரிய தொழிற்சாலைகளிலே டிங்கர் பழுது பார்க்கும் பகுதி என்று தனியாக வைத்திருக்கிறார்கள். அதற்கும் தனியாக உரிமம் வாங்க வேண்டுமா என்பது குறிப்பிடப்படவில்லை. பெரிய ஒர்க்ஷாப்புக்கு ஒருமுறை உரிமம் வாங்கிவிட்டால், டிங்கர் செக்ஷனும் அதற்குள் வந்துவிடுமா என்பது பற்றி தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இது போன்ற சில தவறுகள் நடந்தால், நடவடிக்கை எடுப்பேன் என்று அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். அது போன்ற தவறுகளுக்கு 6 மாதம் சிறைத் தண்டனை என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சரவர்களையும், அமைச்சரவர்களையும் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். முதல் முறையாக அவர்கள் தவறு செய்தால், அவர்களை மன்னித்து விட்டு, இரண்டாவது முறையாகத் தவறு செய்தால் இது போன்ற தண்டனைகளை வழங்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மற்றபடி இது நல்ல சட்ட முன்வடிவு. பொது மக்களின் முன்னேற்றம் கருதி கொண்டு வந்திருக்கிறார்கள். இதை வரவேற்று, அமர்கிறேன்.

திரு. க. சுப்பு: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பொதுப் போக்குவரத்திற்கு இடையூறாக, சுகாதாரத்திற்குக் கேடு விளைவிப்பதாக, திருட்டுப் பொருள்களை வாங்கும் நிலை இருப்பது இவற்றையெல்லாம் மாற்றி, அவற்றை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. பழைய இரும்புக் கடைகள் எல்லாம் எப்படி ஒழுங்கு படுத்தப்படாமல் இருக்கின்றன என்பது சென்னையைச் சுற்றிப் பார்த்தாலே தெரியும். கார்களை நிறுத்தினால், அதன் பாகங்களைக் கழற்றிக் கொண்டு போகிறார்கள். பழைய இரும்புக் கடைகளிலே அதை விற்கிறார்கள். குறைந்த விலையில் கிடைக்கிறது. அந்தத் தொழிலை ஊக்கப்படுத்தும் நிலை இருக்கிறது. பழைய இரும்புக் கடைகளிலே என்ன மோகம் என்றால், இதுதான் மோகம். எங்கே வேண்டுமானாலும் திருடச் சொல்லி, அதை வாங்கி வைத்து விடுகிறார்கள். அதுதான் இந்தச் சட்ட முன்வடிவுக்குக் காரணம் என்று காரண-காரிய நோக்கத்தில் சொல்லப்படவில்லை. ஒருசில இடங்களில் களவுப் பொருள்களும் வாங்கப்படுகின்றன என்று இரண்டாவதாகக் கூறியிருக்கிறார்கள். நினைத்த இடத்தில் டிங்கர் கடை போட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டுமென்று சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. எந்தத் தொழிலாக இருந்தாலும், அதை முறைப்படுத்த வேண்டும், அதை பதிவு செய்ய வேண்டும். இப்போது திருடு போனால், போலீஸ் ஸ்டேஷனில் அதுபற்றி கம்ப்ளெயின்ட் கொடுத்தால் போதும். பதிவு செய்யப்பட்ட எல்லாக் கடைகளுக்கும் அதை அனுப்புவார்கள். அந்தப் பொருள் தன்னுடைய கடையில் இருக்கிறதா என்று பார்த்து சொல்ல வேண்டும். யாரிடமிருந்து அவர்கள் பொருள்களை வாங்குகிறார்களோ, அதைப் பதிவு செய்ய வேண்டும். அதைப் போலீஸ் ஸ்டேஷனில் சொல்ல வேண்டும். அப்படிச் செய்தால், அவர் பேரில் எந்த புகாரும் இல்லை. போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறவர்களுக்கும் இன்வெஸ்டிகேஷன் சுலபம். போக்குவரத்துத் துறையில் உள்ள சாமான்கள் பல்வேறு நேரங்களில் திருட்டுப் போகின்றன. அதை எல்லாம் கண்டுபிடிக்க இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது. இனி போலீசை ஏமாற்ற முடியாது. போலீஸ்காரர்களும் போகலாம், 'பிரேஸ்கிரைப்டு அதாரிட்டி' என்று போட்டிருக்கிறார்கள். அவரும் போகலாம். எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் பழைய இரும்பு வியாபாரிகளை சிரமப்படுத்த இதைக் கொண்டு வருகிறார்கள் என்று. அவற்றை



முறைப்படுத்தத்தான் இது கொண்டுவரப்படுகிறது. பல நேரங்களில் திருட்டு போகிறது. அப்படிச் சொல்லும்போது, எல்லாக் கடைகளுக்கும் போய், பார்க்கும் நிலை இருக்கிறது. இதை எல்லாம் மாற்றி, அவர்களுக்கு முதலிலே எச்சரிக்கை, 'திருட்டுப் பொருள்களை வாங்கக்கூடாது' என்று செய்கிறோம். பொருள்களை வாங்கும் போது, யாரிடமிருந்து வாங்குகிறோம் என்று அவர் பெயர், விலாசம் எழுதுங்கள்; எப்போது வாங்கினார் என்பதையும் எழுதுங்கள் என்று சொல்லுகிறோம். இதன் மூலம் அவற்றையெல்லாம் முறைப்படுத்த இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்தக் கடை வைத்திருப்பவர்களை தண்டிக்கவில்லை. லைசன்ஸ்பற்றிச் சொன்னார்கள். 15 நாட்களில் லைசன்ஸ் கொடுக்க வேண்டும். 60 நாட்கள் வரை அவர்கள் வெயிட் பண்ணலாம். அதற்குப் பிறகு லைசன்ஸ் கொடுத்ததாகக் கருதலாம். 15 நாட்களுக்குள் இன்ஸ்பெக்ட் பண்ணி லைசன்ஸ் கொடுக்க வேண்டும். அதை 60 நாட்களில் கொடுக்கவில்லை என்றால், லைசன்ஸ் கொடுத்ததாகக் கருத வேண்டும். கடை வைத்திருக்கிறவர்கள் மீது ப்ராசிகியூஷன் கிடையாது.

No Court shall take cognizance of an offence punishable under this Act other than an offence punishable under section 10 . . . . . .

அப்படித்தான் போட்டிருக்கிறார்கள். 10 ஆவது செக்ஷன்படி உள்ள அபென்ஸ் தவிர, மற்றவற்றில் கோர்ட் காக்னிஸன்ஸ் எடுக்காது. கடை வைத்திருக்கிறவர்கள் மீது அல்ல. விற்கிறவர்களுக்குத்தான் தண்டனை. திருட்டுப் பொருள்களை கடையில் விற்பவன் என்று பிராசிகியூட் பண்ணி அவன் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று 10 ஆவது செக்ஷன் போட்டிருக்கிறது. கடைக்காரர்களைத் தொல்லை பண்ண வேண்டுமென்று போடவில்லை.

(முற்பகல் 11-50)

அதனால் பின்னால்கூட ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது சப்-இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறையாதவர்கள்தான் அவர்கள் மீது வழக்கு போடலாம். அவர்தான் அங்கு போக வேண்டும். அவருக்குக் கீழுள்ள பதவியில் இருப்பவர்கள் செல்ல முடியாது. தவிரவும் அவர்களை 'அரஸ்ட்' பண்ணக்கூடாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரே ஓரிடத்தில் அச்சுப் பிழையாக இருக்குமோ என்று கருதுகிறேன். அதாவது 9 ஆம் பக்கம் 15 ஆவது பாராவிலே 'நாட்' என்று சொல்லியிருப்பதால் அர்த்தமே மாறி விட்டது. அதற்குப் பதிலாக "நோ" என்று இருந்தால் நன்றாக இருக்கும்.

ஆகவே 'நாட்' என்று சொல்லியிருப்பதை எடுத்துவிட வேண்டும். அதோடு கூட புதிதாக அதிகாரம் கொடுத்திருக்கிறோம் என்பதுகூட சரியல்ல. ஏற்கெனவே திருட்டுப் பொருட்களை வாங்கினால் அது தப்புதான். ஐ.பி.எசி. ஐத்தில் ஏற்கெனவே அது ஒரு அபன்ஸ் என்று இருக்கிறது. சிறு வியாபாரி களைத் தொல்லைப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இது கொண்டுவரப் படவில்லை. நல்ல எண்ணத்தில் கொண்டு வரப்பட்டிருக்கும் இச் சட்ட முன் வடிவு சிறப்பாக அமுல்படுத்தப்பட்டால், பொதுமக்கள் பாராட்டுவார்கள் என்ற வகையில் இதை நான் பாராட்டி, வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இங்கே சொன்ன ஒரு கருத்துக்கு விளக்கம் கூறுகிறேன். 15 ஆவது பிரிவிலே

Provided that notwithstanding anything contained in that Code, no police officer 'not' below the rank of a Sub-Inspector

என்று இருக்கிறது.

'not' is referable to the rank of the Police Officer.

என்ற முறையில் அது போடப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: துணைத் தலைவர் அவர்களே, பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் முறைப்படுத்துதல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல் சட்ட முன்வடிவின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இச் சட்ட முன்வடிவை, என்னைப் பொறுத்தவரையில், எதிர்க்கிறேன். இதிலே எத்தகைய நிலைமை கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் பார்க்கிறோம். சிறு வணிகர்கள், சிறிய சிறிய பொருட்களை வியாபாரம் செய்கிறவர்கள் போன்றவர்களை இச் சட்டம் வெகுவாக பாதிப்பதை நாம் காண்கிறோம். பெரிய வியாபாரிகளுக்கு இதனால் பாதிப்பு ஒன்றுமில்லை. பழைய இரும்பு வாங்குகிறவர்கள், தெரு விலே பேப்பர்களை வாங்குகிறார்களே இப்படிப்பட்ட சமுதாயத்திலே மிக எளிய நிலையில் நின்று பாடுபட்டு அன்றாடம் சம்பாதிக்கக்கூடியவர்களைப் பாதிக்கக் கூடிய ஒன்றாக இது இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில்,





இச்சட்டத்தின் நோக்கம்பற்றி ஒன்றைச் சொல்கிறேன், சில்லறை வியாபாரிகள் எல்லாம் திருட்டுப் பொருட்களைத்தான் வாங்கி விற்கிறார்கள் என்கிற கருத்துப்பட இதில் அம்சங்கள் இருப்பதாக நான் கருதுகிறேன். பழைய இரும்பு வாங்குபவர்கள், பேப்பர் வாங்குபவர்கள் எல்லாம் அரசாங்கத்தின் உதவி பெற்று பிழைக்கவில்லை. சுய முயற்சியால் உழைத்துப் பிழைப்பவர்கள் அவர்கள். அங்கும் இங்கும் சில குறைபாடுகள் ஏற்படலாம். அந்தக் குறை களே கூட இல்லாமல் செய்வதற்கு இப்படிப்பட்ட சட்டங்கள்தான் போட வேண்டுமா? திருட்டுப் பொருட்களை வாங்கி விற்றால், ஏற்கெனவே நடை முறையில் இருக்கின்ற சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாமே. இப்போது அவர்களை எல்லாம் பதிவு செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். அவர்களை சோதனை செய்து பலவித தொல்லைகளுக்கு ஆட்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு நான் ஒரு விவரத்தைச் சொல்கிறேன். நாட்டிலே கறுப்புப்பணம் ஏராளமாகப் புழக்கத்தில் இருக்கிறது.

A Report on Black Money, prepared by the National Institute of Public Finance and Policy—

Summary released by the Government of India last fortnight.

என்கிறபடி, அந்த நிறுவனத்தில் அறிக்கையின்படி, நாட்டிலே ஏராளமாக கறுப்புப் பணம் நடமாடுகிறது.

The latest study puts the size of black money amounting to between 31,000 crores of rupees and 37,000 crores of rupees.

The rate of tax evasion in the sugar industry doubled from the year 1960 to the year 1970.

அதைச் சொல்லிவிட்டு, மறுபுறம் என்ன சொல்கிறார்கள் என்றால்,

"In Madras alone, the black money generated from real estate may have been as high as 677 crores of rupees in one year."

(முற்பகல் 11-55)

ஓராண்டுக்கு 677 கோடி ரூபாய் கறுப்புப் பணம் உற்பத்தி செய்கிற நிலை இன்றைக்கு இந்த ரியல் எஸ்டேட்டில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்கள் எல்லாம் இந்தச் சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்படவில்லை. ஆனால் சாதாரண வியாபாரிகள், தெருவில் கூவிச் சென்று பழைய இரும்பு வாங்கு

பவர்கள், கையிலே தொடமுடியாத பழைய பேப்பர்களை வாங்கி வந்து விற்பனை செய்கிற சிறிய வியாபாரிகள், இந்தச் சட்ட முன்வடிவால் பாதிக்கப்படுகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்தச் சட்ட முன்வடிவின் 6 ஆவது பிரிவில்,

"Provision in respect of certain existing places of business:

Notwithstanding anything contained in this Act and subject to the provisions of sub-section (2), every scrap merchant or dealer in second-hand property or an owner of an automobile workshop or a tinker shop carrying on the business as such scrap merchant or dealer in second-hand property or the business of running such automobile workshop or tinker shop in any place of business, immediately before the date of the commencement of this Act, may carry on such business at such place of business."

தொடர்ந்து எந்தத் தொழிலை நடத்தினாலும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்த பிரிவில்

"No person entitled to carry on any business under sub-section (1) shall continue to carry on such business after the expiry of a period of six months from the date of commencement of this Act unless he obtains a licence under section 4 for carrying on such business and a permission under section 5 in respect of the place of business."

என்று இருக்கிறது. எனவே, அனுமதி வாங்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு அலுவலகத்தில் அனுமதி வாங்க வேண்டுமென்று சொன்னால், எவ்வளவு நடைமுறைகளைப் பின்பற்றியாக வேண்டுமென்று நமக்கெல்லாம் தெரியும். லைசன்ஸ், பர்மிட் முறை சாதாரணமாக இல்லை.

Licence, permit raj—That will only lead to corruption என்ற நிலைமையைத்தான் பார்க்கிறோம்.

இன்னொன்றை நாம் பார்க்க வேண்டும். உதாரணமாக, பஞ்சாப் மாநிலத்தில் எந்தத் தொழிலுக்கும் அனுமதி வாங்கவேண்டியதில்லை. ஏராளமான சின்னச் சின்னக் கடைகள் இருக்கின்றன. அதனால்தான் பஞ்சாப் தொழிலில் முன்னேறியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. Punjab has progressed because of free permission அங்கே கட்டுப்பாடு இல்லை.



சண்டிகார் போன்ற இடங்களைப் பார்த்தால், ரோடு ஓரங்களில் பட்டறை போட்டிருப்பார்கள். கட்டுப்பாடு கிடையாது. கட்டுப்பாடு என்ற பெயரால் இங்கே ஏராளமான தவறுகள் ஏற்படுகின்ற நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். Clause 5(3)(*b*)—density of population:

(*b*) refuse permission if it is of opinion that such establishment—

(i) is objectionable by reason of the density of population in the locality; or

(ii) is likely to cause a nuisance to the residents of the locality; or

(iii) is likely to cause traffic or health hazards to the residents of the locality; or

(iv) does not contain adequate space for parking the vehicles which would be normally attracted.

எனவே, இப்போது இருப்பவர்களுக்கே ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை இந்தச் சட்டத்தால் இருக்கிறது. இனிமேல் வருபவர்களைக் கட்டுப்படுத்தலாம். அதில் ஆட்சேபணை இல்லை. சென்னையிலும், தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும், ஏழ்மையானவர்கள் இதனால் பாதிக்கப்படக்கூடியவர்களாக ஆகிறார்கள். இதனை கவனத்தில்கொண்டு சட்டத் திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த நிலைமைகள் ஏற்படாமல் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தச் சட்டத்தில் இருக்கிற விதிகள் காரணமாக, சென்னையில் இருப்பவர்கள், மிகச் சாதாரணமானவர்கள், எளியவர்கள் பல்லாண்டுக் காலமாக சென்னை நகரில் பட்டறை போட்டிருப்பவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டாமென்று சொல்லி, என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று என் கருத்துக்களைச் சொல்கிறேன். இந்த வியாபாரங்களில் ஈடுபட்டிருக்கிற சாதாரண மக்கள், அவர்களுக்கிருக்கிற நிலைமைகள், அவர்கள் அறியாமல் ஏற்படுகின்ற துன்பங்களைத் தவிர்க்க இந்தச் சட்ட முன்வடிவு துணையாக இருக்குமென்று கருதுகிறேன்.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1985 ஜூலை 19

(நண்பகல் 12.00)

பொதுவாக இந்தப் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடைகளினால்தான் சென்னை நகரத்திலே பாதி கார்களே ஓடிக்கொண்டிருக்கின்றன. இவர்கள் நடுத்தர மக்களுக்குப் பெரிய உதவி, பெரிய சேவையை செய்துகொண்டிருக்கிறார்கள். பஞ்சாப் போன்ற இடங்களில் உள்ள நிலைமைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நாம் இன்னொன்றையும் தெரிந்துகொள்ள வேண்டும். இங்கே பழுதடைந்து போகின்ற 'பேரிங்' வாங்கிச் செல்லப்பட்டு, சரி செய்யப்பட்டு, அதுவே புதியதாக விற்பனைக்கு வந்து விடுகிறது. எனவே இப்படி புதியதாக வாங்குவதைவிட இந்தக் கடைகளில் தெரிந்தே பழையதை வாங்குவது நல்லது என்கிற அளவிலே இருக்கிறார்கள். எனவேதான் அப்படிப்பட்ட கடைகள் பெருகிவிட்டன.

நகர்கள் பெருகிறபோது, முன்பு ஒதுக்குப் புறமாகக் கருதப்பட்ட இடங்கள் எல்லாம்கூட நகரின் மையப் பகுதிகளாக வளர்ந்து விடுகின்றன. அதன் விளைவாக இவை போக்குவரத்துக்கு இடையூறாகவும், சுகாதாரச் சீர்கேட்டை விளைவிப்பதாகவும் இருக்கின்றன. எனவேதான் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது என்பதால்; இந்தச் சட்ட முன்வடிவை நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தக் கடைகளில் சிறுவர்கள் நிறைய பேர் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் தற்சமயம் இல்லை. இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவருவதன் மூலம் எதிர்காலத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் விதிகளை நடைமுறைப்படுத்துவதற்குக்கூட துணையாக இருக்கும். தொழிலாளர்களுக்கு விரோதமாக அவை செயல்பட்டால், அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் இது துணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது ஏதோ அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக அல்ல. அங்கே பணி புரியும் தொழிலாளர்களுக்குத் துணையாக இருப்பதற்குக் கொண்டுவரப்படுகிறது. இந்தத் தொழிலில் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு நல்ல வழிமுறையைக் காண வேண்டுமென்ற முறையில் தான் இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது.



1985 ஜூலை 19] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

இப்போது நகரின் முக்கிய குடியிருப்புப் பகுதிகளில் உள்ள இந்தக் கடைகளிலிருந்து வரும் ஆரன் சப்தம் பலரின் காதை அடைத்துக்கொண்டிருக்கிறது. இவற்றிலிருந்து வெளிவரும் கழிவுநீர் நகருக்குக் கேடு விளைவித்துக் கொண்டிருக்கிறது. எனவே கட்டுப்பாட்டைக் கொண்டுவருவதன் மூலம் நகரின் நலன் கருதி சில காரியங்களைச் செய்ய முடியும். அதனாலும் இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிறேன்.

அடுத்து, அவர்களுக்கு நகருக்கு ஒதுக்குப்புறங்களில் இட ஒதுக்கீடு செய்து, அவர்கள் தொழிலை நடத்த வழிவகை காண முடியும்.

முன்பெல்லாம் ஜப்பான் நாட்டைப்பற்றிப் பெருமையாகச் சொல்வார்கள் அவர்கள் வீணாகிப்போன பொருள்களையெல்லாம் சரிசெய்து புது மெருகேற்றிக் கொடுக்கிறார்கள் என்று சொல்வார்கள். அதேமாதிரி இந்தத் தொழிலில் உள்ளவர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனாலே அவர்களுக்கு வழிவகை காண உதவியாக இந்தச் சட்ட முன்வடிவு அமையும் என்று கருதுகிறேன்.

அதோடு, ஆரம்பத்திலே சிறிய அளவிலே இது காணப்பட்டாலும்கூட, தமிழக அளவில் பார்க்கிறபோது, பல அலுவலர்கள் இதிலே ஈடுபட்டு பணியாற்றுகிற ஒரு சூழ்நிலை விரைவில் உருவாகும். அப்படி உருவாகிறபோது, பட்டதாரி இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறுவார்கள் என்ற முறையிலே இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

Thirumathi TARA CHERIAN: Sir, I would like a ruling to be given by the Chair on a remark made by the hon. Member, Thiru Subbu, about Judges. He said, "நீதிபதியும் ஒரு மனிதர்தான்" Everybody knows that even a woman can become a Judge. I am not disputing that point and I am not going into the pros and cons of it. I am only referring to the mention which has been made to the office of Judge. I would like the Honourable, the Law Minister, who is present here, to give his opinion whether that remark about

the office of Judge was correct. If he says that it is not correct, then, you would also agree that the remark need not have been made. So, I would like a ruling on this and I would like the Honourable the Law Minister to give his opinion on this particular matter.

Mr. DEPUTY CHAIRMAN: This is a very late reaction by the honourable Member. We all know very well that no aspersion should be cast on a Judge. If anything has been said in violation of the rules, the Presiding Officer has got the power to expunge it. The Proceedings will be looked into. If there had been any violation of rules, due note of it will be taken and, if expunction is required, expunction will be done.

Thirumathi TARA CHERIAN: In that case, I request you to take up the matter further and let us have information whether the making of that remark was right or not.

திரு. ஏ. ஜே. தாஸ்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவு நீண்ட காலத்திற்கு முன்பே வந்திருக்க வேண்டும். இன்றைக்கு சென்னை நகரில் எங்கு பார்த்தாலும் பழைய இரும்புக் கடைகளை வைத்துக்கொண்டு பல விதமான தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 12.05)

இன்றைக்கு எங்கே திருட்டுகள் நடந்தாலும், பழைய இரும்புக் கடை எங்கே இருக்கின்றதோ அங்கே தேடிக்கொண்டு செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. நான் கூட அதிலே பாதிக்கப்பட்டிருக்கிறேன். நான் ஒருமுறை ஒரு காரை நிறுத்தி வைத்திருந்தபோது, அதிலிருந்த டைனமோவைக் கழற்றிக்கொண்டு போய்விட்டார்கள். நான் சுற்றிப் பார்த்தபோது, அது ஒரு கடையிலே இருந்தது. அதைப் பார்த்துக் கேட்டால், அது உங்களுடையது அல்ல என்று சொன்னார்கள். நான், "இந்தாப்பா, அது என்னுடையது என்பதற்கு அடையாளம் எல்லாம் வைத்திருக்கிறேன்" என்று சொன்னேன்.



போலீசுக்குக் கூட புகார் கொடுத்தேன். அப்படிச் சொல்லியும் கூட நடவடிக்கை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. பிறகு நானே பணம் கொடுத்து அதை வாங்கிவந்த என்னுடைய நிலைமை இருக்கிறது. ஆகவே இவ்விதமான ஒரு நல்ல சட்டத்தை அரசு செய்வதை மீண்டும் ஒருமுறை பாராட்டி வரவேற்கிறேன்.

இந்தவிதமான ஒழுங்குமுறைகளைக் கொண்டுவரும்போது, நாம் சில இடங்களிலே சென்று பார்க்கும்போது பலவிதமான காரியங்கள் நடைபெறுகின்றன. இன்றைக்கு அரசினுடைய நிறுவனங்களிலே நடக்கக்கூடிய பெரிய பெரிய திருட்டுகளில் சம்பந்தப்பட்ட பொருள்கள் கூட அந்தக் கடைகளுக்குத் தான் வருகின்றன. இன்றைக்கு வரக்கூடிய இரும்புகள் எல்லாம் பி.டபிள்யூ.டி.ல் இருந்தவை. இரும்புக் கம்பிகள் வருகின்றன. அதுவும் புது கம்பிகளாக வருகின்றன. பி.டபிள்யூ.டி.-யிலிருந்து எவ்வளவு சாமான்கள் அந்தக் கடைகளுக்குப் போய்ச் சேருகின்றன என்று பார்த்தால், மண்ணடிக்குச் சென்று பார்த்தால் வாங்கிக் கொண்டு வரலாம். இன்றைக்கு அரசு கொடுத்த இரும்பை நாம் திரும்பி வாங்கிக்கொண்டு வருகிற நிலைமையிலே இருக்கிறது. ஆகவே இதற்கு ஒரு ரிஜிஸ்டர் வைத்து, அவைகளைப் பதிவு செய்து வைத்துவிட்டால், திடீரென்று நாம் ஒரு புகார் கொடுத்தால், அந்தக் கடைகளுக்குப் போய்ப் பார்த்து, அவர்கள் எங்கே வாங்கினார்கள் என்று கண்டுபிடிக்க முடியும். இந்த அருமையான நல்ல திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. ஆகவே இதை மீண்டும் ஒருமுறை பாராட்டுகிறேன். ஆனால்....

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையிலே இருக்கக்கூடிய பொருட்கள் எல்லாம் உரிய முறையிலே வைப்பு அறையிலே வைக்கப்பட்டு, உரிய கணக்குகள் வைத்துத்தான், முறைப்படி பணிகளுக்காகத் தரப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே உறுப்பினர் கூறியது ஒரு சரியான குற்றச்சாட்டாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ்: தலைவர் அவர்களே, அதிலே பல அனுபவங்களை நான் பார்த்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் இப்போதுதான் வந்திருக்கிறார். இனிமேல் அதைக் கண்காணிப்பார் என்று கருதுகிறேன். ஆகவே இதுமாதிரியான காரியங்களையெல்லாம் தடுப்பது ஒரு நல்ல நோக்கமாக இருக்கிறது. அதேநேரத்தில் சிறிய டிங்கர் கடைகள் மற்றும் மோட்டார் பழுது பார்க்கும் ஓர்க்ஷாப்புகள்—இவைகளுக்கெல்லாம் உரிமம் வாங்க வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். இன்றைக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் சிறிய சிறிய கடைகளை படித்தவர்கள், அனுபவம் பெற்றவர்கள் நடத்துகிறார்கள். அதற்குப் பல வரம்புகள் வைக்கும்போது, அவர்கள் சங்கடப்படக்கூடிய நிலைமைகள் ஏற்படும். அவைகளுக்கு இத்தனை அடி இடம் இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். இப்படி இந்தச் சிறிய தொழில் நடத்துபவர்களுக்குச் சங்கடங்கள் ஏற்படும். அதையெல்லாம் எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்க வேண்டும். இந்த ஓர்க்ஷாப்புகளை நடத்தும் இடங்களுக்கு, திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் சொன்னபடி, ஒரு ஆட்டோமொபைல் என்ஜினியர் போய் பார்க்க வேண்டும். மாநகராட்சியிலே உள்ளவர்கள் அதை எவ்வளவு அக்கறையோடு செய்வார்கள் என்று தெரியாது. ஆனால் ஒரு ஆட்டோமொபைல் என்ஜினியர் வைத்து காரியங்களைச் செய்தால், நன்றாக இருக்குமென்று சொல்லிக்கொண்டு, இந்த அருமையான திட்டத்தைச் செய்த அரசுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, இரும்பு வியாபாரிகள், சிறு வியாபாரிகள், பழைய டிங்கர் கடைகளை வைத்திருப்பவர்கள், உதிரி பொருட்களை வைத்திருப்பவர்கள்—இவர்களைக் கட்டுப்படுத்தும் சட்டத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டம்பற்றி 1932 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்ட மன்றப் பேரவையிலே உரையாற்றும்போது குறிப்பிட்டார்கள். இப்படி ஒரு சட்டம் கொண்டு வர வேண்டுமென்று 1932-ல் குறிப்பிட்டதையொட்டி, சம்பந்தப்பட்ட இலாக்கா பரிந்துரை செய்து 1984-லேயே இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றுவதற்காக சட்ட மன்றத்திலே அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கு முன்பே இதனை அவசரச் சட்டமாகக் கொண்டு வரலாமென்று சொல்லி, மத்திய அரசின் அனுமதியைக் கூட பெற்றுவிட்டது





அரசு. பேரவையிலே அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட முன்வடிவு, பேரவை கலைக்கப்பட்ட காரணத்தாலே, காலாவதியாகிவிட்டது. எனவே மீண்டும் நிறைவேற்றுவதற்கு அதைக் கொண்டுவந்திருக்கிறோமே தவிர வேறு ஒன்றுமல்ல. முதல்வர் அவர்கள் 1982 ஆம் ஆண்டு பேரவையிலே ஆற்றிய உரையில் இந்தச் சட்டத்தினுடைய காரணங்களை விளக்கிப் பேசியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

அதே காரணங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் மதிப்பிற்குரிய திரு. தாஸ் அவர்களும் விளக்கமாகச் சொன்னார்கள். அதுபோன்ற தவறுகள் நடப்பதைத் தடுக்க இந்தச் சட்டம் உதவ வேண்டும் என்ற அடிப்படையில்தான் கொண்டு வந்திருக்கிறோம். எல்லா வியாபாரிகளுமே திருடர்கள் என்று நாங்கள் கருதவில்லை. ஆனால் திருட்டுப் பொருள்களை வாங்குகிறவர்களைக் கட்டுப்படுத்த ஒரு சட்டம் கொண்டு வரும்போது என்னையும் சேர்த்து ஏன் கட்டுப்படுத்துகிறாய் என்று நல்லவர்களாக இருப்பவர்கள் கேட்கக் கூடாது. நாம் வீட்டிற்குள் போகிறபோது, கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு உள்ளே சென்றால், உடனே எதிர் வீட்டில் இருப்பவர் நம்மைப் பார்த்து என்னைத் திருடன் என்று கருதிவிட்டாயா, எதற்காகத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு உள்ளே போகிறாய் என்று சண்டை போடக் கூடாது. அவரவர்கள் வீட்டுக்கு அவரவர்களே பந்தோபஸ்து செய்து கொள்ள வேண்டுமே தவிர, நீ ஏன் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு உள்ளே போகிறாய் என்று கேட்கக் கூடாது. எனவே நாம் இப்போது திருட்டுப் பொருள்களை வாங்குவதைத் தடுக்கக்கூடிய வகையில் சட்டம் கொண்டு வருகிறோம். ஒரு வகையில் முறைப்படுத்துகிறோம். போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கக் கூடாது, மக்கள் வாழ்கிற பகுதியில் ஓர்க்ஷாப் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது, அங்கே இரவெல்லாம் இரும்பை அடித்துக்கொண்டு யாரையும் தூங்க விடாமல் செய்வதைத் தடுப்பதற்குச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது, இப்போது ஒர்க்ஷாப் வைத்துக் கொண்டிருப்பவர்களைத் தொந்தரவு செய்யாதீர்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். இதற்கு இடைஞ்சலாக இருந்தால், அவர்கள் கண்டிப்பாக அப்புறப்படுத்தப்படுவார்கள் என்பதை முன்கூட்டியே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதை அரசாங்கம் விட்டு வைக்காது. பொதுமக்களுக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது, ஒரு சிலருக்கு நன்மை விளைவிக்க வேண்டும் என்பதற்காகப் பலருக்குத் தீமை விளைவிக்கக்கூடாது. பலருடைய நன்மையை முன்னிட்டு சிலர் துன்பத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான் சட்டம் கொண்டு வருகிறோம். ஆனாலும் யாருக்கும் வேண்டுமென்றே துன்பம் விளைவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வரவில்லை. பொதுமக்களின் நன்மையைக் கருதி இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் பேசும்போது மோட்டார் வெகிகிள்ஸ் இன்ஸ்பெக்டர் போன்று அனுபவப்பட்டவர்களை ஒர்க் ஷாப்புகளுக்கு அனுப்பிப் பார்த்து, பிறகு லைசென்ஸ் கொடுக்க வேண்டும் என்றார்கள். அது நல்ல யோசனை. விதிமுறைகளைப் போடும்போது, ஆக அதை நிச்சயமாகக் கவனத்தில் கொண்டு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்ற உறுப்பினர்கள் வரவேற்றுப் பேசியதற்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆங்கிலத்தில் சொல்லப்பட்டது 15-வது செக்ஷனில் தமிழில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது " ஆனால், மேற்சொன்ன சட்டக் கோவையில் என்ன சொல்லியிருப்பினும் காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் பதவித் தரத்திற்குக் குறையாத எவரும் 10 ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்க யாதொரு குற்றம் தொடர்பாகப் புலனாய்வு நடத்தவோ, ஒருவரைக் கைது செய்யவோ கூடாது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது . . .





மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். ஒரு சட்ட முன்வடிவில் அமைச்சர் பதில் சொன்ன பிறகு, தீர்மானம் அவையில் நிறைவேற்றப்பட வேண்டுமே தவிர, நடுவில் எந்த உறுப்பினரும் மீண்டும் பேசக்கூடாது.

திரு. க. சுப்பு : நான் விளக்கம் கேட்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் சட்ட முன்வடிவின்போது பேசும்போது விளக்கம் கேட்கலாம். அமைச்சர் பதில் சொல்லி முடித்த பிறகும் விளக்கம் என்று கேட்கக்கூடாது. அப்படித்தான் இங்கே சம்பிரதாயமாக இருக்கிறது.

திரு. க. சுப்பு : நான் சொல்வது 15-வது செக்ஷனில் சொல்லப்பட்டதன் அடிப்படையில் பார்த்தால், ஒரு காவல் துறை சப் இன்ஸ்பெக்டர் பதவித் தரத்திற்குக் குறையாத காவல்துறை அதிகாரி எவரும் என்று சொன்னால் மேல் அதிகாரிகளை இது தடுப்பதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதில் என்ன சொல்லியிருக்கிறது என்று பார்க்க வேண்டும். சப் இன்ஸ்பெக்டர் பதவிக்குக் குறையாத பதவியில் உள்ளவர்கள் என்றால் எஸ்.ஐ. பதவிக்குக் கீழே இருப்பவர்கள் யாரும் இதில் தலையிடக்கூடாது என்று பொருளாகும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மன்னிக்க வேண்டும். (Double negatives make one positive) என்ற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கருதுகிறார் என்று கருதுகிறேன். 'Not' is not to be linked to 'no'. All Police Officers of the rank of Sub-Inspector and above the rank of Sub-Inspector are entitled to do that work.

228 தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1985)

[1985 ஜூலை 19

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு, பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 17 வரை, பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந் தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு, பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1985) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு, பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுதுபார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1985) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(பிற்பகல் 12-15)

(3) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1985).

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 40/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் வரவேற்கக் கூடியது. இருப்பினும் ஏற்கெனவே இந்த அவையில் ஒரு திருத்தம் நிறைவேற்றப்பட்டு, தொழில் நிறுவனங்கள் நீதி மன்றங்களுக்குச் சென்று ரிட் பெட்டிஷன் போட்டதால் அது செல்லாது என்ற பிரச்சினை ஏற்பட்டதால், அதற்குக் கூடுதலான ஒரு விளக்கத்தைத் தந்து அது செல்லும் என்ற தன்மையை அளித்து, இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்படிப்பட்ட சட்டங்கள் நிறைவேறிய பிறகு, அவற்றை நடைமுறைப் படுத்துவதில் உத்தரவாதம் குறைவாக இருப்பதால்தான் இப்படிப்பட்ட சிக்கல்கள் வருகின்றன. இப்போது கூட பல தொழிற்சாலைகளில் இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவது கடினம். இதனால் தொழிலாளர்களுடைய நலன்களைப் பாதுகாக்கக்கூடிய அமைப்புகள் பல முறை முயற்சித்தும் பல காரணங்களால் அவைகள் தோல்வியுற்றிருக்கின்றன. இன்றைக்கு வேலையின்மை அதிகமாக இருப்பதால், பல பேர் வேலைக்கு முயற்சி செய்வதால், 'டெம்பரரி', 'புரொபேஷனர்' என்று கூறி பல்வேறு தொழிற்சாலைகள் இந்தச் சட்டத்திலிருந்து

@ 302–303 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தங்களை விடுவித்துக்கொள்ளும் வழிவகைகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் தப்பிக்க 'எஸ்கேப் ரூல்ஸ்' ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவைகளை அடைப்பதற்கான முறைகளில் விரிவான முறையில் சட்டம் வந்தால்தான் இந்தமாதிரி சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உத்திரவாதப்படுத்த முடியும். அநேகமாக தொழிலாளர்கள் உரிமை சம்பந்தமாக வழக்குகள் நீதிமன்றங்களில் சிவில் லிட்டிகேஷன் என்ற அளவிற்கு வந்துவிட்டன. அப்படிப்பட்ட விஷயங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள விளக்கம் இரண்டில் சில விஷயங்களை Award, Agreement, Settlement, Instrument or contract of service என்று சொல்லியிருந்தாலும், அவைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள சில வழிவகைகளை உருவாக்குகிறார்கள். இவைகளைப் பார்த்து அடைப்பதற்கான வழிகளைச் செய்தால்தான், இந்த மாதிரியான சட்டங்கள் நிற்க முடியும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். சிறப்பான சட்டத்தை நாம் நிறைவேற்றிவிட்டோம் என்ற திருப்தி நமக்கு ஏற்பட்டாலும், இந்த நல்ல சட்டங்களை சிலர் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதால் பலருக்கு பல பாதகங்கள் ஏற்படும். ஆகவே இதை உத்திரவாதப்படுத்தும் முறையில் இன்றைக்குள்ள நடப்பில் பல தொழில் நிறுவனங்களில் என்ன நடக்கின்றன என்பதை ஆராய்ந்து அதற்கான விரிவான சட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

இந்தச் சட்டத் திருத்தம் வருவதற்கான நோக்கக் காரணங்களைக் குறிப்படும் நேரத்தில் நெல்லை காட்டன் மில்ஸ், திருநெல்வேலி, வெர்செஸ் ஸ்டேட் ஆஃப் தமிழ்நாடு என்ற தீர்ப்பைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே 75 சதவீதம் தொழிலாளிகள் தற்காலிகத் தொழிலாளிகள். இப்படி பல தொழில்கள் இருக்கின்றன. கழிவுப் பஞ்சை வைத்து 20 கவுண்ட் நூல் உற்பத்தி செய்ய அரசிடம் அனுமதி வாங்கியிருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் கழிவுப் பஞ்சைப் பயன்படுத்துவதில்லை. சட்டங்களை ஏமாற்றுவதற்காக வந்த தொழிற்சாலைகள் இவைகள். இதனால் தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்கும் நேரத்தில், மேலும் விரிவான சட்டம், நடப்பிலே இப்படிப்பட்ட சட்டங்களை ஏற்கிற வகையில், வரவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் தங்கள் திறமையின் காரணமாக சிலர் தப்பித்துக்கொள்கிறார்கள். மனித திறமைக்கு எல்லையே கிடையாது. இப்போது நம்முடைய கண் முன்னே தெரிகிறது அவர்கள் செய்யும் தவறுகள். எனவே இப்படிப்பட்ட சட்டங்கள்



லிருந்து எப்படியாவது தப்பித்துக்கொள்கிற முயற்சிகள் இருக்கின்றன. அந்த முயற்சிகளை அடைக்கும் முறையில் விரிவான முறையில் சட்டம் கொண்டு வந்தால் உதவிகரமாக இருக்கும். இல்லாவிட்டால் தமிழ்நாட்டிலே தொழிலாளர்கள் மத்தியிலே அமைதியற்ற நிலை மேலும் உருவாகக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டிவிட்டு இதை வரவேற்கக்கூடிய நிலையிலே இதை நிறைவேற்றிய பிறகு இதை அரசு உறுதியாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(பிற்பகல் 12-20)

திரு. க. சுப்பு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளில் தொடர்ச்சியாக 480 நாட்கள் பணியாற்றியவர்களை நிரந்தரம் ஆக்க வேண்டும் என்ற ஒரு நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. மூலச் சட்டத்தைக் கொண்டுவருகின்றபோதே, இந்த அவையிலேயும் பேசப்பட்டது, அந்த அவையிலேயும் பேசப்பட்டது. அது 1973-ல் ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டிலே எடுக்கப்பட்ட முடிவையொட்டி கொண்டுவரப்பட்டது. நல்ல அடிப்படையிலேதான் கொண்டுவரப்பட்டது. 1973-ல் ஸ்டேட் அட்வைசரி போர்டிலே இன்றைக்கு இருக்கின்ற ஆளுங்கட்சியினுடைய பிரதிநிதிகள் இல்லை. அப்போதுதான் இன்றைய ஆளுங்கட்சியின் தொழிற்சங்கப் பேரவை தொடங்கப்பட்டது. பின்னர் எமெர்ஜென்சி நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி டிஸ்மிஸ் பண்ணப்பட்டிருந்தது. எல்லா திராவிட முன்னேற்றக் கழக தொழிற் சங்கத் தலைவர்களும் உள்ளே இருந்தார்கள். நான்கூட உள்ளேதான் இருந்தேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராகவானந்தம் அவர்கள்தான் வெளியிலே இருந்தார்கள். அவர்கள் அந்த அட்வைசரி போர்டிலே வந்து பேச முடிந்தது. அதற்கு முன்னாலேயே இந்த முடிவு கொண்டுவரப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது. இருந்தாலும் ஒரு கட்சிக் கண்ணோட்டத்தோடு கொண்டு வந்தது என்று இல்லாமல், பின்னர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், 1973-ல் அன்று கொண்டு வந்த முடிவை அமுல் நடத்தவேண்டும் என்ற நல்ல உணர்வோடு மூலச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது கருத்து வேறுபாடு இல்லாமல் அதன் நோக்கங்கள், காரணங்கள், ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ் இவைகளை எல்லாம்

எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். அதிலே சில பேர்கள் பல ஆலோசனைகளையும் வழங்கியிருக்கின்றார்கள். இதே மாமன்றத்திலேகூட அன்று இருந்த மார்க்சிஸ்ட் உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். கன்டினுவன்ஸ் ஆப் சர்விஸ் பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். அதுபற்றி தெளிவில்லாமல் இருக்கின்றது என்று சொன்னார்கள். அன்றைக்கு அது மறுக்கப்பட்டது. ஆனால் இன்று நீதிமன்றம் சொல்லிவிட்டது. இன்றைக்கு மறுப்பதற்கில்லை. இங்கே உறுப்பினர்கள் மறுத்துவிடலாம். ஆனால் மேலே நீதிமன்றம் என்று ஒன்று இருக்கிறது என்று நினைத்துத்தான் நாம் செயல்பட வேண்டும். 'கன்டினுவன்ஸ் ஆப் சர்வீஸ்' என்பதில் ஒரு தெளிவு இல்லாமல் இருக்கின்றது என்று நீதிமன்றம் அறிக்கை விட்டிருக்கிறது. அதனாலேதான் இதைத் திருத்த நாம் மறுபடியும் சட்ட முன்வடிவு கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மத்திய அரசு போட்டிருக்கின்ற இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்-படி காலண்டர் வருடம், 12 மாத காலத்தில் 240 நாட்கள் வேலை செய்தாலும், அவர்கள் எல்லாம் நிரந்தரமாக வேலையில் இருப்பதாகக் குறிப்பிடப்பட வேண்டும். அவர்களுக்கு எல்லா வசதிகளும் கொடுக்க வேண்டும். பிராவிடன்ட் பண்ட் பிடிக்க வேண்டும். லே ஆப் பண்ணினாலும் பணம் கொடுக்க வேண்டும். அந்த 240 நாட்கள் வேலை செய்தால் 20 நாட்களுக்கு ஒரு நாள் லீவ் கொடுக்க வேண்டும். 240 நாட்கள் இருந்தாலும் போதும். 480 நாட்கள் என்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அது ஒருபுறம் இருக்கட்டும். 480 நாட்கள் 2 வருட காலத்தில் இருந்தால் போதும் என்று ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டது. இது நீதிமன்றத்திலே அடிபட்டுவிட்டது. இருந்தாலும் நீதிமன்றம் இன்னொன்றைக் கேட்டிருக்கின்றது. யார் தொழிலாளர் என்று கேட்கிறது. ஓர்க்மென் என்றால் யார்? பதிலி, டெம்பரரி, கேஷுவல் லேபர் இவர்கள் எல்லாம் தொழிலாளர்களா என்று வந்திருக்கின்றது. அவர்கள் தொழிலாளர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அப்படி என்றால் இந்தச் சட்டமே செல்லாது என்று ஆகிவிட்டது. சட்டம் கொண்டு வந்ததே அதற்காகத்தான். பதிலி என்ற பெயரில், டெம்பரரி என்ற பெயரில், கேஷுவல் என்ற பெயரில் வைத்துக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் ஓர்க்மென் என்று இல்லை. இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்டிலே தெளிவாக இருக்கின்றது. ஓர்க்மென் என்றால் அதிலே பதிலி எல்லாம் வருகின்றது. துரதிருஷ்டவசமாக நமது சட்டத்தில் இப்படி வந்துவிட்டது. அதைச் செல்லுபடியாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்றையதினம் நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு



வருகிறோம். இதிலே கொண்டுவரும்போது சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீலுக்கு யாராவது போகலாம். அப்போது இன்னுமொரு திருத்தம் கொண்டுவரப்படலாம். இன்னொரு பிரச்சினை. ரூபாய் 1,000 வரையில் சம்பளம் வாங்குகின்றவர்கள் சூப்பர்வைசர்கள் என்று இருந்தால், அவர்கள் ஓர்க்மென் இல்லை என்று சென்ட்ரல் ஆக்டைத் திருத்தியாகிவிட்டது. 1,600 ரூபாய் வரைக்கும் என்று அவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். இதிலே அதேபோல் திருத்தம் ஏன் கொண்டுவரவில்லை என்று தெரியவில்லை. அதை நாம் சாவகாசமாகக் கொண்டுவரவேண்டியதுதான். இந்தச் சட்டத்திலே முக்கியமாகச் செய்ய வேண்டியது இருக்கிறது. இந்தச் சட்டத்தை அமுல் படுத்தும்போது சிக்கல்கள் வரும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொன்னார்கள். அதிலே என்ன சிக்கல் வருகிறது என்றால், 480 நாட்கள் என்று இருந்தாலும், 240 நாட்கள் என்று இருந்தாலும், ஒருவர் வேலை செய்தார் என்பதற்கு ஆதாரம் இருக்கின்றதா என்றால் இல்லை. வேலை செய்பவர்கள் பெயர்களை ரிஜிஸ்தரிலே பதியாமலே வேலை வாங்குகின்றார்கள். எழுத வேண்டும் என்று என்ன கட்டாயம்? ஒன்றுமில்லை. அவர்கள் பெயர்களை ரிஜிஸ்டரிலே எழுதவில்லை என்றால், அதை அங்கு வருகின்ற அரசு அதிகாரியிடம் சொல்லலாம். ஆனால் அந்த நிறுவனம் அவர்களை அப்படிப் புகார் சொல்ல அனுமதிக்குமா? அப்படி அதிகாரிகள் செய்யச் சொன்னால் செய்து

(முற்பகல் 12-25)

விடுவார்களா? இதைப் பார்க்க வேண்டும். அதற்குமேல் செய்யாமல் போனாலும் போகலாம். ஏனென்றால் பிராக்டிகலாக அவன் பெயர் இருக்க ஏற்பாடு இருக்க வேண்டும். அவன் பெயரைப் பதிவு செய்ய வேண்டும். அதற்கு ஏற்பாடு வேண்டும். இன்றைக்கு உள்ள சட்டங்களில் அந்த ஏற்பாடு இல்லை என்பது நடைமுறை உண்மை. அதனால் பல பேர்கள் கேட் கூலிகள் என்று உருவாகியிருக்கிறார்கள். ஏற்கெனவே தொழிலாளர்களாக இருந்து, ஏதோ காரணங்களுக்காக ரிடையர் ஆகிப் போயிருப்பார்கள். வேலை இருந்தால் அவர்களை எடுத்துக்கொள்வார்கள். வேலை பார்த்த அன்றைக்குக் கூலி கொடுப்பார்கள். அவர்களுக்கு லீவ் கிடையாது, பி.எஃப் கிடையாது, ஈ.எஸ்.ஐ. கிடையாது. அந்த நிலைமைகள் தமிழ்நாட்டில் சர்வசாதாரணமாக இருக்கின்றன. பஞ்சாலைகளில் அந்த நிலைமைகள் அதிகமாக இருக்கின்றன. அதனால் என்ன பண்ண வேண்டுமென்றால், சட்டத்தை கொஞ்சம் கடுமையாகக் வேண்டும். இந்த விதிமுறைகளை மீறுகிறவர்களுக்கு என்ன தண்டனை

என்றால், 5,000 ரூபாய் அபராதம். மேக்ஸிமம் 5,000 ரூபாய் அபராதம். மேஜிஸ்டிரேட்டுகள் எப்போதும் மேக்ஸிமம் போட மாட்டார்கள். மேனேஜ் மென்ட்மீது கருணை அதிகமாகப் பெருகும். சில சமயங்களில் மன்னித்தும் விடுவார்கள். இந்த அபென்சில் ஜெயிலுக்குப் போனதாக, புல் அமவுன்ட் பைன் போட்டதாக இதுவரை இல்லை. நான் வக்கீலாக இருந்திருக்கிறேன். பார்த்த அனுபவத்தில் சொல்கிறேன். இந்தச் சட்டத்தை அவர்கள் மீறி விட்டால், அவர்கள்மீது வழக்கு போடும் அதிகாரம் தொழிலாளர்களிடத்தில் இல்லை. சர்க்கார்தான் வழக்கு போட வேண்டும். அப்படி இருப்பதால், அரசாங்கத்திற்குப் பொறுப்புகள் அதிகமாகிவிட்டன. அதனால், இந்த மாதிரிச் சட்டங்களை அடிக்கடி கொண்டு வர வேண்டியிருக்கிறது. இதிலே கன்ஸ்டிரக்ஷன் ஒர்க்கர்ஸ் எல்லாம் விடுபட்டிருக்கிறது. மேலும் சிலரை எக்ஸ்சம்ப்ட் பண்ணலாம் என்று இருக்கிறது. இன்டஸ்ட்ரியல் எஸ்டாபிலிஷ் மென்ட்டுக்கும், இன்டஸ்ட்ரீசுக்கும் விதி விலக்கு கொடுக்கலாம். நமக்கு அந்த அதிகாரம் இருக்கலாம் என்றாலும், அதனால் நமக்கே நிர்ப்பந்தம் வரலாம். அவர்கள் அதை நினைத்துக்கொண்டே, நம்மை நிர்ப்பந்தப்படுத்துவார்கள். அப்படி உருவாகும் நிலைமை இருக்கிறது. அதனால் எக்ஸ்சம்ப்ட் பண்ண லாமா என்பதை சிந்திக்க வேண்டும்.

அடுத்து, இன்ஸ்பெக்டர்களுக்கு அதிகாரம் ஒன்றுமில்லை. இன்ஸ்பெக்டர் ஆஃப் பேக்டரீஸ், டெபுடி சீப் இன்ஸ்பெக்டர் ஆஃப் பேக்டரீஸ், டி.சி.எல். இவர்கள்தான் பண்ணலாம். இவர்கள் இன்ஸ்பெக்ட் பண்ணி, எப்போதாவது கேஸ் போட்டதாகத் தகவல் இருந்தால், அதைச் சொன்னால் நன்றி உடையவனாக இருப்பேன். சில பேக்டரிகள் மேல் வழக்கு போட்டிருக் கிறார்கள் என்பதைத் தெரிவித்து கொண்டால், எங்களுக்கு ஆறுதலாக இருக்கும்.

அதோடு, என்ன மொழியிலே பட்டியல் வெளியிட வேண்டுமென்று இருக் கிறது. தொழிலாளர்கள் 450 நாட்கள் வேலை பார்த்தால், பட்டியல் வெளியிட வேண்டும். எந்த மொழியில் என்றால், அதைத் தமிழில் வெளியிட வேண்டுமென்று சொன்னால், தவறில்லை. தமிழ் ஆர் இங்கிலீஷ் என்றால், மேனேஜ்மென்ட் ஆங்கிலத்தில்தான் போடுவார்கள். அப்போதுதான் தொழி லாளர்கள் படிக்காமல் போய்விடுவார்கள். ஷோ காஸ் நோட்டீஸ் ஆங்கிலத்தில் தான் கொடுக்கப்படுகிறது. ஏனென்றால் தொழிலாளர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. இப்படி தொழிலாளர்களுக்காக வரும் சட்டங்களில் தமிழ் ஆர்



இங்கிலீஷ் என்று போடாமல், தமிழ் என்றே போடுங்கள். அப்படிப் போடுவதற்கு முடியாமல் ஏதாவது இக்கட்டான நிலைமை இருந்தால், 'அன்ட் இங்கிலீஷ்' என்று போடலாம். அங்கே நடைமுறையிலே பார்க்கி றோம். இதனால் பல தொழிலாளர்கள் எங்களை மாதிரி ஆட்களைத் தொழிற் சங்கத் தலைவர்களாக வைக்கிறார்கள். வெளியார்கள் தலைவர்க ளாக வர வேண்டாமென்று சொல்கிறோம். ஆனால் வெளியார் தலைவராக வரும் நிர்ப்பந்தத்தைக் கொண்டு வருகிறார்கள். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், தமிழில் இருந்தால்தான் நல்லது. அதைக் கொண்டுவர வேண்டும்.

'கண்டினுவஸ் சர்வீஸ்' என்பதிலே புதிதாக எதுவும் கொண்டு வரவில்லை. கண்டினுவஸ் சர்வீஸ் என்ன என்பதை இன்டஸ்டிரியல் டிஸ்பியூட் ஆக்டில் போட்டிருக்கிறார்கள். அதை அப்படியே போட்டிருக்கிறோம். அதை அமுல்படுத்துவதில் திறமை இருக்க வேண்டும். 6 மாதங்களில் 90 நாட்கள் வேலை பார்த்தால் 'ரெகுலரைஸ்' பண்ணலாம். சுரங்கத்தில் 12 மாதங்களில் 190 நாட்கள் வேலை செய்தால் போதுமென்று இருக்கிறது. அந்தச் சட்டத்தை அமுல்படுத்தாத காரணத்தால், இன்றைக்கு பதிலியாக இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்த அமைப்பு முறையிலே பல மாறுதல்கள் தேவைப் படுகின்றன. அதற்கு அதிகமாக இன்ஸ்பெக்டர்களை நியமிக்க வேண்டும். அவர்கள் சுயேச்சையாகச் செயல்படும் அதிகாரம் இருக்க வேண்டும். அவர்கள் மறுபடியும் டி. சி. எல். இடம் போக வேண்டும், டெபுடி சீப் இன்ஸ்பெக்டரை எதிர்பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், அவர்கள் பயப்படுவார்கள். எனவே நடைமுறையிலே இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதிலே சிக்கல் இருக்கிறதென்பதை அமைச்சரவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 12-30)

அதிலே 'கன்டினியூவஸ் சர்வீஸ்' வராமல் இருப்பதற்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து நிர்வாகம் தப்பான காரியங்களில் ஈடுபடுகிறது. அதுபோல் மூன்று மாதம் ஆனவுடன் பிரித்து விட்டு விட்டு மறுபடியும் வேறு ஆட்களைப் போடக் கூடிய வகையில் எல்லாம் காரியங் களைச் செய்கிறார்கள். இதுபற்றி சட்டம் கொண்டுவரப்பட்டபோது, 'ஒன்டர்புல் ஆக்ட்' என்றெல்லாம் கூட நம்முடைய அவையிலே பேசியிருக்கி

றார்கள். ஒன்டர்புல் ஆக்டாக இருக்கிறது என்று நாம் பேசுவதை விட அது பிராக்டிக்கலாக தொழிலாளர்களுக்கு நல்லதா என்று பார்த்து சட்டங்களைப் போட வேண்டும். ஏற்கெனவே தொழிலாளர்களின் நன்மைக்காக பல சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அவை எல்லாம் நடைமுறையில் நல்ல முறையில் பின்பற்றப்படுகின்றனவா என்று பார்க்க வேண்டும். இன்றைக்கு தொழிலாளர்கள் வேலை பார்ப்பதையே நிர்வாகத்தினர் பட்டியலில் காட்டாமல் ஒளித்து வைக்கிறார்கள். அப்படிப்பட்ட நிறுவனங்களையெல்லாம் திடீரென்று சென்று கண்டுபிடிக்க வேண்டும். மேலும் இம்மாதிரி சட்டம் கொண்டு வரும் போது, என்றைக்கு கெசட்டில் வருகிறதோ அன்று முதல் நடைமுறைக்கு வருகிறது என்று அறிவித்து விடுவதால், நிர்வாகத்தினர் அதற்கு முன்பே தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள். நிர்வாகத்தினர் எப்போதுமே தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைக்க வேண்டும், ஆட்களைக் குறைக்க வேண்டும், தன் நலனை மேம்படுத்த வேண்டும், தொழிலாளர்களை ஏமாற்றி தில்லுமுல்லு பண்ண வேண்டும் என்கிற முறையில் செயல்படுகின்ற தேச பக்தர்களாக இருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய தொழிலாளர் நலத் துறை மிகவும் நல்லமுறையில் இயங்குகிறது. அதற்கு உதாரணமாக அண்மையில் நான் இதே அவையில் தொழிலாளர்கள் சம்பந்தமாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருந்தேன். தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையை வசூல் செய்து கொடுக்காமல் இருந்தார்கள். 'தினகரன்' பத்திரிகையில் வேலை பார்த்து அந்தத் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். நான் இதுபற்றி தீர்மானம் கொடுத்தவுடன் இன்றைக்கு தொழிலாளர் நல ஆணையாளர், சென்னை மாவட்ட ஆட்சியர் இவர்கள் எல்லாம் சேர்ந்து வசூல் செய்திருக்கிறார்கள். இதிலிருந்து இன்றைக்கு இந்தத் துறை எப்படி நல்லமுறையில் இயங்குகிறது என்று நாம் அறிந்துகொள்ள முடிகிறது. இம்மாதிரி பிரச்சினைகளில் சாதாரணமாக கலெக்டருக்குப் போய், அங்கிருந்து தாசில்தாருக்குப் போய், தாசில்தார் ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரை அனுப்பி. அங்கே போய் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் 'தெரியாமல் வந்துவிட்டேன்' என்று சொல்லிக்கொண்டு திரும்புகின்ற நிலைமை இனிமேலும் வரக்கூடாது. 'என்போர்ஸ்மென்ட்' என்று வரும்போது அரசாங்கம் போடுகின்ற சட்டங்கள் நல்லமுறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இன்றைக்கு இம்மாதிரி பிரச்சினைகள் வருகின்றபோது, நியாயமானவற்றைச் செய்ய மாட்டேன் ஹைக்கோர்ட்டுக்கு வந்து, அங்கிருந்து வருகின்ற தீர்ப்புபற்றி ஒவ்வொரு



பத்திரிகையிலும் ஒவ்வொரு விதமாக எழுதுகிறார்கள். ஒரு பத்திரிகையில் சட்டம் செல்லும் என்று எழுதுகிறார்கள். இன்னொரு பத்திரிகையில் சட்டம் செல்லாது என்று எழுதுகிறார்கள். அப்படி எழுதும்போது, சட்டம் அடிபட்டுப் போய்விட்டது என்று எழுதுகிறார்கள். ஆனால் உண்மை நிலைமையை நாம் பார்த்தால், சட்டம் அடிபட்டுப் போயிருக்காது, சட்டத்திலுள்ள சில அம்சங்கள் தான் அடிபட்டிருக்கும்.

இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே அமுல்படுத்துகின்ற அளவுக்கு பல சட்டங்களை பொதுத் துறையிலே நடைமுறைப்படுத்துவதில்லை என்று சொல்கிறார்கள். பொதுத் துறை என்பது மாதிரியாக இருக்க வேண்டும். பொதுத் துறை என்பது ஓர் அரசு நிறுவனம் என்கிற வகையில் நாமே முன் உதாரணமாக இருந்து, நாம் போட்ட சட்டத்தை மதிக்கவில்லையென்றால், யார் மதிப்பார்கள்? உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். டிட்கோவில் 6 கடைநிலை ஊழியர்களை 2½ வருடங்களுக்கு முன்பு எடுத்தார்கள். அப்படி எடுத்தவர்களுக்கு 2½ வருடமாக தினசரி 7 ரூபாய் விதம் ஊதியம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்களுக்கு உள்ளமாதிரி விடு போன்ற எதுவும் இல்லாத நிலையில் ரொம்ப கேட்டதற்குப் பிறகு, 11 ரூபாயாக ஊதியத்தை உயர்த்தியிருக்கிறார்கள்.

கங்கப்பா பேப்பர் மில்லில் நடைபெற்றது நமக்கு எல்லோருக்கும் தெரியும். அங்கே 8 கோடி ரூபாய் ஒன்றும் இல்லாமல் போய்விட்டது. இப்படிப்பட்ட நிலையில் பொதுத் துறை நிறுவனங்களின் அதிகாரிகளை எல்லாம் அழைத்து, ஒருங்கிணைப்பு என்கிற முறையில் அரசாங்கத்தின் சட்டங்களை அவர்கள் பின்பற்ற வேண்டுமென்பதற்காக ஆவன செய்வதாக இங்கே சொல்லியிருந்தார்கள். அதை விரைவில் செய்ய வேண்டும். சில நேரங்களில் அரசின் ஆணைகளை பொதுத் துறையினர் மதிப்பதே இல்லை. நம்முடைய தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளைப் பொறுத்தவரையில், அதிகாரமில்லாத அதிகாரிகளாக அவர்கள் இருக்கிறார்கள். அந்த வகையில் எதிர்காலத்தில் உள்ளபடியே தொழிலாளர்களின் நலனுக்காக அதிக அதிகாரங்களை உள்ளடக்கிய சட்டங்கள் வருமென்று நம்பி, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற நல்லுணர்வோடு கொண்டுவரப்பட்டிருக்கும் தொழில் நிறுவனங்கள், தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல், திருத்தச் சட்டமுன்வடிவினை வரவேற்று அமைகிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ்: மாற்றுத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் தொழிலாளர்களுக்குப் பணி பாதுகாப்பு இல்லாத நிலைமை இருந்து வந்தது. இச்சட்டமுன்வடிவில் 480 நாட்கள் தொடர்ந்து வேலை செய்தால் அப்படிப் பட்ட தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற முறையில் வழிவகை செய்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12.55)

ஆனால் அதே நேரத்தில் மத்திய ஆட்சியில் இருக்கிற நிறுவனங்களில் எல்லாம் 240 நாட்கள் வேலை செய்தால், அவர்களை நிரந்தரமாக்கி விடுகி றார்கள். ரயில்வேயில் கலாசியாக இருக்கும் தொழிலாளர்கள், தொடர்ந்து 240 நாட்கள் வேலை பார்த்தால், அவர்களைப் பணி நிரந்தரம் செய்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் உள்ள தமிழக அரசு ஏனோ அதை 480 நாட்களாகக் கூட்டி, இத்தனை நாட்கள் கழித்தாவது இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருப்பதை, ஒரு விதத்தில் வேதனையோடும், ஒரு விதத்தில் பாராட்டோடும் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, 480 நாட்கள் தொடர்ச்சி யான வேலையில் இருந்தாலும், இன்றைக்கு நிர்வாகத்தில் இருப்பவர்கள், 480 நாட்கள் அவர்களை வேலையில் விட்டுவைப்பதில்லை. அப்படி விட்டு வைக்காத காரணம், அதற்கான அதிகாரிகள் ஒழுங்காகச் சென்று கவனிப்ப தில்லை என்றுதான் கூறப்படுகிறது. அதன்காரணமாக பல இல்லுமுல்லுகள் நடக்க வாய்ப்பு இருக்கிறது. வட்டார இன்ஸ்பெக்டர்கள் தொழிலாளர்களை முதலாளிகள் வேலையில் வைத்திருக்கிறார்களா என்று கண்காணிப்பதில்லை. தொழிலாளர்களுக்கு உள்ள பிரச்சினைகளை அவர்கள் எழுதிக் கொடுத்தால் கூட, சரியான முறையில் அவைகளைக் கவனிப்பதில்லை. நாம் நிறுவனங் களுக்கெல்லாம் உத்தரவு போடுகிறோம். இந்தச் சட்டம் நல்ல சட்டம். ஆனால் இன்றைக்கு அரசில் வேலை செய்கிற என்.எம்.ஆர். என்ற தொழிலாளர்களுக்கு 10 வருடங்கள் தொடர்ந்துவேலை செய்தாலும் அவர்களுக்கு நிரந்தரம் என்பது கிடையாது. நாம் நிறுவனங்களுக்கு அறிவுரை சொல்கிறோம். ஆனால் அதன் படி நாம் நடப்பதில்லை என்ற குறை இருக்கிறது. நம்மிடத்தில் வேலை செய்கிற தொழிலாளர்கள் 10 ஆண்டுக்காலம் பணியாற்றியிருந்தாலும், அவர் களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லையென்று சொல்லி, அவர்களுக்கும் இந்த அரசு நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 10 ஆண்டுகள்



வேலை செய்பவர்கள் எல்லாம் தங்கள் கோரிக்கைகளை பல்வேறு முறையில், மாநாடு போட்டும் கூட, அரசுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய குறைகளையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களை நல்கியிருக்கிறார்கள். குறிப்பாக நான்காண்டுகளுக்கு முன்பு கொண்டுவரப்பட்ட இந்தத் தொழிலாளர் நலச் சட்டம், நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக சில சிக்கல்களை உருவாக்கியது. அந்தச் சிக்கல்களைப் போக்குகிற வகையில் இந்தச் சட்ட முன்வடிவு அவையினுடைய ஒப்புதலுக் காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கப்பு அவர்கள் தெரிவித்ததைப்போல, உயர் நீதிமன்றம் இந்த மூலச் சட்டத்தை முழுவதுமாகத் தவறென்று சொல்லிவிட வில்லை. இந்த மூலச் சட்டத்திலிருக்கிற நான்கு அம்சங்கள் மீது தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து, தீர்ப்பு நல்கினார்கள். அந்த நான்கு அம்சங் களில் இரண்டு அம்சங்களுக்கு இந்தச் சட்ட முன்வடிவின் வாயிலாக திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பாக்கி இரண்டு அம்சங்களைப் பொறுத்தவரை யில், உச்ச நீதிமன்றத்திற்கு அதை எடுத்துச் சென்று நாம் நீதி பெற முடிவு செய்து, இன்றைக்கு இந்த இரண்டு அம்சங்களுக்காக இந்தச் சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

முதல் அம்சமாக, 'தனி தொடர்ச்சி' (கன்டினுவேஷன் ஆப் சர்வீஸ்) என் பதில் 480 நாட்களில் 240 நாட்களை எப்படிக் கணக்கிட வேண்டுமென்பதை பிரிவு 3-ல் 'எக்ஸ்பிளனேஷன்' பகுதியில் கொடுக்கப்பட்டு, சற்று விளக்கமாக அளிக்க வேண்டுமென்று நீதிமன்றம் கட்டளையிட்ட காரணத்தால், இந்தச் சட்ட முன்வடிவில் தெளிவாக 240 நாட்களை எப்படிக் கணக்கிடுவது என்பதில் திட்டவட்டமாக, தெளிவாக, சந்தேகம் வராத வகையில், அந்த 'எக்ஸ்பிளனேஷன்' தெளிவுபடுத்தப்பட்டு, அது ஒரு அம்சமாக சட்ட முன்வடிவில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இரண்டாவது மூலச் சட்டத்தில், 'லா' என்று இருப்பதில், **Award, agreement settlement,** போன்ற காரியங்கள் நடக்கிறபோது, தொழிலாளர்களுக்குப் பலன் கிடைக்காத ஒரு தோற்றம் இருக்கிற காரணத்தால், அதைப் போக்குகிற வகையில், 'லா' என்பதோடு, **Award, Agreement, Settlement,** இவைகளையும் உள்ளடக்கி, இன்றைக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த இரண்டு திருத்தங்களும் பேரவைக்கு ஒப்புதலுக்காக வந்திருக்கின்றன.

(பிற்பகல் 12-40)

இதில் முக்கிய இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் கூறியதைப்போல, பல்லாயிரக் கணக்கானவர்கள் பல நிறுவனங்களிலும், தொழிற்சாலைகளிலும் இன்றைக்கு அப்ரண்டிஸ்களாக, பயிற்சியாளர்களாக இருக்கிறார்கள். ஒரு தொழிற்சாலையில் ஆயிரம் பேர் நிரந்தர ஊழியர்களாக இருக்கிறார்கள், ஐந்நூறு பேர் தற்காலிக ஊழியர்களாக, 'பதிலி' தொழிலாளர்களாக இருக்கிறார்கள். இவர்கள் பயிற்சி பெறுபவர்கள் என்கின்ற வகையில் இருந்து வருகிறார்கள். நிரந்தரத் தொழிலாளர்களுக்குரிய எந்தச் சட்டப் பாதுகாப்பும் உரிமையும் இவர்களுக்குக் கிடைக்காத ஒரு பாதகமான சூழல் இன்றைக்கு இருக்கிற காரணத்தினாலே, அந்த 'பதிலி' தொழிலாளர்கள், அப்ரண்டிஸ்கள் ஆகியவர்களுக்கும் இந்தச் சட்டம் பயன்பட வேண்டுமென்று நாம் சட்டம் கொண்டு வந்தோம். ஆனால் அதனை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களைத் தொழிலாளிகளாக ஏற்றுக்கொள்ள மாட்டோம், அவர்கள் "தொழிலாளர்கள்" ஆக மாட்டார்கள் என்று தீர்ப்பளித்திருக்கிறது. அவர்களும் தொழிலாளர்கள்தான், அவர்களுக்கும் இந்தச் சட்டத்தின் பலன் கிடைக்க வேண்டுமென்பதை நிலைநிறுத்துவதற்காக உச்ச நீதி மன்றத்திற்கும் இதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு எடுத்துச் செல்ல விருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு தொழிலாளியை நீக்கிவிட்டு தொண்ணூறு நாட்களுக்குள் ஒரு தொழிலாளியை நியமிக்க வேண்டியிருந்தால், நீக்கப்பட்ட தொழிலாளிக்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று மூலச் சட்டத்தில் கொண்டு வந்தோம். ஆனால் உயர் நீதிமன்றம், ஒருவரை நீக்குவதற்கோ அல்லது சேர்ப்பதற்கோ, 90 நாட்களுக்குள்கூட வேறு யாரையாவது சேர்ப்பதற்கோ நிர்வாகத்



திற்கு ஜீவாதார உரிமை உண்டு, அதை யாரும் தடுக்க முடியாது என்று தீர்ப்பளித்திருக்கிறது. ஆனால் இந்த அரசின் நிலைமை 90 நாட்களுக்குள் புதிதாக ஒருவரை நியமித்தால், அங்கே வேலை வாய்ப்பு இருக்கிறதென்று பொருள். எனவேதான் வேலையிலிருந்து நீக்கப்பட்டவருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும், அதுதான் நியாயம் என்று கருதுகிறது. அந்த அடிப்படையிலும் உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லவிருக்கிறோம். ஆக இந்த இரண்டு கருத்துக்களையும் உச்ச நீதி மன்றத்தில் சொல்லி நீதி பெறவும் மற்றும் நான் தொடக்கத்திலே சொன்ன அந்த இரண்டு கருத்துக்களுக்கும் சட்ட முன்வடிவைப் பெறவும் இன்றைக்கு தங்கள் முன் நின்று கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அதில் ஒன்று 'என்ஃபோர்ஸ்மென்ட்'. ஒரு சட்டத்தை எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவருகிறோமோ, அந்தச் சட்டத்தினுடைய நோக்கம் நிறைவேற வேண்டுமென்று சொன்னார்கள். அதில் நடைமுறைச் சிக்கல்கள் நிறைய இருக்கின்றன. அதைச் செயல்படுத்தக்கூடிய இயந்திரம் (மிஷினரி) எல்லாம். துரிதமாக இருக்க வேண்டும், விழிப்பாக இருக்க வேண்டும், தூய்மையாக இருக்க வேண்டும், திறமையாக கண்காணிக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். அவைகளையும் கணக்கில்கொண்டு இச் சட்டத்தை தொழிலாளிக்கு நலன் பயக்கின்ற வகையில் அமல்படுத்துவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னது போல, இன்றைக்குப் பொது நிறுவனங்களில் தற்காலிகத் தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்காமல் மெத்தனமாக இருக்கிறார்கள். சுணக்கமாக இருக்கிறார்கள். அந்தக் குறைகளையும் போக்க வேண்டும் என்று சொன்னார்கள். அவைகளையும் மனதில்கொண்டு எப்படி தனியார் நிறுவனங்களிலே தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக்கச் சட்டம் கொண்டு வந்து அமல்படுத்துவதில் உறுதியாக இருக்கிறோமோ அதைப் போல பொது நிறுவனங்களிலும் நிச்சயமாக வரவேண்டுமென்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகளை மனதில் கொண்டு அவற்றையும் செயலாற்றுவோம் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு மிகவும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை--

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1985) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1985) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 12-45)



(4) 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல்—தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1985).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகர்—தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

அதோடு, சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1985-ஐப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழிவு செய்யப்பட்ட அந்தச் சட்டத்தில் பிரிவு 15-ல், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒரு திருத்தத்தைச் சொன்னார்கள்.

"No Police officer 'not' என்ற வார்த்தை It is a patent clerical error The whole Scheme of the Bill has been gone into".

என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கூறிய அந்தத் திருத்தம் சரியானது என நான் கருதுகிறேன். அந்த பேடன்ட் கிளரிக்கல் எரரை மாற்றம் செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இந்த நுண்ணிய திருத்தத்தைச் சுட்டிக் காட்டியதற்கு அவருக்கு அரசின் சார்பிலே பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகர்—தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

---

@ 304-305 ஆம் பக்கங்களில் இணைப்பு VI -ஆக அச்சிடப் பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாற்றுத் தலைவர் அவர்களே, 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல், தமிழ் நாடு 1859 ஆம் ஆண்டு மாவட்ட காவல் சட்டம் ஆகியவற்றை மேலும் திருத்தும் இந்தச் சட்டமுன் வடிவின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு நான் முனைகிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பற்றி ஏடுகளிலே, செய்திகளை வெளியிட்டிருப்பதை நான் பார்த்தேன். இதற்கு சென்னை மாநகரக் காவல் சட்டம் என்று கூட அவர்கள் சொல்லவில்லை. ஊர் கடத்தும் சட்டமென்று அவர்கள் செய்திகளை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இந்தச் சட்ட முன்வடிவு நாட்டிலே பிறந்த மகனையே ஊரைவிட்டு கடத்தக்கூடிய அளவுக்கு ஒரு புதுமாதிரியான சட்டமுன்வடிவாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தலைவர் அவர்களே, நான் உங்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். போலீஸ் ஆக்ட் 1888-வது ஆண்டிலே போடப்பட்டது—அதாவது வெள்ளைக்காரன் நம்முடைய நாட்டிலே ஆட்சி செய்துகொண்டிருந்தபோது, நம்மை அடிமைப் படுத்துவதற்கு நம்மை நாடு கடத்துவதற்கு அந்தநேரத்திலே அந்தமானுக்கு அனுப்பினார்கள். இப்போது எந்தமானுக்கு அனுப்பப் போகிறார்களோ தெரியவில்லை—அந்தச் சட்டத்தை இன்னும் வைத்துக்கொண்டு அதிலே திருத்தத்தைக் கொண்டுவந்திருப்பது அந்தச் சட்டத்தைவிட மிகக் கடுமை யாக இருக்கிறது. ஏற்கெனவே இருந்த அந்தச் சட்டத்தைவிட மிகக் கடுமையாக மாற்றி ஒரு காட்டுமிராண்டித்தனமான சட்டமாகக்கூட இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். அந்த அளவுக்கு மிக்க கடுமையாகக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை வருத்தத்தோடு சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். கள்ளக்கடத்தல்காரர்களையோ, வேறு வகையிலே சமுதாய விரோதச் செயல்களிலே ஈடுபட்டவர்களையோ கண்டிப்பதையோ தண்டிப்பதையோ நான் குறை கூறவில்லை. ஆனால் கண்டிக்கவும், தண்டிக்கவும் ஏற்கெனவே சட்டம் இருக்கும்போது, காஃபி போஸா போன்ற சட்டம் இருக்கும்போது, அந்தச் சட்டத்தை இன்னும் தீவிரமாகச் செய்ய வேண்டுமென்று சொன்னால், தண்டனையை அதிகப் படுத்தவோ அல்லது மாற்றத்தையோ செய்யாமல், ஊரைவிட்டே நாட்டை விட்டே கடத்துவது போல ஒரு நடவடிக்கை எடுப்பது என்றால், இது ஒரு ஜனநாயக நாடா, நாம் விடுதலை பெற்ற நாட்டிலே இருக்கிறோமா, சுதந்திர



உணர்வோடு நம்மாலே பேசமுடிகிறதா என்றெல்லாம் எண்ணுகிற போது இது ஒரு ஜனநாயக நாடல்ல, இது ஒரு சமயம் ஹிட்லர் ஆட்சியாக மாறிவிட்டதோ, முசோலினி ஆட்சியாக மாறிவிட்டதோ அல்லது இடிஅமீன் ஆட்சியாக மாறிவிட்டதோ என்றெல்லாம் கூட எண்ணிப் பார்க்கக்கூடிய அளவுக்கு இன்றைக்கு இதிலே சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன . . . .

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது நாட்டை விட்டு கடத்துதல் என்றெல்லாம் சொன்னார்கள். இது சென்னையி லிருந்து செங்கல்பட்டுக்கு என்றுதான் தெரிகிறது. அதனால் இவர் இடிஅமீன் என்றெல்லாம் நினைத்துக்கொண்டு பேசுகிறாரே, எங்கே போனார், எங்கே வந்தார் என்று தெரியவில்லை. அதனாலே சட்டமுன்வடிவைப் படித்துச் சொன்னால் எங்களுக்கும் வசதியாக இருக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: சட்டமுன்வடிவை அவரும் படிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையைவிட்டு மட்டுமல்ல. செங்கல் பட்டை விட்டுக்கூட, அதற்கு அப்பாலும் வந்திருக்கிறது . . . .

டாக்டர் இரா. சனார்த்தனம்: வெளிநாடு இல்லை என்பதைத்தான் சொல்கிறேன். அதனால் இடிஅமீன் நினைப்பதுபோல இவரும் ஏதாவது நினைத்துக் கொண்டிருக்கிறாரோ என்றுதான் எனக்குச் சந்தேகம் இருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அப்படிப்பட்ட நடவடிக்கை போல் இருக்கிறது என்று சொல்கிறேன். ஊர் கடத்துகிறோம் என்று கொண்டு வருகிறார்களே, நாளைக்கு நாடு கடத்தும் நாடு தென்பட்டால் அப்படிக் கொண்டுவருவார்களோ என்ற ஐயப்பட்டால் சொன்னேன். இந்தச் சட்டத் திலே ஊர் கடத்தக்கூடிய கமிஷனருக்கே அந்த அதிகாரத்தை வழங்கி, அதாவது குற்றவாளி என்று சொல்லக்கூடியவருக்கே நீதிபதி ஸ்தானத்தையும் தந்து, அவரே எழுத்து மூலமாகத் தந்தால் போதும், அவர்களை அனுப்பி விடலாமென்கிற வகையிலே சட்டமுன்வடிவு கொண்டு வந்திருப்பது எந்த விதத்திலே நியாயம் என்று நான் கேட்க விரும்புகிறேன். ஒரு குற்றவாளி என்று அவர் சொல்லி, அதைப்பற்றித் தீர்ப்பு அளிப்பதற்கு வேறு ஒரு குழுவையாவது நியமித்திருந்தால் நன்றாக இருக்கும். போலீஸ்கமிஷனரே செய்யலாம் ஒரு முறை தவறு செய்தவரே அடுத்த முறை செய்வார் என்று நம்பி ஊர் கடத்தலாம். ஆனால் முதல் முறை தவறு செய்தவர்தான் செய் தார் என்று கூட சொல்ல முடியாது. ஏனெனில் இந்தச் சட்டம் அரசியல் ரீதியாக எதிர்க் கட்சிகளை ஒடுக்குவதற்கோ அல்லது அப்படியெல்லாம் குற்றம்

சுமத்தி களங்கப்படுத்துவதற்கோ வாய்ப்பு ஏற்படுத்தக்கூடிய சட்டம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு

(பிற்பகல் 12-50)

ஏற்கெனவே ஆதாரங்கள் இருக்கின்றன. சிலைத் திருட்டில் மாட்டி வைக்கப்பட்ட பெரிய மனிதர்களைத் தெரியும். மதுவிலக்கு வழக்கில் மதுவை வைத்துக் கைது செய்த கதைகளும் தெரியும். அவர்களின் பெயர்களையெல்லாம் நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. அப்படிப் பழிவாங்கப்பட்டவர்களின் வரலாறு இந்த நாட்டில் இருக்கிறது. எனவேதான் இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் பழிவாங்குகிற நடவடிக்கை ஏற்பாடு செய்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் எனக்கு வருகிறது. அப்படிப்பட்ட சந்தேகத்தை இங்கே வெளிப்படுத்துவது என்னுடைய கடமை. சந்தேகப்படத் தேவையில்லை என்று சொன்னால், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் நீங்கள் அப்படி ஏற்கெனவே பயன்படுத்தியிருப்பதால்தான், அந்தச் சந்தேகம் எனக்கு வருகிறது. எதிர்க் கட்சியில் இடம் பெற்றிருப்பவர்களை, எதிர்க் கட்சிகளின் மேடையில் ஏறிப் பேசும் பேச்சாளர்களை எல்லாம் நாடுகடத்துகிற முயற்சிக்காக இது கொண்டுவரப்பட்டிருக்கிறதோ என்ற சந்தேகம் எனக்கு வருகிறது. எதிர்க் கட்சிகளுக்காகத் தொண்டர்களாக வேலை செய்பவர்களை, ஆதரவாக இருப்பவர்களை மற்றும் இப்படிப்பட்டவர்களையெல்லாம் இங்கிருந்து வெளியேற்றுவதற்கும், மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு உறுதுணையாக இருக்கும் தொழில் அதிபர்களின் மீது குற்றம்சாட்டி களங்கப்படுத்துவதற்கும், வியாபாரிகளைக் களங்கப்படுத்துவதற்கும், இப்படிப்பட்ட முறையில் திட்டமிட்டு நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்களோ என்று சந்தேகப்படுகிறேன். காரணம் இந்த அரசின் கடந்த கால நடவடிக்கைககள் அப்படி இருக்கின்றன.

அதுமட்டுமல்ல இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில், அரசுத் தரப்பில் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. அல்லது மத்திய அரசு அளித்த 'டைரெக்ஷன்' அடிப்படையில் இதைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று வெளியே அரசு சார்பில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தேன். அப்படியென்றால் மத்திய அரசு சொல்வதையெல்லாம் வேதவாக்காகக் கொள்ள வேண்டுமா என்று நான் கேட்க விரும்புகிறேன். மத்திய அரசு இந்தியைத் திணிக்க வேண்டும் என்று கருதுகிறது. நாம் அதை ஏற்றுக்கொள்கிறோமா? மத்திய அரசு சென்ட்ரல் ஸ்கூல்கள் என்று தமிழகத்தில் கொண்டு வந்து நமது பண்பாடு, நமது கலாச்சாரம் அனைத்தையும் சிதைக்க விரும்புகிறது. நாம் அதை ஏற்றுக்



கொள்கிறோமா? மத்திய அரசு நெருக்கடி நிலையை தேவையானால் அமுல்படுத்தும் என்று பாரதப் பிரதமர் அவர்களே சொல்லியிருக்கிறார் என்பதற்காக நாம் அதை ஏற்றுக்கொள்ள முடியுமா? மத்திய அரசில் இருப்பவர்கள் இந்த நாடு முழுவதும் காங்கிரஸ் ஆட்சிதான் நடக்க வேண்டும் என்று பேசுகிறார்கள். மத்திய அரசில் இருப்பவர்கள் இப்படிச் சொல்கிறார்கள் என்பதற்காக நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா? எனவே "மத்திய அரசு சொல்லுகிறது, ஆகவே நாங்கள் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம்" என்று சொல்லுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஒரு ஜனநாயக விரோதமான தடைச் சட்டம். உண்ணாவிரதத்திற்கே தடை விதித்தவர்கள் நீங்கள். 'நோ ஓர்க், நோ பே' என்று சொன்னவர்கள் நீங்கள். எனவே இந்தச் சட்டத்தைப் பார்க்கும்போது, இது ஒரு ஜனநாயக நாடுதானா என்று எண்ண வேண்டியிருக்கிறது. காந்தியடிகள் உருவாக்கித் தந்த அந்தப் போராட்டத்திற்குக் கூடதடை விதித்தவர்கள் நீங்கள் என்பதால் நீங்கள் கொண்டு வருகிற இந்தச் சட்டம் எந்த அளவுக்கு ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாக அமையும் என்று எண்ண வேண்டியிருக்கிறது. "பொருளாதாரத்தைச் சீர் குலைப்பவர்கள் இவர்கள். ஆகவே நடவடிக்கை எடுக்கிறோம். இவர்கள் வன்முறையாளர்கள் ஆகவே நடவடிக்கை எடுக்கிறோம்." என்கிறீர்கள். அப்படியென்றால் இந்த நாட்டில் கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள், கள்ள மார்க்கெட்காரர்கள் இல்லையா? அவர்களெல்லாம் பொருளாதாரக் குற்றம் புரிபவர்கள் அல்லவா? லஞ்சம் பெற்று கோடீஸ்வரரானவர்கள் இங்கே இல்லையா? அவர்கள் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கவில்லையா இவர்களையெல்லாம் நாடுகடத்தாத போது ஒரு காலத்தில் ஒருவர் கடத்தல் செய்தார், இனி மீண்டும் செய்வார் என்று எதிர்பார்த்து, அவருக்கு இந்தச் சட்டத்தின் அடிப்படையில் தண்டனை கொடுப்பது என்பது எப்படி நியாயமாக இருக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். ஒருமுறை தவறு செய்தவன் மீண்டும் திருந்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைப்பற்றிக் கூட எண்ணிப் பார்க்காமல், இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவும் எந்த நேரத்தில் இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், மாநகராட்சித் தேர்தல் விரைவில் வர இருக்கிறது. எனவே அந்தத் தேர்தலை மனதில் கொண்டு, அந்தத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு எதிராகப் பணியாற்றக் கூடியவர்கள் அனைவரையும் ஊரை விட்டே விரட்ட வேண்டும் என்று கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் குற்றஞ் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல,

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஜூலை 19

கடலோரப் பகுதி என்று இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது கடலோரப் பகுதியில் கடத்தல் செய்கிறார்கள் என்றால், அது இப்போது சென்னைக்கு மட்டும் இருந்தாலும்கூட, பின்னாலே இது தமிழ் நாடு முழுவதற்கும் விஸ்தரிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்றுதான் நான் நினைக்கிறேன். எனவே இப்போது சென்னைக்கு மட்டும் இந்தச் சட்டம் என்றாலும், தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூர் இருக்கிறது. அதைப்போலவே கடலோரப் பகுதியாக தஞ்சை மாவட்டத்தில் நாகை இருக்கிறது; அதைப்போல் வேதாரண்யம் இருக்கிறது. கிழக்கரை கடற்கரை ஓரப் பகுதியாக முகவை மாவட்டத்தில் இருக்கிறது. அதைப் போலவே கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி கடலோரப் பகுதி இருக்கிறது. எனவே சென்னை மட்டுமல்லாமல், தென்னாற்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டம், முகவை மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள நீங்கள் சந்தேகப்படுகிற ஆட்களையெல்லாம் இவர்கள் மீண்டும் குற்றம் செய்வார்கள் என்று சொல்லி, அந்தந்த மாவட்டங்களை விட்டே விரட்டுகிற வகையில் வேறு மாவட்டங்களுக்குக் கொண்டு போய்க் குடியேற்றுகிற முறையில், ஸ்ரீலங்காவில் சிங்களவர்களைத் தமிழர்கள் வாழ்கிற பகுதிகளில் குடியேற்றியதைப்போல் கொண்டு வந்து குடியேற்றி, அங்கெல்லாம் குற்றங்கள் அதிகரிக்க திட்டமிடுகிறீர்களோ என்று தோன்று

(பிற்பகல் 12-55)

கிறது. அங்கே இருக்கிற மக்கள் நிம்மதியாக வாழ வேண்டாம் என்று கருதி இதைக் கொண்டு ஊரைவிட்டே துரத்துவதற்கு ஏற்கெனவே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மதுவிலக்குச் சட்டத்தை மீறுகிறவர்களை நாடு கடத்துவோம் என்று இறுதியாகச் சட்டம் கொண்டு வந்தார்கள். பிறகு அதை வாபஸ் வாங்கினார்கள். அதைப்போலவே பீகாரைவிட மிகக் கடுமையான பத்திரிக்கை தணிக்கைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதையும் திரும்பப் பெற்றார்கள். ஆகவே இதையும் அறிமுகப் படுத்தும்போதே திரும்பப் பெற்றுவிடுங்கள், இது தேவையில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்தச் சட்டம் ஜனநாயகத்திற்குப் புறம்பானது, விடுதலை பெற்ற நாட்டில் இருக்கக் கூடாத சட்டம், மத்திய அரசு சொன்னாலும் நமக்கு வேண்டாத சட்டம், கடற்கரையில் உள்ள குற்றவாளிகளை வேறு பகுதிகளில் குடியேற்றி மற்ற பகுதி மக்களையும் கெடுக்கும் சட்டம், இப்படிப்பட்ட சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என்று வற்புறுத்தி அமைகிறேன்.



1985 ஜூலை 19]

திரு. க. சுப்பு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குச் சந்தேகம் வேண்டியதில்லை. இதுவரை மத்திய சர்க்கார் சொன்னதையெல்லாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோமா, அதைப் போலவே இதையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று அவரே சொன்னார். அதற்கு உதாரணமாக மொழிக் கொள்கை இல்லையா என்று கேட்டார். மத்திய சர்க்கார் சொல்லுவதையெல்லாம் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கருதும்போது, பிறகு எதற்காக அவர் சந்தேகப்படுகிறார்? மத்திய சர்க்கார் சொல்லுவதையெல்லாம் ஏற்றுக்கொள்வதில்லை என்பதற்கு உதாரணமாக மொழிக்கொள்கை இருக்கிறது என்றால், இதை நாங்கள் ஏன் கொண்டு வந்திருக்கிறோம் என்றால், இது வேண்டியிருக்கிறது, அதனால் கொண்டு வந்திருக்கிறோம். பயந்து கொண்டு மத்திய சர்க்கார் சொல்வதற்காகக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கோடு கொண்டு வரப்பட்டதல்ல இது. நகராட்சித் தேர்தல் வருகிற இந்த நேரத்தில் எதிர்க் கட்சியினரை ஒடுக்குவதற்காக இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இப்படிப்பட்ட வேட்பாளர்கள்தான் இருப்பார்கள் என்று இப்போது எங்களுக்குத் தெரிகிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பொறுப்பற்ற முறையில் பேசுவதாகக் கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் என்று பொதுவாகக் குறிப்பிட்டு குற்றம் சாட்டக் கூடாது. பொதுவாக ஒரு கட்சியைப்பற்றி குற்றம்சாட்டிச் சொல்லுவது முறையல்ல, கண்ணியமல்ல. உறுப்பினர் திரு. சுப்புவின் பேச்சு எனக்கு வருத்தத்தை அளிக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசும்போது, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவில் என்ன குறை இருக்கிறது, அதனாலே என்ன பாதகம் விளையும் என்பதை எடுத்துச் சொல்ல உரிமை இருக்கிறது. ஆனால் நகராட்சித் தேர்தலை மனதிலே வைத்துக்கொண்டு, வேட்பாளர்களை அல்லது போட்டியிடுபவர்களை வெளியே விரட்ட இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பேசுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர்கள் அப்படித்தான் இருப்பார்களா என்று கேட்கிறார்கள். அவர்கள் சொன்ன கருத்துக்கு பதில் வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சில் வேட்பாளர் என்ற வார்த்தையே வரவில்லை. வேட்பாளர்கள் அப்படித்தான் இருப்பார்களா என்று கேட்கிறார்கள். எதிர்க் கட்சி என்று சொல்லுகிறபோது, எல்லா எதிர்க் கட்சிகளுக்கும் அது பொருந்தும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும் பொருந்தும் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் எதிரியாகக் கருதுகிறார்களா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாற்றுத் தலைவர் அவர்களே, வேறு எந்த உறுப்பினரும் இந்தப் பிரச்சினையில் உள்நோக்கம் கற்பித்து தேர்தலை இணைத்துப் பேசவில்லை. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அப்படிப் பேசியதால் அவருக்குப் பதில் சொல்லுகிறார்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாற்றுத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்றத் தேர்தலில் கட்சி ரூபத்தில் போட்டியிடக் கூடாது என்று இருப்பது இவர்களுக்குத் தெரியாமல் இருக்கிறதா? அப்படி கட்சிரூபத்தில் போட்டியிட முடியாத நேரத்தில் கட்சியை இணைப்பது பொருத்தம் அல்ல.

திரு. க. சுப்பு : கட்சியே கிடையாது என்றாலும் அந்தக் கட்சியின் உறுப்பினர் உள்நோக்கம் கற்பித்துப் பேசியிருக்கிறார்கள். பேரவையிலே பேசியவர்கள் கூட என்ன பேசினார்கள் என்பதை பத்திரிகையில் பார்த்தேன். யாரும் இப்படிப்பட்ட சந்தேகத்தைக் கிளப்பவில்லை. அப்படிக் கிளப்புவது அவர்களுடைய கட்சிக்கே நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கஸ்டம்ஸ் ஆக்ட் என்பது சென்ட்ரல் ஆக்ட், நம்முடைய ஆக்ட் இல்லை. அந்தச் சட்டத்தின்படி கள்ளக்கடத்தல்காரர்களை தண்டிக்கும்போது, அப்படி தண்டிக்கப்பட்டவர்களை அப்புறப்படுத்தும் சட்டம் இங்கே வரும்போது, அது தேர்தலைப் பாதிக்கும் என்றால், ஏதோ ஒரு விதத்தில் அவர்கள் இவர்களுக்கு உதவுகிறார்கள் என்று ஆகிறது அல்லவா?

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கொஞ்சம் உணர்ந்து பேச வேண்டும். இங்கே வந்து எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றால் பிறகு வேறு விவகாரமாகிவிடும்.



திரு. க. சுப்பு : * * * அவர்களுக்கு மட்டும் வேண்டியவர்கள் அல்ல, பல பேருக்கு வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, கள்ளக் கடத்தல்காரர்கள் மீது நடவடிக்கை எடுப்பதிலே எங்களுக்குச் சந்தேகம் இல்லை. கள்ளக்கடத்தல்காரர்கள் பெயரால் எதிர்க் கட்சியினரை ஒடுக்க முயற்சி எடுக்கிறார்கள். கள்ளக்கடத்தல்காரர்கள் எங்களுக்கு வேண்டியவர்கள் இல்லை என்று முதலிலே என்னுடைய முன்னுரையிலேயே சொல்லியிருக்கிறேன். அவர்கள் பெயரில் எதிர்க் கட்சியினரை ஒடுக்க நடவடிக்கை எடுப்பார்களோ என்ற சந்தேகம் வருகிறது என்று நான் சொல்லும்போது, அதற்கு உள்நோக்கம் கற்பித்து உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசுகிறார்கள். அப்படி மற்றவர்களும் பேச முடியும்.

திரு. க. சுப்பு : பேசுங்கள்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : * * * என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுகிறேன். பத்திரிகைகளும் பிரசுரிக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

திரு. க. சுப்பு : இனிமேல் என்ன இருக்கிறது? ரைட். நான் விமர்சனம் செய்வதை, தாக்குதல் செய்வதைத் தப்பாகச் சொல்லவில்லை. இதை பத்திரிகையில் போடவேண்டாம் என்கிறார்கள். நல்ல வேளையாகப் போயிற்று. இதற்கு உள்நோக்கம் கற்பிக்கவேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். அரசாங்கத்தை விமர்சனம் செய்வதுபற்றி எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. நான் ஒரு காரணத்திற்காகச் சொல்கிறேன். அவர்கள் வருத்தப் படுகின்றார்கள். நேற்று பேரவையிலே திராவிட முன்னேற்றக் கழகம்தான் இந்தக் கருத்தை வைத்தது. இந்தத் தேர்தலுக்காக இதைக் கொண்டுவந்திருக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். எனக்கு வருத்தமாக இருக்கின்றது. தேர்லுக்காகக் கொண்டுவருவது என்றால், இந்தச் சட்டத்தையா கொண்டு வரவேண்டும்?

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

கஸ்டம்ஸ்-லே தண்டிக்கப்பட்டவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் சம்பந்தப்பட்ட சட்டம். இந்தச் சட்டத்தைப்பற்றி மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களும்கூட பல நேரங்களிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்தியாவிலே பொருளாதாரக் குற்றங்கள் ரொம்பவும் பெருகிவிடுகின்றன என்று சொல்லியிருக்கின்றார்கள். அதுவும் கடலோரப் பகுதிகளிலே கடத்தல் குற்றங்கள் செய்ய முடியும் என்ற நிலை இருக்கின்றது. வேறு எங்கும் பண்ணுவது இல்லை. அது நடைபெறுகின்றது. அதனாலேதான் சந்தேகப்படுகின்றார்கள். சென்னையிலே இருக்குமா, தூத்துக்குடியிலே இருக்குமா என்று நினைக்கின்றார்கள். எங்கெங்கே துறைமுகம் இருக்கின்றதோ அங்கங்கே இருக்கும். அங்கே சூப்பிரண்ட்டேண்ட் இருந்தால் அவர்களுக்கு அதிகாரம் இருக்கும். இங்கே கமிஷனர் அவர்களுக்கு அதிகாரம் இருக்கின்றது. இதிலேயெல்லாம் நாம் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. நமக்குப் பாதுகாப்பாகத்தான் கொண்டு வரப்படுகிறது. இங்கே சட்டத்தை வைத்துக்கொண்டு ஜனநாயகத்திற்கு விரோதமாக காட்டுமிராண்டித்தனமாக நடக்கின்றவர்களை கவனிக்கத்தான் இந்தச் சட்டம் வருகிறது. இதற்கு முன்னாலே அப்படிச் செய்தது, இதற்குப் பின்னாலே இப்படி செய்யப்படும் என்று சொல்கின்றார்கள். செய்த நேரத்தை விட்டுவிட்டு செய்யாத நேரத்திலே இப்படிச் சொல்கின்றார்கள். இப்படி எல்லாம் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இதனுடைய மூல சட்டம் 1888 ஆம் ஆண்டுச் சட்டம். வெள்ளைக்காரர்கள் காலத்திலே இயற்றப்பட்ட சட்டம். அதற்குத்தான் திருத்தம் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவர்கள் வைத்திருந்ததை விட இது அதிகமான தண்டனையைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறதே என்றுதான் சொல்கிறேன்.

திரு. க. சுப்பு: வெள்ளைக்காரன் நமக்கு வேண்டியவன் தானே. 1888-ல் வெள்ளைக்காரன் காலத்திலே கொண்டுவரப்பட்டது அந்தச் சட்டம். அப்போது நாம் கொண்டுவரவில்லை. இந்த சர்க்கார் கொண்டு வரவில்லை. சென்ட்ரல் பார்லிமெண்ட்தான் கொண்டுவந்திருக்கிறது. அங்கே சட்டம் அப்படிப் போட்டார்கள். 1889-ல் சிடி போலீஸ் ஆக்ட் போட்டிருக்கின்றார்கள். அதற்கு என்ன அர்த்தம் என்றால், முன்னாலே இருந்த அந்த அதிகாரம்தான் இப்போதும் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் நினைக்கின்ற மாதிரி புதிதாக அதிகாரம் எடுத்துக்கொள்ளவில்லை. என்ன அதிகாரம் முன்னாலே இருந்தது என்று சொன்னால் நகரத்திலே இருப்பவர்கள் ஏதாவது வயலன்ஸில் ஈடுபட்டால், மக்களுடைய பாதுகாப்புக்கு, அமைதிக்குக் குந்தகம் ஏற்பட்டால்,



வன்முறைகள் ஏற்பட்டால், அவர்கள் அதில் ஈடுபட்டால், போர்ஸ், வயலன்ஸ் சம்பந்தப்பட்ட குற்றங்கள் செய்தால், அந்தக் குற்றங்கள் இழைக்கின்றவர்களை எல்லாம் அப்புறப்படுத்துகிற அதிகாரம் இந்த போலீஸ் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த அதிகாரம் போலீஸ் அதிகாரிகள், போலீஸ் கமிஷனர் போன்றவர்களுக்கு 'லா அண்ட் ஆர்டர் மெயின்டினன்ஸ்' பண்ண வேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேச்சுக்குப் பேச்சு, போலீஸ் கையிலே கொடுத்திருக்கின்ற அதிகாரத்தை ஒரு பொதுக் குழுவிடம் கொடுக்க வேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன். போலீஸ் கையிலே கொடுக்கும் அதிகாரத்தை நம் கையிலே கொடுக்க வேண்டும் என்றல்ல. நான் என்னமோ அப்படிக் கேட்பதுபோலச் சொல்கின்றார்கள். அந்தக் கிண்டல் பேச்செல்லாம் மேடைக்கு நன்றாக இருக்கும், ஆனால் மேலவையிலே நன்றாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: கிண்டல் பண்ணவேண்டிய நேரத்தில் பண்ணாமல் இருக்க முடியாது. அவர்கள் சொல்வதற்கு நான் சொல்கிறேன். இந்தப் பணியை, அதிகாரத்தை யாருக்குக் கொடுக்கலாம் என்று சொல்லுங்கள். கொள்ளை அடிக்கின்றார்கள். கொலை செய்கின்றார்கள். இந்தமாதிரி சமூக விரோதிகளை தாராளமாகப் பிடிக்க வேண்டும். அவர்கள் தாராளமாக நடமாடுகின்றார்கள். சினிமாவிற்குப் போய் வருகின்றவர்களைத் தொந்தரவு பண்ணுகின்றார்கள் என்று புகார்கள் வந்திருக்கின்றன. சென்னை நகரத்திலே இம்மாதிரி புகார்கள் வருகின்றன. அந்த நேரத்தில் சமூக விரோதிகளை அப்புறப்படுத்துவதற்கு போலீஸுக்கு அதிகாரம் கொடுக்காமல் வேறு யாருக்குக் கொடுப்பது?

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஒரு பொதுக் குழுவிற்குக் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. க. சுப்பு : நன்றி. இதற்காகவே நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதில் கட்சி வித்தியாசம் கிடையாது. அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. காங்கிரஸ் கட்சி இல்லை. ஒன்றுமில்லை. ஆங்கிலேயர்கள்தான் கொண்டுவந்தது. சோசியல் லெஜிஸ்லேஷன். அந்த மாதிரி நாம் இப்போது பார்க்க வேண்டும். 1888-லே கொண்டு வந்தது எல்லாம் வேண்டாம் என்றால், அந்த இங்கிலீஷைக்கூட விட்டுவிட வேண்டும். "வெள்ளைக்காரர்கள் கொண்டுவந்த சட்டத்தை விட்டுவிடுங்கள். அவர்கள் தான் போலீசை உருவாக்கியவர்கள். அவர்கள்தான் இந்த போலீஸ் என்ற பெயரைக் கொண்டுவந்தவர்கள். ஆகவே அதையெல்லாம் தூக்கி எறிந்து பேசுவது" புறம்பானதாகும். 1888-ல் அந்த ஆக்ட் வந்திருக்கின்றது. பொதுமக்கள் அமைதிக்குக் குந்தகம் ஏற்படும்போது, வன்முறையில் ஈடுபடுகின்றவர்களை அப்புறப்படுத்தலாம் என்பதற்காகத்தான் அப்படிப் போட்டிருக்கின்றார்கள். அந்த அதிகாரம் கமிஷனருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்தை எடுக்கவில்லை. புதிய அதிகாரத்தைக் கொடுக்கவில்லை, மத்திய சர்க்கார் சொல்கின்றது. அவர்களை அப்புறப்படுத்தும் அதிகாரத்தைக் கமிஷனருக்குக் கொடுத்திருக்கின்றார்கள். அதேமாதிரி கஸ்டம்ஸில் தண்டிக்கப்படுபவர்களை எல்லாம் கண்காணிக்க வேண்டும் என்றும் அவர்கள் மீண்டும் தவறு செய்வதாக இருந்தால், அவர்களை அப்புறப்படுத்துங்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான். எல்லையை விட்டு அப்புறப்படுத்துங்கள் என்கிறோம். இன்னும் சொல்லப்போனால் அனுதாபம் காட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கை இது. அவர்களை குண்டாஸ் ஆக்டிலே பிடிக்க முடியாதா? அவர்களை நேஷனல் செக்குரிட்டி ஆக்டிலே பிடிக்க முடியாதா? அவர்களை 151 ஆக்டிலே பிடிக்க முடியாதா? எல்லோரையும் பிடிக்கலாம். ஏற்கெனவே போலீசுக்கு அதிகாரம் இருக்கின்றது. அந்த அதிகாரத்தை டைலூட் பண்ணியிருக்கிறோம். கடுமையாக இருக்கக் கூடாது. அதனாலே அவர்களுக்குக் கொஞ்சம் சௌகரியம் செய்கிறோம். வேறு ஊரில் செய்யமாட்டார்களா என்றால், அப்போது பார்த்துக்கொள்ளலாம். நம் நோக்கம் என்னவென்றால் அவர்கள் குற்றம் செய்யாமல் கண்காணிக்க வேண்டும். அவர்கள் காக்னிசிபல் அபன்ஸ் செய்தால், அப்படித் தெரிந்தால்கூட கைது செய்யலாம். இப்போது இருக்கின்ற சட்டம் தான் இங்கு இருப்பவர்கள் நியாயத்தைப் பேசுவார்கள் என்ற அடிப்படையிலே தான் நான் பேசுகிறேன். அவர்களுக்குப் புதிதாக அதிகாரத்தைக் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



(பிற்பகல் 1-05)

இன்றைக்கு குண்டர்கள் சட்டத்தின் கீழேயே உள்ளே போடலாம். அப்படி அவமானப்படுத்த விரும்பவில்லை. அவர்களுக்கு அரசியல்வாதிகளோடு தொடர்பு இருக்கிறது என்பது நமக்குத் தெரிகிறது. அவர்களைப் போய் குண்டர்கள் என்று சொன்னால், பல கட்சிக்காரர்கள் கோபித்துக்கொள்வார்கள். வேண்டாம். அவர்களுக்கு ஒரு கன்செஷன் காட்டலாமே என்பதுதான் நம்முடைய நல்ல நோக்கம். இது குண்டர்கள் சட்டமல்ல. தேசிய பாதுகாப்புச் சட்டமல்ல. அவர்களை எல்லாம் குறைந்த பட்சம் நகரத்தின் எல்லையைவிட்டு அப்புறப்படுத்துவது என்பதற்காகக் கொண்டு வந்த திருத்தமே தவிர வேறல்ல. மாண்புமிகு உறுப்பினரவர்கள், புதிதாக ஏதாவது அதிகாரம் கொடுத்திருந்தால், சொல்லட்டும். இதன்மூலம் கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்கிறோம் என்றால், கமிஷனர் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். காரணங்கள் சொல்ல வேண்டும். இதை ரிக்கார்ட் பண்ண வேண்டும். அப்படி ரிக்கார்ட் பண்ணியதில் தவறு இருந்தால், நாம் அப்பீல் செய்யலாம். எல்லா விதமான நீதிக்கும் உட்பட்டுத்தான் இந்த அதிகாரத்தைக் கொடுக்கிறோமே தவிர, கமிஷனருக்கு தனிப்பட்ட அதிகாரம் என்ன கொடுத்துவிட்டோம்? இன்னும் சொல்லப்போனால், மேலே இருக்கிற அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுப்பதிலே தவறே இல்லை. நானே என்னுடைய அனுபவத்திலே பார்த்திருக்கிறேன். இராத்திரி ஒரு மணிக்கு டெலிபோன் பண்ணினால்கூட, 'அருள் ஸ்பீக்கிங்' என்று சொல்லுவார்கள். இராத்திரி ஒரு மணிக்குக்கூட அவர்கள் தூங்குவதில்லை. திரு. ஸ்டிரேசி, முன்னாள் ஐ.ஜி.யாக இருந்தார்கள். அவர்களும் அப்படித்தான் இருந்தார்கள். இன்றைக்கு கமிஷனர் ஸ்ரீபால் அவர்களும் அப்படித்தான் இருக்கிறார்கள். நான் எதிர்க் கட்சியில் இருந்திருக்கிறேன்: போலீஸ் அதிகாரிகளைக் கடுமையாக விமர்சித்திருக்கிறேன். இப்படி அதிகாரங்களைக் கொடுத்தாலும், உயர் போலீஸ் அதிகாரிகள் நாம் சொன்ன உடனே 'ரெஸ்பான்ட்' பண்ணுபவர்களாக, நியாயமாக நடப்பவர்களாக இருக்கிறார்கள் என்பதில் குறைவிருக்கிறதென்று நான் கருதவில்லை. கீழ் மட்டத்திலே அப்படி இருக்கலாம். அது உண்மைதான். ஒத்துக்கொள்கிறேன். மேல் மட்டத்திலே நியாயமான மனப்பான்மையோடு இருக்கும் கமிஷனர் போன்ற அதிகாரிகள் லெவலில் இருக்கிறவர்கள் எல்லாம் எப்படி இருப்பார்கள் என்பது நமக்குத் தெரிந்ததுதான். அவர்களிடம் அதிகாரத்தைக் கொடுக்காதீர்கள் என்று சொல்லுகிறார்கள். இது என்ன அதிகாரம்? ஏற்கெனவே போலீஸ் ஜாமீனில் வர முடியாத செக்ஷனின்கீழ் கேஸ் போட்டு உங்களை கோர்ட்டிலே நிறுத்தினால், நீங்கள் ஜாமீன் கேட்

பீர்கள். அப்போது போலீஸ், கண்டிஷனல் ஜாமீனில் விட வேண்டுமென்று சொல்லும். அப்படித்தான் விடுவார்கள். நான்-பெயிலபிளில் அப்படி. போலீசைக் கேட்டுத்தான் விடுவார்கள். இப்போது இருக்கும் நடைமுறை அதுதான். நீங்களே பார்த்திருப்பீர்கள். கண்டிஷன் போட்டு, மெட்ராஸ் காரர் கோவையில் இருக்க வேண்டுமென்றால், அதை ஒத்துக்கொண்டு, அங்கேயே உட்கார்ந்திருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று கையெழுத்து போட வேண்டும். அந்த மாதிரிக் கஷ்டம் வருகிறது. அந்த மாதிரி பெரிய மனிதர்களைக் கஷ்டப்படுத்தக் கூடாது; அப்புறப்படுத்துவதோடு நாம் வந்துவிடுகிறோம். அதற்குப் பிறகு 'வாச்' பண்ணவில்லை. இதிலே அவர்கள் திருந்த வேண்டும்.

கஸ்டம்ஸ் ஆக்டில் தவறு பண்ணுகிறவர்களை அச்சுறுத்துகிறோம். இல்லையென்றால், நம்முடைய பொருளாதாரம் போய்விடும். நம்முடைய நாட்டுப் பொருள்களுக்கு மரியாதை குறைந்து, வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்யக் காரணம் என்ன? கள்ளக்கடத்தல்தான். அவர்கள் நமக்கு வேண்டியவர்களாக இருக்கலாம். நம்முடைய கட்சிக்கு நன்கொடை கொடுத்திருக்கலாம். தேர்தலில் அதனால் ஜெயித்திருக்கலாம். கார் கூட வாங்கிக் கொடுத்திருக்கலாம். அது வேறு விஷயம். நாட்டின் பொருளாதாரத்திற்கு அது கேடு விளைவிக்கிறது என்ற அடிப்படையில், நாட்டினுடைய பொருளாதாரத்தை அடிப்படையாக வைத்து மத்திய அரசு கைட்-லைன்ஸ் கொடுக்கும்போது, ஏன் செய்கிறீர்கள் என்று கேட்டால் என்ன அர்த்தம்? "நீ ஏன் உயிரோடு இருக்கிறாய்?" என்று கேட்பதுபோல் இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் ஏன் ராஜினாமா பண்ணவில்லை என்று கேட்பதுபோல் இருக்கிறது. மத்திய அரசு, இந்தியப் பொருளாதாரத்திற்கு வந்துள்ள அபாயத்தைச் சுட்டிக்காட்டி, பம்பாயிலே நல்ல சட்டம் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறது. கஸ்டம்ஸ் ஆக்டின்கீழ் அங்கேதான் அதிக வேலை. கள்ளக்கடத்தல் அங்கே அதிகமாக இருக்கிறது. பலர் அங்கேயே குடியேறிவிட்டார்கள். நல்ல நோக்கம்தான். (சிரிப்பு) அங்கே அப்படி இருக்கிறது. அதனால் அங்கே ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். இதை, இந்தியாவில் உள்ள மற்ற துறைமுக நகரங்களும், மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த நல்ல காரியத்தை ஒத்துக்கொள்ள வேண்டும். நாலும் மூன்றும் ஏழு என்றால் கிடையாது, "நீ சொன்னா எப்படி?" என்று சொன்னால் எப்படி? அதுமாதிரி இருக்கக் கூடாது. யாருக்கும் எதிராக இது கொண்டுவந்ததல்ல. மத்திய அரசின்



கைட்-லைன்சை ஒட்டி அவர்களுக்கு அதிகமாகத் தொல்லை கொடுக்கக் கூடாது என்பதற்காகவும், திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு அளித்தும் கொண்டு வந்துள்ள சட்ட முன்வடிவு இது. இதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் மறு பரிசீலனை செய்து, ஆதரிக்காவிட்டாலும், மனதுக்குள் ஆதரிப்பார்கள் என்று சொல்லி, இதை ஆதரித்து, அமைகிறேன்.

திரு. அ. மயில்சாமி : மாற்றுத் தலைவரவர்களே, 1985 ஆம் ஆண்டு, சென்னை மாநகர் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவின்மீது சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு சங்கச் சட்டத்தை மீறுகிறவர்களும், வன்முறையாளர்களும், வளர்ந்து வரும் நகரங்களில் பலாத்காரம், கொலை, கொள்ளை செய்பவர்களை தண்டிப்பதற்காகக் கொண்டு வந்துள்ள சட்டம் இது. ஏற்கெனவே பல சட்டங்கள் இருந்தாலுங்கூட, அந்தச் சட்டங்களிலிருந்து அவர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள் என்ற அடிப்படையில் இது கொண்டுவரப்படுகிறதென்று கருதுகிறேன். கடத்தல்காரர்கள்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கடத்தல்காரர்களுக்கு நாட்டிலே செல்வாக்கு இருக்கிறது, செல்வமும் இருக்கிறது. இன்றைக்கு கடத்தல்காரர்கள் எல்லோருடனும் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக தேர்தல் காலத்திலே அவர்கள் அனைத்துக் கட்சிகளுக்கும் நன்கொடை கொடுப்பது நாடு அறிந்த உண்மையாக இருக்கிறது. அப்படிப்பட்டவர்களைக் கண்டிக்க, தண்டிக்க இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறதென்று கருதுகிறேன். இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவின்படி, ஏற்கெனவே குற்றம் செய்த ஒருவர், மறுபடியும் குற்றம் செய்யக்கூடுமென்று கருதினால், கமிஷனர் ஆணையின்படி ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு அனுப்பலாம் என்று இருக்கிறது.

(பிற்பகல் 1-10)

ஆக, ஏற்கெனவே அந்தக் குற்றம் செய்தவர் மறுபடியும் செய்யக்கூடும் என்றால், இன்னொரு மாவட்டத்திற்கு அனுப்பப்படுகிறார். உதாரணமாக சென்னை நகரில் குற்றம் செய்த ஒருவர் மீண்டும் குற்றம் செய்வார் என்று கருதினால், அவர் கோவைக்கு அனுப்பி வைக்கப்படக் கூடும். அங்கே அவர் செய்த குற்றம் குறைவாக இருக்கக் கூடும். ஆனால் அங்கே போய் அவர் அந்தக் குற்றத்தைச் செய்யக் கூடும் அல்லது செய்ய தூண்டக் கூடும். இப்படிப்பட்ட நிலை வரக்கூடும் என்பதால் ஏன் அவருக்கு இங்கேயே தண்டனை அளிக்கக் கூடாது? அதில் என்ன சிக்கல் இருக்கிறது? அவர் அவகே போ

வதன் வாயிலாக அங்கே வேறு கோளாறுகள் ஏற்படக் கூடிய நிலைமைகள் ஏற்படக் கூடும். அண்மையில் நாம் பார்க்கிறோம். சென்னையைச் சுற்றியுள்ள இடங்களில் உள்ள வீடுகளில் எங்கிருந்தோ வந்து புகுந்து கொலை செய்வது, கொள்ளையடிப்பது போன்ற செயல்களைச் செய்துகொண்டிருந்தார்கள். அந்த அடிப்படையில்தான் நான் இதைக் கூறுகிறேன்.

அடுத்து, இப்பொழுது காவல் துறை ஆணையாளரிடம் இதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கள்ளக்கடத்தல்காரர்களும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதால், கஸ்டம்ஸ் கலெக்டர் மற்றும் நீதிபதி ஒருவர் இப்படி இரண்டு பேரையும் கூட போலீஸ் கமிஷனருடன் இணைந்து இதிலே செயல்படவிட்டால், நன்றாக இருக்கும்.

உயிருக்கு, உடைமைக்கு ஆபத்து ஏற்படுகிறது, பலாத்காரம் செய்யப்படுகிறது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவர்களை இதிலே சேர்த்திருப்பது போல், கற்பழிப்பிலே ஈடுபடுகிறவர்களையும் அவசியம் சேர்க்க வேண்டும். சமீபத்திலே இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடைபெற்றது. ஆறு, ஏழு பேர் சேர்ந்து ஓர் இளம் பெண்ணைக் கற்பழித்து ரெயில் வருகின்ற நேரத்தில் அந்தப் பெண்ணை ரெயில் பாதையில் வீசியிருக்கிறார்கள். அந்தப் பெண்ணின் உடல் அங்கே ரெயில் வருகின்ற நேரத்தில் சின்னா பின்னமாகியிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் இன்னமும் நமது நாட்டிலே நடமாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**திரு. க. சுப்பு :** அப்படிப்பட்டவர்களை நாடு கடத்தினால், அவர்கள் போய்ச் சேருகின்ற ஊருக்குத்தான் கெடுதல்.

**திரு. அ. மயில்சாமி :** நான் கூட அப்படிச் செய்ய வேண்டாமென்றுதான் பேசிக்கொண்டிருக்கிறேன். அந்தமாதிரி கொடுமைகளைச் செய்கின்றவர்களுக்கும் இச்சட்டத்தின்கீழ் கடுமையான தண்டனை அளிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னை மாநகர் காவல், தமிழ் நாடு மாவட்டக் காவல் திருத்தச் சட்ட முன்வடிவை வரவேற்று ஒருசில வார்த்தைகள் சொல்ல விழைகின்றேன். இச்சட்ட முன்வடிவின் மூலமாக சென்னை நகர போலீஸ் கமிஷனருக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கப்படுகிறது. சென்னையிலே ஒரு குற்றம் செய்தால், அவரை செங்கல்பட்டு பகுதிக்கு அனுப்பி வைக்கின்ற வகையில் இச்சட்ட முன்வடிவு வழிவகை



செய்கிறது. அதாவது பழக்கூடையில் ஒரு பழம் அழுகிவிட்டது என்றால்; அதை அப்புறப்படுத்துவதுமாதிரி. இதற்கெல்லாம் ' ரிங் லீடர் ' மாதிரி ஒருவர் இருப்பார். அவரை இவ்வாறு அப்புறப்படுத்துவதன் மூலம் அவருடன் பின்னால் இருந்த மற்றவர்கள் தொடர்ந்து தவறான காரியங்களைச் செய்வதைத் தடுத்து நிறுத்த முடியும். இவ்வாறு குறிப்பிட்ட குற்றவாளியை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்துவதன் வாயிலாக அவர் புதிய இடத்திற்குப் போவதற்கு முன்பே அவரைச் சரிப்படுத்தி விடலாம். வழக்கத்திற்கு மாறாக இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்பவர்களால் பொதுமக்களுக்கு ஆபத்து அதிகம். இப்படி குறிப்பிட்ட குற்றம் செய்பவர்களுக்கு தண்டனை வழங்குவதன் மூலமாகத்தான் இவர்களை அடக்க முடியும். இன்றைக்கு ஒரு காவல் நிலையத்தை எடுத்துக்கொண்டால், அங்கு இருப்பவர்கள் எவ்வளவோ வேலைகளை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் இத்தகையவர்களை ஒவ்வொரு காவல் நிலையமும் கண்காணிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல, சென்னை நகரைச் சுற்றிலும் வீடு கட்டி வாழ்ந்துகொண்டிருப்பவர்களை எங்கிருந்தோ வந்து அடிக்கடி கொள்ளையடித்து தொல்லை ஏற்படுத்திக்கொண்டிருப்பதால், சென்னை நகரையொட்டி வாழ்கிற மக்கள் அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு தனிப்பட்ட முறையில் செக்யூரிட்டி கார்ப்பரேஷன் என்கின்ற அமைப்பை ஏற்படுத்தி, தனிப்பட்ட நிறுவனங்களில் ஓய்வுபெற்ற காவலர்கள் போன்றவர்களைப் பணியில் வைக்கிறார்கள். அப்படி அனுபவம் உள்ளவர்களை வைத்து, அரசே ஓர் அமைப்பை உருவாக்கி, இத்தகைய பணிகளுக்கு அவர்களைப் பயன்படுத்தலாம். காவலர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குக் காவல் நிலையங்களில் இப்போது ஏகப்பட்ட பணி இருக்கிறது. அதோடு கூட இப்படிப்பட்ட பணிகளையும் அவர்களிடம் ஒப்படைப்பதால், அவர்களுடைய பணி நேரம் வீணாகிக்கொண்டிருக்கிறது. ஓய்வுபெற்ற அனுபவம் வாய்ந்தவர்களை அரசாங்கமும் பயன்படுத்த முடியாமல் போய்விடுகிறது. தனிப்பட்டவர்கள் இன்றைக்கு இப்படிப்பட்ட பல அமைப்புகளை அமைத்து, ஓய்வுபெற்றவர்களுக்கு நிறுவனங்களை அணுகி வேலை வாங்கிக் கொடுக்கிறார்கள் என்றால் யாருக்கும் யாரும் காவல் என்கிற நிலைமை ஏற்படவில்லையா ? இன்ன இடத்தில் வேலை, இத்தனை மணி நேரம் வேலை பார்க்க வேண்டும், இவ்வளவு சம்பளம் என்கிற முறையிலே தனிப்பட்ட அமைப்புகளே ஓய்வுபெற்ற காவலர்களைப் பயன்படுத்துகின்ற நிலைமையை நாம்

பார்க்கிறோம். இப்படி நம்முடைய காவல் துறையிலிருந்து ஓய்வு பெற்றவர்களை தனி அமைப்பு ஒன்றின்கீழ் கொண்டு வந்து, அனுபவம் வாய்ந்த அவர்களை இத்தகைய பணிகளுக்குப் பயன்படுத்தினால், காவல் துறையைப் பொறுத்தவரையில், இன்னும் நன்றாகச் செயல்பட முடியும் என்று சொல்லி, இச்சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவினுடைய நோக்கம் என்ன என்பதைப்பற்றி மிகத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. சட்டத்தின் நோக்கத்தை வேறு கண்ணோட்டத்தோடே பார்க்கக் கூடாது என்பதற்காக நான் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல, நாட்டிலுள்ள பொருளாதாரக் குற்றங்களைக் களைய, பொருளாதாரக் குற்றங்கள் பல இன்னும் நாட்டினுடைய ஒட்டுமொத்த புனிதத்தன்மைக்கு பங்கமாக இருக்கக் கூடிய சூழ்நிலையைக் களைய, மைய அரசு மாநில அரசுகளுக்கு அனுப்பிய தாக்கீதின் அடிப்படையில்தான், இச்சட்ட முன்வடிவை இந்த அரசு நடைமுறைக்குக் கொண்டு வருகிறது. குறிப்பாகச் சொல்வதென்றால், மைய அரசு மாநில அரசுகளுக்கு இதுகுறித்து தாக்கீது அனுப்பியிருக்கிறது.

(பிற்பகல் 1-15)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசுகிற போது, இது ஹிட்லர், முசோலினி ஆட்சியைப்போல, சர்வாதிகாரமாக, காட்டுமிராண்டித்தனமான ஆட்சி அல்லவா இத்தகைய சட்டத்தைக் கொண்டு வருகிற ஆட்சி என்று சொன்னார்கள். ஒன்றை அவர்கள் மறந்துவிட்டார்கள் என்று கருதுகிறேன், அல்லது தெரியாத காரணத்தால் அப்படிச் சொல்லி விட்டார்களோ என்று நான் அச்சப்படுகிறேன்.

ஒரு பகுதியிலிருந்து குற்றமிழைத்தவர்கள், அதற்கான தண்டனை பெற்றவர்கள் மீண்டும் அதுபோன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபடுகிறபோது, அதற்குத் தக்க ஆதாரம் இருக்கிறபோது, அந்தப் பகுதியிலிருந்து அவர்களை வேறு பகுதிக்கு மாற்றக்கூடிய சட்டம் தி.மு.க. தமிழகத்தை ஆண்டபோது நடைமுறையில் இருந்ததுதான். அதிலும் குறிப்பாக,



Offences against Coins and Currency
Offences against Property
Offences against Human Body

ஆகியவற்றுக்கெல்லாம், எத்தகைய குற்றங்களில் ஈடுபட்டு தண்டனை பெற்றார்களோ, அந்தப் பகுதியிலிருந்துகொண்டு, சமுதாய விரோதச் செயல்களில் மேற்கொண்டு ஈடுபடுவார்களேயானால், அவர்களை அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்த வேண்டுமென்ற சட்டம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்தபோதும் இருந்ததுதான். அப்படி அந்தச் சட்டம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்த காரணத்தால், தி.மு.க. ஆட்சி காட்டுமிராண்டித்தனமான ஆட்சி, சர்வாதிகார ஆட்சி, ஹிட்லர், முசோலினி ஆட்சி என்று திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

காரணம், இந்தச் சட்டம் எந்த நோக்கத்தோடு கொண்டுவரப்படுகிறது, எந்த நடைமுறையில் இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் விளக்கமாகச் சொன்னதைப் போல, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், சில . . . .

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இவ்வாறு ஒரு சட்டம் உருவாக்கப்பட்டதா, அல்லது ஏற்கெனவே இருந்த சட்டம் நடைமுறையில் இருந்ததா, இப்படி வெளியேற்றுகிற சட்டம் முன்பே இருந்தது என்று சொன்னால், இப்போது அதையே உருவாக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? இந்த ஆட்சியில் காட்டுமிராண்டிச் சட்டம் கொண்டுவரப்படவில்லையென்றால், அதற்கு முன்பு, தி.மு.க. ஆட்சிக்கு முன்பு கொண்டு வந்ததாக இருக்கலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நடைமுறையில் இருக்கிற சட்டமாக இருந்தபோதிலும், தி.மு.க. ஆட்சியைச் சேர்ந்தவர்கள் காட்டுமிராண்டித்தனமான ஆட்சியை வைத்துக்கொண்டு சட்டத்தை ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்றுதான் வினா எழுப்பினார்கள். அப்போது இருந்த சட்டத்திலே,

Offences against property, offences against human body, offences against coins and currency. என்ற குற்றங்களில் ஈடுபட்டு, தண்டனை பெற்றவர்கள் எல்லாம் மீண்டும் அதே வன்முறையில்

ஈடுபடுகிறபோது, அவர்களை வெளியேற்ற வேண்டுமென்ற நடைமுறையில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்தது. காட்டுமிராண்டித்தனமான ஆட்சியாக இல்லாமல் இருந்தால், அதைத் திருத்த நடவடிக்கை எடுத்திருக்கலாம். அப்படிச் செய்யவில்லை.

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், இன்றும் ஒன்றை திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். எடுத்தேன், கவிழ்த்தேன், நினைத்தால்போதும் நடவடிக்கை எடுத்துவிடலாம் என்று இருப்பதாக இந்தச் சட்ட முன்வடிவைப் பற்றிச் சொன்னார்கள். ஷரத்துக்களை மிகத் தெளிவாகப் படித்துப் பார்க்க வேண்டும். இந்தக் குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே ஒருவர் குற்றம் செய்திருக்க வேண்டும்.

"any person in the City of Madras who has been convicted of an offence under section 135 of the Customs Act, 1962 (Central Act 52 of 1962) is likely again to engage himself in the commission of the offence for which he was convicted . . . . .".

என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கடத்தலில் ஈடுபட்ட குற்றத்தைப் புரிந்து, தண்டனை பெற்றவர்கள், தண்டிக்கப்பட்டவர்கள் மீண்டும் அது போன்ற குற்றங்களில் ஈடுபட்டு, அது பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கிறபோதுதான், அவர்கள் வன்முறையில் ஈடுபடுகிறபோதுதான் இந்தச் சட்ட முன்வடிவு அவர்களுக்கு எதிராக ஈடுபடுத்தப்படும். அதற்கும், வழக்கறிஞர் மூலமாக, அந்தக் கமிஷன் முன் ஆஜராகலாம். என்ன என்ன காரணங்களால் அந்தப் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறார் என்று கமிஷனர் விளக்கம் தர வேண்டும். அப்படி போதிய விளக்கம் பெறவில்லை என்று கருதினால், நீதிமன்றத்திற்கே செல்லக்கூடிய வாய்ப்பு கூட 5-வது பிரிவில் தெளிவாக அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், கள்ளக்கடத்தல் போன்ற பொருளாதாரக் குற்றங்களில் ஈடுபட்டு, நாட்டின் பொருளாதாரத்தையே குலைக்கக்கூடியவர்கள், அப்படி முன்னாலேயே தண்டிக்கப்பட்டவர்கள் மீண்டும் அந்தத் தவறைச் செய்யுபோது, அந்தப் பகுதியிலிருந்து மற்ற பகுதிக்கு அவர்கள் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். இதை ஏன் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இவ்வளவு வேகமாக எதிர்க்கிறார் என்பதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.



(பிற்பகல் 1-20)

இன்னும் ஒன்றைக்கூடச் சொன்னார்கள். அரசியல்வாதிகளைப் பழி வாங்கும் நோக்கத்தோடு இச்சட்டம் பயன்படுத்தப்படுமா என்றுகூட சொன்னார்கள். கள்ளக்கடத்தலில் ஈடுபட்டு, நாட்டுக்கு எதிரான பொருளாதாரக் குற்றத்தைச் செய்து, தண்டனை பெற்றவர்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இயக்கத்திலே சேர்க்க மாட்டார் என்றே கருதுகிறேன். அவர்களுக்காக வாதிடுவது உகந்ததாக இருக்காது என்பதால் சொல்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசியல்வாதிகளைக் கள்ளக்கடத்தல்காரர்கள் என்று சொல்லவில்லை. இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, அரசியல்வாதிகளையும் கள்ளக்கடத்தல்காரர்களாக மாற்றுவார்கள் என்ற ஐயத்தைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : சட்டம் தெளிவாகச் சொல்கிறது. கள்ளக் கடத்தலிலே ஈடுபட்டு . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பேசுகிறபோது தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : சட்டத்திலே மிகத் தெளிவாக இருக்கிறது. ஒரு தடவை கள்ளக்கடத்தல் குற்றத்தில் ஈடுபட்டு, தண்டிக்கப்பட்டு, குற்றவாளிகளானவர்கள் மீண்டும் அதே தவறில் ஈடுபடுகிறபோதுதான், அவர்கள்மேல் இச்சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இச்சட்ட முன்வடிவைப் படித்தால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். அதைப் போலவே மத்திய அரசு கூறுகிற காரணத்தால், இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்று கேட்டார்கள். அதற்கு நல்லதொரு விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஏற்கெனவே கூறியிருக்கிறார்கள். இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கமே ஏற்கெனவே தெளிவாகச் சொல்லப்பட்டதைப்போல, கள்ளக்கடத்தல்காரர்கள் சமுதாய விரோத செயல்களில் ஈடுபட்டு அவர்கள் ஏற்கெனவே தண்டிக்கப்பட்டவர்களாக இருப்பார்களேயானால், மீண்டும் அக்குற்றத்தைச் செய்கிறபோது, நாட்டின் நலன் கருதி, அவர்களை ஒரு பகுதியிலிருந்து அப்புறப்படுத்த வேண்டுமென்கிற நல்லெண்ணத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை அவை ஏற்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னை மாநகர் காவல்—தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்)

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னை மாநகர் காவல்—தமிழ் நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1985) நிறை வேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னை மாநகர் காவல்—தமிழ் நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1985) நிறை வேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(5) தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 47/1985).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1985 ஆம் ஆண்டு தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 47/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 47/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், "What should be framed as service rules by a G.O. is now enacted into a Law' ஓர் அரசாங்க உத்தரவு மூலமாக சர்வீஸ் ரூல்ஸ் என்று போட வேண்டிய விதிமுறைகளை ஒரு சட்டத்தின் மூலமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இதிலே நியமிக்கப்படக்கூடிய ஊழியர்கள் பொதுமக்கள் நன்மையைக் கருதி செயல்படக்கூடிய அளவில் எந்தச் சட்டமும் இருப்பதாகத் தெரியவில்லை. இதை நான் சொல்வதற்குக் காரணமிருக்கிறது. ஓரிடத்திலே தீப்பற்றி எரிகிறதென்று சொன்னால், தீ அணைப்புப் படை வருகிறது. அப்போது அங்கே வருகின்ற லாரிகளிலே தண்ணீர் இல்லாமலிருப்பதைப் பார்க்கிறோம். நானே நேரில் பார்த்திருக்கிறேன். இரண்டு மூன்று லாரிகள் ரிப்போாகி செயல்படுவதில்லை. அதைக் கேட்பதற்கு உரிமை இந்தச் சட்டத்திலே கொடுக்கப்படவில்லை. பொது மக்களின் சார்பாக ஒரு குற்றச்சாட்டு அல்லது ஒரு குறை அரசாங்கத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை, இந்தச் சட்டத்திலே கொடுத்திருந்தால், இந்தச் சட்ட முன்வடிவை முழுமையான சட்ட முன்வடிவாக நாம் கருத முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 306–316 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(பிற்பகல் 1-25)

நாம் பல இடங்களிலே பார்த்திருக்கிறோம். தீ அணைப்புப் படை வரும். அங்கே வந்த பிறகு தண்ணீர் இல்லை என்ற நிலைமை இருப்பதைப் பார்த்திருக்கிறோம். சில வேளைகளிலே லாரி 'பங்ஷன்' செய்வதில்லை. அது ஓடுவதில்லை. நான்கு வந்தால் இரண்டுதான் வேலை செய்யும். எனவே இந்தச் சட்ட முன்வடிவிலே ஒரு பிரிவு வந்திருக்குமேயானால் இந்த தீ அணைப்புப் படை செயல்படும் விதத்திலே ஏதாவது தவறு இருப்பதாக ஒரு புகார் வருமேயானால், அதுபற்றி பரிசீலிக்கப்படும், நடவடிக்கை எடுக்கப்படும், சம்பந்தப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று உத்திரவாதத்தைக் கொடுத்திருந்தால், அதுதான் சட்டத்திற்கு உதவி செய்கிற நிலையாக இருக்குமென்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் 14 ஆவது பிரிவில்

Penalty for violation of duty, etc.—Any Member of fire service who is found to be guilty of any violation of duty or wilful breach of any provisions of this Act or of any rule or order made thereunder; அது 'ஏ'. அந்தக் கிளாஸ் நமக்கு வேண்டாம். 'பி'- who is found to be guilty of any act of cowardice. பயந்தாங்கொள்ளி என்று அப்படி முடிவு பண்ணினால் நடவடிக்கை எடுக்கலாமென்று இருக்கிறது. என்னவென்று எனக்கும் புரியவில்லை. ஏதோ அவன் டியூட்டிக்குப் போகிறான். அங்கே ஹோஸ் பைப்பைப் பிடித்து தண்ணீர் அடிக்கிறான். இவ்வளவும் செய்த பிறகு, 'கவர்டிஸ்' என்றால் அதற்கு விளக்கம் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அதிகாரிகளுக்குப் பிடிக்கா விட்டால், கீழே வேலை செய்கிற ஊழியர்களை பயந்தாங்கொள்ளி என்று சொல்லி நடவடிக்கை எடுக்கும் வாய்ப்பு இருப்பதாக நான் கருதுகிறேன். இன்னொன்று, இந்தச் சட்ட முன்வடிவு மூலமாக இப்போது தனியாக டைரக்டர் ஆப் பயர் சர்வீஸ் என்று போட்டு, தமிழ்நாடு பயர் சர்விஸ் என்று தனியாக ஒரு நிறுவனம் அமைக்க இருப்பதாகத் தெரிகிறது. இந்த நிறுவனம் மற்ற இலாக்காவில் இருப்பவர்களுக்குப் புகலிடமாக இருக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். போலீஸ் இலாக்காவிலே வேண்டாத ஆளை எடுத்து இங்கே போடும் நிலைமை இருக்கிறது. அந்த இலாக்காவிலே பணி புரிந்த, அதுவும் மேல் அதிகாரிகளாகப் போடக்கூடிய டைரக்டர்கள் எல்லாம் அங்கே பதவி உயர்வு பெற்று வருபவர்களாகத்தான் இருப்பதற்கு அனுமதி தரவேண்டுமே தவிர, வேறு இலாக்காவிற்குப் புகலிடமாக அதை அமைத்து



விடக் கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன் வடிவு தேவை இல்லாத ஒரு சட்ட முன்வடிவு. இதை அரசாங்க உத்தரவின் மூலம் நிறைவேற்றி இருக்க முடியும் என்று நம்புகிறேன். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அரசாங்க உத்தரவின் மூலமாக நிறைவேற்றப்பட வேண்டிய விதிமுறைகளை ஒரு சட்ட முன்வடிவின் மூலமாகக் கொண்டு வந்திருப்பது முறையல்ல என்று தெரிவித்து நான் சொன்ன குறைபாடுகளை கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கூறி அமைகிறேன்.

திரு. க. சுப்பு: துணைத் தலைவர் அவர்களே, 1950-ல் போடப்பட்ட வல்லுனர்கள் குழுவினுடைய பரிந்துரையை மையமாக வைத்து இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல, வல்லுனர்களின் பரிந் துரையை வைத்து மத்திய அரசாங்கமே ஒரு மாதிரி மசோதாவைத் தயா ரித்து, அந்த அடிப்படையிலே நீங்கள் சட்டம் இயற்ற வேண்டும் என்று அதை நமக்கு அனுப்பியிருக்கிறது. வல்லுனர்கள் என்று சொல்லிவிட்ட காரணத்தி னாலே, அதை நாம் ஏற்றுக்கொள்வதைத் தவிர, வேறு வழியில்லை. அந்த வல்லுனர்கள் எதற்காகச் சொல்கிறார்கள் என்றால், தீ அணைப்புத் துறை சிறப்பாக இயங்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறார்கள். மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் பெனல்டி போடுகிறார்கள் என்று சொன்னார் கள். பெனல்டி பிரிவைப் படிக்கும்போது எனக்கு என்ன பட்டது என்றால், இந்தத் துறைக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறது? திடீரென்று தீ பிடித்து விட்டது என்றால் உடனே ஓட வேண்டும். அப்போது பயந்துகொண்டு எப்படி தீ அணைப்பது, நாம் செத்துவிடுவோமே என்று நினைப்பதுதான் கோழைத் தனம். அதுமாதிரி யாரோ ஒருவர் வெள்ளத்தில் வந்து சிக்கிக் கொண்டால், அங்குபோய் தூக்கிக்கொண்டு வர வேண்டும். பயந்துகொண்டு யோசிக்கக் கூடாது. யோசிப்பவர் இங்கே வரக்கூடாது. இதை விட்டுவிட்டு வேறு வேலைக்குப் போய்விட வேண்டும். இங்கே வரக்கூடியவர் ஹோஸ் பைப்பைப் பிடிக்கத் தெரிந்திருக்க வேண்டும். தீ பிடித்துவிட்டால் உயிரைப் பணைய மாக வைத்து அந்த வேலையைப் பார்க்கிறார். அவ்வளவு பெரிய உன்னத மான பணியிலே அங்கே அவர் ஈடுபடுகிறார். வரக்கூடியவர் வேலைக்கு வர மாட்டேன் என்று சொன்னாலோ அல்லது லீவு போட்டு உடம்பு சரி இல்லை என்று சொல்லி வேலைக்கு வராமல் இருந்தாலோ, அவர் மீது நடவடிக்கை எடுக்கலாம். பிறகு நம்முடைய ஆட்களே சொல்வார்கள், எதற்கு பயர் சர்விஸ் வைத்திருக்கிறோம் என்று. தீ பிடித்து சாம்பலான பிறகுதான்

ஆட்கள் வருகிறார்கள் என்று சொல்வார்கள். இவ்வளவு பெரிய பொறுப்பு இருப்பவர்களுக்கு அதிகமான அந்தஸ்து இருக்க வேண்டும். அதை நாம் மறுக்க வேண்டியதில்லை. அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பது, சலுகைகள் கொடுப்பது இதையெல்லாம் எடுத்துக்கொண்டால், காவல் துறையினருக்கு கொடுப்பதைப் போலவே இவர்களுக்கும் கொடுக்க வேண்டும். அவர்கள் செய்வது மிகவும் சீரியல் செயல்கள். அவர்கள் சும்மாவே காத்திருப்பது ஒரு பெரிய தண்டனை. அதோடு அவர்களுக்கு வேறு வருமானத்திற்கும் வாய்ப்பு இல்லை. அப்படிப்பட்ட நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். வேறு வருமானங்களுக்கு வாய்ப்பு இல்லாமல், ஏதாவது ஒரு அபாயம் வந்தால், உயிரைப் பணயம் வைத்து வேலை செய்யக்கூடிய, 24 மணி நேரமும் காத்திருக்கக்கூடிய நிலையிலே இருக்கக்கூடியவர்கள். அதனால் அவர்கள் பணிக்கு வராமல் இருந்தால்; பணி செய்ய மறுத்தால், மூன்று மாதம் தண்டனை கொடுக்கலாம். பெனல்டி ஜாஸ்தியாக இருக்கிற காரணத்தால், அவர்கள் மீது கருணை காட்டி அரசாங்கம் இந்த விதிமுறைகளிலே சொல்லியிருக்கிறது. அதைப்பற்றி எல்லாம் தனிச் சட்டம் இருக்கிற காரணத்தால், அதிலே ஒரு வசதி நமக்கு. சர்வீஸ் கண்டிஷன்பற்றி, அவர்களுடைய எமாலுமெண்ட்ஸ் பற்றி எப்படி இருக்கிறது என்பதற்கு தனி கிளாலே இருக்கிறது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 1-30)

நான் முன்பு எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் பணியாற்றியபோதே, இதைப் பற்றிய பல விவரங்கள் எனக்குத் தெரியவந்தன. எனவே அதை மையமாக வைத்தும் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். தீ அணைப்புப் படையினருக்குத் தற்போது காவல் துறையினருக்கு வழங்கப்படும் அளவுக்குச் சம்பளமும் சலுகைகளும் வழங்கப்பட வேண்டும். அதைப் போலவே காவல் துறையினருக்கு வழங்கப்படும் மற்ற வசதிகளும் அவர்களுக்குச் செய்து தரப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.



அடுத்து, அந்தத் துறையில் பணியாற்றுகிறவர்களே அந்தத் துறையின் தலைமைப் பொறுப்புக்கு வருவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். அவர்கள் அதைத்தான் விரும்புகிறார்கள். அது வரவேற்கக்கூடிய யோசனை. அவர்கள் அப்படி விரும்புவதில் தவறு ஒன்றுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிட்டவர்களைப்போல், எங்கேயோ இருப்பவர்களுக்கு அந்தத் துறை புகலிடமாக இருக்கக் கூடாது. புகலிடம் என்றால் நல்ல இடம். ஆனால் அது நல்ல இடமோ கெட்ட இடமோ அந்தத் துறையைச் சார்ந்தவர்களே அந்தத் துறையின் தலைமைப் பொறுப்புக்கு வருவதற்கான வாய்ப்பை நாம் அளிக்க வேண்டும். காவல் துறையில் இருப்பவர்களை அங்கே கொண்டு போய்த் தலைமைப் பொறுப்பில் டைரக்டராகப் போட்டால், அங்கே இருப்பவர்கள் என்ன நினைக்கிறார்கள்? இவர் மீண்டும் காவல் துறைக்கே போய்விடப் போகிறார். இவர் நம் கஷ்டத்தைப் புரிந்துகொள்ள மாட்டார், இவர் நமக்கு என்னத்தைச் செய்யப் போகிறார் என்றுதான் எண்ணத் தோன்றும். எனவே இரண்டு பேரும் அங்கேயேதான் இருக்கிறவர்கள் என்ற நிலைமையை நாம் உருவாக்கினால்தான்; அந்தத் துறையில் உள்ளவர்களும் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களோடு நல்ல முறையில் சேர்ந்து பணியாற்ற முடியும். காவல் துறையிலிருந்து வந்துவிட்டாலும்கூட, பிறகு நிரந்தரமாக தீயணைப்புத் துறையிலேயே அவர் இருக்க வேண்டும். அவர் அங்கேயே 'அப்சார்ப்' செய்யப்பட வேண்டும். இந்தத் துறைதான் எனக்கு என்கிற வகையில் ஒரு டைரெக்டர் இருந்தால்தான், அவரை அனைவரும் விரும்பி வரவேற்பார்கள். அதற்காக இருப்பவர்களை நான் குறை சொல்லவில்லை. அதைப் போலவே இதை ஏன் முன்னமேயே செய்யவில்லை என்றோ, முன்னே இருந்த தி.மு.க. ஆட்சி இதை ஏன் செய்யவில்லை என்றோ கேட்கக் கூடாது. காரணம் நானும் முன்பு தி.மு.க.வில்தான் இருந்தேன். எனவே இப்போது அதற்குத் தனியான சட்ட முன்வடிவு கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். மத்திய அரசு வற்புறுத்தியது, ஆகவே கொண்டு வருகிறோம் என்பதைவிட, இந்தச் சட்ட முன்வடிவு நமது துறைக்கு நன்மை பயக்கும் என்பதால் நான் அதை வரவேற்கிறேன். எனினும் மீண்டும் ஒரு முறை காவல் துறையில் இருப்பவர்களைப்போலவே இவர்களுக்கும் சம்பளம் சலுகை மற்ற வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்றும், தலைமைப் பொறுப்பு இந்தத் துறையைச் சார்ந்தவர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்றும் விதிமுறைகளை வகுக்கும்போதாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு இந்த அருமையான சட்ட முன்வடிவை வரவேற்று, அமைகிறேன். வணக்கம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிற அதே நேரத்தில் சில கருத்துக்களையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

வெளிநாடுகளில் தீ அணைப்புப் படைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆனால் நமது நாட்டைப் பொறுத்த வரையில், இப்போதுதான் படிப்படியாக நாம் அதன் அவசியத்தைப்பற்றியும் அத்துறையை விரிவுபடுத்த வேண்டிய, முன்னேற்ற வேண்டிய அவசியம் பற்றியும் உணர்ந்து செயல்படுகிறோம். அந்த முறையில் அரசின் இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறை இன்னும் மிகப் பெரிய அளவுக்கு வளரவேண்டியிருக்கிறது.

கவிஞர் சொன்னதைப்போல், சாவே உனக்குச் சாவு வராதா என்று சொன்னதைப்போல், தீயே உன்னைச் சுடுவது எப்படி என்று சொல்லுகிற அளவுக்கு தீயின் காரணமாக நாட்டில் அழிவு ஏற்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் யாராவது ஒருவர் ஒரு சிகரெட் பிடித்துப் போட்டுவிட்டால், அது அங்கேயுள்ள காட்டையே அழித்துவிடுகிறது. இதற்குப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தீயினால் ஏற்படும் அழிவைச் சொல்லுகிற அளவுக்கு, அதைப் போலவே விபத்துக்கள் எவ்வாறு ஏற்படுகின்றன என்று சொல்லுகிற அளவுக்கு, அதையெல்லாம் எப்படித் தவிர்ப்பது என்று சொல்லுகிற அளவுக்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது தீயை அணைக்க முயற்சிக்கும்போது, அந்த இடங்களில் தண்ணீர் கிடைக்காமல் போய்விடுகிறது என்று குறிப்பிட்டார்கள். அதற்கு முன்னெச்சரிக்கையாக நாம் செயல்பட வேண்டியிருக்கிறது. சென்னை போன்ற நகரில் கடல் நீரைப் பைப்புகள் மூலமாக எடுத்து அதை தீயணைக்கப் பயன்படுத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். கல்கத்தா நகரைப் பொறுத்தவரையில், அந்த நகரையே கழுவி சுத்தம் செய்கிற அளவுக்கு அந்த ஊரில் தண்ணீரைப் பயன்படுத்துகிறார்கள். எனவே சென்னை நகரில் கடல் நீரைக் கொண்டு தீயணைக்க முயற்சிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



தீயணைப்புப் பணியில் நாம் இப்போது ஒரு வேகத்தைக் காட்டியிருக்கிறோம். ஸ்பென்ஸர் தீப்பற்றி எரிந்தபோது பெரிய இயந்திரத்தைக் கொண்டு வந்து தீயணைப்புக் காரியம் நடைபெற்றது. அதைப் போலவே பலமாடிக் கட்டிடங்களை இப்போது நகரில் பல இடங்களிலும் கட்டுகிறார்கள். அங்கெல்லாம் தீயை அணைப்பதற்கு உரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அதற்கு உரிய இயந்திரத்தை அவர்கள் வாங்கி வைக்கச் செய்ய வேண்டும் என்று அரசு அவர்களை வற்புறுத்த வேண்டும். மேலும் மாவட்ட அளவில் தீ அணைப்புப் பணிக்கு நாம் மேலும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதற்கெல்லாம் உதவி செய்யும் வகையில் அமைந்துள்ள இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவினுடைய நோக்கம் என்ன என்பது ஏற்கெனவே தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, நடைமுறையில் இருந்துவந்த தீயணைப்புத் துறை சம்பந்தப்பட்ட விதிகளெல்லாம் 'கோடிபை' செய்யப்பட்டு இன்றைக்குச் சட்டமாகத் தரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது, இதெல்லாம் சர்வீஸ் ரூல்ஸ் ஆக வர வேண்டியவைகள், எதற்காகச் சட்டமாகக் கொண்டு வருகிறீர்கள் என்று கேட்டார்கள். சர்வீஸ் ரூல்ஸ் என்றால் சட்டரீதியாக நடைமுறைப்படுத்த முடியாது என்பதை அவர் உணர்த்தியிருப்பார் என்று நான் நம்புகிறேன்.

பிரிவு 11-ஐ எடுத்துக் கொண்டால்

Powers of Members of Fire Service on occurrence of fire

என்று 8 பிரிவுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலும்

to remove or order any other Member of Fire Service, to remove any person who by his presence interferes with or impedes the operations for extinguishing or preventing the spread of fire என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் போலவே தண்ணீர்ப் பிரச்சினை

(பிற்பகல் 1-35)

பற்றியும் குறிப்பிட்டார்கள். தண்ணீர் கிடைப்பதில்லை, சில நேரங்களில் லாரிகள் கிடைப்பதில்லை, அதிகாரிகள் ஒழுங்காக நடப்பதில்லை, அதற்கு நடவடிக்கை எடுக்க வழிவகை இருக்கிறதா என்றும், மக்கள் குறைகளைக்

கேட்க வழிவகை இருக்கிறதா என்றும் கேட்டார்கள். அவற்றைக் கேட்க வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் சட்டமாகக் கொண்டு வருகிறோம். There are substantive provisions of law which cannot be enforced merely by Service Rules என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் அறிவார்கள்.

தண்ணீர் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். 11-டி பிரிவில் அது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

(*d*) require the authority in charge of water-supply in the area to fill static water tanks generally . . .

'ஈ' பிரிவில்

(*e*) utilise the water of any stream, cistern, well or tank or of any available source of water . . .

என்று இருக்கிறது. விபத்து ஏற்பட்டால் சில நேரங்களில் தண்ணீர் எடுக்க முடியாத நிலை ஏற்படும். வாகனங்களை உடனடியாகக் கொண்டுவர தடைக்கற்கள் இருக்கும். அப்படிப்பட்ட நேரங்களில் தீயணைப்பு அதிகாரிகள் முன்பு நடவடிக்கை எடுக்க முடியுமா என்றால் முடியாது. இப்போதுதான் சட்டரீதியாக அந்த அதிகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். இது சம்பந்தமாக எந்தப் பிரச்சினை வந்தாலும், காவல் துறை அதிகாரிகள் எப்படி நடவடிக்கை எடுக்கிறார்களோ, அதைப் போலவே சட்டரீதியாக தீயணைப்பு நடவடிக்கைகளை எடுக்க முடியும். இதுபோன்ற விபத்துக்கள் நடந்தால், துரித நடவடிக்கை எடுத்து பாதுகாப்பு அளிக்கும் முறை இதுவரை இல்லை. சட்டரீதியாக இப்போதுதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

தவறு செய்கிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க 14-வது பிரிவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையொட்டி விதிகள் இயற்றப்பட இருக்கின்றன. இதைக் கொண்டு, தவறிழைக்கும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.



மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் மாவட்ட அளவிலே இது நீட்டிக்கப்படுமா என்றும், இயந்திரங்கள் வாங்கப்படுமா என்றும் கேட்டார்கள். இந்தச் சட்டம் இயற்றப்படும் நோக்கமே அதுதான். தீயணைப்புத் துறையை நவீன துறையாக, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, அதிகாரிகள் உற்சாகத்தோடு பணியாற்றக் கூடிய அளவிற்கு சிறந்த துறை என்று கருதக்கூடிய அளவிற்கு, புதிய புரட்சிகரமான மாற்றத்தோடு இயங்க இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லி இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1985 ஆம் ஆண்டு தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 47/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 30 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு, 1 சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு, தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1985) நிறைவேற்றப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1985 ஆம் ஆண்டு, தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1985) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(6) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1985).**

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, மோட்டார் வண்டிகள்-வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1985) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, மோட்டார் வண்டிகள்-வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1985) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக அரசின் பல நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வருவாய் தேவைப்படுகிறது. அந்த வருவாயைப் பெறுவதற்காக மோட்டார் வண்டிகள் மீது வரி விதிக்கும் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். குறிப்பாக தமிழக அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அகில இந்தியாவில் தமிழக போக்குவரத்துத் துறை நல்ல முறையில் இயங்கி பல பரிசுகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த முறையில் சிறந்த முறையில் பணியாற்றியமைக்காக இம் மன்றத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பஸ்களுக்குரிய வரியை உயர்த்தியிருக்கிறார்கள். குறிப்பாக நான் ஒன்றே ஒன்றை மட்டும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அவர்கள் செலுத்தும் வரியை உயர்த்தியிருப்பதைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. இப்போதுள்ள சட்டத்தின்படி பஸ்களுக்குப் போடப்பட்டுள்ள இந்த வரியை

@ 317-319ஆம் பக்கங்களில் இணைப்புVIIIஆக அச்சிடப்பட்டுள்ளது.



குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் கட்டவில்லை என்றால், அதற்கு மறுநாள் கட்டினாலும், 50 சதவீதம் பெனல்ட்டி என்று வைத்திருக்கிறார்கள். இரண்டு நாட்கள் கழித்து கட்டினால், நூறு சதவீதம் பெனல்ட்டி என்று வைத்திருக்கிறார்கள். ஒருவர் 12 ஆயிரம் ரூபாய் வரி கட்ட வேண்டுமென்றால், அதற்குப் பெனல்ட்டி 12 ஆயிரம் ரூபாய் என்று இப்போது சட்டம் இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்

(பிற்பகல் 1-40)

கொள்கிறேன். தமிழக அரசு இந்த பஸ் உரிமையாளர்களுக்கு ஒரு கால கெடுவை கொடுக்கின்றது. அதற்காகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 15 நாட்கள் 'கிரேஸ் டைம்' என்று அனுமதிக்கின்றார்கள். அந்த 15 நாட்களை 30 நாட்கள் என்று கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இப்போது வருவாயைப் பெருக்குவதற்காக இதுபோன்று வரிகள் போட்டிருக்கின்றார்கள் என்றும் அதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கின்றார்கள் என்றும் நான் இந்த மாமன்றத்திலே பட்ஜெட் செஷனிலேகூட என்னுடைய கருத்தை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தேன். இந்த டாக்சி பெர்மிட்டுகள் ஸ்டான்டர்ட் வெகிக்கிள்ஸ், மெட்டாடர் வெகிக்கிள்ஸ் போன்ற வாகனங்களுக்கு ஆறு பேர்களுக்கு என்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு டாக்ஸ் ஆக 3 மாதங்களுக்கு ரூ. 150 என்று வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இதுபோன்ற வாகனங்களில் 12 அல்லது 16 பேர்கள் போகலாம் என்று தயாரிப்பாளர்களே வகுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். அந்த உரிமையாளர்கள் 12 அல்லது 16 பேர்களைக்கூட சட்டபூர்வமாக ஏற்றிக்கொண்டு செல்கின்றார்கள். ஆர்.பி.பி. புக் பிரகாரம் அவர்கள் ஆறு பேர்களைத்தான் ஏற்றிச் செல்ல வேண்டும். அவர்கள் 12 பேர்களிலிருந்து 16 பேர்கள்கூட ஏற்றிச்செல்கின்றார்கள். ஆனால் அவர்கள் கொடுக்கும் வரியானது 3 மாதத்திற்கு ரூ. 150 தான். இதிலே ஏற்படும் பிரச்சினை என்னவென்றால், நம்முடைய தமிழகத்திலே அதை யாரும் கேட்பதில்லை, அதைப் பார்ப்பதில்லை. அவர்கள் மேல் சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கவில்லை. என்றாலும் அவர்கள் அண்டை மாநிலங்களுக்குப் போகும்போது, குறிப்பாக ஆந்திரம், புதுவை, கர்நாடகம், கேரளம் பகுதிக்குப் போகும்போது. அங்கே உள்ள போலீஸ்காரர்கள், போக்குவரத்துத் துறை அதிகாரிகள் அவர்களுக்கு இன்னல்கள் கொடுக்கின்றார்கள், குறிப்பாக

ஆந்திரத்தில் திருப்பதிக்குப் பயணம் செல்லவேண்டுமென்றால், இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. அவர்கள் டாக்சியை நிறுத்தி சோதனை செய்து, இதன்பேரில் ரூ. 3,000 அல்லது ரூ. 4,000 வரையில் பெனால்ட்டி என்று போட்டு வசூலித்துவிடுகின்றார்கள். முன்பே சொல்லியது போல், போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் சீட்டுக்கு ரூ. 25 என்று வைத்திருப்பதற்குப் பதிலாக இன்னும் சிறிது உயர்த்தி ரூ. 50 அல்லது ரூ. 75 என்று உயர்த்தினாலும், அவர்கள் கொடுப்பார்கள். எண்ணிக்கையை 10 அல்லது 12 பேர்கள் என்று உயர்த்தினாலும், அதன்படி கொடுக்க உரிமையாளர்கள் தயாராக இருக்கின்றார்கள். அப்படிச் செய்யாததால், தமிழகத்தினுடைய வருமானம், வண்டி ஓட்டுகின்றவர்களுக்கு பெனால்ட்டி போடுவதன் மூலம் அண்டை மாநிலங்களுக்கு ரூ. 7 ஆயிரம், 8 ஆயிரம் என்று போய் விடுகிறது. இந்த நிலைமையை மாற்றியமைத்தால் அரசுக்கு மேலும் 1½ கோடி ரூபாய் வர வாய்ப்பு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வண்டிகள் உரிமையாளர்களும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். எந்தவிதமான வருத்தமும் இன்றி அதை சட்டபூர்வமாகச் செய்தால், கொடுப்பார்கள். அதனால் அவர்களுக்கு நன்மை செய்ததாகவும் ஆகிறது அந்த வரிப் பணம் இழப்பு இல்லாமல் இருக்கும். ஆகவே இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு ஜெயச்சந்திரன் அவர்கள் இதை வரவேற்றது மட்டுமல்ல, இன்னும் வரியை உயர்த்தினாலும் கூட பரவாயில்லை என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு அருமையான ஒரு சட்ட முன்வடிவை போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். பொதுவாகவே பல இடங்களில் வண்டிகள் போகாத பாதைகளில் வண்டிகளை விடுவதுதான் நம்முடைய போக்குவரத்துக் கழகத்தினுடைய வேலையாக இருந்து வருகின்றது. ரொம்ப 'அன்எகானமிக் ரூட்' ஆக இருந்தாலும், மக்கள் நலன்களுக்காக வண்டி விடுவார்கள். அது ஏற்கெனவே கட்டுப்படியாகாத ரூட்தான் என்றாலும் விடுவார்கள். ஆனால் தனியார் நிறுவனங்கள், பஸ்களை கட்டுப்படியாகாத ரூட் ஆக இருந்தால் விட மாட்டார்கள். ஆனால் கட்டுப்படியாகக்கூடிய ரூட் ஆக இருந்தால், கணக்கிடாமல் விடுவார்கள். அந்தத் தனியார் பஸ்கள் அந்த ரூட்டில் விடுவதில்லை. அவர்களுக்கு அந்த வரியை உயர்த்தினால், அதனால் சிரமம் இல்லை. இன்னும்



சொல்லப்போனால், இந்த வரிபோடுவதால், வாகனம் வைத்திருப்பவர்களுக்கு வசதி செய்யலாம். அவர்கள் வசதிக்காகவே இந்த வரி போடுகிறோம் என்று சொல்லலாம். எப்படி என்று சொன்னால், அந்த வாகனம் வைத்திருப்பவர்களுக்கு ரோடுகள் சரியாக இல்லை என்றால், அந்த வரியிலிருந்து அவற்றைப் பழுதுபார்த்து சீராக வைக்கலாம். அதனால் அவர்கள் வாகனங்கள் பழுதடையாது. அதனால் அவர்களுக்கு நல்ல பலன் இருக்கும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வது அவரே நெடுஞ்சாலைத் துறைக்கு அமைச்சராக இருப்பதால், அவர் வரி வசூல் செய்வதோடு மாத்திரம் நின்றுவிடாமல், ரோடுகளிலே இருக்கும் மேடு பள்ளங்களை எல்லாம் சரிசெய்து கொடுக்க வேண்டும். அதற்கு என்று பணத்தை ஒதுக்கி அதிகமாகச் செலவு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், வண்டி ஓட்டுகின்ற உரிமையாளர்கள் எல்லாம் மனநிறைவோடு அந்த வரியைச் செலுத்துவார்கள். அந்த அளவுக்கு ரோடுகளை அமைச்சர் அவர்கள் வைக்க வேண்டும். தயங்காமல் அதற்குச் செலவு செய்ய வேண்டும் என்றும் அந்த அளவுக்கு சாலைகளைப் பராமரிக்க வேண்டும் என்றும் சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று, அமைகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவினுடைய நோக்கத்தைப்பற்றிக் குறிப்பிடும் போது, இந்த அரசானது வருவாயைப் பெருக்குவதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

" . . . . . to augment the revenues of the State, the Government have decided to increase the quarterly tax payable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act . . ."

இந்த அரசாங்கத்தின் வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன்தான் கொண்டு வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. தமிழக மக்கள் நலன்கள் பெறுவது பற்றிக் குறிப்பிடவில்லை. எனக்கு இருக்கின்ற பயம் எல்லாம் ஏற்கெனவே கட்டணத்தை உயர்த்தியாகிவிட்டது மன்றத்திலே நாம் கேட்கும்போதெல்லாம் உறுதிமொழியும் அளிக்கின்றார்கள்.

(பிற்பகல் 1-45)

"நிச்சயமாகக் கட்டணத்தை உயர்த்த மாட்டோம்; அரசாங்கப் போக்குவரத்தானாலும், தனியார் போக்குவரத்தானாலும் கட்டணத்தை உயர்த்த மாட்டோம்'' என்று உறுதிமொழி கொடுக்கிறார்கள். ஆனால் அது கைவிடப்பட்டு, கட்டணத்தை உயர்த்துகிறார்கள். எனவே இந்த வரியை உயர்த்திய பிறகு, அமைச்சரவர்கள் கட்டணம் உயராது என்று உறுதி தந்த பிறகு, இரண்டு, மூன்று மாதங்களுக்குப் பிறகு கட்டணத்தை உயர்த்தி விடுவார்களோ என்ற பயம் இருக்கிறது. அந்த பயம் ஏற்படாத அளவுக்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லுவார்கள் என்று கருதுகிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் வரி உயர்த்தியதால் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்ற திட்டவட்டமான உத்தரவைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்து, இன்றைக்கு இந்த வரி விகிதத்தை உயர்த்தும் அதே நேரத்திலே, செய்ய வேண்டிய வசதிகளைச் செய்வதாகத் தெரியவில்லை. சென்னை நகரை எடுத்துக்கொண்டால், போக்குவரத்து நெரிசல் சொல்ல முடியாது. வாகனங்களிலிருந்து வரும் புகை மண்டலம் போபால் டிராஜடியைவிட அதிகமாக இருக்கிறது. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் வரி கொடுக்கிறவர்களுக்கு சில வசதிகளைச் செய்ய வேண்டும். அந்த வசதிகள் இப்போது கிடையாது. சென்னையிலிருந்து நாகர்கோவிலுக்கு பஸ் போகிறதென்றால், ஆங்காங்கே நிற்கும்போது பயணிகள் கஷ்டப்படுகிறார்கள். வசதிகள் கிடையாது. இந்தக் கஷ்டங்களை நீக்க, நடவடிக்கைகள் கிடையாது. தனியார் பஸ்கள் என்றால், சொல்லவே வேண்டாம். இவைகளை கவனிக்க வேண்டும். குறிப்பாக பஸ், லாரிகள் போன்றவற்றுக்கெல்லாம் வரி கூட்டுவதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், ஆட்டோ போன்றவைகளை சாதாரணமானவர்கள்தான் வைத்திருப்பார்கள். இவைகளுக்கெல்லாம் கட்டணத்தை உயர்த்த வேண்டுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இங்கே பேசிய மூன்று மாண்புமிகு உறுப்பினர்களும் இதை வரவேற்றிருக்கிறார்கள். எனவே நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள அவசியமிராது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் வேன்கள்பற்றிச் சொன்னார்கள். வேன்களைப் பொறுத்தமட்டில் ஏழு சீட்டுகளுக்கு மேலே அனுமதி



கொடுத்தால், அவற்றை ஆம்னிபஸ்களாக வைத்திருக்க வேண்டும். எனவே பின்னால் வருகிற நேரங்களில் அதுபற்றி ஆய்வு செய்து, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் நல்ல கருத்துக்களை எல்லாம் சொல்லிவிட்டு, பாதை எப்படி இருக்க வேண்டுமென்பதை அவருக்கே உரிய பாணியில் சொன்னார்கள். அரசாங்கம் அதற்காக சிறப்பு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசும் போது, இதிலே வருவாய்க்காக மட்டும்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறதே என்று சொன்னார்கள். அரசாங்கத்திற்கு வருகின்ற ஒவ்வொரு வருவாயும் பொது மக்களின் நன்மைக்காகத்தான் செலவழிக்கப்படுகிறதென்ற காரணத்தால், அதையும் இதிலே சொல்ல வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தாலேதான் அதைச் சொல்லவில்லை. எனவே அரசாங்கத்திற்கு வருகிற ஒவ்வொரு ரூபாயும் பொது மக்களின் நன்மைக்காகத்தான் செலவழிக்கப்படுகிறதே ஒழிய அவர்களுடைய நன்மைக்கல்லாமல் வேறு எதற்காகவும் செலவழிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கட்டணம் பற்றிச் சொன்னார்கள். நிச்சயமாக அரசாங்கம், இதைக் காரணமாகச் சொல்லி கட்டணத்தை உயர்த்தாது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். வேறு ஏதாவது காரணங்கள் வந்தால், அன்றைக்கு இப்படிச் சொன்னீர்களே என்று வந்துவிடக் கூடாது. இன்றைக்கு வரியை உயர்த்தி இருக்கிறோமென்றால், கட்டணத்தை உயர்த்தி இதை ஈடு செய்துகொள்ளலாம் என்ற அளவிலே செய்யவில்லை. பின்னால் கட்டணம் உயர்த்தப்படக்கூடாது என்ற அளவிலேதான் அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதையும், அதையும் சம்பந்தப்படுத்திவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கட்டணத்தைச் செலுத்தக்கூடியவர்கள், பயணம் செய்யக்கூடியவர்கள் பல இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், அதை முழுமையாக உணர்ந்து, வழி நெடுக மோட்டல்களை அமைக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கிறோம். முதற்கட்டமாக 60 மோட்டல்களைக் கட்டி முடிக்க திட்டமிட்டு, காரியங்களைச் செய்கிறோம். படிப்படியாக 100 கிலோமீட்டர்களுக்கு ஒரு மோட்டல் விரைவிலே அமைக்க வேண்டுமென்பது திட்டம். அந்த அளவிலே அரசு செயல்பட்டுக் கொண்டிருக்

கிறது. இதிலே வரும் ஒவ்வொரு ரூபாயும் பொது மக்களின் நன்மைக்காகச் செலவழிக்கப்படும் என்பதற்கு உத்தரவாதம் சொல்லி, இதன் காரணமாகக் கட்டணம் உயர்த்தப்பட மாட்டாது என்ற உறுதியைச் சொல்லி, இந்த மன்றத்திலே இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, மோட்டார் வண்டிகள்-வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1985) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, மோட்டார் வண்டிகள்-வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1985) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மோட்டார் வண்டிகள்-வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1985) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 1-50)



## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(4) நடப்புக் கூட்டத்தொடரில் நடைபெற்ற மேலவை அலுவல்கள் குறித்த சில விவரங்கள்.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** :

| | |
|---|---|
| 1. மேலவை நடைபெற்ற நாட்கள் | 33 |
| 2. மேலவை நடைபெற்ற நேரம் | 103 மணி<br>40 நிமிடம் |
| 3. நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் | 47 |
| 4. கவன ஈர்ப்புத் தீர்மானங்களின்மீது அளிக்கப்பட்ட அறிக்கைகள் | 40 |
| 5. அவையில் எழுப்பப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானம் | 1 |
| 6. அவையில் எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினை | 1 |
| 7. ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள் | 27 |
| 8. நிதி நிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள் | 42 |
| 9. அவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகள் | 10 |
| 10. கொள்கை விளக்கக் குறிப்புகள் மீதான விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள் | 91 |
| 11. விடையளிக்கப்பட்ட வினாக்கள் (உடுக்குறியிட்டவை) | 125 |
| 12. குறுகிய கால வினா | 1 |
| 13. அவைமுன் வைக்கப்பட்ட உடுக்குறியிடாத வினாக்கள் | 8 |
| 14. கேட்கப்பட்ட துணை வினாக்கள் | 583 |
| 15. ஆற்றிய 'உரைகளின் எண்ணிக்கை' (18-7-1985 முடிய) | 405 |

282 (4) நடப்புக் கூட்டத்தொடரில் நடைபெற்ற மேலவை அலுவல்கள் குறித்த சில விவரங்கள்

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

| | |
|---|---|
| 16. அவைக்கு அளிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கை | 1 |
| 17. பார்வையாளர்களின் எண்ணிக்கை | 1,171 |
| 18. நிறைவேற்றப்பட்ட அரசின் தீர்மானங்கள் | 19 |
| 19. மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை | 2 |
| 20. மாண்புமிகு அமைச்சர்கள், மேலவை உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட மேலவை நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | 568 |
| 21. தலைமைச் செயலகத் துறைகளுக்கு அனுப்பப்பட்ட மேலவை நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | 259 |
| 22. அச்சுக்கு அனுப்பப்பட்ட மேலவை நடவடிக்கைக் குறிப்புகளின் பக்கங்கள் (18-7-1985 முடிய) | 6,197 |
| 23. உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட பயணப்படி படிவங்களின் எண்ணிக்கை (18-7-1985 முடிய) | 216 |
| 24. உறுப்பினர்களுக்கு வழங்கிய பயணப்படி காசோலைகளின் எண்ணிக்கை | 196 |
| 25. உறுப்பினர்களுக்கு வழங்கிய பயணப்படி (18-7-1985 முடிய) | ரூ. 1,18,633.23 |
| 26. உறுப்பினர்களுக்கு வழங்கிய பயணச் சீட்டுகள் தவணைகள் | 80 |

மேலவை நிகழ்ச்சிகளைச் சிறப்பான முறையிலும், ஒழுங்காகவும் நடத்திச் செல்ல பெருதவி புரிந்த மேலவைச் செயலாளர், அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கும், தலைமைச் செயலக அலுவலர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : தலைவர் அவர்களே, தாங்கள் பல விவரங்களைத் தந்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன். அதேநேரத்தில் உறுப்பினர்களால் அனுப்பப்பட்ட வினாக்களின் எண்ணிக்கை, அதில் பதிலளிக்கப்பட்ட வினாக்களின் எண்ணிக்கை, பதிலளிக்கப்படாமல் பெண்டிங்கில் இருக்கின்ற வினாக்களின் எண்ணிக்கை போன்ற விவரங்களையும் சொன்னால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவையில் விடை அளிக்கப்பட்ட வினாக்களின் எண்ணிக்கையைத்தான் நான் கூறியிருக்கிறேன். ஆனால் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட எண்ணிக்கை விவரங்களைக் கூறுவது வழக்கமில்லை. முடியுமானால் அடுத்த முறை பார்க்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மேலும் அவை நிகழ்ச்சிகளை சரிவரவும், உடனுக்குடனும் வெளியிட்ட பத்திரிகையாளர்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையத்தினருக்கும் எனது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர், அவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-54)

### 7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

276. நத்தம் மற்றும் வேடசந்தூர் தாலுகாக்களைச் சேர்ந்த இரண்டு கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 8—4—1985 ஆம் நாளிட்ட 273 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

277. தமிழ்நாடு, 1979ஆம் ஆண்டு சட்டமன்ற (உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் மருத்துவ செலவு ஈட்டுத்தொகை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் (பணியாளரமைப்பு) துறையின் 16-3-1985 ஆம்

நாளிட்ட 504 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

278. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சட்டமன்ற (கட்டணமில்லா இருப்புப் பாதை பயணம்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் (பணியாளரமைப்பு) துறையின் 11—4—1985 ஆம் நாளிட்ட 662 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

279. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட வளர்ச்சி நிதி விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக வீட்டு வசதி நகர்ப் பகுதி வளர்ச்சித் துறையின் 18-3-1985 ஆம் நாளிட்ட 272 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

280. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் அனைத்து விதித்துறைகளின் முக்கியத்துவத்திலிருந்து மிதில் ஆல்ககாலுக்கு விலக்கு அளிக்கப்பட்டது தொடர்பாக மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 4-9-1984 ஆம் நாளிட்ட, 1182 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ் நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 54 (3) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

281. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் விகித அட்டவணையில் திருத்தம் செய்வது தொடர்பாக வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 26-3-1985 ஆம் நாளிட்ட, 284 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].



ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

195. பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை. (1985-86) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

196. பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (1985-86) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

197. பொது நிறுவனங்கள் குழுவின் பத்தாவது அறிக்கை. (1985-86) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

198. பொது நிறுவனங்கள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (1985-86) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

199. பொது நிறுவனங்கள் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை. (1985-86) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

200. பொதுக் கணக்குக் குழுவின் முதலாவது அறிக்கை. (1985-86) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

201. பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கை. (1985-86) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

202. பொதுக் கணக்குக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (1985-86) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

203. பொதுக் கணக்குக் குழுவின் நான்காவது அறிக்கை. (1985-86) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

204. பொதுக் கணக்குக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (1985-86) (ஆங்கிலம்).

* 205. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னை மாநகர் காவல்—தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1985).

* 206. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1985).

*207. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1985).

*208. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு வரி விதிப்புத் திருத்தச் (காலவரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1985).

*209. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு, பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1985).

*210. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு, தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1985).

211. பொதுக் கணக்குக் குழுவின் ஆறாவது அறிக்கை. (1985-86) (ஆங்கிலம்).

212. பொதுக் கணக்குக் குழுவின் ஏழாவது அறிக்கை. (1985-86) (ஆங்கிலம்).

213. பொதுக் கணக்குக் குழுவின் எட்டாவது அறிக்கை. (1985-86) (ஆங்கிலம்).

214. பொதுக் கணக்குக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (1985-86) (ஆங்கிலம்).

215. பொதுக் கணக்குக் குழுவின் பத்தாவது அறிக்கை. (1985-86) (ஆங்கிலம்).

* 18-7-1985 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.



## இணைப்பு I

[194 ஆம் பக்கத்தில் இனம் 3(1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

திருச்சி மாவட்டம் முதுவத்தூரில் உள்ள முன்னோடி சிமெண்ட் ஆலையை 6—6—1974 அன்று மைய அரசின் சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (Cement Research Institute of India) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக மாநில அரசு அளித்தது. இந்த ஆலையை தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (டான்செம்) 2-12-1983 முதல் ஏற்றுள்ளது. இந்த ஆலையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் பெரும்பாலோர் நட்ட ஈடு பெற்று விட்டதால், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அவர்களை ஏற்க சாத்தியமில்லை. இருப்பினும் புதிதாக தொழிலாளர்களை சில குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் நியமிக்கலாம் என டான்செம் நிறுவனம் கருதியது. டான்செம் நிறுவனம் ஏற்கெனவே அதிக திறன் கொண்ட சிமெண்ட் ஆலைகளை இயக்கி வருவதால் முதுவத்தூர் சிமெண்ட் ஆலையை மேலும் ஏற்று நடத்த வேண்டுமா அல்லது அதனை அதிக விலை கொடுப்பவருக்கு விற்று விடலாமா என்ற செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

## இணைப்பு II

[196 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனை 'பி' அறுவை சிகிச்சை கூடத்தில் ரூ. 50,000-ம் செலவில் நிழல்படாத இரண்டு புதிய விளக்குகள் நிறுவ இருப்பதால் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் தேதியிலிருந்து மூடப்பட்டது. அறுவை சிகிச்சை அளிப்போர் அக்கூடத்தின் கூரை விளிம்புகளிலிருந்து நீர் ஒழுக்கம் ஏற்படுவதாலும், அடிக்கடி காரை உதிர்வதாலும் அறுவைக்கூடம் பாதிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். அறுவைக் கூடத்திற்கு நீண்ட நாட்களாகவே கட்டிட பராமரிப்புத் தேவைப் படுவதால் அறுவை சிகிச்சை அளிப்போர் கூடத்தில் அவ்வறுவைக் கூடத்தை பழுதுபார்க்கவும் பழைய விளக்குகளை மாற்றி புதிய விளக்குகள் பொருத்துவதும் சேர்ந்தாற்போல் செய்ய முடிவு செய்து 1935 ஏப்ரல் மாதம் 8 ஆம் தேதி மூடுவது என முடிவு செய்யப்பட்டது.

அவ்வாறு மூடுவது என முடிவு செய்யும் தருணத்தில் பழுதுபார்க்கவும், பராமரிப்புப் பணிக்காகவும் ஆகும் விரிவான கணக்குபற்றி பொதுப்பணித் துறை (கட்டிடம்) யுடன் ஆலோசித்து அவர்களிடம் கூரைகளுக்கும் சுவர்களுக்கும் வண்ணப்பூச்சு பூசுவதற்கு இதர பணிகளுக்கும் எழுத்துமூலம் கொடுக்கப்பட்டது. அறுவை சிகிச்சை கூடத்தில், 1985 மே மாத இறுதியில் இரண்டு விளக்குகளும் பொருத்தப்பட்டன. பழுதடைந்திருந்த உத்திரங்கள் ஜூன் மாதம் முதல் வாரத்தில் பழுது பார்க்கப்பட்டன. வண்ணப்பூச்சும் செய்யப்பட்டு விரைவில் முடிக்கப்பட்டுவிடும்.

இவ்வறுவைக்கூடம் மூடப்படும் தருவாயில், இங்கு நடக்க வேண்டிய அறுவை சிகிச்சைப் பணிகள் பழைய பகுதியிலுள்ள அறுவை சிகிச்சைக் கூடங்களுக்கு பிரித்து அனுப்பப்பட்டு நோயாளிகளுக்கான சிகிச்சைப் பணிகள் தடை படாதவாறு பார்த்துக் கொள்ளப்பட்டது. அவசர சிகிச்சைகள் அம்மருத்துவமனையிலுள்ள இரண்டு அவசர சிகிச்சைக்கூடங்களிலேயே செய்யப்பட்டன. இதனால் இம்மருத்துவமனையின் அவசர அறுவை அறுவை சிகிச்சைகளும், இதர சிகிச்சைகளும் தடையின்றி செயல்பட்டு வருகின்றது.



## இணைப்பு III.

[199 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 125 of 1985.

(As passed by the Assembly.)

*A Bill to provide for the inapplicability of the provisions of Chapter XXXVI of the Code of Criminal Procedure, 1973 to offences under certain taxation laws in the State of Tamil Nadu.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Taxation Laws (Inapplicability of Limitation) Act, 1985.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Chapter XXXVI of the Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1974) not to apply to certain offences.*—Nothing in Chapter XXXVI of the Code of Criminal Procedure 1973 (Central Act 2 of 1974) shall apply to—

(i) any offence punishable under any of the enactments specified in the Schedule; or

(ii) any other offence, which under the provisions of that Code, may be tried along with such offence,

and every offence referred to in clause *(i)* or clause *(ii)* may be taken cognizance of by the court having jurisdiction as if the provisions of that Chapter were not enacted.

## THE SCHEDULE.

1. The Tamil Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1935).

2. The Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).

3. The Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).

4. The Tamil Nadu Local Authorities Finance Act, 1961 (Tamil Nadu Act 52 of 1961).

5. The Tamil Nadu Additional Sales Tax Act, 1970 (Tamil Nadu Act 14 of 1970).

6. The Tamil Nadu Sales Tax (Surcharge) Act, 1971 (Tamil Nadu Act 24 of 1971).

7. The Tamil Nadu Tax on Luxuries in Hotels and Lodging Houses Act, 1981 (Tamil Nadu Act 6 of 1981).



இணைப்பு

[210 ஆம் பக்கத்தில் இனம் 4 (9)-க்காந் அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 46 OF 1985.

(As passed by the Assembly.)

*A Bill to regulate and control in the public interest the scrap merchants and dealers in second-hand property and the owners of automobile workshops and tinker shops and for the licensing of such scrap merchants and dealers in second-hand property and owners of automobile workshops and tinker shops in the State of Tamil Nadu and for matters connected therewith.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

1. *Short title, extent and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Scrap Merchants and Dealers in Second-hand Property and Owners of Automobile Workshops and Tinker Shops (Regulation, Control and Licensing) Act, 1985.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(*a*) "dealer in second-hand property" means any person who carries on the business of buying or selling any second-hand property and includes an agent, who, by himself or through his servants, buys or sells any second-hand property on behalf of any dealer;

(*b*) "Government" means the State Government;

(*c*) "owner" in relation to an automobile workshop or a tinker shop, means the person who, or the authority which, has the ultimate control over the affairs of the automobile workshop or as

the case may be, the tinker shop, and where the said affairs are entrusted to any other person whether called a manager, managing director, managing agent, superintendent or by any other name, such other person;

(d) "place of business" in relation to a scrap merchant or dealer in second-hand property or to an owner of an automobile workshop or a tinker shop includes—

(i) in case where he carries on business through an agent (by whatever name called), the place of business of such agent;

(ii) a warehouse, godown or other place where he stores the property or goods or materials relating to his business; and

(iii) a place where he keeps his books of account;

(e) "scrap merchant" means any person who carries on the business of buying or selling any scrap materials;

(f) "tinker shop" means a place where gadgets, machines, cars, household utensils or the like are repaired, adjusted, changed or otherwise mended

3. *Scrap merchants and dealers in second-hand property and owners of automobile workshops and tinker shops to obtain licences annually.*—(1) No scrap merchant or dealer in second-hand property or owner of an automobile workshop or a tinker shop shall, on or after the date of the commencement of this Act, carry on, or continue to carry on, the business as such scrap merchant or dealer in second-hand property or the business of running such automobile workshop or tinker shop in any area in this State, unless he has obtained a licence in this behalf under this Act.

*Explanation.*—Where a scrap merchant or dealer in second-hand property or an owner of an automobile workshop or a tinker shop has more than one shop or place of business, whether in the same town or village or in different towns and villages, he shall obtain a separate licence in respect of each such shop or place of business.

(2) Every licence granted under this Act shall expire on the last day of the year for which it was granted, but may be renewed from year to year.





4. *Grant and refusal of licences.*—(1) Every application for a licence under section 3 shall be made in writing to such authority as may be prescribed (hereinafter referred to as the licensing authority).

(2) In considering the application for the grant of a licence under this section, the licensing authority shall have regard to the following matters, namely :—

(a) the interest of the public generally ;

(b) whether the applicant has been convicted of any offence punishable under Chapter XVII of the Indian Penal Code (Central Act XLV of 1860) ;

(c) whether permission has been obtained under section 5 in respect of the place of business ;

(d) such other matters as may be prescribed.

(3) Before any licence is refused under sub-section (2), the applicant shall be given an opportunity to make his representations within a reasonable time, not ordinarily exceeding fifteen days and any representation made by him in this behalf shall be duly taken into consideration before final orders are passed.

(4) In granting or refusing to grant a licence under this section, the licensing authority may consult such authority or officer as may be prescribed.

(5) Any person aggrieved by an order of the licensing authority under this section may within such period and in such manner as may be prescribed, appeal to such authority as the Government may specify in this behalf and such authority may make such order in the case as it may think fit.

(6) Every licence shall be granted in such form and subject to such conditions as may be prescribed and on payment of such fee not exceeding twenty-five rupees as may be prescribed.

*5. Application to be made for establishment of any place of business of scrap merchant or for dealing in second-hand property or an automobile workshop or tinker shop.*—(1) Every person intending to establish any place of business of scrap merchant or for dealing in second-hand property or any automobile workshop or tinker shop shall, before establishing such place, make an application in writing to the licensing authority for permission to undertake the intended work.

(2) The application shall be accompanied by—

(*a*) a plan of the place of business or automobile workshop or tinker shop prepared in such manner as may be prescribed ;

(*b*) such other particulars as may be prescribed.

(3) The licensing authority shall, as soon as may be, after the receipt of the application—

(*a*) grant the permission applied for subject to such conditions as it thinks fit to impose, or

(*b*) refuse permission if it is of opinion that such establishment—

(i) is objectionable by reason of the density of population in the locality; or

(ii) is likely to cause a nuisance to the residents of the locality ; or

(iii) is likely to cause traffic or health hazards to the residents of the locality ; or

(iv) does not contain adequate space for parking the vehicles which would be normally attracted.

(4) Before any permission is refused under clause (*b*) of sub-section (3), the applicant shall be given an opportunity to make his representation within a reasonable time, not ordinarily exceeding fifteen days and any representation made by him in this behalf shall be duly taken into consideration before final orders are passed.



(5) Before granting or refusing permission under this section, the licensing authority shall consult and have due regard to the opinions of the health officer and traffic police as regards the suitability of the place where the business of scrap merchant or dealing in second-hand property or the automobile workshop or tinker shop is to be established.

(6) If orders on an application for permission under sub-section (1) are not received by the applicant within sixty days after the receipt of the application by the licensing authority, permission shall be deemed to have been granted subject to the provisions of any law for the time being in force applicable to the establishment of the automobile workshop or the tinker shop.

(7) Any person aggrieved by an order of the licensing authority under this section refusing to grant a permission under this section may, within such time as may be prescribed, appeal to such authority as the Government may specify in this behalf and such authority may make such order in the case as it may think fit.

(8) Every permission shall be granted in such form and subject to such conditions as may be prescribed and on payment of such fee not exceeding two hundred rupees as may be prescribed.

6. *Provision in respect of certain existing places of business.*—(1) Notwithstanding anything contained in this Act and subject to the provisions of sub-section (2), every scrap merchant or dealer in second-hand property or an owner of an automobile workshop or a tinker shop carrying on the business as such scrap merchant or dealer in second-hand property or the business of running such automobile workshop or tinker shop in any place of business, immediately before the date of the commencement of this Act, may carry on such business at such place of business.

(2) No person entitled to carry on any business under sub-section (1) shall continue to carry on such business after the expiry of a period of six months from the date of commencement of

this Act unless he obtains a licence under section 4 for carrying on such business and a permission under section 5 in respect of the place of business.

7. *Scrap merchant and dealers in second-hand property and owners of automobile workshops or tinker shops to keep and maintain accounts and books.*—(1) Every scrap merchant or dealer in second-hand property and every owner of an automobile workshop or tinker shop shall be bound to keep and maintain such accounts and books and in such manner as may be prescribed. He shall be responsible for the correct and up-to-date maintenance of such accounts and books. The accounts and books shall contain the following particulars, namely :—

(*a*) the names and addresses of the persons from whom the goods relating to the business were purchased ;

(*b*) the dates of such purchases and the amounts paid for such purchases ;

(*c*) such other matters as may be prescribed.

(2) All records or entries made in the accounts and books referred to in sub-section (1) shall be either in Tamil or English or in such language of the locality as may be prescribed ; and all such accounts and books shall be open to inspection at any time by the licensing authority or the police officer having jurisdiction.

8. *Scrap merchant or dealer in second-hand property and owner of automobile workshop or tinker shop to keep and maintain a register of workers employed.*—Every scrap merchant or dealer in second-hand property and every owner of an automobile workshop or tinker shop, shall, in addition to the accounts and books referred to in section 7, also keep and maintain an up-to-date register of workers employed by him. Such register shall contain the following particulars, namely:—

(1) the names and addresses of the workers ;

(2) passport size photographs of the workers taken and affixed against the name of the workers ;

(3) character and conduct roll of the workers ;

(4) such other matters as may be prescribed.



9. *Power to cancel licence.*—(1) The licensing authority may, at any time, during the term of any licence, by an order in writing, cancel the licence—

(*a*) if the licensee carries on the business in contravention of any of the provisions of this Act or the rules made thereunder or of the conditions of the licence, or

(*b*) if any reason for which such authority could have refused to grant the licence under sub-section (2) of section 4, is brought to the notice of that authority after the grant of the licence, or

(*c*) if the licensee is convicted of any offence against this Act or of any congnizable and non-bailable offence, or

(*d*) if the licensee maintains false accounts.

(2) Before cancelling a licence under sub-section (1) the licensing authority shall give the licensee a notice in writing stating the grounds on which it is proposed to take action and requiring him to show cause against it within such time as may be specified in the notice.

(3) Any person aggrieved by an order of the licensing authority conceling a licence under sub-section (1), may, within such time and in such manner as may be prescribed, appeal to such authority as the Government may specify in this behalf and such authority may make such order in the case it may think fit.

10. *Certain acts of scrap merchants, dealers in second-hand property, owners of automobile workshops or tinker shops and of persons offering for sale to such merchant, dealer or owner to be punishable*—(1) Any person who—

(*a*) Offers to a scrap merchant or dealer in second-hand property or an owner of an automobile workshop or tinker shop any article by way of sale or otherwise being unable or refusing to give a satisfactory account of the means by which he became possessed of the article; or

(b) wilfully gives false information to such merchant, dealer or owner as to whether an article offered by him by way of sale or otherwise is his own property or not, or as to his name and address, or as to the name and address of the owner of the article ;

Shall be punished with imprisonment for a term which may extend to six months or with fine which may extend to one thousand rupees or with both.

(2) In every case falling under sub-section (1) and also in any case where, on an article being offered by way of sale or otherwise to such merchant, dealer or owner, he reasonably suspects that it has been stolen or otherwise illegally or clandestinely obtained, such merchant, dealer or owner shall, in the absence of reasonable excuse, inquire into the name and address of the person concerned, and forthwith communicate to the nearest police station the facts of the case.

(3) A list of articles believed to have been stolen may be delivered by the police to any such merchant, dealer or owner licensed under this Act and thereupon it shall be the duty of such merchant, dealer or owner—

(a) if any article answering the description of any of the articles set forth in any such list is offered to him by any person by way of sale or otherwise, to proceed in accordance with the provisions of sub-section (2); and

(b) if any such article in already in his possession, forthwith to communicate to the nearest police station the facts of the case (including full particulars as to the name and address of the person concerned in the delivery of the article to the merchant, dealer or owner) and also, if so required by the Police, to deliver the article to them.

(4) Every scrap merchant, dealer in second-hand property of owner of an automobile workshop or tinker shop buying any article knowing or having reason to believe the same to be stolen property shall be punished with imprisonment of either description for a term which may extend to three years and with fine.



11. *Penalty for carrying on business without licence.*—Whoever carries on the business of scrap merchant or dealer in second-hand property or the business of running an automobile workshop or a tinker shop without a licence or otherwise than in conformity with the terms and conditions of a licence shall be punished with imprisonment may extend to one year or with fine which may extend to five thousand rupees.

12. *Offences by companies.*—(1) Where an offence under this Act has been committed by a company, every person who, at the time the offence was committed, was in-charge of, and was responsible to the company for the conduct of the business of the company, as well as the company, shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly:

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment, if he proves that the offence was committed without his knowledge or that he had exercised all due diligence to prevent the commission of such offence.

(2) Notwithstanding anything contained in sub-section (1), where any offence under this Act has been committed by a company and it is proved that the offence has been committed with the consent or connivance of or is attributable to, any neglect on the part of any director, manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer shall be deemed to be guilty of that offence and shall be liable to be proceeded against and punished accordingly.

*Explanation.—For the purposes of this section—*

(a) "company' means any body corporate, and includes a firm or other association of individuals; and

(b) "Director" in relation to a firm means a partner in the firm

13. *Penalties.*—Whoever contravenes any of the provisions of this Act or any rule made thereunder or of any terms and conditions of a licence or permission granted shall, if no other penalty is elsewhere provided in this Act for such contravention, be punished with imprisonment which may extend to one year or with fine which may extend to five thousand rupees and, if such person has been previously convicted whether under this section or any other provision contained in this Act, with imprisonment which may extend to two years or with fine which may extend to ten thousand rupees.

14. *Power to try offences.*—(1) No court inferior to that of a Metropolitan Magistrate or a Judicial Magistrate of the first class shall try any ocence punishable under this Act.

(2) Notwithstanding anything contained in section 29 of the Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1974), it shall be lawful for the Magistrate specified in sub-section (1) to pass a sentence of fine not exceeding ten thousand rupees.

(3) No court shall take cognizance of an offence punishable under this Act other than an offence punishable under section 10 except on a complaint in writing made by prescribed authority.

15. *Cognizance of offence.*—Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1974) any offence punishable under section 10 shall be a cognizable offence within the meaning of that Code:

Provided that notwithstanding contained in that Code no police officer not below the rank of a Sub-Inspector shall investigate any offence punishable under section 10 or shall make an arrest.

6. *Power to make rule.*—(1) The Government may make rules for carrying out all or any of the purposes of this Act.

(2) (a) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Government Gazette*, and unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(*b*) All notifications issued under this Act shall, unless they are expressed to come into force on a particular day, come into force on the day on which they are published.



(3) Every rule made or notification issued under this Act shall as soon as possible after it is made or issued, be placed on the Table of both Houses of the Legislature, and if, before the expiry of the session in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or notification or both Houses agree that the rule or notification should not be made or issued, the rule or notification shall thereafter have effect only in such modified form or be of no effect as the case may be, so how-ever, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or notification.

17. *Saving.*—The provisions of this Act shall be in addition to and not in derogation of, any other law for the time being in force, and nothing contained herein shall exempt any person from any proceeding by way of investigation or otherwise which might, apart from this Act be instituted against him.

சென்னை-600 008

## இணைப்பு V

[229 ஆம் பக்கத்தில் இனம் 4 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க).]

L.A. BILL No. 40 OF 1985.

(As passed by the Assembly.)

A Bill to amend the Tamil Nadu Industrial Establishments (Conferment of Permanent Status to Workmen) Act, 1981.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Industrial Establishment (Conferment of Permanent Status to Workmen) Amendment Act, 1985.

(2) it shall be deemed to have come into force on the 1st day of January, 1982.

2. *Amendment of section* 3, *Tamil Nadu Act* 46 *of* 1981.—In section 3 of the Tamil Nadu Industrial Establishments (Conferment of Permanent Status to Workmen) Act, 1981 (Tamil Nadu Act 46 of 1981) hereinafter referred to as the principal Act),—

(1) in the *Explanation*, for the opening portion beginning with the words "For the purposes of this section" and ending with the words "include the days on which—", the following shall be substituted, namely:—

"For the purposes of computing the continuous service referred to in sub-sections (1) and (2), a workman shall be deemed to be in continuous service during the days on which—".

(2) the *Explanation* shall be numbered as Explanation-I and after *Explanation*—I as so numbered, the following *Explanation* shall be added, namely :—

"*Explanation II.*—For the purposes of the section, "law" includes any award, agreement, settlement, instrument or contract of service whether made before or after the commencement of this Act".



3. *Validation.*—Notwithstanding anything contained in any judgement, decree or order of any court of other authority, all acts done or proceedings taken in pursuance of section 3 (including the Explanation) of the principal Act at any time on or after the 1st day of January, 1982 and before the date of publication of this Act in the *Tamil Nadu Government Gazette* in relation to every workman in an industrial establishment for the purpose of conferment of permanent status to such workman by any officer or authority shall for all purposes be deemed to be, and to have always been, validly done or taken in accordance with law as if section 3 of the principal Act as amended by this Act had been in force at all material times when such acts or proceedings were done or taken.

## இணைப்பு VI

[243 ஆம் பக்கத்தில் இனம் 4 ((4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க).]

## L.A. BILL 36 OF 1985

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Madras City Police Act,* 1888 *and the Tamil Nadu District Police Act,* 1859.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Police and the Tamil Nadu District Police Amendment) Act, 1985.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section 51-A, Tamil Nadu Act III of* 1888.—In section 51-A of the Madras City Police Act, 1888 (Tamil Nadu Act III of 1888).—

(i) in sub-section (1).—

(*a*) in clause (a), the portion beginning with the words "who has not been born" and ending with the words, figures and letters "the 1st April 1960" shall be omitted;

(b) the *Explanation* shall be omitted.

(ii) after sub-section (1) as so amended, the following sub-sections shall be inserted, namely:—

"(1-A) Whenever the Commissioner has reason to believe that any person in the City of Madras who has been convicted of an offence under section 135 of the Customs Act, 1962 (Central Act 52 of 1962) is likely again to engage himself in the commission of the offence for which he was convicted, the Commissioner may, by an order in writing signed by him, require such person to remove himself outside the said city and any district or districts or any part thereof contiguous thereto, by such route and within such time as may be specified in the order;

(1-B) The order under sub-section (1) or sub-section (1-A) shall specify the period not exceeding two years during which such order shall remain in force".



(iii) in sub-sections (2), (3), (4), (5) and (6) after the expression "sub-section (1)", the expression "or sub-section (1-A)" shall be inserted.

3. *Amendment of Schedule to Central Act XXIV of* 1859.—In the Schedule to the Tamil Nadu District Police Act, 1859 (Central Act XXIV of 1859), after the figures "50", the figures and letter "51-A" shall be inserted.

## இணைப்பு VII.

[265 ஆம் பக்கத்தில் இனம் 4 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க).]

L.A. BILL No. 47 OF 1985.

(As passed by the Assembly.)

*A Bill to provide for the establishment and maintenance of a fire Service in the State of Tamil Nadu.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

### CHAPTER I

*Preliminary.*

1. *Short title, extent and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Fire Service Act 1985.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall come into force on such date as the Government may by notification appoint; and different dates may be appointed for different areas.

2. *Definitions.*—In this Act, unlses the context otherwise requires.—

(a) "Director" means the Director of the Fire Service appointed under section 4;

(*b*) "fire-fighting property" includes—

(i) lands and buildings used as the stations and static water tanks;

(ii) fire engines, appliances, equipments, tools, implements and things whatsoever used for fire-fighting;

(iii) motor vehicles and other means of transport used in connection with fire-fighting; and

(iv) uniform and badges of rank;

(*e*) "Fire Service" means the Tamil Nadu Fire Service established and maintained under this Act.



(*d*) "fire station" means any post or place declared generally or specially, by the Government to be a fire station;

(*e*) "Government" means the State Government;

(*f*) "officer-in-charge of a fire-station' includes when the officer-in-charge of the fire-station is absent from the station or unable from illness or other cause to perform his duties, the fire officer present at the station who is next in rank to such officer.

3. *Establishment and maintenance of Fire Service.*—There shall be established and maintained by the Government a Fire Service to be called the Tamil Nadu Fire Service for the areas in which this Act is in force.

4. *Appointment of Director of Fire Service.*—The Government shall appoint a person to be the Director of the Fire Service.

5 *Superintendence and control of Fire Service.*—(1) Subject to the control of the Government the superintendance and control of the Fire Service shall vest in the Director and shall be carried on by him in accordance with the provisions of this Act and of any rule made thereunder.

(2) The Government may appoint such officers as they may deem fit to assist the Director in the discharge of his duties.

6. *Appointment of Members of Fire Service.*—The Government shall appoint such number of officers and servants as they think fit to be the Members of Fire Service.

7. *Issue of certificate to Members of Fire Service.*—(1) Every person shall, on appointment as a Member of Fire Service, receive a certificate in the prescribed form under the seal of the Government or Director or an officer authorised in this behalf by the Government, and thereupon such person shall have the powers, functions and privilege of a Member of Fire Service under this Act.

(2) The certificate referred to in sub-section (1) shall cease to have effect when the person named therein ceases, for any reason to be a Member of Fire Service and on his ceasing to be such Member, he shall forthwith surrender the certificate, uniform and badges of rank to any officer empowered to receive the same.

(3) During any term of suspension, the powers, functions and privileges vested any Member of Fire Service shall be in abeyance but such Member shall continue to be subject to the same discipline and penalties as he would have been if he had not been suspended.

8. *Auxiliary Fire Service.*—(1) Whenever it appears to the Government that it is necessary to augment the Fire Service they may raise an auxiliary service by enrolment of volunteers for such area and on such term and conditions as they may deem fit.

(2) Every such volunteer shall receive a certificate in the prescribed form have the same powers and protection, be liable to all such duties and penalties and be subordinate to the same authorities as a regular Member of Fire Service.

9. *Expenditure on Fire Service.*—(1) The entire expenditure in connection with the Fire Service shall be met out of the consolidated Fund of the State.

(2) Notwithstanding anything contained in any law for the time being in force, the local authority of any area in which this Act is in force shall pay to the Government such contribution towards the cost of the portion of the Fire Service established and maintained in that area as the Government may direct from time to time.

## CHAPTER II.

## POWERS OF THE GOVERNMENT, THE DIRECTOR AND MEMBERS OF FIRE SERVICE.

10. *Powers of Government to make orders.*—The Government may, from time to time make such general or special orders as they think fit—

(*a*) for providing Fire Service with such appliances and equipments as they deem necessary;

(*b*) for providing adequate supply of water and for securing its availability for use;

(*c*) for constructing or providing stations or hiring places for accommodating the Members of Fire Service and the firefighting property;



(*d*) for giving rewards to persons who have given notice of fires or to those who have rendered effective service to the Fire-Service in the discharge of its duties;

(*e*) for the training discipline and good conduct of the Members of Fire Service.

(*f*) for the speedy attendance of Members of Fire Service with necessary appliances and equipment on the occasion of any alarm or fire of rescue or of both;

(*g*) for sending Members of Fire Service with appliances and equipments beyond the limits of any area in which this Act is in force for purposes of fire fighting or rescue or of both in the neighbourhood of such limits;

(*h*) for the employment of the Members of Fire Service in any rescue, salvage or other similar work;

(*i*) for regulating and controlling the powers duties and functions of the Director;

(*j*) generally for the maintenance of Fire Service in a due state of efficiency; and

(*k*) for giving compensation to persons who while rendering effective service to the Fire Service in the discharge of their duties, met with accident and in the event of their death to the dependents.

11. *Powers of Members of Fire Service on occurrence of fire.*—(1) On the occurrence of a fire in any area in which this Act is in force any Member of Fire Service who is in charge of fire-fighting operations on the spot may—

(*a*) remove or order any other Member of Fire Service to remove any person who by his presence interferes with or impedes the operation for extinguishing, or preventing the spread of, fire, or for saving life or property;

(*b*) close any street or passage in or near which a fire is burning;

(*c*) for the purpose of extinguishing of preventing the spread of fire break into or break through or pull down any premises for the passage of hose or other appliances or equipment, to extinguish or prevent the spread of fire or cause them to be broken into or broken through or pulled down, as the occassion demands doing as like damage as possible.

(d) require the authority in charge of water-supply in the area to fill static water tanks generally or to regulate the water mains so as to provide water at a specified pressure at the place where fire has broken out;

(e) utilise the water of any stream cistern, well or tank or of any available source of water, public or private for the purpose of extinguishing or preventing the spread of such fire;

(f) exercise the same powers for dispersing an assembly of persons likely to obstruct fire fighting operations as if he were an officer-in-charge of a Police Station and as if such an assembly were an unlawful assembly and shall be entitled to the same immunities and protection as such an officer, in respect of the exercise of such powers ; or

(g) generally take such other measures as may appear to him to be necessary for extinguishing the fire or for the protection of life or property.

(2) Any damage done on the occasion of fire by Members of Fire Service in the discharge of their duties shall be deemed to be damage by fire within the meaning of any policy of insurance against fire.

12. *Powers of Director to enter into arrangements for assistance.*—The Director may, with the previous sanction of the Government enter into arrangements with any person who employs and maintains personnel, or keeps equipment for fire-fighting purposes to secure on such terms as to payment or otherwise as may be provided under the arrangements, the provisions by that person of assistance for the purpose of dealing with fire in any area in which this Act is in force.

13. *Preventive measures.*—(1) The Government may, by notification require the owners or occupiers of any premises or class of premises, which in their opinion are used for any purpose which is likely to cause a risk of fire, to take such precautions as may be specified in such notification.

(2) Where a notification has been issued under sub-section (1), it shall be lawful for the Director or any officer of fire service authorised by the Government in this behalf to direct the removal of objects or goods, likely to cause a risk of fire to a place of safety and on failure of the owner or occupier to do so, the Director or such



officer may, after giving the owner or occupier a reasonable opportunity of making representation, seize, detain or remove such objects or goods.

## CHAPTER III.

## PENALTIES.

14. *Penalty for violation of duty, etc.*—Any Member of Fire Service who—

(a) is found to be guilty of any violation of duty or wilful breach of any provisions of this Act or of any rule or order made thereunder; or

(b) is found to be guilty of any act of cowardice; or

(c) withdraws from the duties or resigns his office without permission or without having given previous notice of at least two months; or

(d) being absent on leave fails, without reasonable cause, to report himself for duty on the expiration of such leave, or

(e) accepts any other employment or office unless permitted under section 18.

Shall be punishable with imprisonment which may extend to three months or with fine which may extend to an amount not exceeding three months' pay of such Member or with both.

15. *Failure to take precautions.*—Whoever fails without reasonable cause to comply with any of the requirements specified in a notification issued under sub-section (1) of section 13 or of a direction issued under sub-section (2) of that section shall be punishable with fine which may extend to five hundred rupees.

16. *Wilfully obstructing fire-fighting operations.*—Any person who wilfully obstructs or interferes with any Member of Fire Service who is engaged in fire-fighting operations or is exercising his powers under section 11 shall be punishable with imprisonment which may extend to three months or with fine which may extend to five hundred rupees or with both.

17. *False report.*—Any person who knowingly gives or causes to be given a false report of the outbreak of a fire to any person authorised to receive such report by means of a statement, message or otherwise shall be punishable with imprisonment which may extend to three months or with fine which may extend to five hundred rupees or with both.

18. *Bar to other employment.*—No Member of Fire Service shall engage in any employment or office whatsoever other than his duties under this Act unless expressly permitted to do so by the Director or the Government.

19. *Offences by companies.*—(1) Where an offence under this Act has been committed by a company, every person who, at the time the offence was committed was in-charge of, and was responsible to, the company for the conduct of the business of the company, as well as the company, shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly:

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment, if he proves that the offence was committed without his knowledge or that he had exercised all due diligence to prevent the commission of such offence.

(2) Notwithstanding anything contained in sub-section (1) where any offence under this Act has been committed by a company and it is proved that the offence has been committed with the consent or connivance of, or is attributable to, any neglect on the part of any director, manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer shall be deemed to be guilty of that offence and shall be liable to be proceeded against and punished accordingly.

*Explanation.*—For the purposes of this section,—

(*a*) "company" means any body corporate, and includes a firm or other association of individuals; and

(*b*) "director" in relation to a firm means a partner in the firm.



## CHAPTER IV.

### *Miscellaneous.*

20. *Employment on other duties.*—It shall be lawful for the Government or any officer of Fire Service authorised by them in this behalf, to employ any Member of Fire Service in any rescue, salvage or other work for which he is suitable by reason of his training and experience.

21. *Inquiry into origin of fire and report to Executive Magistrate.*—Where any fire has occurred within any area in which this Act is in force, the seniormost officer of Fire Service not below the rank of an officer-in-charge of a fire station in that area shall make a report thereon to the Executive Magistrate having jurisdiction over the area in which such fire occurred; and the said Executive Magistrate may, in any case where he may deem fit, summon witnesses and take evidence in respect of such fire.

22. *Power to obtain information.*—Any officer of Fire Service not below the rank of an officer in charge of a fire station may, for the purpose of discharging his duties under this Act, require the owner or occupier of any building or other property to supply information with respect to the character of such building or other property, the available water supplies and the means of access thereto and other material particulars, and such owner or occupier shall furnish all the information in his possession.

23. *Utilisation of water.*—No charge shall be levied or collected by any authority in charge of water-supply or local authority or institution or other private person for water utilised by Fire Service for the purpose of fire-fighting operation, training or filling of static water tanks.

24. *No compensation for interruption of water-supply.*—No authority in charge of water-supply in an area shall be liable to any claim for compensation for damage by reason of any interruption of supply of water occasioned only by compliance of such authority with the requirement specified in clause (*d*) of sub-section (1) of section 11.

25. *Police officers to aid.*—It shall be the duty of Police Officers of all ranks to aid the Members of Fire Service in the discharge of their duties under this Act.

26. *Indemnity.*—No suit, prosecution or other legal proceedings shall lie against any person for anything which is in good faith done or intended to be done in pursuance of this Act or any rule or order made thereunder.

27. *Power to make rules.*—(1) The Government may, make rules for carrying out the purposes of this Act.

(2) In particular and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely :—

(*a*) the number and grades of officers and Members of Fire Service;

(*b*) the manner of appointment of Members of Fire Service;

(*c*) the form of the certificate to be issued to the Members of Fire Service;

(*d*) the conditions of service of the Members of Fire Service including the ranks, pay and allowances, hours of duty and leave, maintenance of discipline and removal from service;

(*e*) the circumstances in which and the conditions subject to which the Members of Fire Service may be despatched to carry on fire-fighting operations in neighbouring areas;

(*f*) the conditions subject to which the Members of Fire Service may be employed on rescue, salvage or other work;

(*g*) the manner of service of notices under this Act;

(*h*) the payment of rewards to persons, not being Members of the Fire Service who render services for fire-fighting purposes;

(*i*) the amount of compensation payable under clause (*k*) of section 10;

(*j*) the employment of the Members of Fire Service or use of any equipment outside the area or on special services and the fee payable therefor; and

(*k*) any other matter which is to be or may be prescribed under this Act.



28. *Publication of rules, commencement of rules and notifications and placing them on the table of the Legislature.*—(1) (*a*) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Government Gazette*, and, unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(*b*) All notifications issued under this Act shall, unless they are expressed to come into force on a particular day, come into force on the day on which they are published.

(2) Every rule made or notification issued under this Act shall, as soon as possible, after it is made or issued, be placed on the table of both Houses of Legislature, and if before the expiry of the session in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or notification or both Houses agree that the rule or notification should not be made or issued, the rule or notification shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or notification.

29. *Provisions as to existing Fire Service.*—(1) The Fire Service in existence in this State at the commencement of this Act shall be deemed to be the Tamil Nadu Fire Service established under this Act.

(2) The Members of Fire Service in existence in this State at the commencement of this Act shall be deemed to have been appointed as such under this Act.

(3) Anything done or any action taken before the commencement of this Act in relation to the establishment of Fire Service referred to in sub-section (1), in relation to any person appointed thereto, shall be as valid and as effective in law as if such thing or action was done or taken under this Act:

Provided that nothing in this sub-section shall render any person guilty of any offence in respect of anything done or omitted to be done by him before the commencement of this Act.

30. *Repeal and saving.*—(1) If immediately before the day on which this Act comes into force in an area, there is in force in that area any law, rule, regulation or by-law having the force of law which corresponds to any provision of this Act, such law, rule, regulation or by-law, shall so far as it relates to any matter for which provision has been made in this Act shall on that day stand repealed.

(2) Notwithstanding the repeal of any law, rule, regulation or by-law by sub-section (1), the general responsibility of any local authority under the law governing such authority, shall not be deemed to be limited, or modified, in so far as such law requires the local authority,—

(*a*) to provide and maintain such water-supply and fire hydrants for fire-fighting purposes as may be directed by the Government from time to time;

(*b*) to frame by-laws for the regulation of dangerous trades;

(*c*) to order any of its employees to render aid in fighting a fire when reasonably called upon to do so by any Member of Fire Service; and

(*d*) generally to take such measures as will lessen the likelihood of fires or preventnig the spread of fires.



## இணைப்பு VIII

*[274 ஆம் பக்கத்தில் இனம் 4 (6)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

## L.A. BILL No. 42 OF 1985.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Motor Vehicles Taxation Act,* 1974.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Motor Vehicles Taxtation (Amendment) Act, 1985.

(2) It shall be deemed to have come into force on the 1st April 1985.

2. *Amendment of the Schedule, Tamil Nadu Act* 13 *of* 1974.—In the Schedule to the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974),—

(1) in clause 1, for items (*a*), (*b*) and (*c*) and the entries relating thereto, the following items and entries shall be substituted, namely :—

| | |
|---|---|
| "(*a*) Bi-cycles below 3½ horse-power if not used for drawing a trailer or side-car .. .. .. | 20.00 |
| (*b*) Bi-cycles below 3½ horse-power if used for drawing a trailer or side-car and bi-cycles of and above 3½ horse-power whether used for drawing a trailer or side-car or not .. .. .. .. .. | 25.00 |
| (*c*) Tri-cycles .. .. .. .. .. | 25.00 |

(2) in clause 3, in paragraph 1, for items (*a*), (*b*) and (*c*) and the entries relating thereto, the following items and entries shall be substituted, namely :—

| | |
|---|---|
| "(*a*) Vehicles not exceeding 3,000 kgs. in weight laden | 350.00 |
| (*b*) Vehicles exceeding 3,000 kgs. but not exceeding 5,500 kgs. in weight laden | 650.00 |

(*c*) (i) Vehicles exceeding 5,500 kgs. but not exceeding 7,500 kgs. in weight laden ... 770.00

(ii) Vehicles exceeding 7,500 kgs. but not exceeding 9,000 kgs. in weight laden. .. .. .. .. .. 850.00.";

(3) in clause 4,—

(*a*) in paragraph II, for item (ii) and the entries relating thereto, the following item and entries shall be substituted, namely:—

"(ii) For every person (other than the driver) which the vehicle is permitted to carry in the case of other contract carriages .. .. .. .. 320.00.";

(*b*) in Paragraph III,—

(i) for item (*b*) and the entries relating thereto, the following item and entries shall be substituted, namely :—

"(*b*) Plying exclusively within the limits of the City of Madurai or within the limits of one or more, contiguous municipalities or on other town service routes—

For every passenger (other than the driver and the conductor) which the vehicle is permitted to carry .. .. .. 180.00.";

(ii) in item (*c*), for sub-item (ii) and the entries relating thereto, the following sub-item and entries shall be substituted, namely :—

"(ii) For every passenger (other than the driver and the conductor) which the vehicle is permitted to carry in the case of services other than Express Services 225.00.";



(4) in clause 7, for items *(a)*, *(b)*, *(c)*, *(d) and (e)* and the entries relating thereto, the following items and entries shall be substituted, namely :—

"(*a*) Weighing not more than 700 kgs. unladen ... 70.00

(*b*) Weighing more than 700 kgs. but not more than 1,500 kgs. unladen .. .. 75.00

(*c*) Weighing more than 1,500 kgs. but not more than 2,000 kgs. unladen .. .. .. 100.00

(*d*) Weighing more than 2,000 kgs. but not more than 3,000 kgs. unladen .. .. .. 105.00

(*e*) Weighing more than 3,000 kgs. unladen,—

(i) in respect of which private transport vehicle permit is not required under the Motor Vehicles Act .. .. 110.00

(ii) in respect of which private transport vehicle permit is required under the Motor Vehicles Act,—

(*a*) Where owned by any educational institution .. .. .. 110.00

(*b*) in other cases .. .. .. .. 150.00.".

143962